# தமிழக எல்லைப் போராட்டங்கள்

முகிலை இராசபாண்டியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# தமிழக எல்லைப் போராட்டங்கள்

முனைவர் முகிலை இராசபாண்டியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அறக்கட்டளைச்
சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: பலர்)

வரிசை எண் : 10

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamiḻaka ellaip pōrāṭṭaṅkaḷ |
| Author | : | Dr. Muhilai Rajapandian<br>Reader in Tamil<br>Presidency College<br>Chennai-600 005. |
| General Editor | : | Dr. D. Renganathan<br>Associate Professor<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani,<br>Chennai-600 113.<br>Ph: 044-22542992 |
| Publication No. | : | 568 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2007 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 208 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.60/- (Rupees Sixty Only) |
| Printed by | : | Gunasundari Modern Art Printers<br>18-A, Ammaiyappan Mudali Street<br>Old Washermenpet, Chennai-600 021. |
| Subject | : | Political History |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# முகவுரை

நாட்டைக் காப்பது மன்னர்களின் தலையாய கடமை. இப்போதும் அதை அரசே மேற்கொண்டு வருகிறது.

ஒரு நாட்டின் எல்லை என்பது போரால், ஆயுதத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் நாட்டின் எல்லைகளாக வடக்கே வேங்கடமும் தெற்கே குமரிமுனையும், மேற்கிலும் கிழக்கிலும் முறையே மேலை, கீழைக் கடல்களும் வழங்கும் மொழியால் வரையறுக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி வழங்கிய பகுதிகள் வேறுமொழிகளாகத் திரிந்த காலக்கட்டத்திலிருந்து பண்டைத் தமிழக எல்லையும் மாறி வந்திருப்பதை நாம் அறிகிறோம்.

இப்படியான எல்லை மாறுபாடு விடுதலைக்குப் பின் தெற்கிலும் வடக்கிலும் தமிழகத்திற்கு ஏற்பட்டது. மொழிவாரி மாநிலச் சீரமைப்பு நடைமுறைக்கு வந்தபின் கேரளம், கர்நாடகம் பிரிந்து தமிழ்நாடு அமைந்தது. தமிழர்கள் வாழும் பகுதிகள் மாநில எல்லைப்பிரிப்பால் பிறமாநிலங்களுக்கு உரியதாக அமைக்கப்பட்டன.

தமிழகத்தின் தென்எல்லையான குமரிமாவட்டப் பகுதிகளைத் திருவிதாங்கூரிலிருந்து பிரித்துத் தமிழகத்தோடு தக்கவைத்துக் கொள்வதற்குக் குமரிப்பகுதி மக்கள் குரல்கொடுத்தனர். இதைப் போன்றே வேங்கடம் சார்ந்த பகுதிகளைத் தமிழ்நாட்டிலிருந்து பிரித்துச் செல்வதை வடதமிழக மக்கள் எதிர்த்தனர். இவ்விரு சாராரும் தொடக்கத்தில் எல்லைப் பாதுகாப்பு இயக்கமாகத் தம் இயக்கங்களை நடத்தி வந்தனர். பின்பு அரசியல் கட்சி மூலமாகவே பேச்சு நடத்தி வெற்றி காணமுடியும் என முடிவு செய்தனர். இதன் விளைவாகத்தென் தெருவிதாங்கூர்க் காங்கிரஸ் எனும் அரசியல் கட்சியும் தமிழரசுக் கழகமும் தெற்கிலும் வடக்கிலும் முறையே தோற்றமெடுத்தன.

தென்திருவிதாங்கூர்க் காங்கிரசுக்கு நேசமணியும் தமிழரசுக் கழகத்திற்கு ம.பொ.சிவஞானமும் தலைமை ஏற்று எல்லைப் போராட்டங்களை வழிநடத்தினர். அதில் பெரிய அளவில் வெற்றியும் பெற்றனர். எல்லைப் போராட்டங்களின் தொடக்கமுதல் முடிவுவரையிலான வரலாற்றை முனைவர்

முகிலை இராசபாண்டியன் முறையாகத் தொகுத்து இச்சொற்பொழிவு நூலில் வழங்கியுள்ளார். இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் பேட்டிகண்டு இச்சொற்பொழிவு நூலில் இணைப்பாகக் கொடுத்துள்ளார். வரலாற்று ஆவணமாகவும் தமிழ்மக்களுக்குப் படிப்பினையாகவும் இச்சொற்பொழிவு நூல் அமைந்துள்ளது. இச்சொற் பொழிவன்றே இது அச்சு வடிவில் வெளியிடப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் நிருவாக மொழியாக மட்டுமின்றி நீதிமன்ற மொழியாகவும் ஆகும் காலம் இது. செம்மொழிக் கனவு போல உயர்நீதிமன்றத்தில் தமிழ் என்பதும் தமிழர்களின் ஐம்பதாண்டுக் கனவு. **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால்** அக்கனவு நிறைவேறியிருக்கிறது. தமிழர்கள் நன்றிக்கடன் பட்டுள்ளனர்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** தொடர்ந்து இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழிநடத்தி வருகிறார்கள். **இந்நிறுவனத் தலைவராக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நெறிப்படுத்திவரும் பாங்கினைத் தமிழகம் என்றென்றும் நன்றியுடன் போற்றும்.

இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் செயலாளர் முனைவர் கி. இராசமாணிக்கம் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச்செயலாளர் திரு. து. இராசேந்திரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுக்கான பணிகளில் ஈடுபாட்டுடன் பொறுப்பாளராகச் செயற்படும் இந்நிறுவன இணைப்பேராசிரியர் முனைவர் த. ரெங்கநாதன் அவர்களும், மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதனும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

இந்நூல் வெளிவர அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்களும், கணியச்சிட்ட திருமதி பி. கௌசல்யா, அச்சிட்டுத் தந்த குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸாரும் பாராட்டிற்குரியவர்கள்.

**இயக்குநர்**

# நன்றியுரை

இன்று தமிழ் நாட்டின் வட எல்லையாகத் திருத்தணியும் தென் எல்லையாகக் கன்னியாகுமரியும் இருக்கின்றன. இவற்றை நாம் எல்லையாகப் பெறுவதற்குப் பலர் தங்கள் உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள். பலர் தங்கள் வாழ்க்கையையே போராட்டமாக ஆக்கியிருக்கிறார்கள். அந்தப் போராட்டத் தியாகிகள் இல்லை என்றால் திருத்தணியும் தென்குமரியும் தமிழர்க்குச் சொந்தமில்லாமல் போயிருக்கும். இன்று தென் குமரியில் வாழ்கிறவர்களும் திருத்தணியில் வாழ்கிறவர்களும் இந்த மண்ணுக்காக எத்தனை பேர் போராடியிருக்கிறார்கள் என்ற உண்மையை அறிந்தால் மட்டுமே மண் என்பது வெறும் மண் அல்ல-அது மானம் என்று உணர்வார்கள். அந்த உணர்வைத் தற்காலத்தில் வாழ்கிறவர்களும் வருங்காலத்தில் வாழப் போகிறவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் தமிழக எல்லைப் போராட்டங்கள் என்னும் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழனின் எல்லைப் போராட்டத்தை உணர்த்தும் இந்த நூல் அந்த எல்லைப் போராட்டத்தில் முன்னணி வகித்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் அறக்கட்டளைச் சொற்பொழிவாக வெளிவருவது பொருத்தம் உடையது ஆகும்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவைத் தென் எல்லையில் பிறந்த எனக்கு வழங்குவதற்குக் காரணமாக இருந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தா. ரெங்கநாதன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் பொறுப்புடன் கூடுதல் பொறுப்பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பையும் வகித்துவரும் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் இந்த ஆய்வுநூல் விரைவில் வெளியாவதற்கு ஊக்கம் தந்துள்ளார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் பிறந்திருந்தாலும் கன்னியாகுமரியில் நிகழ்ந்த தென் எல்லைப் போராட்டத்தின்போது நான் பிறந்திருக்கவில்லை. எனது தந்தையார் சு. இரெத்தினசாமி அவர்கள் தெரிவித்த தென் திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டம் பற்றிய தகவல்களே எனக்கு அதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டின. வெறும் ஆர்வம் மட்டுமே ஓர் ஆய்வு நூலை உருவாக்குவதற்குப் போதுமானது இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. நூல்களும் நேர்காணல்களும் இதழ்களின் செய்திகளும்

துண்டறிக்கைகளும் அரசின் அறிக்கைகளுமே ஆவணமாக இருந்து நூலாக்கத்திற்குத் துணைபுரியும். அந்த வகையில் இந்தச் சொற்பொழிவு நூல் வெளிவருவதற்காகத் தம்மிடம் இருந்த திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டம் தொடர்பான நூல்களையும் அரசின் அறிக்கைகளையும் பிற ஆவணங்களையும் மனமுவந்து தந்து உதவியதுடன் தம் நினைவிலிருந்தும் பல செய்திகளைத் தெரிவித்தவர் புலவர் கு. பச்சைமால் ஆவார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் இருவரை நான் நேரில் பார்த்துச் செய்தி திரட்ட முடிந்தது. அந்த இருவரில் ஒருவர் தியாகி பி.எஸ். மணி அவர்களும் மற்றொருவர் தியாகி ஆ. சிங்காராயர் அவர்களும் ஆவர். வயது முதிர்ந்த நிலையிலும் ஆர்வத்துடன் எனது கேள்விகளுக்குப் பதில் தந்ததுடன் எனக்கு ஊக்கமும் வழங்கியவர் பி.எஸ்.மணி அவர்கள். தென் திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டம் பற்றித் தெரிந்து கொள்வதற்காகத் தங்களிடம் வந்துள்ளேன் என்று தெரிவித்தவுடன் தம்மிடம் இருந்த நூல்களையும் அறிக்கைகளையும் எனக்கு முன்னால் எடுத்துப் பரப்பிவைத்துக்கொண்டு வேண்டியதை எடுத்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தார் ஆ. சிங்காராயர் அவர்கள். இந்த நூல் உருவாவதற்கு நேர்காணல் வழங்கிய அந்த இருவரும் நூல் வெளிவரும் இந்நாளில் உயிருடன் இல்லாதது வருத்தத்தைத் தருகிறது. அவர்கள் இருவருக்கும் எனது இதய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் எல்லைப் போராட்டம் பற்றிய தகவல்கள் முன்பே ஓரளவு எனக்கு அறிமுகம் ஆகியிருந்தன. ஆனால் வட எல்லைப் போராட்டம் பற்றி அறிந்திருந்தேனே தவிர அந்தப் போராட்ட நிகழ்வு எதுவும் எனக்குத் தெரியாது. அந்தப் போராட்டத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ம.பொ.சி. அவர்களின் நூல்களும் இதழ்களும் பேருதவி புரிந்தன. கோல்டன் ந. சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய வடக்கு எல்லைப் போராட்டம் என்ற நூலும் ஆசிரியர் மங்கலங்கிழார் பற்றி எழுதப்பட்ட நூலும் வட எல்லைப் போராட்டம் பற்றி அறிந்துகொள்வதற்குத் துணைபுரிந்தன. ம.பொ.சி. எழுதிய நூல்கள் அனைத்தையும் தேடிப்பிடித்து எடுத்துத் தந்து உதவிய பூங்கொடி பதிப்பக உரிமையாளர் சுப்பையா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ம.பொ.சி. அவர்களின் நூற்றாண்டாகவும் கன்னியாகுமரி மாவட்டம் தோன்றிய பொன்விழாவாகவும் விளங்கும் இந்த வேளையில் இந்த ம.பொ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவு எனக்குக் கிடைத்திருப்பதைப் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

**முகிலை இராசபாண்டியன்**

# ஆசிரியரைப் பற்றி



கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முகிலன் குடியிருப்பு என்னும் ஊரில் பிறந்த இவர் மதுரை, அண்ணாமலை, சென்னைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுள்ளார். தமிழ்நாடு அரசின் கல்லூரிக் கல்வித் துறையில் திருவாரூர், விருத்தாசலம், சென்னை-நந்தனம் அரசு கலைக்கல்லூரிகளில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் தற்போது சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் இணைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். சென்னை, தரமணியில் உள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

ஐந்து நாவல்கள், இரண்டு சிறுகதைத் தொகுதிகள், மூன்று கவிதைத் தொகுதிகள், ஒரு நாடகம் முதலாக முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்துள்ளார்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பாரதியார் அறக்கட்டளைப் பரிசையும் (1999) பாரதிதாசன் அறக்கட்டளைப் பரிசையும் (2000) பெற்றுள்ளார். இவரது அலைகளின் காலம் என்னும் நாவலுக்கு இராஜபாளையத்தில் உள்ள திருவள்ளுவர் மன்றம் கதைச்செம்மணி என்னும் விருதையும் முதல் பரிசையும் (2003) வழங்கியுள்ளது. அருகருகே நான்கு வீடுகள் என்னும் நாவலுக்கு இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் மீனாட்சி சங்கரலிங்கம் விருது (2003) கிடைத்துள்ளது. இவரது போகிறவழி என்னும் நாவலைக் கோவையில் உள்ள கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம் 2003-2004 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த தமிழ் நாவல்களில் சிறந்த நாவலாகத் தேர்வு செய்து பரிசு வழங்கியுள்ளது. தமிழ்க்கலை இலக்கியப் பேரவையும் தாராபாரதி அறக்கட்டளையும் இணைந்து இவருக்குத் தாராபாரதி கவிதை விருது (2003) வழங்கியுள்ளன. இவர் எழுதிய அறநூல்கள் என்னும் நூலுக்கும் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் மீனாட்சி சங்கரலிங்கம் விருது (2005) வழங்கியுள்ளது. குலம் என்ற நாடக நூல் பாரத ஸ்டேட் வங்கியின் முதல் பரிசினைப் பெற்றுள்ளது (2005).

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | நன்றியுரை | |
| | ஆசிரியரைப் பற்றி | |
| 1. | தமிழக எல்லைகள் | 1 |
| 2. | தமிழகத் தென் எல்லைப் போராட்டம் | 5 |
| 3. | தமிழக வட எல்லைப் போராட்டம் | 79 |
| 4. | நிறைவுரை | 186 |
| | துணை நூல்பட்டியல் | |
| | இதழ்கள் | |
| | ஆங்கில நூல்கள் | |
| | பின்னிணைப்பு | |

# தமிழக எல்லைகள்

எல்லை என்னும் சொல்லுக்கு வரம்பு, அவதி, வரையறை, தறுவாய், முடிவு முதலான பல பொருள்கள் வழங்கப்பெறுகின்றன. இவற்றுள் வரம்பு என்னும் பொருள் ஒரு நாட்டின் எல்லையைக் குறிப்பதற்குப் பொருந்தும் சொல்லாகக் கருதப்படுகிறது. எல்லைக்கட்டு, எல்லைக்கல், எல்லைக் காவல், எல்லைக் குறிப்பு, எல்லை குறித்தல், எல்லைத் தரிசு, எல்லைப் பிடாரி, எல்லை ஓட்டம் முதலானவை நிலத்தின் எல்லையுடன் தொடர்புடைய இணைவுச் சொற்களாக விளங்குகின்றன.

தற்காலத்திலும் நிலத்தை அளந்து பாகம் பிரிக்கும்போது எல்லையைக் குறித்தபிறகு, குறிக்கப்பட்ட நிலத்தின் நான்கு மூலைகளிலும் கல் நாட்டுதல் அல்லது நான்கு பக்கங்களிலும் வேலியோ மதிலோ அமைத்தல் முதலானவற்றைக் காண்கிறோம். நாடுகளுக்கு இடையே எல்லைக் கோடு என்ற பெயரில் மதில் அமைத்தல் முதலானவற்றையும் ஆவணங்கள் தெரிவிக்கின்றன. மாநிலங்களுக்கு இடையே எல்லையைக் குறித்துக் கொள்வதும் எல்லை தொடர்பாக எழும் வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதையும் வேறு வகைகளில் தீர்த்துக்கொள்வதையும் காணமுடிகிறது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தனித்த பெருமையுடன் விளங்கிய தமிழரின் எல்லையை இதுதான் என்று வரையறை செய்ய இயலாது. அவர்கள் உறவின் எல்லையாக உலகத்தையும் வெற்றியின் எல்லையாக இமயத்தையும் நாட்டின் எல்லையாக வடக்கில் வேங்கடத்தையும் கொண்டு வாழ்ந்துள்ளனர்.

உலகினை உறவின் எல்லையாகத் தமிழர்கள் கொண்டிருந்ததைத் தமிழ் இலக்கியங்களும் உலக மக்கள் தமிழ்நாட்டுடன் உறவு கொண்டிருந்ததை அயல் நாட்டார் குறிப்புகளும் தெரிவிக்கின்றன. உறவின் எல்லை என்பது தமிழர்கள் தொடர்பு வைத்திருந்த பிற பகுதிகளையும் சென்று வந்த பகுதிகளையும் குறிக்கும்.

வெற்றியின் எல்லையாகத் தமிழர்கள் இமயத்தைக் கொண்டிருந்ததையும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பாக- சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, அகநானூறு, மதுரைக் காஞ்சி முதலானவை தெரிவிக்கின்றன.

**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி**[1]

என்னும் சிலப்பதிகார அடிகள் பாண்டிய மன்னன் இமயத்தையும் கங்கைப் பகுதியையும் வென்றதைத் தெரிவிக்கின்றன.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டுக்குப் படையெடுத்துச் சென்று அங்கேயுள்ள வேந்தர்களைத் தோற்கடித்து, கனகனையும் விசயனையும் கண்ணகியின் சிலை அமைப்பதற்கான கல் சுமக்கச் செய்ததைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.

**ஆரியர் அலறத் தாக்கி, பேர்இசைத்**
**தொன்றுமுதிர் வடவரை வணங்கு வில் பொறித்து**[2]

என்னும் அகநானூற்று அடிகளும் சேரன் செங்குட்டுவன் வடவரை வென்றதைத் தெரிவிக்கின்றன.

**கடவுள் நிலைஇய கல் ஓங்கு நெடுவரை**
**வடதிசை எல்லை இமயம் ஆகத்**
**தென்அம் குமரியொடு ஆயிடை அரசர்**
**முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பு எழ**
**சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த**
**போர்அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ**[3]

என்னும் பதிற்றுப்பத்து அடிகளும் செங்குட்டுவன் வடவரை வென்றதைத் தெரிவிக்கின்றன. செங்குட்டுவனின் தந்தையாகிய சேரலாதனும் இமயத்தை வென்றவன் என்பதைப் பதிற்றுப்பத்து,

**போர்அடு தானைச் சேரலாத**
**மார்புமலி பைந்தார் ஓடையொடு விளங்கும்**
**வலன் உயர் மருப்பின், பழிதீர் யானைப்**
**பொலன் அணி எருத்தமேல் கொண்டு பொலிந்த நின்**
**பலர் புகழ் செல்வம் இனிதுகண்டு இகுமே**
**கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி**
**பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்**
**ஆரியர் துவன்றிய பேர்இசை இமய**

**தென்அம் குமரியொடு ஆயிடை**
**மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே**[4]

என்னும் அடிகளில் தெரிவித்துள்ளது. சேரலாதன் இமயப் பகுதியை வென்று இமயமலையில் வில் சின்னத்தைப் பொறித்தான் என்பதை அகநானூற்றின்

**வலம்படு முரசின் சேரலாதன்**
**முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து, இமயத்து**
**முன்னோர் மருள வணங்குவில் பொறித்து**[5]

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. சேரலாதன் கடல்போரில் வெற்றிபெற்று, பகைவரின் கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தியவன் என்பதும் அவன் தனது இமயப் பகைவரைத் தோற்கடித்துத் தனது முன்னோர் போல இமயத்தில் வில்லைப் பொறித்தான் என்றும் இந்த அடிகள் தெரிவித்துள்ளதால் சேரலாதனுக்கு முன்பும் தமிழ் மன்னர்கள் இமயத்தை வெற்றிகொண்டுள்ளனர் என அறிய முடிகிறது.

இவ்வாறு இமயப் பகுதிகளை வெற்றி கொண்ட சிறப்புக் கூறப்பட்டுள்ளதைப் போல் இமயத்தை எல்லையாகத் தமிழ் மன்னர்கள் கொண்டிருந்தனர் என்பதையும் தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

**வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்**
**தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்**
**குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்**
**குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்**[6]

என்னும் புறநானூற்று அடிகளில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் ஆட்சி எல்லை வடக்கே இமயத்தைக் கடந்தும் தெற்கே குமரிக்குத் தெற்கும் பரவியுள்ளது என்று காரிகிழார் என்னும் புலவர் தெரிவித்துள்ளார்.

**தென்குமரி வட பெருங்கல்**
**குணகுட கடலா எல்லை**[7]

என்னும் புறநானூற்று அடிகளில் சேரர்கள் வடக்கில் உள்ள இமயத்தையும் தெற்கில் உள்ள குமரியையும் ஆண்டதாகக் குறுங்கோழியூர் கிழார் தெரிவித்துள்ளார்.

**தென்குமரி வடபெருங்கல்**
**குண குட கடலா எல்லைத்**
**தொன்று மொழிந்து தொழில் கேட்ப**
**வெற்றமொடு வெறுத்து ஒழுகிய**
**கொற்றவர் தம் கோன் ஆகுவை**[8]

என்னும் மதுரைக் காஞ்சி அடிகளின் வாயிலாகப் பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சி எல்லையை மாங்குடி மருதனார் தெரிவித்துள்ளார். இவ்வாறு தமிழ் ஆட்சிப் பரப்பின் வடக்கு எல்லையாக இமயமலையைக் குறிப்பிட்டாலும் தமிழ் நாட்டின் வடக்கு எல்லையாக வேங்கட மலையையே தொல்காப்பியத்தின் பாயிரத்தில் பனம்பாரனார் குறிப்பிட்டுள்ளார்.

**வடவேங்கடம் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்**[9]

என்னும் தொடரிலிருந்து தமிழ் மொழி வழங்கிய பகுதி வேங்கட மலைக்கும் குமரிக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்திருக்கிறது எனத் தெளிய முடிகிறது.

இதில் தெற்கு எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ள குமரி என்பது தற்போது உள்ள கன்னியாகுமரியா அல்லது குமரிக் கண்டமா என அறிய இயலவில்லை. மூன்றாம் தமிழ்ச் சங்கம் நிலவிய காலத்தில் தமிழ்நாட்டின் தென் எல்லையாக இப்போதைய குமரி முனை இருந்திருக்கிறது. அதற்கு முந்தைய காலம்வரை அதாவது கபாடபுரம் கடல்கோளால் அழிவது வரை குமரிக்கண்டமே தென் எல்லையாக விளங்கியுள்ளது.

சிலப்பதிகாரத்திலும் தமிழ்மொழி வழங்கும் பகுதியாக வடக்கில் வேங்கட மலையும் தெற்கில் குமரி முனையுமே குறிப்பிடப்பட்டுள்ளன.

**நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்**
**தமிழ் வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு**[10]

என்னும் வேனில் காதை அடிகள் இதைத் தெரிவிக்கின்றன. இந்த அடிகளில் குமரி முனை எனக் குறிப்பிடப்படவில்லை என்றாலும் தொடியோள் பௌவம் என்பது குமரி முனையைக் குறிக்கிறது. எனவே சிலப்பதிகாரக் காலத்தில் தென் எல்லையாகத் தற்போதைய குமரிமுனையே விளங்கியுள்ளது எனத் தெளியமுடிகிறது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் வந்த இலக்கண நூல்களில் அனைவராலும் போற்றப்படுவது நன்னூல் ஆகும். இந்த நூல் பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்தது. இதில் தமிழ்மொழி வழங்கும் பரப்பாக வடக்கில் வேங்கட மலையே குறிப்பிடப்பட்டுள்ளது.

**குணகடல் குமரி குடகம் வேங்கடம்**
**எனும் நான்கு எல்லையின் இருந்தமிழ்**[11]

என்று நன்னூலின் சிறப்புப் பாயிரம் தெரிவிக்கிறது.

**வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்**
**வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம்என்று**
**அந்நான்கு எல்லை அகவயின் கிடந்த**
**நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்**[12]

என்னும் காக்கைப்பாடினியத்தின் நூற்பாவும் வேங்கடத்தை வட எல்லையாகவும் குமரிக்கடலைத் தென் எல்லையாகவும் கிழக்கும் மேற்கும் கடல்களை எல்லையாகவும் தெரிவிக்கின்றது.

**நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று**
**நித்தம் தவம்செய் குமரி எல்லை-வட**
**மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்**
**மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு**[13]

என்று பாரதியார் வடக்கு எல்லையாக வேங்கடமலையையே குறிப்பிட்டுள்ளார்.

தமிழரின் நாடாகிய தமிழ்நாட்டைச் சங்ககாலத்தில் தமிழ் மன்னர்களே ஆட்சி செய்துள்ளனர். பின்னர், சில நூற்றாண்டுகள் அயலார் ஆண்டுள்ளனர். மீண்டும் ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மன்னர்களாகிய சோழர்களின் ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளது. பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை சிறப்புடன் விளங்கிய சோழர்கள் காலத்தில் அவர்களின் ஆட்சி எல்லை தென்னாடு முழுவதும் பரந்து விரிந்துள்ளது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சி சிறப்புற்றிருந்திருக்கிறது. அதன் பிறகு மாலிக்காஃபூர் படையெடுப்பு, விஜயநகர மன்னர்களின் ஆட்சி, நாயக்கர்களின் ஆட்சி என்று தமிழ் நாட்டில் தமிழர் அல்லாதாரின் ஆட்சி நடைபெற்றுள்ளது. நாயக்க மன்னர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதால் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு மக்கள் தமிழ்நாட்டின்

தென்கோடிவரை குடியேறியிருக்கிறார்கள். நாயக்கர்கள் ஆட்சிக்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சிவரை தெலுங்கு மொழி பேசுவோரே பல இடங்களில் பாளையக்காரர்களாகவும் குறுநில ஆட்சியாளர்களாகவும் நிலக்கிழார்களாகவும் இருந்துள்ளனர். ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் தெலுங்கு மொழிசார்ந்தவர்களின் ஆளுமைக்குள் தமிழ்நாடு இருந்ததால் தமிழ்நாட்டில் உள்ள சில பெரிய நகரங்களில் தெலுங்கர்களே மிகுதியாக வாழ்ந்துள்ள தன்மையைக் காணமுடிகிறது.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவைதான் தெலுங்கும் மலையாளமும் என்றாலும் நிலப்பகிர்வு என வரும்போது அவர்கள் தமிழ் மொழி வழங்கும் பகுதியைத் தங்களுடையதாக எடுத்துக்கொள்ளவே விரும்பியிருக்கிறார்கள். அவ்வாறு தமிழ்ப் பகுதிகளை அவர்கள் கவர்ந்து கொள்ளாமல் இருப்பதற்கு இருபதாம் நூற்றாண்டில் பல எல்லைப் போராட்டங்களைத் தமிழர்கள் நடத்தியுள்ளனர். அவற்றில் தென் எல்லைப் போராட்டமும் வட எல்லைப் போராட்டமும் குறிப்பிடத்தக்கவை. பிற எல்லைப் போராட்டங்கள் அனைத்தும் இந்தப் போராட்டங்களுக்குள் அடங்கி விடுவதால் இந்த நூலில் தென் எல்லைப் போராட்டமும் வட எல்லைப் போராட்டமும் எழுதப்பட்டுள்ளன.

### *சான்றெண் விளக்கம்*

1. சிலப்பதிகாரம் 11:21-22
2. அகநானூறு 396
3. பதிற்றுப்பத்து 43:6-11
4. பதிற்றுப்பதது 11:16-25
5. அகநானூறு 127
6. புறநானூறு 6
7. புறநானூறு 17
8. மதுரைக் காஞ்சி 70-74
9. தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம்
10. சிலப்பதிகாரம் 8:1-2
11. நன்னூல், சிறப்புப் பாயிரம்
12. இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை, ப.7.
13. பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், 'செந்தமிழ் நாடு'.

# தமிழகத் தென் எல்லைப் போராட்டம்

தமிழ்நாட்டின் தென் எல்லையாக இன்று விளங்கும் கன்னியாகுமரி மாவட்டமும் செங்கோட்டையின் ஒரு பகுதியும் 1956 நவம்பர் முதல் நாளுக்கு முன்பு தமிழ்நாட்டில் இல்லை. இவை, திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் பகுதிகளாக இருந்தன.

சங்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய சேரநாடு திருவிதாங்கூர் சமஸ்தானமாக விளங்கியது. இந்தப் பகுதியில் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்மொழி ஒதுக்கப்பட்டது. தமிழ் மொழி பேசுவோரை 'நீசர்' என்றும் தமிழ்மொழியை 'நீச பாஷை' என்றும் இழித்தனர். சமஸ்கிருதத்தைத் 'தேவ பாஷை' என்றும் அதைப் பேசுவோரை உயர்ந்தோர் என்றும் உயர்த்தினர்.

திருவிதாங்கூர் மன்னர்களின் ஆட்சி மொழியாக மலையாளம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. திருவிதாங்கூர் சமஸ்தானம் முழுவதும் ஒரு காலத்தில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தெற்கு நோக்கி நகர்ந்து தென் திருவிதாங்கூர்ப் பகுதியில் மிகுதியாக வாழ்ந்தனர்.

தென் திருவிதாங்கூர்ப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் இரண்டாந்தரக் குடிகளாகக் கருதப்பட்டனர். மலையாளமும் சமஸ்கிருதமும் அறிந்தோர் மன்னருக்கும் உயர்ந்தோருக்கும் வேண்டியவர்களானார்கள்.

மலையாளமும் சமஸ்கிருதமும் தெரியாமல் தமிழ்மொழியை மட்டும் அறிந்தவர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்குப் போராட வேண்டியிருந்தது. அவ்வாறு போராடும் போது மலையாளிகளை எதிர்க்க வேண்டிய சூழ்நிலை இயல்பாக ஏற்பட்டு விட்டது.

நூற்றாண்டுகளாக ஒதுக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும் என்றால் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். அவ்வாறு கூட்டாகச் செயல்படுவதற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சில இயக்கங்கள் தோன்றின.

## மலையாளிகள் எதிர்ப்பு இயக்கம் I

1810 இல் மலையாளிகள் எதிர்ப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தைத் தொடங்கி நடத்தியவர்களில் மோசஸ், சாலமன், அருமைநாயகம், டேவிட், நீலன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். மலையாளிகளை எதிர்த்துத் தமிழர்களின் உரிமைகளைப் பெறும் நோக்கத்தில் இயங்கிய இந்த இயக்கம் அரசின் எதிர்ப்பை ஈட்டியது. எனவே, இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்களைக் காவலர்களும் மேல்சாதியினரும் தாக்கினர்; சிலர் உயிரிழந்தனர்.

## மலையாளிகள் எதிர்ப்பு இயக்கம் II

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆட்சி மொழியாக மலையாள மொழி விளங்கியதால் அரசாங்க அலுவல் யாவும் மலையாளத்தில் நடந்தன; பத்திரப் பதிவுகளும் மலையாள மொழியிலேயே இருந்தன. மலையாள மொழி அறியாத தமிழ் மக்களை மலையாளிகள் இப்பத்திரப் பதிவுகளில் ஏமாற்றி அவர்களின் நிலங்களைத் தங்கள் உடைமையாக்கிக் கொண்டனர். மலையாளம் அறியாத தமிழ் மக்கள் ஏமாந்து போயினர். இந்த அறியாமையிலிருந்து தமிழ் மக்களைக் காப்பதற்காகப் புலிப்பனம் என்னும் ஊரைச் சேர்ந்த இசக்கி மாடன் என்பவர் 1822 ஆம் ஆண்டு மலையாளிகள் எதிர்ப்பு இயக்கத்தைத் தொடங்கினார். இசக்கி மாடன் என்பவர் வில்லிசைப் புலவர். எனவே தமது அறிவின் துணையுடன் தமிழ் மக்களைக் காக்க நினைத்தார். இந்த இயக்கத்திற்கு அரசிடமிருந்தும் மலையாளிகளிடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பியது. எதிர்ப்புகளைக் கண்ட இசக்கிமாடன் தமிழர்களை ஒருங்கிணைத்தார். அவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட தமிழர்களுக்குப் படைக்கலப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். பத்மநாபபுரம் கோட்டைக்கு அருகில் மலையாளிகளின் படையை இசக்கிமாடன் தமது தமிழர் படையின் துணையுடன் எதிர்த்தார். அதில் மலையாளிகளின் படையை வெற்றிகண்டார்.

## தமிழர் விடுதலை காங்கிரஸ்

தமிழர் விடுதலை காங்கிரஸ் என்னும் அமைப்பு 1928 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பை நெய்யூரைச் சேர்ந்த குஞ்சன் நாடார் என்பவர் தொடங்கி நடத்தினார். தமிழ் மக்கள் மலையாள மன்னனுக்கும் மலையாளிகளுக்கும் அடிமைப் பட்டிருப்பதாகக் கருதிய குஞ்சன் நாடார், தமிழ் மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக்

கொண்டு இந்த அமைப்பைத் தொடங்கினார். எம்.சுப்பிரமணிய நாடார், ஏ.பொன்னம்பல நாடார், பரமானந்தம், பா.கருத்துடையான், மாசாளி முத்து, செறியான், நாராயணன் நாடார் முதலியோர் இந்த அமைப்பை வழிநடத்திச் சென்றார்கள்.

போராட்டத்தின் வாயிலாகவே வெற்றிபெற முடியும் என்று இந்த அமைப்பினர் எண்ணியதால் சிலம்பாட்டம், வர்மக்கலை முதலான பயிற்சிகளை மக்களுக்குக் கொடுத்தனர். இந்தப் பயிற்சிகளைக் கொடுப்பதற்குப் பல ஊர்களில் பயிற்சிக் களங்களை அமைத்தனர்.

திருவிதாங்கூர், பத்மநாபபுரம், திருவனந்தபுரம், கொல்லம் என்ற நான்கு பகுதிகளாகத் திருவிதாங்கூர் சமஸ்தானம் பிரிக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதிகள் 32 தாலுகாக்களாகவும் 245 பிடாகைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. பிடாகைகளின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்களைப் பிடாகைக்காரர்கள் என்றனர்.

இந்தப் பிடாகைக்காரர்களின் ஏவலர்களாக மலையாளிகள் விளங்கினர். தமிழ் மக்களின் விளைநிலங்களிலிருந்து விளைந்த நெல்லை இந்தப் பிடாகைக்காரர்கள் நிலவரி என்ற பெயரில் பறித்துக் கொண்டனர். இந்தக் கொடுமையை எதிர்த்துத் தமிழர் விடுதலை காங்கிரஸ் போராடியது. இந்தப் போராட்டத்தின் பயனாக விளைச்சலில் நான்கில் ஒரு பகுதி நிலவரி என்ற முறையான வரி விதிப்பு முறை ஏற்பட்டது. நிலவரி ஒழுங்குபடுத்தப்பட்டதால் ஆத்திரம் அடைந்த மேல்சாதியினர், தமிழர் விடுதலை காங்கிரஸ் இயக்கத்தவரைப் பொய்க் குற்றம் சாட்டிச் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்தினர்.

**தமிழர் கட்சி**

1935 ஆம் ஆண்டு அப்பாவு ஆசான் என்பவர் தலைமையில் தமிழர் கட்சி அமைக்கப்பட்டது. 'ஆசான்' என்று அழைக்கப்படுவோர் சிலம்பாட்டம், வர்மக்கலை முதலான பயிற்சிகளைப் பெற்றவர்கள் ஆவர். தென் திருவிதாங்கூரில் உள்ள தமிழரில் ஆசானாக விளங்கியவர்களை எல்லாம் அப்பாவு ஆசான் ஒருங்கிணைத்தார். தமிழர்களைத் தாக்கிய மலையாளிகளை இவர்கள் எதிர்த்துத் தாக்கினார்கள். மலையாள மொழியில் வந்த அரசு ஆணைகளை எரித்தனர்.

**ஈத்தாமொழி தமிழ்ச்சங்கம்**

இத்தமிழ்ச் சங்கம் 1938 இல் அம்மச்சியார் கோயில் விளையைச் சேர்ந்த கவிஞர் பெ.இராமசாமி என்பவரால் தொடங்கப்பட்டது.

இச்சங்கம் தமிழ்மொழியை எல்லாத் துறைகளிலும் மீட்டுக் கொண்டுவரப் பாடுபட்டது.

### மத்திய வாலிபர் சங்கம்

1937 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் 'திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரஸ்' என்னும் அரசியல் கட்சி தொடங்கப்பட்டது. இந்தச் சமஸ்தான காங்கிரசின் இளைஞர் அமைப்பாக மத்திய வாலிபர் சங்கம் 1943 இல் தொடங்கப்பட்டது. இதை எஸ்.சிவன் பிள்ளை, டி.எம்.சுந்தரம் ஆகியோர் நடத்தினர்.

### நாஞ்சில் தமிழர் காங்கிரஸ்

1945ஆம் ஆண்டு இரா.வேலாயுதம் பிள்ளை, ஆர்.கே.ராம், பி.எஸ்.மணி, மார்க்கண்டன், காந்திராமன் ஆகியோரால் நாஞ்சில் தமிழர் காங்கிரஸ் தொடங்கப்பட்டது. இதன் குறிக்கோள் தமிழர் விடுதலையே ஆகும்.

### திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ்

09.12.1945 இல் நெய்யூரில் நேசமணியும் அவரது நண்பர்களும் சேர்ந்து திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைத் தொடங்கினர். இது தமிழ் மக்களின் நலங்களைப் பாதுகாக்கத் தொடங்கப்பட்டது.

### அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ்

16.12.1945 இல் அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் தொடங்கப்பட்டது. இதன் தலைவராக எஸ்.சாம் நத்தானியல் செயல்பட்டார். பி.எஸ்.மணி, காந்திராமன், இரா.வேலாயுதம் பிள்ளை, ஆர்.கே.ராம் முதலானோர் இந்த அமைப்பை வழிநடத்திச் சென்றனர். திருவிதாங்கூரில் உள்ள தமிழர்கள் வாழும் பகுதியைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க இந்த இயக்கம் பாடுபட்டது. 30.06.1946 இல் இந்த இயக்கம் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் எனப் பெயர்மாற்றம் பெற்றது.

### திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ்

நேசமணியின் தலைமையில் செயல்பட்ட திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் என்ற அமைப்பு ஓர் அரசியல் கட்சியாக மாற்றம் பெற்றது. இந்த அமைப்பினரின் தொடர் போராட்டத்தால் தென்

திருவிதாங்கூரில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வு எழுந்தது. மலையாளிகளை எதிர்த்துப் போரிட அவர்கள் துணிந்தனர். அதன் விளைவாகவே கன்னியாகுமரி மாவட்டமும் செங்கோட்டையும் 01.11.1956 அன்று தமிழ்நாட்டுடன் இணைந்தன.

**ஐக்கியக் கேரளம்**

பல்வேறு மாகாணங்களாக இருந்த இந்தியப் பகுதிகளில் பல மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு மொழி பேசும் மக்களும் தங்கள் மொழிசார்ந்த மாநிலங்களை அமைக்க விரும்பினர். 1918 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையில் அவரவர் மொழிக்கேற்ப மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.[1]

1930 ஆம் ஆண்டு வெளியான சைமன் கமிஷன் அறிக்கையும் மொழிவாரியாக மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தது.[2]

மலையாள மொழி பேசும் மக்கள் மலபார், கொச்சி, திருவிதாங்கூர்ப் பகுதிகளில் வாழ்ந்தனர். இந்த மூன்று பகுதிகளையும் ஒருங்கிணைத்து ஐக்கியக் கேரளமாக உருவாக்க மலையாளிகள் விரும்பினர். இதைக் கோரிக்கையாக 1928 இல் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் முன் வைத்தனர். இதற்கு அகில இந்திய காங்கிரஸ் ஒப்புதல் வழங்கியது.

ஐக்கியக் கேரளத்தில் தென்திருவிதாங்கூர்ப் பகுதியை இணைப்பதை அங்கு மிகுதியாக வாழ்ந்த தமிழர்கள் எதிர்த்தனர். ஐக்கியக் கேரளம் என்பது வடக்கே காசர்கோட்டையும் தெற்கே கன்னியாகுமரியையும் கிழக்கே செங்கோட்டை முதலான பகுதியையும் உள்ளடக்கியது ஆகும். கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகஸ்தீசுவரம் ஆகிய (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத் தாலுகாக்கள்) தாலுகாக்களிலும் செங்கோட்டை, பீர்மேடு, தேவிகுளம் ஆகிய தாலுகாக்களிலும் தமிழர்களே மிகுதியாக வாழ்ந்தனர்.

1948 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் மேற்கூறிய தாலுகாக்களில் உள்ள மக்கள் விவரம்:

| தாலுகா | தமிழர் | மலையாளி |
|---|---|---|
| கல்குளம் | 2,05,944 | 38,100 |
| விளவங்கோடு | 1,61,217 | 46,023 |
| தோவாளை | 42,448 | 698 |
| அகஸ்தீசுவரம் | 1,76,874 | 4,931 |
| செங்கோட்டை | 52,432 | 1,677 |
| பீர்மேடு | 31,911 | 31,718 |
| தேவிகுளம் | 53,394 | 8,282 |

இந்தத் தாலுகாக்கள் தவிர நெய்யாற்றங்கரை, நெடுமங்காடு, திருவனந்தபுரம் தாலுகாக்களில் வாழ்ந்த தமிழர்களில் பெரும்பான்மையோர் மலையாளமும் அறிந்திருந்ததால் அங்கே தமிழர்களின் எண்ணிக்கை குறைவு என்று கருதி அப்பகுதிகளில் கணக்கெடுக்கப்படவில்லை.

கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகஸ்தீசுவரம், செங்கோட்டை, பீர்மேடு, தேவிகுளம் ஆகிய தாலுகாக்களில் வாழ்ந்த தமிழர்கள் தாங்கள் வாழும் பகுதியை ஐக்கியக் கேரளத்துடன் இணைப்பதை எதிர்த்தனர். இந்தத் தமிழ் மக்களின் குரலைத் திருமூலம் மன்னரின் சட்டப்பேரவையில் தமிழ் உறுப்பினர்கள் எதிரொலித்தனர்.

தமிழர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் சமஸ்தான காங்கிரசார் ஐக்கியக் கேரளம் அமைக்கும் குறிக்கோளை முன்னெடுத்துச் சென்றனர். ஐக்கியக் கேரளத்துடன் தமிழ்ப் பகுதிகள் இணைவதைத் தடுக்க ஓர் அரசியல் கட்சி தொடங்க முடிவெடுத்தனர். 1945 இல் அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் தொடங்கப்பட்டது. இதற்கு, சாம் நத்தானியல் தலைவராகச் செயல்பட்டார்.

தமிழர் பகுதிகளை ஐக்கியக் கேரளத்துடன் இணைக்கக் கூடாது. அவற்றைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும். அவ்வாறு தமிழர் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்கும்வரை அப்பகுதிக்குச் சுயாட்சி வழங்க வேண்டும்[3] என்று இந்திய கவர்னர் ஜெனரலுக்கு சாம் நத்தானியல் விண்ணப்பம் அனுப்பினார்.

தென் திருவிதாங்கூர்த் தமிழர் விடுதலைக்குத் தமிழ்நாட்டுத் தலைவர்களிடம் ஆதரவு திரட்ட அகில திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் முடிவு செய்தனர். அதன்படி 1946 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு குழுவினர் நத்தானியல் தலைமையில் சென்னைக்குச் சென்றனர். அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராசர், எம்.பக்தவச்சலம், எஸ்.எஸ்.கரையாளர், 'தினசரி' ஆசிரியர் டி.எஸ்.சொக்கலிங்கம், 'தினத்தந்தி' ஆசிரியர் சி.பா.ஆதித்தனார், 'தி இந்து' ஆசிரியர் விசுவநாதய்யர், 'பாரத தேவி' ஆசிரியர் இராமரெத்தினம், 'தினமணி' ஆசிரியர் ஏ.என்.சிவராமன், முத்துரங்க முதலியார் முதலானவர்களைச் சந்தித்தனர்.[4]

இவர்களைச் சந்தித்துவிட்டு வந்த பின்னர், தமிழ்நாட்டுத் தலைவர்களிடமிருந்து திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்திற்கு ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று தோன்றவில்லை. எனவே அவர்கள் தங்கள் போராட்ட முறையை மாற்றி அமைக்கத் திட்டமிட்டனர். அதற்காக 1946 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் நாள் அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரசின் அமைப்புக் குழுக்கூட்டத்தைக் கன்னியாகுமரியில் கூட்டினர். அக்கூட்டத்தில் மார்ச் 22 முதல் 29 வரை அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் வாரமாகக் கொண்டாடுவது என்று முடிவெடுத்தனர்.[5] அதன்படி கொட்டாரம், பூதப்பாண்டி, தேரூர், பறக்கை, இரணியல் போன்ற இடங்களில் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தினர்.

**ம.பொ.சிவஞானம்**

"வருங்கால சுதந்திர இந்தியாவில் சுதந்திர தமிழரசு அமைந்தே தீர வேண்டும். தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ்நாடு செழிக்கத் 'தமிழரசு' வேண்டும். அத்தகைய சுதந்திர அரசியலை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை தமிழருக்கு உண்டு.

மேற்சொன்ன சுயநிர்ணய உரிமை இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் உண்டு என்பதே நமது கொள்கை. இந்தக் கொள்கை சமரச முறையில் ஒப்புக் கொள்ளப்பட்டு அமுலுக்கு வருமானால், தமிழன் ஒரு புதிய தமிழகத்தைக் காண்பான். பழைய தமிழரின் பண்பாடும், இன்றைய புதிய உலகத்தின் புத்துணர்ச்சியும் கொண்ட புதிய தமிழினத்தைச் சமைப்பான். அந்தப் புதிய தமிழகத்தின் அமைப்பும் தமிழினத்தின் வாழ்வும் பின்வருமாறு இருக்குமென்று கனவு காண்கிறேன்.

தமிழ்நாட்டைத் தாய்நாடாகவும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் கொண்டு வாழும் தமிழ்நாட்டின் நிரந்தரக் குடிகள் அனைவரும் தமிழராகக் கொள்ளப்படுவர்.

தமிழர் எங்கெல்லாம் பெருவாரியாக வசிக்கிறார்களோ அந்தத் தொடர்ச்சியான பிரதேசங்கள் தமிழ்நாடாகக் கொள்ளப்படும்.

வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடி, தமிழகத்தில் சுதந்திரத் தமிழரசை அமைப்பர்.

அந்தப் புதிய தமிழரசு, தனியரசுத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் என்றாலும் கடந்த கால சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தேசிய இனங்கள் அடைந்துள்ள ஒற்றுமை உணர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, சர்வதேச நிலை ஆகியவை காரணமாக தமிழரசு தானே தன் விருப்பத்தின் மீது ஏனைய இனஅரசுகளடங்கிய இந்திய சமஷ்டியில் இணைய வேண்டும்.

தமிழரசானது தனது கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ள ஆந்திர–கேரளா–கன்னட இன அரசுகளுடன் கூட்டுறவு கொண்டு ஒரு சிறிய சமஷ்டியை நிறுவிக்கொள்ளும் உரிமையையும் உடையதாயிருத்தல் வேண்டும்.

புதிய தமிழகத்தின் பொருளாதாரக் கொள்கை பொதுவுடைமையேயன்றித் தனிவுடைமை அல்ல. இந்தப் பொதுவுடைமை லட்சியமானது தமிழரசு பண்பாட்டின்படியும் தற்கால விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்ட முறைகளின்படியும் நிறைவேற்றப்படும்.

புதிய தமிழகத்தில் சகல துறைகளிலும் தமிழ் மொழியே ஆட்சி செலுத்தும். ஆயினும் தமிழுக்குக் கேடு பயக்காத முறையில் வேறு எந்த மொழியையும் யாரும் இஷ்டப்பட்டுக் கற்க உரிமை உண்டு.

மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுவுநிலைமை வகிக்கும்.

ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துவதிலேயே அரசாங்கம் தனது சக்தியை முதன்மையாகச் செலவழிக்கும். மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பழக்க வழக்கங்கள் சட்டப்படி தடுக்கப்படும்.

ஏற்றமும் இழிவுமில்லாத சமத்துவ குணத்தையூட்டும் கல்வி முறையையே சர்க்கார் பின்பற்றும்.

சமயச் சார்பற்ற கலைகளை வளர்க்கும் பொறுப்பை அரசாங்கம் தானே மேற்கொள்ளும்.

மேற்சொன்ன வகையில் ஒரு புதிய தமிழகத்தைப் படைக்க தமிழரசு ஒன்றினால் தான் முடியும். அத்தகைய அரசு வேண்டுமென்று முரசுகொட்டுவோம்"[6] என்று ம.பொ.சி. தமது 'தமிழ் முரசு' மாத இதழின் முதல் இதழில் வெளியிட்டார்.

தமிழ் முரசு ஐந்தாம் இதழில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர் மிகுதியாக வாழும் தாலுகாக்களைக் காட்டும் படம் ஒன்றையும் தாலுகாவாரியாக உள்ள மக்கள் தொகையில் தமிழரின் எண்ணிக்கையையும் ம.பொ.சி. வெளியிட்டார்.

ம.பொ.சி.யின் தமிழக உணர்வை நாகர்கோவில் வடிவீசுவரத்தில உள்ள வாலிபர் சங்கத்தினர் அறிந்தனர். அந்தச் சங்கத்தின் ஆண்டு விழாவில் உரையாற்றுமாறு ம.பொ.சி.க்கு அழைப்பு விடுத்தனர்.

"1946 அக்டோபர் 25 இல் நாகர்கோவில் நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசினேன். அதுதான் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய எனது முதல் பேச்சு. வடிவை வாலிபர் சங்கம் எல்லைக் கிளர்ச்சியோடு தொடர்புடையது அன்று. நாஞ்சில் நாட்டுக்கு நான் அழைக்கப்பட்டது எல்லைக் கிளர்ச்சிக்காக அல்ல. ஆயினும் நாகர்கோவிலை அடைந்த சிலமணி நேரத்திற்குள் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் என்னுடன் உரையாடி என்னைத் தங்கள் பிரச்சாரகனாக மாற்றிவிட்டனர்.

நான் பேசிய கூட்டத்திற்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் எஸ். நத்தானியல் தான் தலைமை வகித்தார்.

மறுநாள் (26.10.46) வடசேரியில் மனோன்மணீயம் சுந்தரனார் வாசகசாலை ஆண்டுவிழாவில் பேசினேன். அந்தப் பேச்சும் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றியதுதான். அந்தக் கூட்டத்திற்கு நாகர்கோவில் வழக்கறிஞர் பி. சிதம்பரம் பிள்ளை தலைமை வகித்தார். நான் முதன் முதலில் ஈடுபட்டது வடக்கெல்லைக் கிளர்ச்சியில் அல்ல தெற்கெல்லைக் கிளர்ச்சியில் தான்"[7] என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்திற்கு ம.பொ.சி.யின் தமிழரசு கழகம் முழு ஆதரவை அளித்தது. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசில் கருத்து வேறுபாடு ஏற்பட்ட வேளைகளில் அக்கருத்து வேறுபாட்டைத் தீர்த்து வைப்பதற்கும் ம.பொ.சி. உதவியுள்ளார்.

**திருவிதாங்கூரில் பொறுப்பாட்சி**

இந்தியா விடுதலை பெற்ற பிறகும் திருவிதாங்கூர்ப் பகுதியில் திவானின் அதிகாரம்தான் உயர்ந்திருந்தது. எனவே சமஸ்தான காங்கிரஸ் திருவிதாங்கூருக்குப் பொறுப்பாட்சி முறை வேண்டும் என்று கோரியது. அப்போது திருவிதாங்கூரில் திவானாக இருந்தவர் உண்ணித்தான். இந்தப் பொறுப்பாட்சி முறையை உருவாக்குவதற்குப் பதினான்கு பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில் சமஸ்தான காங்கிரசில் உள்ளவர்களே மிகுதியாக நியமிக்கப்பட்டார்கள். இந்தப் பணியை அப்போது தலைமை அமைச்சராக இருந்த பட்டம் தாணுபிள்ளை சிறப்பாகச் செய்தார். இந்தக் குழுவில் இடம் பெற்றவர்களில் மூன்று பேர் தமிழர்கள். அவர்கள் பி.எஸ். நடராஜ பிள்ளை, அகஸ்தீசுவரம் எஸ்.ஐ.பாண்டியன் நாடார், கற்காடு விவேகானந்தம் ஆகியோர் ஆவர்.

இந்தக் குழுவினர் கூடிப் பேசிப் பொறுப்பாட்சி முறையைத் திட்டமிட்டனர். அதன்படி 120 பேர் கொண்ட ஆட்சி அமைப்பை உருவாக்குவது என்று முடிவாகியது. இந்த 120 உறுப்பினர்களில் 80 பேர் பொதுத் தொகுதியினராகவும் 40 பேர் ஒதுக்கப்பட்ட தொகுதியினராகவும் இருப்பர். ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்பது தொகுதிகள் இசுலாமியர்களுக்கும் ஒன்பது தொகுதிகள் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்கும் ஒதுக்கப்பட்டன. மீதம் உள்ள 22 ஒதுக்கப்பட்ட தொகுதிகளும் இந்து நாடாருக்கும் கம்மாளருக்கும் பிற தாழ்த்தப்பட்டோருக்கும் ஒதுக்கப்பட்டன. தேர்தல் நாள் என்று 1948 சனவரி மாதம் முப்பதாம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் ஒரு கட்சியாக வளருவதற்கு முன்பே பொறுப்பாட்சிக்கான தேர்தல் வந்துவிட்டதால் தேர்தலை எதிர்கொள்ள இயலாமல் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் திணறினார்கள்.

“திருவாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைப் பொறுத்தவரையில் செய்யும் வகையறியாது அது தவித்தது. நாகர்கோவில் அலுவலகத்தைத்

தவிர அதற்கு வேறெங்கும் கிளை அலுவலகங்கள் கிடையாது. தொகுதிகளின் கிடப்பு, வாக்காளர் விவரங்கள், அவர்களுடைய அபிலாஷைகள், பிரதேச தேவைகள், வெற்றி வாய்ப்புகள் ஆகியவை பற்றித் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு ஒரு நோட்டமும் கிடையாது. நத்தானியல் தலைமையில் உள்ள பழைய நாஞ்சில் தமிழர் காங்கிரஸ் நிர்வாகிகளுக்குப் பார்வதிபுரம் பாலத்திற்கு மேற்கே இருக்கும் ஊர்களும் சாலைகளும் மக்கள் அமைப்பு முதலிய தொகுதிக் கிடப்புகளும் தெரியாது. கண்ணடைப்புமாட்டி நெடுஞ்சாலையில் ஓடும் குதிரையைப் போல் இவர்களும் பல இடங்களுக்குப் போயிருக்கலாம். ஆனால் பல்வேறு ஊர்களில் அமைந்த உட்கிடப்பு எதுவும் தெரியாது.''[8] என்று திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் அப்போதைய நிலையை ரசாக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் தேர்தலை எதிர்கொள்வதற்குச் சரியான தலைமை தேவைப்பட்டது. அந்தத் தலைமைக்குப் பொருத்தமானவர் நேசமணிதான் எனக் கருதியதால் நந்தானியல் அந்தப் பொறுப்பை நேசமணிக்கு வழங்கினார்.

தேர்தலை அண்ணன்தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நேசமணியைப் பார்த்து நேரிலேயே சொல்ல ஆரம்பித்து விட்டார் நத்தானியல். தேர்தலை அண்ணன் பார்த்துக் கொள்வார். அது அவர் ஒருவரால் தான் முடியும் என்று மற்றவர்களிடமும் சொல்லத் தலைப்பட்டுவிட்டார். வேறு வழியில்லாமல் தேர்தல் பொறுப்பை நேசமணி ஏற்றுக் கொண்டார். இருபது வேட்பாளர்களை ஏற்பாடு செய்தார். அவர்களில் இருவர் கடைசி நேரத்தில் விலகிவிட்டனர். அவ்வாறு விலகியவர்களில் எஸ்.துரைசாமி என்பவர் கட்சி மாறி, சமஸ்தான காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார்.

இறுதியில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக பதினெட்டு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். இவர்களில் பலருக்கு வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இல்லை. அதைப் போன்றே தேர்தலில் செலவு செய்வதற்குப் பணமும் இல்லை. ஆனால் மக்கள், திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு ஆதரவு அளித்தனர். மக்களின் ஆதரவு திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு இருப்பதைக் கண்ட சமஸ்தான காங்கிரசார் ஆத்திரம் கொண்டனர். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கூட்டங்களில் குழப்பம் ஏற்படுத்தினர். குழப்பத்தைச்

சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழர்களைக் காவலர்கள் அடித்து உதைத்தனர்.

மார்த்தாண்டம், இரணியல், குலசேகரம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் தேர்தல் பொறுப்புகளைக் கவனித்த திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களைத் தேர்தல் அலுவலகத்திலிருந்து வெளியே இழுத்துத் தாக்கினார்கள். 21.01.48 இல் நடைபெற்ற இந்த வன்முறையால் மக்கள் மிகுந்த அச்சம் அடைந்தனர்.

பெரும்பாலான காவலர்கள் மலையாளிகள் என்பதால் அவர்கள் தமிழர்களைக் காரணம் இல்லாமலேயே தாக்கினார்கள். சில இடங்களில் முன் அறிவிப்பு இல்லாமல் சுட்டார்கள். மாங்காட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் தேவசகாயம் என்பவர் இறந்தார். மேலும் இருவர் குண்டடிபட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பைங்குளம், பெரியவிளை ஊரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் செல்லையன் என்பவர் இறந்தார். பலருக்குக் குண்டுக் காயம் ஏற்பட்டது. இதனைப் பற்றி அறிந்ததும் அங்கு வந்த நத்தானியலைச் சமஸ்தான காங்கிரஸ் தொண்டர்கள் சுற்றி வளைத்தனர். அவர்களிடமிருந்து நத்தானியல் தப்பிவிட்டார்.

இந்தச் சூழ்நிலையில் காந்தியடிகள் 1948 ஜனவரி முப்பதாம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டதால் தேர்தல் பிப்ரவரி பத்துக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

தேர்தல் நாளன்று நெய்யாற்றங்கரைத் தொகுதியில் அதன் வேட்பாளரான சத்திய நேசன் கொல்லங்கோட்டில் தாக்கப்பட்டார். மற்றொரு வேட்பாளரான குஞ்சன் நாடார் மாவிளையில் கத்தியால் குத்தப்பட்டார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் காவலர்கள் தடுத்து நிறுத்தாமல் பார்த்துக் கொண்டு நின்றதாக ரசாக் குறிப்பிட்டுள்ளார்.[9]

இருபத்தொரு வயது நிறைந்தவர்கள் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை இருந்ததால் தேர்தல் நாளில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். தேர்தல் ஒரே நாளில் நடைபெறாமல் பல நாள்களாக நடைபெற்றதால் தேர்தலின் போது சமூக விரோதிகள் கலவரம் செய்தனர்.

விளவங்கோடு தொகுதியில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் நேசமணி போட்டியிட்டார். அந்தக் காலத்தில்

கத்தோலிக்க மத குருமார்களில் பெரும்பாலோர் மலையாளிகள். எனவே கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் சமஸ்தான காங்கிரசுக்கு வாக்களித்தனர்.

தேர்தல் முடிவு வெளியானது. தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை, நெய்யாற்றங்கரை ஆகிய நான்கு தொகுதிகளில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தோல்வி அடைந்தது. பிற பதினான்கு தொகுதிகளிலும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் வெற்றிபெற்றது.

மொத்தம் உள்ள 120 தொகுதிகளில் சமஸ்தான காங்கிரஸ் 106 இடங்களில் வெற்றி பெற்றது. பதினான்கு தொகுதிகளில் வெற்றி பெற்ற திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் எதிர்க் கட்சியாக விளங்கியது.

1948 மார்ச் 20 ஆம் நாள் சட்டப் பேரவை கூடியது. இந்த முதல் நாள் கூட்டத்தில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. தமிழர் பகுதிகளில் நடைபெற்ற வன்முறையைக் கண்டிப்பதற்காகவே நேசமணி இவ்வாறு முடிவெடுத்தார்.[10] சட்டப்பேரவைத் தலைவராக ஏ.ஜே.ஜான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பேரவையின் இரண்டாம் கூட்டத்தில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**தார் குழு**

இந்திய அரசியலமைப்பை உருவாக்கும் குழுவுக்குத் தலைவராக இருந்தவர் இராஜேந்திர பிரசாத். அவர் மாநிலங்களை மொழிவாரியாகப் பிரிப்பதற்காக ஒரு குழுவை 1948 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் நாள் நியமித்தார். இந்தக் குழுவுக்கு ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.கே. தார் தலைவராக நியமிக்கப்பட்டார். டாக்டர் பனன்லால், ஜகத் நாராயணலால் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.[11]

தார் குழு தென்னிந்தியப் பகுதி முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. மொழிவாரியாக மாநிலங்களைப் பிரித்துச் சீரமைப்பதில் உள்ள நன்மை தீமைகளை ஆய்வு செய்தது.

தார் குழு தனது அறிக்கையை 1948 டிசம்பர் பத்தாம் நாள் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின் வாசகம் பெரும்பாலும் எழுத்துக்கு எழுத்து மொழிவழி மாகாண அமைப்பை விவேகமற்றது, ஆபத்தானது என்று வருணித்தது. ஆனாலும் கேரள மாநில அமைப்பைப் பொறுத்தவரையில் திருவிதாங்கூர் கொச்சி என்னும் இரு சமஸ்தானங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தால் சென்னை மாநிலத்தில் உள்ள மலபாரைச் சுலபமாக அதோடு இணைத்துக் கேரள மாநிலத்தை இலகுவாக அமைத்திருக்க முடியும் என்று ஒரு அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தது. இதை ஐக்கியக் கேரளவாதிகள் பிடித்துக் கொண்டு கொச்சி, திருவிதாங்கூர் இணைப்பை உடனடியாக ஏற்படுத்துவது என்று உறுதி எடுத்தார்கள்.[12]

தார் குழு சமர்ப்பித்த அறிக்கையை ஆய்வு செய்து கருத்து வழங்குவதற்கு ஜெய்ப்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் வல்லபாய் பட்டேல், பட்டாபி சீதாராமய்யா, ஜவகர்லால் நேரு ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்தக் குழு 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல்நாள் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையில் மொழிவாரியாக மாநிலங்களைப் பிரிக்கும் போது நாட்டின் ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி முதலானவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளது. மொழிவாரியாகப் பிரிப்பது என்று முடிவெடுத்தால் முதலில் ஆந்திர மாநிலத்தைப் பிரித்து விட்டு அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்த பிறகு மற்ற மாநிலங்களைப் பிரிப்பது பற்றித் தீர்மானிக்கலாம் என்றும் பரிந்துரைத்துள்ளது.[13]

**கொச்சி-திருவிதாங்கூர் இணைப்பு**

தார் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு ஏற்ப ஐக்கியக் கேரளம் அமைய வேண்டும் என்றால் அதற்கு முன்பாகத் திருவிதாங்கூர் சமஸ்தானத்தையும் கொச்சியையும் இணைக்க வேண்டும் என்று ஐக்கியக் கேரளம் காண விரும்பியவர்கள் நினைத்தனர். இந்த இணைப்பு முயற்சியை முன் எடுத்துச் சென்றவர் அப்போதைய திருவிதாங்கூரின் தலைமை அமைச்சராக இருந்த டி.கே.நாராயணபிள்ளை. அவருக்கு எல்லா உதவிகளையும் செய்யத்

தயாராக இருந்தார் அப்போது இந்திய உள்துறை அமைச்சராக இருந்த பட்டேல்.[14] சென்னை மாநிலத்தில் அமைச்சராக இருந்த மாதவமேனனும் இந்தத் திருவிதாங்கூர் கொச்சி இணைப்பில் ஆர்வம் உடையவராக இருந்தார்.

கொச்சியையும் திருவிதாங்கூரையும் இணைக்க வேண்டும் என்றால் இந்த இரண்டு சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஒப்புதல் வேண்டும். எனவே கொச்சி, திருவிதாங்கூர்ச் சட்டப் பேரவை உறுப்பினர்களைச் சந்திக்க வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவர்களுடன் சென்னை மாநிலத்தில் மலபார், பாலக்காடு பகுதிகளிலிருந்து உறுப்பினர்களாக இருந்தவர்களையும் இணைத்துக் கொண்டனர். இந்தக் கூட்டத்திற்கு ஐக்கியக் கேரளக் கவுன்சிலுக்குத் தலைவராய் இருந்த கேளப்பன் ஏற்பாடு செய்தார். கூட்டம் ஆல்வாயில் நடைபெற இருந்தது.

திருவிதாங்கூர்ச் சட்டப்பேரவையில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்களாயிருந்தவர்களுக்கும் இந்த அழைப்பு அனுப்பப்பட்டது. இந்தக் கூட்டம் பெரியாற்றங்கரையில் ஆல்வாயில் உள்ள தூய மேரி உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் 1949ஆம் ஆண்டு பிப்ரவரி ஆறாம் நாள் நடைபெற்றது. திருவிதாங்கூரும் கொச்சியும் சென்னை மாநிலத்தில் உள்ள மலபாரும் சேர்ந்து ஐக்கியக் கேரளமாக அமைய வேண்டும் என்பது தான் கூட்டத்தின் நோக்கம். அதற்கு முதற்படியாகக் கொச்சியும் திருவிதாங்கூரும் இணைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட நேசமணி நீங்கள் கொண்டுவரும் ஐக்கியக் கேரளத் தீர்மானத்தில் தமிழ்ப் பிரதேசங்கள் நீங்கலாக என்று திருத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

சென்னை மாநிலத்திலிருந்து மலபார் பிரிந்து போவதற்கு உரிமை பெறும்போது ஐக்கியக் கேரளம் அமைகின்ற வேளையில் திருவிதாங்கூர்த் தமிழ்ப் பகுதிகளும் பிரிந்து செல்லும் உரிமையைப் பெறுவது நியாயமாகும் என்று அறிக்கை வெளியிட்டார் பட்டாபி சீதாராமய்யா. இந்த அறிக்கையானது தலைமை அமைச்சர் டி.கே. நாராயணபிள்ளையைக் கோபம் அடையச் செய்தது. எனவே, அவர் 'இந்த அறிக்கை மிகவும் துர்ப்பாக்கியமானது' என்று குறிப்பிட்டார்.[15]

நேசமணி கொண்டு வந்த தீர்மானத்துக்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவும் சமஸ்தான காங்கிரஸ் உறுப்பினர்களில் பதினோரு பேர் ஆதரவும் மட்டுமே கிடைத்தன. எனவே தீர்மானம் தோல்வி கண்டது. திருவிதாங்கூரையும் கொச்சியையும் இணைப்பதற்கு முடிவானது.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து கொச்சியின் அமைச்சர் இக்கண்ட வாரியார், திருவிதாங்கூர்த் தலைமை அமைச்சர் டி.கே.நாராயண பிள்ளை, சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் மாதவ மேனன் ஆகிய மூவரும் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானங்களை இணைப்பதற்கான முயற்சி எடுத்துக் கொண்டனர்.[16]

இந்தியாவில் உள்ள சமஸ்தானங்களை இணைக்கும் பணியை அப்போது பட்டேல் எடுத்து வந்தார். எனவே கொச்சியையும் திருவிதாங்கூரையும் இணைக்கும் முயற்சிக்கு அவர் ஆதரவு வழங்கியதுடன் தனது உதவியாளர் வி.பி.மேனனை அதற்காக அனுப்பி வைத்தார்.

இந்த வேளையில் அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் வி.பி.மேனனைச் சந்தித்தனர். நேசமணி, ஏ.ஏ. ரசாக், சிவராமபிள்ளை ஆகிய மூவரும் சென்று மேனனைச் சந்தித்தனர். "உங்களுக்கு என்ன கோரிக்கை?" என்று மேனன் கேட்டார். கையில் தயாராக வைத்திருந்த விண்ணப்பத்தை நேசமணி கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட வி.பி.மேனன், அந்த விண்ணப்பத்தைப் பற்றிச் சொல்லுமாறு கேட்டார்.

"திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தானங்கள் சேரும் போது திருவிதாங்கூரில் உள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைய வேண்டும்" என்றார் நேசமணி. இதைக் கேட்டதும் வி.பி.மேனன், "இந்தப் பிரச்சனையைக் கவனிப்பதற்கு எனது அமைச்சர் (பட்டேல்) எனக்கு அதிகாரம் வழங்கவில்லையே" என்றார். அதற்கு மேல் அவரிடம் சொல்வதற்கு எதுவும் இல்லை என்பதால் மூவரும் வெளியேறினர்.[17]

இதைத் தொடர்ந்து நேசமணி **1949**ஆம் ஆண்டு மார்ச் **21**ஆம் நாள் பட்டேலுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் திருவிதாங்கூரில் உள்ள **65** இலட்சம் மக்களில் **40** இலட்சம் மக்கள் ஐக்கியக் கேரளம் அமைவதை விரும்பவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.[18]

இவை எதையும் பொருட்படுத்தாமல் வி.பி.மேனன் கொச்சியையும் திருவிதாங்கூரையும் இணைப்பதில் ஆர்வமாக இருந்தார்.

எனவே, திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகப் போராட்டத்தில் இறங்கியது. 1949 ஏப்பிரல் 13ஆம் நாள் நாகர்கோவில் நகரசபைத் திடலில் நத்தானியல் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அந்தப் பொதுக் கூட்டத்திலேயே திருவிதாங்கூர் அரசின் கெசட்டையும் திருவிதாங்கூர் ஸ்டாம்பையும் கொளுத்தினார்கள். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நத்தானியல், ஆர்.கே.ராம், காந்திராமன், பி.எஸ்.மணி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கைதான நத்தானியல், நேசமணிக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பியிருந்தார். அதில்,

“போராட்டத்தை நடத்துவதற்குத் தலைமைப் பொறுப்பில் உள்ள உங்கள் ஒருவரால் தான் முடியும். ஆகவே உங்களை அதன் சர்வாதிகாரியாக நியமிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் இந்தப் போராட்டத்தை விரும்பவில்லை என்பதும் எனக்கு தெரியும். ஆனாலும் உங்களைத் தவிர வேறு எவரையும் இந்தக் கட்டத்தில் என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. ஆகவே தயவு செய்து இந்தப் பொறுப்பை ஏற்றுப் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்”[19] என்று எழுதியிருந்ததார்.

தொண்டர் பலமும் பணபலமும் இல்லாத வேளையில் உணர்ச்சிக் கொந்தளிப்பில் தொடங்கப்பட்ட அந்தப் போராட்டத்தை நடத்தும் பொறுப்பு நேசமணிக்கு வந்தது. எனினும் ஐந்து நாள் போராட்டத்தை நடத்தினார். ஐந்தாவது நாள் காமராசர் (தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்) வந்தார்.

காமராசருக்குப் பட்டேல் ஒரு தந்தி அனுப்பியிருந்தார். அதில் ‘மொழிவழி மாநிலம் அமைக்கப்படும் போது திருவிதாங்கூர்க் காங்கிரஸ் கட்சியின் கோரிக்கை கவனிக்கப்படும்’ என்றிருந்தது. அப்போது காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த சங்கர ராவ் தேவ் இது தொடர்பாக, காமராசருக்கு ஒரு கடிதமும் எழுதியிருந்தார். அவற்றை நேசமணியிடம் காமராசர் கொடுத்தார். அதைப் பார்த்த நேசமணி, அதுபற்றித் தடுப்புக் காவல் சிறையிலிருக்கும் தலைவர்களின் கருத்தை அறிந்து கொள்ள விரும்பினார். காமராசரே சிறையிலிருந்தவர்களிடம், “திருவிதாங்கூரும் கொச்சியும் இரண்டு நாட்டு அரசர்கள் ராஜ்யம் என்ற

நிலையில் ஒன்றாக இணைக்கப்படுவது ஒரு அரசியல் கட்டாயம். மலபார் இப்போது இணைக்கப்படப் போவதில்லை. கேரள மாநிலம் இப்போது அமைக்கப் படாது. மலபாரும் கேரளத்தோடு இணைக்கப்பட்டு ஐக்கியக் கேரளம் அமைக்கப்படும் போது திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப் பகுதிகள் சென்னை மாநிலத்தோடு இணைக்கப்படும்'' என்றார். இதை ஏற்றுக் கொண்ட நத்தானியல், ஆர்.கே.ராம், காந்திராமன், பி.எஸ்.மணி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

தலைவர்கள் அனைவரும் காமராசர் கன்னியாகுமரியில் தங்கியிருந்த கேப் ஹோட்டலுக்குப் போய் அவரைச் சந்தித்தனர். அப்போது, 'திருவிதாங்கூரில் உள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைத் தமிழ்நாட்டுக் காங்கிரசின் இணைப்புக் கமிட்டியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வலியுறுத்தினார்கள். மலபாரில் உள்ள காங்கிரஸ் கமிட்டியானது 'கொச்சி–திருவிதாங்கூர் காங்கிரஸ் கமிட்டியுடன் இணைந்திருப்பதைப் போன்றே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியுடன் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் இணைந்து செயல்படலாம்' என்று நத்தானியல் விளக்கினார்.[20]

''மலபார் முன் உதாரணம் இருக்கவே இருக்கே. இதிலே பெரிய பிரச்சினை ஒண்ணும் இருக்க முடியாது. அடுத்த காரிய கமிட்டிக் கூட்டத்திலேயே நான் இதைக் கவனிச்சிக்கிறேன்''[21] என்று காமராசர் தெரிவித்தார்.

இந்த முடிவுகளைத் தமிழ் மக்களுக்குத் தெரிவிப்பதற்காக நாகர்கோவில் நகரசபைத் திடலில் பொதுக்கூட்டம் போடப்பட்டது. அந்தக் கூட்டத்தில் காமராசரும் கலந்து கொண்டார்.

''இப்ப பாருங்கோ, கொச்சி–திருவிதாங்கூர் சமஸ்தானங்கள் மதராஸ் மாகாணத்திலிருக்கும் மலபாரோடு இணையப் போறதில்லை. அதனால இப்ப ஐக்கியக் கேரளம் அமையப் போறதில்லை. பின்ன இப்ப என்ன நடக்கப் போறதின்னா, கொச்சி மகாராஜாவும் நம்ம மகாராஜாவும் சேர்ந்து இரண்டு ராஜ்யங்களையும் ஒன்றாகச் சேர்க்கப் போறாங்க. இந்தச் சேர்க்கைக்கு இந்திய அரசு அங்கீகாரம் தருது. அவ்வளவு தான். நாம எடுத்துக்கிட்ட நேரடி நடவடிக்கைகள் இந்த இந்திய அரசாங்க அங்கீகாரத்துக்கு விரோதமானது இல்லை. அப்படிக் கேரளவாதிகள் மத்திய சர்க்காரிடம் மூட்டிவிட்டிருக்காங்க. அப்படி அல்ல என்பதற்காக

நாம் இப்போது நம்முடைய கிளர்ச்சியைக் கைவிட்டு விடுறோம்"[22] என்று நத்தானியல் விளக்கிக் கூறினார். அதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். 1949 ஜூலை முதல் நாள் திருவிதாங்கூரும் கொச்சியும் இணைந்தன.

**தென் எல்லை மாநாடு**

சென்னையில் 1949 ஆம் ஆண்டு நவம்பர் ஐந்தாம் நாள் நடைபெற்ற தமிழரசு கழக மாநாட்டில் பங்கேற்பதற்காக நேசமணி முதலான தலைவர்கள் சென்னைக்குச் சென்றனர். அப்போது தெற்கே ஓர் எல்லை மாநாடு நடத்தினால் தமிழர்களின் எழுச்சிக்கு வாய்ப்பாக இருக்கும் என்று ம.பொ.சி. கருத்துத் தெரிவித்தார். நேசமணி முதலானோருக்கும் அது பொருத்தமாகவே தோன்றியது.

இராயப்பேட்டை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பத்திரிகையாளர் கூட்ட திற்கு வந்திருந்த நிருபர்களில் பலர் மலையாளி. அவர்களில் ஒருவர், "ஐக்கியக் கேரளம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்படாமல் இருந்தால் நீங்கள் ஐக்கியத் தமிழகம் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருப்பீர்களா?" என்று நேசமணியிடம் கேட்டார்.

"வெள்ளையர் போகாமல் இருந்தால் ஐக்கியக் கேரளம் அமைய வேண்டுமென்று கேட்டிருப்பார்களா? என்று இப்போது நான் கேட்டால் அது புத்திசாலித்தனமான கேள்வியாக இருக்குமா?" என்று விடையளித்தார் நேசமணி. பத்திரிகையாளர் சந்திப்பில் நேசமணியை மடக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் கேள்வி கேட்டவர்களுக்கு அவர் சுடச்சுடப் பதில் அளித்தார். இவ்வாறு பல்வேறு கேள்விகளுடன் பத்திரிகையாளர் சந்திப்பு நிறைவடைந்தது. இப்போது தெற்கு எல்லை மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டிய பொறுப்பு முதலாவதாக நின்றது. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்களிடம் தெற்கெல்லை மாநாடு தொடர்பாக நேசமணி கருத்துக் கேட்டார். அவர்கள் ஒப்புதலுடன், கட்சித் தலைவர் நத்தானியல் ஒப்புதலுக்காக அனுப்பினார். அவரும் ஒப்புக் கொண்டார்.

மாநாட்டுப் பொறுப்பைப் பலரும் பகிர்ந்து செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக நேசமணி செயல்பட வேண்டும் என்று நத்தானியல் முன்மொழிந்தார். ராம் வழிமொழிந்தார். அதை நேசமணி ஏற்றுக் கொண்டார்.

தென் எல்லை மாநாடு கன்னியாகுமரியில் கலங்கரை விளக்கத்திற்கு அருகில் 1950 ஜனவரி ஆறாம் நாள் காலை எட்டுமணிக்குத் தொடங்கியது. மாநாட்டில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தொடக்கவுரை ஆற்றினார்.

**மாநாட்டில் கவிமணி உரை**

“பண்டைக் காலத்தில் தென் திருவிதாங்கூர் பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆய் நாடு, தெங்க நாடு, படப்ப நாடு, வள்ளுவ நாடு, குறுநாடு, நாஞ்சில் நாடு, புறத்தாய நாடு என்பவை அவற்றுள் முக்கியமானவை. யாவும் செந்தமிழ் நாடுகளே என்பதனைப் பற்றி விரிவாகக் கூறத் தேவையில்லை என்று விட்டொழித்து, தமிழ் மக்கள் அனைவரும் இன்று ஒருங்கு கூடியிருக்கும் இத்தென் குமரியைப் பற்றிய சில விவரங்களை மட்டும் தெரிவிக்கத் துணிகின்றேன். இது பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஊர் என்பதில் ஐயமில்லை. கல்லெழுத்துகளில் இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் தேவி, அடியில் வருமாறு குறிப்பிடப்பட்டு இருக்கிறாள். ‘ராஜ ராஜ பாண்டி நாட்டு உத்தம சோழ வள நாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரி கன்னியா பகவதியார்’.

புறத்தாய நாடு என்பதற்கு முறத்தாய நாடு என்பது வேறொரு பெயர். வாரணவாசி நாடு என்ற பெயரும் இதற்கு உண்டு. பாண்டிய நாட்டுப் புறத்தாய நாடான தென் வாரணவாசி நன்னாட்டுக் குமரி கன்னியா பகவதியார் என வரும் கல்வெட்டுத் தொடரால் இவற்றை அறியலாம். வாரணவாசி நாடு என்பது இரண்டாவது குலோத்துங்க சோழனுடைய பாட்டன் பெயரால் பெறப்பட்ட பெயராம். இக்குமரிக்குக் கங்கை கொண்ட சோழபுரம் என்ற வேறொரு பெயரும் இருக்கிறது. கங்கை கொண்ட சோழன் என்பது முதல் ராஜேந்திரனுக்கு ஒரு சிறப்புப் பெயர். அதன் காரணமாகவே இப்பெயர் இதற்கு ஏற்பட்டிருக்க வேண்டும். தேவி கோயிலும் சற்று வடபாலிருக்கும் குகநாதீசுவரர் கோயிலும் இங்கு முக்கியமான கோவில்கள். இரண்டிடங்களிலும் 1000 கல்வெட்டுகளுக்கு மேல் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டொன்றைத் தவிர மற்றவை யாவும் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டுள்ளவையே.

குமரிக் கோவிலில் கொடி மரத்தின் பீடத்தைச் சுற்றிப் பொறிக்கப்பட்டிருப்பது விஜயநகர வேந்தருடைய கல்லெழுத்து. அது கிரந்த லிபியில் பொறிக்கப்பட்ட வடமொழி சாசனம். இன்னொன்று அதற்கு அடுத்த மேல்பக்கம் உள்ள மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அது தெலுங்கு சாசனம். இந்த இரு கல்வெட்டுக்களைப் பற்றிய விவரம் இதுகாறும் வெளிவரவில்லை. முதல் ராஜ ராஜ சோழனுடையது தான் இங்குள்ள கல்வெட்டுகளில் மிகப் பழமையானது. ராஜேந்திர சோழன், ராஜாதி ராஜன் முதலியோருடைய கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. வீர ராஜேந்திரனுடைய நீண்ட சாசனம் ஒன்று மணிமண்டபத்தில் உள்ள கல்தூண்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. மேல் குறித்த பராந்தக பாண்டியனுடைய கல்வெட்டு இந்தக் கன்னியாகுமரி ஆலயத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் இருப்பதாக இதுவரையிலும் கண்டறிந்ததில்லை. இதன் காலம் ஏறக்குறைய **850** ஆண்டுகளுக்கு முன்பாம். இதில் தேவியைத் 'தென்னவர் தம் குல தெய்வம்' என்று பொறித்திருப்பது குறிப்பிடத்தக்கது. பாண்டிய மன்னனுக்குக் குமரிச் சேர்ப்பன் என்று பெயர்.

*பொதிய பொருப்பன் புனல்வையைத் துறைவன்*
*குமரிச் சேர்ப்பன் கோப்பாண்டியனே*

என்பது சேந்தன் திவாகரச் சூத்திரம். இத்திவாகரம் தமிழ் நிகண்டுகளுள் மிகவும் பழமையானது. இதன் காலம் கி.பி. எட்டாவது நூற்றாண்டின் நடுப்பகுதி என்பது ஆராய்ச்சி முடிவு.

மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுகளாலும், தென் திருவிதாங்கோட்டில் வேறு பல பாகங்களில் காணப்படும் கல்வெட்டுகளாலும் விளவங்கோட்டுத் தாலுகாவில் உள்ள முன்சிறை பார்த்திப சேகரபுரம் செப்பேடுகளாலும் தென்திருவிதாங்கோடு ஓர் செந்தமிழ்நாடே என்பதும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தே, ஏன்... சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் பிறவும் தெள்ளத் தெளிய அறியக் கூடியவையாம். உண்மை இவ்வாறு இருந்தும் ஒரு மேதாவி திருவிதாங்கோட்டிலுள்ள தமிழர்கள் இடைக்காலத்தில் தோட்ட வேலைக்காக வந்த கூலியாட்கள் என்று பிதற்றியிருக்கிறார். உண்மையைச் சொல்கிறேன் கேளப்பா, கேளப்பா என்றால் கேட்பதுமில்லை. இந்நாடு முழுமையும் நம்முடையது என்பதற்கு மலையாள நண்பர்களும் சில ஆதாரங்களைக்

காட்டுகின்றனர். அவர்கள் காட்டும் ஓர் ஆதாரம்—கேரளோற்பத்தி, கேரள மகாத்மியம் என்னும் நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு பாட்டி கதை.

பரசுராமர் கோகர்ணத்திலிருந்து மழுவை எறிந்து கன்னியாகுமரியில் வீழ்த்தி 160 யோசனை தூரம் கடலை விலக்கி, பிராமணர்களுக்குத் தானம் செய்த கதை இது. திரேதாயுகத்தில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் இந்தக் கதை, கலியுகத்தில் அதுவும் அணுகுண்டு சகாப்தத்தில் சரித்திரப் பிரமாணமாக முன் நிறுத்தப்படுகிறது. இந்தப் பிரமாண நூல்களைப் படித்துவிட்டு 'மலபார் அண்ட் அஞ்சங்கோ' என்ற நூல் எழுதிய திருலோகன் என்பார், 'அவை பொருளற்ற புராணப் புளுகுகள்' என்றார். இப்படியிருக்க இந்த நூல்களின் புனிதத்தன்மையை எடுத்து விளம்பரப்படுத்தும் பெரியோர்களின் நேர்மையை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

முடியாட்சி நீங்கிக் குடியாட்சி ஓங்கும் இக்காலத்தில் மக்கள் சாதி, சமய வேறுபாடுகளை ஒழித்து, மொழியால் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வகை ஏற்படுவது இன்றியமையாதது. அதற்காகவே தெலுங்கர்கள் ஆந்திர மாகாணம் கேட்கின்றனர். கேரளர்களும் தனி மாகாணத்திற்கு அரும்பாடுபடுகின்றனர். இவ்வேளையில் தென்திருவிதாங்கோட்டிலும் செங்கோட்டையிலும் தேவிகுளத்திலும் பீர்மேட்டிலும் வாழும் தமிழர்கள் தங்கள் இடங்களையும் தாய்த் தமிழ்நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று கேட்பதில் குற்றம் என்ன இருக்கிறது?

எந்தெந்த மொழியாளர்கள், அண்டையிலுள்ள தம் தாய்மொழிப் பகுதியோடு சேர விரும்பினாலும் அவர்களைப் பிரித்தும், சேர்த்தும் ஒற்றுமையாய் வாழத் துணைசெய்வது தான் பொது நோக்கம் கொண்ட சிறந்த அரசியல் தலைவர்களின் கடமை ஆகும். இதற்காகச் சரித்திரமும் புராணமும் சாசனமும் இலக்கியமும் புரட்டிப் பார்க்க வேண்டிய தேவையில்லை. கண்முன்னே காணும் உண்மையை நிரூபிக்க ஆதாரம் தேட வேண்டிய அவசியம் உண்டோ? இமயமலையில் சேர சோழ பாண்டியர்களின் வில்லும் புலியும் கயலும் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தமிழ் நூல்கள் சொன்னால் சிரிக்க மாட்டார்களா இந்தக் காலத்தில்?

திருவிதாங்கோட்டுத் தமிழர்கள் அண்டையில் இருக்கும் தாய்த் தமிழகத்தோடு இணைய விரும்புகின்றனர். தமிழ் நாட்டவரும் இவர்களைச் சேர்த்துக் கொள்ள ஆசைப்படுகின்றனர். இந்நிலையில் இவ்விருசாராரையும் இணைத்து வைப்பது ஒன்றே ஆளும்

அதிகாரிகளின் கடமை. கேரளியர் இதில் தலையிட்டுக் கலைக்க முயலுவது ஒரு சிறிதும் நியாயமாகாது. 'தமிழர்கள் ஏன் பிரிந்து போகவேண்டும்? வேற்றுமை உணர்ச்சியின்றி இன்று போல் என்றும் இருந்தால் என்ன?' என்று சிலர் கேட்கின்றனர்.

தமிழன் என்றும் மலையாளி என்றும் வேற்றுமை பாராத ஒரு பொது மன்னர்—ஒரு பொது அரசாங்கம் இருந்த காலம்வரை யாருக்கும் இந்தப் பிரிவினை உணர்ச்சி உண்டானதில்லை. "நாம் மலையாளிகள்; மலையாளப் பகுதிகள் அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி ஒரு மலையாள மாகாணம் அமைக்க வேண்டும்" என என்று மலையாளிகள் கருதிவிட்டார்களோ அன்றே வேற்றுமை உணர்ச்சி வேரூன்றி விட்டதல்லவா? அதற்கு மேல் சிறுபான்மை சமூகத்தாரான தமிழர்கள் ஆட்சியாளர்களின் தயவை எதிர்பார்த்து வாழ்வதைத் தவிர நியாயமான உரிமையைப் பெற்று வாழ முடியுமா?

இச்சந்தேகம் அவர்கள் உள்ளத்தில் எழுவது இயல்புதானே? இதற்குள் தமிழர்கள் இகழப்பட்டுவிட்டார்கள். புறக்கணிக்கப் பட்டுவிட்டார்கள். இதை நிரூபிக்க எத்தனையோ சான்றுகள் தரமுடியும். இன்று திருவிதாங்கோடு முழுமையும் 'ஒரே நாடு', 'ஒரே நாடு' என்று சொல்வதெல்லாம் குப்பிகளில் தண்ணீரும் எண்ணையும் நிறைத்து கார்க்கினால் இறுக மூடி ஒன்றெனக் காட்டுவதற்கு ஒப்பேயன்றி வேறல்ல. உண்மை யாவரும் அறிந்ததே.

செந்தமிழ்ச் செல்வர்களே நீங்கள்! தமிழ்நாட்டின் எல்லையை விவாதித்து, வழக்காடி நிலைநாட்டிவிட்டீர்கள். 'மதராஸ் மனதே' என்ற பேச்சு அடங்கிவிட்டது. இப்பொழுது தென் எல்லைக்கு வந்திருக்கிறீர்கள். இங்கும் 'நாஞ்சி நாடு ஞங்ஙளிடேது' என்ற பேச்சையும் அடக்கி வெற்றிக் கொடியேற்றி வீரத் தமிழர் முரசை முழக்குவீர் என்பதில் யாதும் ஐயமில்லை. அதற்கு தேவி குமரி திருவருள் புரிவாராக.

*தென்னெல்லை காத்தருளும் தேவி குமரீநின்*
*பொன்னடியைக் கும்பிட்டு போற்றுகின்றேன் மன்னுபுகழ்*
*செந்தமிழ் நாடொன்றாகித் தேவர் நாடொத்துலகில்*
*சந்ததமும் வாழ வரம் தா*

என்ற பிரார்த்தனையோடு இந்த மாநாட்டினைத் திறந்து வைக்கிறேன். வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்நாடு, வாழ்க தமிழ் மக்கள் மகிழ்ந்து".[23]

**மாநாட்டில் நேசமணியின் உரை**

“சரித்திரப் பூர்வமாக 14 ஆம் நூற்றாண்டுவரை தென் தாலுகாக்கள் தமிழ் மக்களாகிய பாண்டிய அரசர்களது அதிகாரத்திற்கு உட்பட்டவை. கல்குளம் தாலுகாவில் பறளியாற்றில் கட்டியிருக்கும் பாண்டியன் அணை இதற்கு அத்தாட்சி. அதிலிருந்து உற்பத்தியான பாண்டியன் கால்வாய் தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம் முதலான தாலுகாவில் நெற்பயிர் கிருஷிக்கு மிகவும் உதவியாயிருந்தது. புத்தன் அணைக்கட்டைத் திறக்கும் போது அக்காலத்துத் திருவிதாங்கூர் மன்னர் கூறியவாறு ‘பாண்டியன் அணைக்கட்டும் கால்வாயும் எட்டு நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை’. இந்து தேசத்து மன்னர்களில் பரோபகாரிகள் என்று கூறப்படும் அக்பர் சக்கரவர்த்தியும் அகல்யா பாயும் அப்பொழுது எதிர்காலத்தின் கருப்பையில்தான் இருந்தார்கள். திருவிதாங்கூர் உருவாகும் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் பாண்டிய மன்னர்கள் இப்பிரதேசத்தைக் கண்டார்கள். அவர்கள் காலத்திற்குப் பின் இந்நாடு மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டது. ஒரு பாகம் புறத்தாய நாடு. இது இன்று நீங்கள் காண்கின்ற மண் கோட்டைக்கும் கீழ்ப்பக்கம் கிடக்கும் நாடு. இன்னொரு பாகம் நாஞ்சில் நாடு. அது கல்குளம் தாலுகாவில் மங்கலம் முதல் மணக்குடி காயல் வரையிலும் கிடக்கும் நாடு. மற்றொரு பாகம் வேணாடு. நெய்யாற்றங்கரை, விளவங்கோடு தாலுகாக்களும், கல்குளம், திருவனந்தபுரம் தாலுகாக்களில் சில பாகங்களும் இதில் உள்படும். பாண்டிய மன்னனின் ஒரு தளபதி, வேணாட்டு அரசனாகத் தன்னை ஸ்தாபித்து நாஞ்சில் நாட்டைச் சேர்த்துக் கொண்டார். வட திருவிதாங்கூர் முழுவதையும் பிடித்தடக்கினார். புறத்தாய நாடும் செங்கோட்டைத் தாலுகாவும் ஆற்காட்டு நவாபால் திருவிதாங்கூர் மகாராஜாவுக்கு 1766 ஆம் வருஷம் கொடுக்கப்பட்டன. ஆகவே, திருவிதாங்கூர் சமஸ்தானத்தை உருவாக்கியவன் தமிழன். அவனைக் குடியேறியவன் என்று கூறுவது எவ்வளவு மதியீனம். தமிழகத்தோடு திருவிதாங்கூருக்கு உள்ள தொடர்பு வலுப்பட வேண்டும். அதற்காகப் பிற நிகழ்ச்சிகளை எதிர்பார்க்காமல் திருநெல்வேலி இருப்புப் பாதையை நீட்டி இங்கே கொண்டு வரவேண்டும்”[24] என்று நேசமணி உரையாற்றினார்.

மாநாட்டில் நடைபெற்ற முக்கிய உரைகளில் கி.ஆ.பெ. விசுவநாதத்தின் உரையும் குறிப்பிடத்தக்கது ஆகும். அதைத் தொடர்ந்து, தமிழ் நாடெங்கும் உள்ள பல கட்சிப் பிரமுகர்களையும் கொண்ட ஒரு

ஐக்கியத் தமிழகக் கவுன்சில் அங்கே உருவாக்கப்பட்டது. அதன் கன்வீனராகத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நத்தானியல் நியமிக்கப்பட்டார்.

**பாளையங்கோட்டை சமரசம்**

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ், திருவிதாங்கூர்–கொச்சி சமஸ்தானச் சட்டப் பேரவையில் வலிமையான எதிர்க்கட்சியாக விளங்கியது. திருவிதாங்கூர் – கொச்சி இணைப்புக்குப் பிறகு திருவிதாங்கூர் அமைச்சரவையில் ஒன்பது அமைச்சர்கள் சமஸ்தான காங்கிரசைச் சேர்ந்தவர்கள். மூன்று அமைச்சர்கள் கொச்சி காங்கிரசைச் சேர்ந்தவர்கள். கொச்சி காங்கிரசாருக்கு மூன்று அமைச்சர் தானா என்ற ஆதங்கம் இருந்தது. இதற்கு முன்பே திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரசார் 27 பேர் பட்டம் தாணுபிள்ளை தலைமையில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியாகச் செயல்பட்டார்கள். சமஸ்தான காங்கிரசுக்கு இருந்த 97 உறுப்பினர்களில் 27 உறுப்பினர்கள் போக மீதம் 70 உறுப்பினர்களே இருந்தனர்.

கருத்து வேற்றுமையால் கோபம் கொண்டிருந்த கொச்சி காங்கிரசார் 39 பேரும் எதிரணியாயினர். இவர்களுடன் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினரும் சேர்ந்து 55 பேர் எதிரணி ஆகிவிட்டனர். இவர்களுடன் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் 14 உறுப்பினர்களும் சேர்ந்தால் 80 பேர் ஆகிவிடுவர். எனவே திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைத் தம் பக்கம் இழுக்க முயற்சி செய்தார் தலைமை அமைச்சர் டி.கே. நாராயண பிள்ளை.[25]

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் தங்களைக் காங்கிரஸ் கட்சியில் ஒரு பிரிவினராகக் கருதியதுடன் திருவிதாங்கூரில் மட்டுமே தங்களுக்கு மாறுபட்ட கருத்து உள்ளது என்னும் எண்ணங் கொண்டவர்கள். எனவே தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் வாயிலாகச் சமரச முயற்சியை மேற்கொண்டார் நாராயணபிள்ளை. அதற்காக அவர் பக்தவச்சலத்தைத் தொடர்பு கொண்டார். அவரும் ஒப்புக் கொண்டார். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களுடன் பேசி, சமரசம் ஏற்படுத்துவதற்காக அவர் பாளையங்கோட்டைக்கு வந்தார்.

பாளையங்கோட்டையிலிருந்து திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் சாம் நத்தானியலுக்கு அழைப்பு வந்தது. அவர்

கட்சியின் செயற்குழுவில் ஆலோசனை நடத்தினார். அதில் பாளையங்கோட்டைக்குச் செல்வது என்று முடிவெடுத்தனர். அதன்படி நத்தானியல், நேசமணி, சிவராம பிள்ளை, காந்திராமன், பி.எஸ். மணி, தாணுலிங்கம் நாடார் உள்ளிட்ட அனைவரும் பாளையங்கோட்டைக்குச் சென்றனர்.

சமஸ்தான காங்கிரசிலிருந்து டி.கே. நாராயண பிள்ளையும் வேலாயுதம் நாயரும் அங்கே வந்திருந்தார்கள். பாளையங்கோட்டை உடன்பாட்டில்,

- திருவிதாங்கூரின் தென் தாலுகாக்கள் நான்கையும் சேர்த்து ஒரு வருவாய்க் கோட்டம் அமைத்தல்.
- திருவிதாங்கூரின் வடபகுதியில் உள்ள காசர் கோடு கோர்ட் நடவடிக்கைகளில் தமிழுக்கு முக்கியத்துவம் அளித்தல், தமிழ் தெரிந்த அலுவலர்களை நியமித்தல், புதிய தமிழ்ப் பள்ளிகள் உருவாக்கல்.
- திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் ஒரு புதிய மாவட்ட காங்கிரஸ் அந்தஸ்துடன் செயல்படும். காங்கிரஸ் மேலிடம் அனுமதி வழங்கும்வரை இது திருவிதாங்கூர் –கொச்சி மாநில காங்கிரஸ் கமிட்டியின் உட்கிளையாக இயங்கும். அனுமதி கிடைத்தால் சென்னையில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உட்கிளையாக இயங்கும்.
- திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் பேரவைக் கட்சி, திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து அமைச்சரவைக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.
- மொழிவழி மாநிலம் அமையும் போது திருவிதாங்கூர்த் தமிழ்ப் பகுதிகள், தாய்த் தமிழகத்துடன் இணைவதற்காகச் சட்ட சம்மதம் உள்ள எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ள இந்தப் புதிய மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு உரிமை உண்டு.

முதலிய உடன்பாடுகள் காணப்பட்டன. இந்த உடன்பாட்டுக்கு ஒப்புதல் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் பொதுக்குழுவில் கோரப்பட்டது. இந்த உடன்பாட்டுக்குப் பாளையங்கோட்டையில் உடன்பட்டவர்களில் ஒன்றிரண்டு பேர் பொதுக்குழுவில் திடீரென்று தங்கள் எதிர்ப்பைக்

காட்டினார்கள். அவ்வாறு எதிர்த்தவர்களில் ஒருவர் ஆர்.கே. ராம் என்று ஏ.ஏ. ரசாக் குறிப்பிட்டுள்ளார்.[26] எந்த முடிவும் எடுக்கப்படாமலேயே கூட்டம் முடிந்தது. அடுத்த கூட்டம் 1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆறாம் நாள் இடலாக்குடியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலும் பாளையங்கோட்டை உடன்பாடு பற்றி நத்தானியல் எடுத்துக் கூறினார். உடன்பாட்டை ஆதரித்தும் எதிர்த்தும் பலர் பேசியதால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அந்த வாக்கெடுப்பில் பாளையங்கோட்டை உடன்படிக்கை தோல்வி கண்டது.

**நத்தானியல் பதவி விலகல்**

பாளையங்கோட்டை உடன்படிக்கைக்கு எதிர்ப்பு மிகுதியாக ஏற்பட்டதால் நத்தானியல் மனம் வருந்தினார். ம.சங்கரலிங்கம் என்பவர் மிகுதியாக உடன்படிக்கையை எதிர்த்துப் பேசினார். எனவே செயற்குழு உறுப்பினர்களைக் கூட்டி நத்தானியல் ஆலோசித்தார். தாம் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

அடுத்த நாள் காலையில் நத்தானியல் வீட்டுக்குச் சங்கரலிங்கம் வந்து அவரையே தலைவராகத் தொடர்ந்து இருக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளை நத்தானியல் ஏற்றுக் கொள்ளவில்லை. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்வரை தலைவர் பதவியில் அவர் இருப்பதற்கு ஒப்புக் கொண்டார்.

**புதிய தலைவருக்கான தேர்தல்**

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1950 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் தேர்தல் நடைபெற்றது. அப்போது உதவித் தலைவராக இருந்த பி.இராமசாமி பிள்ளையைத் தலைவராக நேசமணி முன்மொழிந்தார். அதை, சிவராம பிள்ளை வழிமொழிந்தார். பி.தாணுலிங்கம் நாடாரை வேட்பாளராக முன்மொழிந்தார் காந்திராமன். அதை ஸ்ரீ.வி. தாஸ் வழிமொழிந்தார். வாக்கெடுப்பு நடைபெற்றது. அந்தத் தேர்தலில் நத்தானியல் நடுநிலை வகித்து யாருக்கும் வாக்களிக்கவில்லை. இராமசாமிபிள்ளை 47 வாக்குகள் பெற்றுத் தலைவரானார். தாணுலிங்கம் நாடாருக்கு 22 வாக்குகள் கிடைத்தன.[28]

தாணுலிங்கம் நாடாருக்கு வாக்களித்தவர்கள் அனைவரும் இராமசாமி பிள்ளையின் தலைமையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ஒன்றிணைந்து போட்டித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒழுகினசேரியில் உள்ள சரசுவதி திரையரங்கில் கூடினார்கள். அங்கே தாணுலிங்கம் நாடார் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்தார்கள். டி.டி.டானியலும் பி.எஸ்.மணியும் பொதுச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

**காமராசரின் சமரச முயற்சி**

1951 ஆம் ஆண்டு ஜூன் மாதம் காமராசர் கன்னியாகுமரிக்கு வந்திருந்தார். அவரது வருகையைப் பயன்படுத்தி, திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட பிளவைச் சரிசெய்ய விரும்பினார்கள். அதை ஏற்றுக் கொண்ட காமராசர் இராமசாமி பிள்ளையையும் நேசமணியையும் அழைத்து வரச் செய்தார். அந்தச் சமரசக் கூட்டத்தில் இராமசாமி பிள்ளை, நேசமணி, தாணுலிங்கம் நாடார், எ.ஏ.ரசாக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பாளையங்கோட்டை உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளாததால்தான் தனியாகப் பிரிந்தோம் என்று தாணுலிங்க நாடாரும் சிலரும் கூறினார்கள்.

பாளையங்கோட்டை உடன்படிக்கையைப் பொதுக்குழுக் கூட்டத்தில் தோற்கச் செய்த பின்னர், பாளையங்கோட்டை உடன்படிக்கையைப் பிரிவுக்குக் காரணமாகக் கூறுவது பொருந்தாது. தலைவர் தேர்தலில் தோல்வி அடைந்தவர்கள் அதைத் தாங்கிக் கொள்ள இயலாமல் பிரிந்து சென்று போட்டித் தலைவரையும் செயலாளரையும் தேர்ந்தெடுத்தார்கள் என்று நேசமணியும் ரசாக்கும் விளக்கினார்கள். இந்தச் சமரச முயற்சியால் எந்தப் பலனும் ஏற்படவில்லை.

மீண்டும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசில் ஏற்பட்டிருந்த பிளவைத் தீர்ப்பதற்காக 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நத்தானியல், மாதவன் பிள்ளை, காந்திராமன், குஞ்சன் நாடார் ஆகியோர் முயற்சி செய்தனர். இந்த இரு கட்சியினரும் ஒன்று சேரும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக நத்தானியலும் காந்திராமனும் கூறி உண்ணாவிரதம் இருந்தனர்.[29] ஆனால் மற்றவர்களின் வேண்டுகோளை ஏற்று நத்தானியலும் காந்திராமனும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். ஆனால் சமரசம் ஏற்படவில்லை.

**பொதுத் தேர்தல்**

1952 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. தேர்தலில் கட்சிகளுக்குச் சின்னம் ஒதுக்கும் பணி தொடங்கியது. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் என்ற பெயரில் இரண்டு கட்சிகள் உள்ளன. இரண்டுக்கும் அங்கீகாரம் வழங்குவதில் பிரச்சனை ஏற்பட்டது. இதற்காகத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் சட்டப் பேரவைக் கட்சித் தலைவர் நேசமணியை அழைத்தனர். தாணுலிங்க நாடாரும் அழைக்கப்பட்டிருந்தார். அவருடன் டி.டி. டானியலும் வந்திருந்தார். தாணுலிங்கம் நாடார், தங்கள் கட்சிக்கும் அங்கீகாரம் கேட்டு ஒரு விண்ணப்பம் கொண்டு வந்தார். அத்துடன் ஆர்.கே.ராம், ஸ்ரீ.வி.தாஸ் ஆகிய இரு சட்டப்பேரவை உறுப்பினர்களின் பரிந்துரையும் இருந்தது. இருப்பினும் அவர்களின் விண்ணப்பத்தைத் தேர்தல் அதிகாரி ஏற்றுக் கொள்ளவில்லை.

நேசமணியைச் சட்டபேரவைத் தலைவராகக் கொண்ட திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குக் குடம் சின்னம் ஒதுக்கப்பட்டது. அதன் பிறகு அங்கீகாரம் பெறாத அரசியல் கட்சி என்ற முறையில் தாணுலிங்கம் நாடாரைத் தலைவராகக் கொண்ட திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு வண்டிச் சின்னம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அவர்களின் கட்சியின் பெயரைத் தேர்தல் அதிகாரி ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அதை தி (The) திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் என்று மாற்றிக் கொண்டார்கள்.

பட்டம் தாணுபிள்ளையைத் தலைவராகக் கொண்ட சோஷலிஸ்ட் கட்சியில் நத்தானியல் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டார். அதன் சின்னம் ஆலமரம். குஞ்சன் நாடார் சுயேட்சை வேட்பாளராகப் பாறசாலையில் போட்டியிட்டார். அவரது சின்னம் யானை.

நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் நேசமணி, குடம் சின்னத்திலும் நத்தானியல் ஆலமரம் சின்னத்திலும் தாணுலிங்கம் நாடார் வண்டிச் சின்னத்திலும் சிவதாணுபிள்ளை சைக்கிள் சின்னத்திலும் போட்டியிட்டனர்.

தேர்தலின்போது திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கும், தி திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கும் இடையே போட்டி

கடுமையாக நிலவியது. இரண்டு கட்சிக்காரர்களும் மேடை போட்டுப் பேசும்போது ஒருவருக்கொருவர் சவால் விடும் தோரணையில் பேசிக்கொண்டனர். நேசமணி பேசும்போது "எல்லோரும் தேர்தலுக்கு ஆயத்தமாகிவிட்ட இந்த நிலையில் தேர்தல் முடிவுகளை ஒப்புக் கொள்வதே அறிவுடைமை ஆகும். யாருக்கு வெற்றி என்பதைப் பாராமல் தீர்ப்புக்கு மட்டுமே தலைவணங்க வேண்டும். அப்படி வரும் தீர்ப்பு எவ்வளவு கசப்பாக இருந்தாலும் அதை 'இத்தனை ஓட்டு வித்தியாசம் தானே' என்று துச்சப்படுத்தாமல் எப்படி, திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் பாளையங்கோட்டை சமரசத் திட்டத்தை நிராகரித்த பொதுக்கமிட்டித் தீர்ப்பை ஏற்றுக் கொண்டதோ, அது போல, தேர்தல் முடிவையும் சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொள்ள வேண்டும். தன்னைப் பொறுத்தவரையில் தேர்தல் தீர்ப்பு தனக்கு எதிராகப் போனாலும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு எதிராகப் போனாலும் அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு, தாணுலிங்கம் காங்கிரசையும் அவர் தலைமையையும் ஒத்துக் கொள்வேன். மாறாகத் தீர்ப்பு, தமக்கும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கும் சாதகமானால் அதை ஏற்று, தாணுலிங்கமும் அவர் காங்கிரசும் இதே போல நடந்து கொள்ள வேண்டும்"[30] என்று குறிப்பிட்டார்.

நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் நேசமணி வெற்றி பெற்றார். அவருடன் போட்டியிட்ட பிற வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளின் மொத்தத்தைவிடப் பதினேழாயிரம் வாக்குகள் மிகுதியாகப் பெற்றார். நேசமணிக்கு அடுத்த இடம் சிவதாணு பிள்ளைக்குக் கிடைத்தது. தாணுலிங்கம் நாடார் மூன்றாம் இடத்தையும் நத்தானியல் நான்காம் இடத்தையும் பெற்றனர்.

நாகர்கோவில் சட்டப்பேரவைத் தொகுதியில் குடம் சின்னத்தில் அனந்தராமன் போட்டியிட்டார். ஆனால் தேர்தல் நெருங்கும் போது அவராகவே சுயேட்சையாகப் போட்டியிடுவதாக அறிவித்துவிட்டார். உடனே மாற்று வேட்பாளராக டி.தாமஸ், குடம் சின்னத்தில் நிறுத்தப்பட்டார். தாணுலிங்கம் நாடாரைத் தலைவராகக் கொண்ட வண்டிச் சின்னத்தில் பி.எஸ்.மணி போட்டியிட்டார். இந்தத் தொகுதியில் டி.தாமஸ், பி.எஸ்.மணி, அனந்தராமன் ஆகியோர் தோற்றனர். சி.சங்கர் என்பவர் வெற்றிபெற்றார்.

பாறசாலைத் தொகுதியில் குஞ்சன் நாடாரை எதிர்த்து, குடம் சின்னத்தில் யாரையும் நிறுத்தவில்லை. எனவே அவர் வெற்றி பெற்றார்.

108 உறுப்பினரைக் கொண்ட திருவிதாங்கூர்– கொச்சி சட்டப் பேரவைத் தேர்தலில் அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு 44 இடங்கள் கிடைத்தன. கம்யூனிஸ்டுகள் இணைந்த ஐக்கிய முன்னணிக்கு 35. சோஷலிஸ்ட் கட்சிக்கு 12. குஞ்சன் நாடாருடன் சேர்த்து சுயேட்சையாக 10 பேர் வெற்றி பெற்றனர். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு 8 இடங்கள் கிடைத்தன. தனிப்பெருங்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தது. ஏ.கே.ஜான் முதல்வர் ஆனார். ஆனால் உடனே பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

இந்த நிலையில் இராஜ்ய சபைக்குத் (மாநிலங்கள் அவை) தேர்தல் வந்தது. எட்டு உறுப்பினர்களைக் கொண்ட திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் ரசாக் நிறுத்தப்பட்டார். அவர் 16 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இந்தியா குடியரசான பின் நடைபெற்ற முதல் தேர்தலில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு 8 சட்டப் பேரவை உறுப்பினரும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு இராஜ்ய சபை உறுப்பினரும் கிடைத்தனர்.

**சட்டப்பேரவைக் கட்சித் தலைவர்**

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இராமசாமி பிள்ளை செயல்பட்டு வந்தார். ஆனால் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் சட்டப் பேரவைக் கட்சித் தலைவராகச் சிதம்பரநாதன் நியமிக்கப்பட்டார். அவருக்குத் துணைத் தலைவராக இராமசாமி பிள்ளை நியமிக்கப்பட்டார். முதலில் இருவரும் கருத்தொருமித்து இருந்தாலும் போகப் போக இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

**காங்கிரஸ்–திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கூட்டு**

சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சி தனது பெரும்பான்மையைக் காட்டுவதற்குப் பிற கட்சிகளின் கூட்டணி தேவைப்பட்டது. அவர்கள், திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் எட்டு உறுப்பினர்களின் ஆதரவைக் கோரினார்கள். அந்தக் கோரிக்கை திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் வைக்கப்பட்டது. உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டதால் காங்கிரசுடன் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கூட்டணி சேர்ந்தது. சட்டப்பேரவைக் கட்சித் தலைவர் சிதம்பரநாத நாடார் 1952

மே 24 ஆம் நாள் வனத்துறைக்கும் வருவாய்த் துறைக்கும் அமைச்சரானார்.

**திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் அணிகளின் இணைப்பு**

தாணுலிங்கம் நாடாரைத் தலைவராகக் கொண்ட திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் தங்கள் அமைப்பைத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுடன் இணைப்பதற்கு விரும்பினார்கள். அதற்காக அவர்கள் அப்போது பொதுச் செயலாளராக இருந்த பொன்னப்ப நாடாரை அணுகினார்கள். சிதம்பர நாதன் நாடார், ஏ.ஏ.ரசாக் போன்றோர் இந்த இணைப்பை விரும்பவில்லை. வேறு வழியில்லாமல் இந்த இணைப்பிற்கு நேசமணி ஒப்புக் கொண்டார். 1952இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தாணுலிங்கம் நாடாரும் அவரைச் சேர்ந்தவர்களும் தோல்வி அடைந்த பிறகு நடைபெற்ற பஞ்சாயத்து, நகராட்சித் தேர்தல்களில் அவர் போட்டியிடவில்லை. எனவே இரண்டு அணியும் சேர்ந்து திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் என்று செயல்படுவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன்படி 1953ஆம் ஆண்டு மார்ச் 29இல் இணைப்பு அறிக்கை வெளியானது. இதே காலகட்டத்தில் சுயேட்சையாகச் செயல்பட்டு வந்த குஞ்சன் நாடாரும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசில் இணைந்துவிட்டார். குஞ்சன் நாடாரின் வருகையால் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்தது.

**இரணியல் தீர்மானம்**

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி, திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரசுடன் சேர்ந்து கூட்டணி அமைத்ததை இரு பிரிவினரிலும் பலர் விரும்பவில்லை. இதுபற்றி முடிவெடுப்பதற்காக 1953 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் நாள் இரணியலில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூடியது. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குத் தனி அங்கீகாரத்தை அகில இந்திய காங்கிரஸ் வழங்க வேண்டும். அவ்வாறு ஒப்புதல் வழங்காவிட்டால் திருவிதாங்கூர்– கொச்சி காங்கிரசுடன் இணைந்து செயல்பட முடியாது என்று அறிவித்தனர். இந்த அறிவிப்பைத் திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரசார் மேலோட்ட அறிவிப்பாகக் கருதினார்கள். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் இரணியலில் எடுத்த தீர்மானத்திற்கு அதன்

பொதுக்குழு ஒப்புதல் வழங்காது என்று திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரசின் தலைவராக இருந்த மாதவன் நாயர் குறிப்பிட்டார்.

இரணியலில் எடுத்த தீர்மானம் பொதுக்குழுவுக்கு விடப்பட்டது. இந்த வேளையில் நேசமணி டில்லியிலிருந்தார். 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் நாள் பொதுக்குழு நாகர்கோவிலில் கூடியது. டில்லியிலிருந்த நேசமணி அங்கிருந்தே ஓர் அறிக்கை தயாரித்து அதைக் கட்சியின் பொதுச் செயலாளர் பொன்னப்பன் நாடாருக்கு அனுப்பி வைத்து, அதைப் பொதுக்குழுவில் படிக்கச் செய்தார். நேசமணியின் அறிக்கைக்கு ஏற்பவே திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியானது காங்கிரசுடன் கொண்டிருந்த கூட்டணியை முறித்துக் கொண்டது. 1953 ஆம் ஆண்டு தமது அமைச்சர் பதவியிலிருந்து சிதம்பரநாதன் விலகினார்.

சட்டப் பேரவையில் திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரஸ் நம்பிக்கைகோரும் தீர்மானத்தை முன்வைத்தது. தீர்மானம் தோல்வி கண்டதால் சட்டப் பேரவை கலைக்கப்பட்டது. ஆனால் அமைச்சர்கள் அடுத்த தேர்தல் வரை பதவியில் இருந்தார்கள்.

**மீண்டும் சட்டப் பேரவைத் தேர்தல்**

1954 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருவிதாங்கூர்– கொச்சி சட்டப் பேரவைக்கு மறுதேர்தல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கச் செய்வதற்காக இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து போட்டியிட்டன. காங்கிரஸ் கட்சியினர், திருவிதாங்கூர்த் தமிழ்நாடு கட்சியுடன் கூட்டணி அமைத்துத் தேர்தலை எதிர்கொள்ள விரும்பினர். ஆனால் அவ்வாறு மேற்கொண்ட கூட்டணி முயற்சி வெற்றிபெறவில்லை.

தேர்தலில் திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரசுக்கு வாக்குத் திரட்ட காமராசர், டி.செங்கல்வராயன், அனந்த நாயகி முதலானோர் வந்தனர். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் காமராசருக்கு மதிப்பு உண்டு. ஆனால் அவர் திருவிதாங்கூர்– கொச்சி காங்கிரசுக்காக வாக்குத் திரட்டியதை அவர்கள் விரும்பவில்லை.

தேர்தல் முடிவில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் 12 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பதினான்கு

தொகுதிகளில் ஓர் இடத்தில் கூடத் திருவிதாங்கூர்– கொச்சி காங்கிரஸ் வெற்றி பெறவில்லை. மொத்தம் 108 தொகுதிகளாக இருந்த போது 44 தொகுதிகளில் வெற்றி பெற்ற காங்கிரஸ் 117 ஆனபிறகும் 45 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. ஆனால் முன்பு 8 உறுப்பினர்களைக் கொண்டிருந்த திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் இப்போது 12 உறுப்பினர்களைப் பெற்றது. காங்கிரஸ் ஆட்சி அமைக்க முயற்சி செய்யவில்லை. 17 தொகுதிகளில் வெற்றி பெற்ற பிரஜா சோசலிஸ்ட் கட்சியானது காங்கிரஸ் கட்சியின் துணையுடன் 1954ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் நாள் ஆட்சி அமைத்தது. பட்டம் தாணுபிள்ளை முதல் அமைச்சர் ஆனார்.[31]

பட்டம் தாணுபிள்ளை பதவியேற்று இரண்டு வாரம் முடிவதற்குள் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசை ஒடுக்கும் செயல்களில் ஈடுபட்டார். திருவிதாங்கூரில் உள்ள தமிழ்ப்பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் எதையும் பட்டம் தாணுபிள்ளை அரசு மேற்கொள்ளவில்லை.

எனவே பட்டம் தாணுபிள்ளை அரசு பழைய நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்த நலத் திட்டங்களையாவது செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளவில்லை என்றால் எதிர் நடவடிக்கைகளைக் கையாள வேண்டியிருக்கும் என்று சட்டப்பேரவை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு முதல் அமைச்சருக்கு அனுப்பினர். இதன் நகலை மத்திய அமைச்சருக்கும் அனுப்பினர்.

**ஃபசல் குழு**

மாநிலங்களைச் சீரமைப்பதற்கு நீதிபதி ஃபசல் அலி தலைமையில் 1953 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் நாள் ஒரு குழு அமைக்கப்பட்டது. என்.கே.குன்ஸ்ரு என்பாரும் கே.எம்.பணிக்கர் என்பாரும் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.[32] இந்தக் குழு ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று அங்குள்ள நிலவரங்களை ஆய்வு செய்து தனது அறிக்கையை 1955 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாளுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. எல்லா மாநிலங்களுக்கும் சென்று அங்கே வாழும் மக்களின் கருத்தை அறிந்து முடிவெடுப்பதற்கு இந்தக் குழுவிற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

மாநிலங்களை மறுசீர் அமைப்பது தொடர்பாக மக்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கருத்துகளை எழுத்து வடிவில் குழுவிற்கு வழங்கலாம் என்று 1956 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் நாள் அறிவித்தது. பின்னர், இந்த நாளை ஏப்ரல் 24 வரை நீட்டித்தது. இதன்படி, பல தந்திகளும் கோரிக்கைகளும் குழுவிடம் வந்தன. இவ்வாறு வந்தவற்றின் எண்ணிக்கை 1,52,250 ஆகும். இவற்றில் நல்ல முறையில் பயனுடையவையாக வந்தவற்றின் எண்ணிக்கை 2000 என்று இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.[34] இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்த குழு அவ்வப்பகுதி மக்களிடம் வாய்மொழியாகவும் கருத்துக் கேட்டது.

ஃபசல் அலி குழு மே மாதம் திருவிதாங்கூர்ப் பகுதிக்கு வந்தது. அவர்களிடம் திருவனந்தபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தோவாளை, அகஸ்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, நெய்யாற்றங்கரை தாலுகாக்களையும் கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களையும் கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை தாலுகாவையும் திருச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த சித்தூர் தாலுகாவையும் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் விண்ணப்பித்தனர். இதே கருத்தைத் தினமலர் தலையங்கமாக வெளியிட்டிருந்தது. “கேரள ராஜ்யப் பிரிவினை சம்பந்தமான சர்ச்சைகளில் திரு–கொச்சி தமிழ்ப் பிரதேசங்களின் விவகாரங்கள் பிரதான பங்கு வகிப்பதாக இருக்கும். தென் திருவிதாங்கூரில் உள்ள தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தாலுகாக்களும் சென்னைத் தமிழ்ப் பிரதேசத்தோடு சேரலாம் என்ற பேச்சு மெதுவாகக் கிளம்பியுள்ளது. ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்தத் தாலுகாக்கள் மட்டும் தமிழ் வழங்கும் பிரதேசமாகத் திரு–கொச்சியில் இருப்பதாக நினைத்துவிடக் கூடாது. நெய்யாற்றங்கரை தாலுகாவும் தமிழர்களைப் பெருவாரியாகக் கொண்டது. அது முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டைச் சேர்ந்ததுதான். அதில் அபேட்சகர்களை நிறுத்தப்போகின்றனர். 18 முதல் 20 பஞ்சாயத்துகளில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரர்கள் வெற்றி பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதிலிருந்து நெய்யாற்றங்கரை தாலுகா தமிழ்ப் பிரதேசமா மலையாளப் பிரதேசமா என்பது புலனாகும்.

செங்கோட்டை தாலுகா குறித்து ஒருவித பிரஸ்தாபனையும் காணோம். ஒருக்கால் அது தமிழ்ப் பிரதேசம் தானே என்று விட்டிருப்பதாக இருக்கலாம். நெய்யாற்றங்கரை முழுவதும் செங்கோட்டைவரையுள்ள

மலை அடிவாரம் எல்லாம் தமிழர்களே இருக்கின்றனர். அதனால் அந்தப் பிரதேசங்களும் தமிழ்நாட்டோடு சேர உரிமைப்பட்டவை ஆகும். தேவிகுளம், பீர்மேடு முழுவதிலும் தமிழர்களே வசிக்கின்றனர். எஸ்டேட் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் ஆங்கிலேயர்களும் ஏ.வி.தாமஸ் போன்ற தமிழர்களும் மட்டுமே. ஒரு சில எஸ்டேட்காரர்கள் மட்டும் சிரியன் கிறிஸ்தவர்கள். அங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் இரண்டு எம்.எல்.ஏ.க்களும் தமிழர்களே! இவற்றிலிருந்து அவை தமிழ்நாட்டோடு சேர வேண்டுமென்பது நிச்சயமாகிறது. கொச்சியில் உள்ள சித்தூர் பிரதேசமும் தமிழர் வாழும் பிரதேசம் ஆகும்.

திருவிதாங்கூர்த் தமிழ்நாட்டுக் காங்கிரசும், திருவிதாங்கூர்–கொச்சித் தமிழர்களும் இந்தச் சமயத்தில் தூங்காமல் உடனே ஒரு பெரிய மாநாடு கூட்டி மக்களின் விருப்பத்தைப் பதிவு செய்ய வேண்டும். தங்கள் பிரதேசங்கள் எவை என்பதை வெளியாருக்கு எடுத்துக்காட்டி அதற்கான கிளர்ச்சிகளைச் செய்ய வேண்டும். சிறிது அசிரத்தை காட்டினாலும் அநியாயமாக நமது பிரதேசங்களில் சில பறிபோய் விடலாம்.''[35]

தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் கேட்டதால் அங்கு வாழும் தமிழர்களை அரசு கொடுமைப்படுத்தியது. நானூறுக்கும் மேற்பட்டவர்கள் மீது பொய் வழக்குகள் புனையப்பட்டன. காவல் துறையினரால் அவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர்களும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசாரும் கண்டனம் செய்தனர்.

காவல் படையினரின் தாக்குதலை எதிர்த்து, திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்தினார்கள்.

``கண்ட கண்ட இடங்களில் தொண்டர்களும் தலைவர்களும் குண்டாந்தடியால் தாக்கப்பட்டார்கள். சிலர் காயப்பட்டார்கள். பொது இடங்களில் பல தலைவர்கள் கேவலப்படுத்தப்பட்டார்கள். தொழிற்சங்கச் செயலாளர் ஆர்.குப்புசாமி என்ற இளைஞரை மூணாறு பஜாரில் துரத்திப் பிடித்து இம்சித்திருக்கிறார்கள் காவல் ஜவான்கள். பக்கவாட்டில் அவர் கபாலத்தில் அடித்துச் செவிப்பறையைக் கிழித்துவிட்டார்கள். நிரந்தரமாகவே அவர் செவிடாகிவிட்டார். அந்த நிலையிலும் அவர் மனம்

தளரவில்லை. போலீஸ் அட்டூழியங்களை மேலும் அதிக உக்கிரத்தோடு ஆட்சேபித்தார். மூணாறு நகரத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் அவரும் சுப்பையா நாடாரும் பிடிக்கப்பட்டுக் கைவிலங்கு மாட்டி, கொட்டும் மழையில் கடைவீதியிலே நடத்திக் கொண்டு போகப்பட்டார்கள். இதைக் கண்ணுற்ற தமிழ் மக்கள் கலக்கமுற்றார்கள். இது போன்ற வன்முறைச் செயல்கள் பீர்மேடு தாலுகாவின் வண்டிப் பெரியாறு நகரத்திலும் நடந்தன. திகிலடைந்த தமிழர்கள் தாழ்வாரத்தில் உள்ள மதுரை ஜில்லா குக்கிரமங்களுக்கு ஓடினார்கள். எங்கும் பீதி நிலவிற்று.''[37]

இந்த நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்கு நேசமணியும் ரசாக்கும் வண்டிப் பெரியாறு, வண்டன் மேடு வழியாக மூணாறு சென்றனர். அங்கே பல கூட்டங்களில் பேசினார்கள். மூணாறு நகரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் போலீஸ் அத்து மீறல்களுக்குப் பயந்த பொதுமக்கள் எட்டிய தொலைவில் நின்றவாறே நேசமணியும் ரசாக்கும் பேசியதைக் கேட்டார்கள்.

**தொழிலாளர் பூசல்**

தேவிகுளம், பீர்மேடு பகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்களிடையே காவலர்கள் பூசல்களை உருவாக்கி அவர்களை மோதவிட்டனர். அவ்வாறு அவர்கள் மோதிக் கொள்ளும் போது சமாதானம் செய்வது போல் அங்கே வந்த காவலர்கள், தமிழர்களைத் தாக்கினர். மலையாளி–தமிழர் என்ற இனச் சண்டை உருவானதால் நாள்தோறும் கைகலப்புகள் ஏற்பட்டன.

''இந்தத் திடீர்ப் புயலுக்கு முக்கியக் காரணங்கள் இரண்டு. திருவிதாங்கூர் கொச்சி தமிழ்ப் பகுதிகளுக்காக ஒரு தனிப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி அல்லது மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அமைத்து அதனைச் சென்னை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் காங்கிரஸ் நடவடிக்கைகளுக்காக இணைக்க வேண்டும் என்று நேசமணி, காங்கிரஸ் கட்சிப் பொதுக்காரியதரிசிகளான பலவந்தத்ராய் மேத்தாவுக்கும் ஸ்ரீநிவாச மல்லையாவுக்கும் அடிக்கடி நெருக்குதல் கொடுத்து வந்தார். இதற்குச் சென்னை, காங்கிரஸ் வட்டாரங்களும் அவ்வப்போது குரல் கொடுத்துவந்தன. இதனால் திருவிதாங்கூர்–கொச்சி பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர் மாதவன் நாயருக்கு, திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் கோரிக்கையைக் காங்கிரஸ் மேலிடம் வழங்கி விடுமோ என்ற அச்சம் பிறந்தது. அந்த அச்சம் முதல்

காரணம். அவர் கொண்ட அச்சப்படி காங்கிரஸ் நடவடிக்கைகளுக்காக இணைப்பு நடந்துவிட்டால் நிரந்தரமாகவே தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழ்நாட்டின் உட்பகுதிகளாக மாறிவிடும். இதைத் திருவிதாங்கூர்– கொச்சி பிரதேச காங்கிரஸ் கமிட்டி எப்படிப் பொறுத்துக் கொள்ளும். இதற்குத் தடைதான் அந்தப் புயல்''[38] என்று ரசாக் தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

தேவிகுளம், பீர்மேட்டுப் பகுதிகளில் உள்ள தமிழர்கள் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தேவிகுளம், பீர்மேட்டு நிலைமையைப் பற்றி ஆலோசிக்க 1954 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் நாள் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் மாங்கரையில் கூடினர். கூட்டத்திற்கு சைமன் தலைமை வகித்தார். அந்தக் கூட்டத்தில் நேசமணி ''தரவேண்டியதைத் தராமலும் செய்ய வேண்டியதைச் செய்யாமலும் முரண்டு பிடிக்கும் ஒரு சர்க்காரை வழிக்குக் கொண்டு வருவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. அதற்கான சக்தியும் உண்டு. பல உபாயங்களும் உண்டு. அவைகளில் ஒன்று தான் வரிகொடாமை. இங்கே நாம் தொடங்கும் கிளர்ச்சியின் எதிரொலி தேவிகுளம், பீர்மேடு மலைமேட்டிலும் இருக்கும். அதுபோல அங்கே நடந்து கொண்டிருக்கும் அட்டூழியங்களுக்குக் கண்டனக் குரல் இங்கேயும் எழும்ப வேண்டும். இதைப் பார்த்துக் கொண்டு சர்க்கார் அதிலும் தாணுபிள்ளை சர்க்கார் சும்மா இருக்காது. ஆகவே அடுத்துவரும் சில மாதங்களில் நமக்குச் சங்கடங்களும் சச்சரவுகளும் ஏற்படலாம். சிரமப்படாமல், தியாகம் செய்யாமல் மறுக்கப்படும் உரிமைகளை மீட்க முடியாது. அவைகளை நாம் சகித்தே ஆகவேண்டும்''[39] என்று முழக்கமிட்டார். இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து தமிழ்ப் பகுதிகளில் பல இடங்களின் கூட்டங்கள் நடைபெற்றன.

**அறுவர் குழு**

தேவிகுளம், பீர்மேடு பகுதியில் உள்ள தொழிற்சங்க ஊழியர்களைக் காரணம் எதுவும் இல்லாமலேயே காவலர்கள் கைது செய்தனர். தமிழ் மக்கள் பலரை லாரிகளில் ஏற்றி, தொடுபுழை முதலான இடங்களில் கொண்டுபோய் விட்டனர். இத்தகைய கொடூரச் செயல்களைக் கண்டு திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் கவலை கொண்டனர். ஜூன் மாதம் பத்தொன்பதாம் நாள் அவர்கள் கூடி இரண்டு தீர்மானங்களைக் கொண்டு வந்தனர். ஒன்று, பட்டணம் கால்வாய்த்

திட்டத்தை நிறைவேற்றுவது. இரண்டாவது, ஜூன் முப்பதைத் தேவிகுளம் தினமாகத் திருவிதாங்கூர் முழுவதும் அனுசரிக்க வேண்டும் என்பது ஆகும். மாலையில் கூடிய பொதுக்குழு இந்த இரு தீர்மானங்களையும் ஏற்றுக் கொண்டது. இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக ஆறு பேர் கொண்ட ஒரு குழுவை நியமித்தது. பி.இராமசாமி பிள்ளை, ஏ.குஞ்சன் நாடார், ஆர்.பொன்னப்ப நாடார், தாணுலிங்க நாடார், ஏ.ஏ.ரசாக், ஏ.நேசமணி ஆகியோர் அந்தக் குழுவில் இடம்பெற்றனர்.

தமிழ் தாலுகாக்களின் அனைத்துப் பகுதிகளிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தி, தேவிகுளம் தினம் செயல்படுத்தப்பட்டது.

**மூணாறில் போராட்டம்**

தேவிகுளம் பகுதி முழுவதும் ஜூன் 29 முதலே 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஜூலை 2 ஆம் நாள் நேசமணி, சிதம்பரநாதன், ரசாக் மூவரும் மூணாறுக்குப் புறப்பட்டார்கள். இரண்டாம் தேதி இரவு ஆலப்புழையில் தங்கிவிட்டு அவர்கள் மூன்றாம் தேதி மதியம், மூணாறை அடைந்தார்கள்.

மூணாறில் உள்ள திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் போராட்டத் தடை உத்தரவின் நகல் ஒட்டப்பட்டிருந்தது. மூணாறுக்கு வந்த மூவரும் முதலில் போராட்டத் தடை உத்தரவைத் தான் பார்த்தார்கள். உடனே திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார் நேசமணி.

தேவிகுளம், பீர்மேடு பகுதியில் உள்ள உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களிடம் நேசமணி பேசினார்.

“இந்த அரசு திட்டமிட்டுத்தான் தடை உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. அமைதியான முறையில் பொதுக்கூட்டம் நடத்த வந்த நம்மை வன்முறையாளர்களைப் போல் மலையாளப் பத்திரிகைகள் சித்திரிக்கின்றன. தேவிகுளம் தமிழ்நாட்டுடன் போகக்கூடாது என்பதற்காக உடும்பன் சோலையில் மலையாளிகளைக் குடியமர்த்துகிறார்கள். அங்கே குடியேறும் மலையாளிகளுக்கு நிலம் இனாமாகக் கொடுக்கப்படுகிறது.

தமிழர்கள் மேல் பொய் வழக்கு போட்டு, கோர்ட்டுக்கு அலைய வைக்கிறார்கள். வீடிறங்கி, பெண்களைக் கொடுமைப் படுத்துகிறார்கள்.

இதை எல்லாம் தடுப்பதற்காகப் பொதுக்கூட்டம் போடவந்தால் அதைத் தடை உத்தரவு போட்டுத் தடுக்கிறார்கள். இந்த அரசின் தடை உத்தரவை நாங்கள் நாளை (04.07.1954) காலை பத்து மணிக்கு மீறப் போகிறோம். இந்த மூணாறில் வாழுகிற நீங்கள் யாரும் இந்தத் தடை உத்தரவை மீறக் கூடாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

உறுப்பினர்கள் அனைவரும் நேசமணி சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டனர். நேசமணியும் மற்றவர்களும் அரசின் சுற்றுலா மாளிகையில் தங்கியிருந்தார்கள். இரவில் மூணாறு முழுவதும் போலீஸ்காரர்கள் ரோந்து வந்துகொண்டிருந்தார்கள். மனித வேட்டைக்காரர்களாய் அவர்கள் அலைந்து கொண்டிருந்தார்கள்.

தமிழர்கள் யாரும் வெளியே நடமாட முடியவில்லை. நடமாடினால் ஏதாவது ஒரு வழக்கு அவர்கள் மேல் போடப்படும். அடுத்த நாள், சீக்கிரம் எழுந்துவிட்ட நேசமணி, மற்றவர்களுடன் பொதுக்கூட்டத்திற்குத் தயாரானார். மூணாறு சந்திப்பில் பொதுக்கூட்டம் நடத்துவது என்று திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் பொதுமக்கள் யாருமே இல்லை. மூணாறு கடைவீதி கூட வெறிச்சோடிப் போய்க் கிடந்தது.

நேசமணி, சிதம்பரநாதன், அப்துல் ரசாக் ஆகியோர் மூணாறு சந்திப்புக்கு வந்தார்கள். அந்தப் புல்வெளி மைதானம் காலியாக இல்லை. தமிழ்த் தொழிலாளர்களுக்குப் பதிலாகக் காவலர்கள் நின்றார்கள்.

மூணாறின் மலைச்சாரலில் தமிழ்த் தொழிலாளர்கள் நின்றார்கள். அவர்களை நோக்கி நேசமணி முழங்கினார். 'இங்கே ஆட்சி நடத்துவது தமிழ் மக்களின் விரோத அரசு..' என்று தொடங்கியதும் காவலர்கள், நேசமணியைக் கைது செய்தார்கள். அடுத்து, சிதம்பரநாதனும் அப்துல் ரசாக்கும் கைது செய்யப்பட்டார்கள்.

காலையில் பத்து மணிக்குக் கைது செய்த மூவரையும் இரவு ஏழு மணிக்குக் கோட்டயம் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்படுத்தினார்கள். அடுத்த நாள் வழக்கை விசாரிப்பதாகக் கூறி அவர்களைக் கோட்டயம் போலீஸ் காவலில் வைத்தார் மாஜிஸ்திரேட். விடிந்ததும் முதல் வழக்காக நேசமணியை விசாரித்தார். தடையை மீறியதை ஒப்புக் கொண்ட நேசமணி அதற்கான காரணத்தையும் விளக்கினார். சிதம்பரநாதனும் அப்துல் ரசாக்கும் நேசமணி என்ன சொன்னாரோ அதையேதான் சொன்னார்கள். மூவருக்கும் ஆறுவாரம் சிறைத்தண்டனை

விதிக்கப்பட்டது. கோட்டயம் மாஜிஸ்திரேட் முன் நேசமணி ஆஜர்படுத்தப்பட்ட செய்தி நாகர்கோவிலை எட்டியது. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தில் மக்கள் கூடினார்கள். அவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் கட்சித் தலைவர் இராமசாமி பிள்ளை தவித்தார். மூணாறில் தலைவர் நேசமணி, சிதம்பரநாதன் மற்றும் ரசாக் ஆகியோர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட செய்தி தமிழகமெங்கும் காட்டுத்தீ போல் பரவியது. இதனால் தமிழகம் எங்கும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனைத் தினமலர், தினத்தந்தி, தியாக நாடு பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. நாகர்கோவில், சுசீந்திரம், கோட்டாறு, திருவட்டாறு, தக்கலை, குழித்துறை, மார்த்தாண்டம், இரணியல், ஈத்தாமொழி, இடலாக்குடி, கன்னியாகுமரி முதலிய இடங்களில் தொண்டர்களும் பொதுமக்களும் மறியல் செய்து கைதாகிக் காவல் நிலையங்களில் அடைக்கப்பட்டனர். மக்கள் சிறை நிரப்பும் போரைத் தொடர்ந்தனர்.

**24.07.1954** இல் மூணாறில் **144** தடையை மீறும் போராட்டத்தில் ஜி.அருளப்பன் நாடார், டி.செல்வம், ஏ.எச்.சான்டி அந்தோணி ஆகியோருடன் கலந்து கொண்ட போது நாங்கள் கைது செய்யப்பட்டு, கடுமையான சித்திரவதைக்குப் பின் கோதமங்கலம் நடுக்காட்டில் விடப்பட்டோம்''[40] என்று தியாகி சிங்காராயர் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமையை நேரில் அறிவதற்காகப் பொதுச் செயலாளர் பொன்னப்ப நாடார், குஞ்சன் நாடார், சைமன், இராஜா பிள்ளை ஆகியோர் கோட்டயத்திற்குப் போனார்கள். ஆறு வாரத் தண்டனை பெற்ற நேசமணியும் மற்றவர்களும் கோட்டயம் காவல் நிலையத்தில் இருந்தார்கள்.

தேவிகுளத்திலும் பீர்மேட்டிலும் தமிழர்களை ஒழிப்பதற்குத் திட்டம் தீட்டிய அரசின் எண்ணத்தை முறியடிக்க விரும்பினார் நேசமணி. பொன்னப்ப நாடாரை அருகில் அழைத்து, "பொதுக்குழுவைக் கூட்டுங்கள்... தொடர்ந்து களம் அமைத்துப் போராடுங்கள்" என்றார். அதற்குள் போலீஸ்காரர்கள் நேசமணி, சிதம்பரநாதன், ரசாக் ஆகியோரைத் திருவனந்தபுரம் மத்தியச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

நாகர்கோவிலுக்குத் திரும்பிய பொன்னப்ப நாடார் உடனே திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழுவைக் கூட்டினார்.

"தொடர்ந்து மூணாறில் போராட்டத்தை நடத்த வேண்டும், தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்" என்று பொதுக்குழுவில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் எல்லோரும் தெரிவித்தார்கள். உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தைக் கேட்ட பிறகும் கட்சித் தலைவர் இராமசாமி பிள்ளை தொடர்ந்து தடையை மீறுவதற்குத் தயங்கினார். இராமசாமி பிள்ளை தயங்குவதைப் பார்த்ததும் பொதுக்குழு உறுப்பினர்கள் "போராடுவோம்.... போராடுவோம்" என்று குரல் கொடுத்தார்கள். பொதுக்குழு உறுப்பினர்களின் கருத்துக்கு இணங்க இரண்டு போராட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

முதல் குழு ஐந்துபேர் கொண்ட குழு. இதில் இராமசாமி பிள்ளை, தாணுலிங்க நாடார், குஞ்சன் நாடார், பொன்னப்ப நாடார், காந்தி ராமன் ஆகியோர் இருந்தனர். இந்த ஐந்து பேரும் கைதாகிவிட்டால் அடுத்து, போராட்டத்தை வழி நடத்திச் செல்வதற்கு முப்பது பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் தலைமையில் மூணாறுக்குப் போக வேண்டும் என்றும் அங்கே தடையை மீறி ஊர்வலமும் மறியலும் நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்தார்கள்.

முதல் நாள் வில்லியம் எம்.எல்.ஏ., தலைமையில் மூணாறுக்குச் சென்றனர். அவர்களைக் காவலர்கள் கைது செய்து மத்தியச் சிறைக்கு அனுப்பினர். அவரைத் தொடர்ந்து டி.டி.டானியலும் தடையை மீறிக் கைதானார். அடுத்து யாரை அனுப்புவது என்று தீர்மானிக்க முடியாமல் தாணுலிங்க நாடார் தடுமாறினார். எனவே தாமே செல்வதாக முடிவெடுத்தார். அவரும் சிறையில் அடைக்கப்பட்டார். பொன்னப்ப நாடார் ஜூலை 26இல் மூணாறில் தடையை மீறினார். அவரும் மத்தியச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அவரைத் தொடர்ந்து இராமசாமி பிள்ளை தடையை மீறப் புறப்பட்டார். ஆனால் அவர் பாலாய் நகரில் கைது செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து எம்.டி.அனந்தராமன், சி.கோபால கிருஷ்ணன், ஏ.தங்கையா, என்.நூர்முகம்மது, ஏ.எம்.சைமன், ஏ.குஞ்சன் நாடார், ஏ.காந்தி ராமன் முதலானோர் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழரசு கழகமும் கலந்து கொண்டன. இந்தப் போராட்டத்தை அடக்கியே தீருவேன் என்றார் பட்டம் தாணுபிள்ளை.

**பட்டம் தாணுபிள்ளையின் பேச்சு**

தென் திருவிதாங்கூரில் உள்ள மக்கள் குழப்பம் விளைவித்து வருகின்றனர். இவை எல்லாம் எதற்காக என்று கேட்கிறேன். இங்குள்ள தமிழ்ப் பிரதேசம் சென்னையுடன் சேர்வதற்கென்றால் அதை உயர்தர அதிகாரக் கமிஷனும் மத்திய அரசும் பரிசீலனை செய்து வருகிறது. அதற்கிடையில் இந்த வித்தைகள் எல்லாம் எதற்கு? அவர்களது இறுதி முடிவு தெரியும் வரையிலும் ஏன் காத்திருக்கக் கூடாது? கோர்ட்டுகளிலும் கச்சேரிகளிலும் சென்று அக்கிரமங்கள் புரிந்து வருவது நமது பண்பாட்டிற்கு உகந்தது ஆகுமோ? இந்த நிலைமை தொடருவதை அரசு அனுமதிக்காது. இதுவரையிலும் அக்கிரமம் காண்பித்தவர்களையே அரசாங்கம் கைது செய்து தண்டித்து வருகிறது. ஆனால் அதற்குத் தூண்டிவிடுபவர்கள் வேறு இருந்து வருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் திருவனந்தபுரம் தமிழர்கள் நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும். அவர்களில் ஒருவராவது இதுவரையிலும் அபிப்பிராயம் கூறவில்லை. திருவனந்தபுரம் தமிழர்கள் தென் திருவிதாங்கூரில் உள்ள தங்கள் உறவினர்களும் நண்பர்களும் புரியும் அக்கிரமத்தை அறியவில்லையா? அவர்கள் கண்டும் கேட்டும் மவுனமாக இருப்பது ஏன்? திருவனந்தபுரம் தமிழர்கள் இங்கிருந்து போக விரும்புகிறார்களா எனக் கேட்கிறேன். இங்குச் சமாதானமாகவும் தென் திருவிதாங்கூரில் அக்கிரமமாகவும் நடந்து கொள்வது சரியல்ல.

தென் திருவிதாங்கூரில் உள்ள மலையாளிகள் பலரும் ஆபத்தான நிலையில் இருந்து வருவதாக எனக்குத் தெரிவித்திருக்கின்றனர். அவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் அரசு பாதுகாப்பு அளிக்குமென நான் உறுதி கூறிக்கொள்கிறேன். தென் திருவிதாங்கூரில் இதுவரையிலும் போலீசாரின் நடவடிக்கை பாராட்டத்தக்கதாகும். இதே மாதிரி தொடர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். தற்போது இந்தக் குழப்பங்கள் எல்லாம் அவசியமா? என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன். இது ஒரு அரசியல் போராட்டம் என்பதைப் பொதுமக்கள் உணரவேண்டும். அக்கிரமத்திற்கு, திரு–கொச்சி மக்கள் துணை அளிப்பார்களா? என்பதை நான் அறிய விரும்புகிறேன். டிரான்ஸ்போர்ட் வேலை நிறுத்தத்தைப் பரிபூரணமாகத் தோல்வி அடையச் செய்ய வேண்டும். இனிமேல் வேலைநிறுத்தம்

குறித்துச் சிந்திக்க முடியாதபடி தோல்வி அடையச் செய்ய வேண்டுகிறேன். ராஜ்யத்தின் நன்மைக்காக நாம் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து சிந்தித்து, வேண்டியது செய்வோம்.[41]

பட்டம் தாணுபிள்ளையின் பேச்சு தமிழர்களிடையே கோபத்தைத் தூண்டியது. திருவனந்தபுரத்தில் வாழும் தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் அவரது பேச்சு அமைந்ததைப் பலரும் கண்டித்தனர்.

திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதி முழுவதும் பல இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. பொதுக்கூட்டம் ஒன்றில் ஜீவானந்தம் பேசிய பேச்சு ஆகஸ்ட் ஏழாம் தேதி தினமலரில் வெளியானது.

இன்று திரு–கொச்சியில் தமிழகத்தின் சரித்திரம் கண்டறியாத எழுச்சி அலை வீசுகிறது. விடுதலைப் போராட்டத்தில் மக்கள் ஊழிக்காலக் கடல் போலக் கொந்தளிக்கின்றனர். மூணாற்றிலிருந்து குமரிமுனை வரை உணர்ச்சி வெள்ளம் கடல்மடை திறந்து பாய்கிறது. 'வெற்றியின்றேல் வீரமரணம்' என்ற வீர எக்காளம் பழம்பெரும் தேசபக்தர் எம்.ஈ.நாயுடுவின் திருவாயிலிருந்து ஆரம்பப் பாடசாலை சின்னஞ்சிறு மாணவன் சிறு வாய்வரை முழங்கி பூமியைக் கிடுகிடுக்கச் செய்கிறது. ஐக்கிய தமிழகம் அடைந்தே தீருவோம் என்ற பேரிசை சாதி, மத, கட்சி பேதங்களைத் தாண்டி ஒலியும் எதிரொலியுமாக முழங்குகிறது. தமிழ் மக்களின் இதய கீதம் உச்சஸ்தாயியில் பரணி பாடுகிறது.

கமிஷன் முடிவை வெளியிடும் முன் விசாரணையில் இருக்கும் போதே சர்தார் பணிக்கர், இருதயானந் குன்ஸ்ரு, கமிஷன் தலைவர் பசல் அலி ஆகியோர் மொழிவாரி ராஜ்ய அமைப்புக்கு எதிரிடையாக வெளிப்படையாகத் தங்கள் கருத்துகளைக் கூறியுள்ளனர். மொழிவாரி ராஜ்ய எதிரிகளை அங்கத்தினர்களாகக் கொண்ட கமிஷனிடமிருந்து மொழிவாரி ராஜ்ய அமைப்புக்குச் சாதகமான சிபாரிசைப் பொதுமக்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்? கமிஷனிடம் பொதுமக்கள் நம்பிக்கை குறைந்துவிட்டது[42] என்று ஜீவானந்தம் உரையாற்றியுள்ளார்.

**விடுதலை நாள்**

பட்டம் தாணுபிள்ளை அரசின் அடக்கு முறையையும் பாரபட்சமான நடவடிக்கையையும் பொதுமக்களுக்குத்

தெரிவிப்பதற்காகத் தமிழ்ப் பகுதிகள் விடுதலை பெற்றதாக அறிவிக்கும் போராட்டத்தை நடத்த முயற்சி செய்தனர். அதற்கான நாள் குறிக்கப்பட்டது. அதுதான் ஆகஸ்ட் 11. திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதி முழுவதும் பொதுக்கூட்டங்களும் ஊர்வலங்களும் அமைதியாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

விடுதலை நாள் போராட்டத்தை விளக்கிப் படந்தாலுமூட்டில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்குக் குஞ்சன் நாடார் தலைமை தாங்கினார். அந்தக் கூட்டத்தில் குப்புசாமி பின்வருமாறு பேசியுள்ளார்.

“தேவிகுளத்தில் அரசாங்கத்தின் உதவியுடன் வெள்ளை முதலாளிகள் தமிழனைச் சொக்கட்டான் ஆடுகின்றனர். நாங்கள் அகிம்சாபூர்வமாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை அவர்கள் தவறாகக் கணக்கிட்டுவிட்டனர். அங்குள்ள நிலைமையை நேரில் தெரிந்து கொள்ள வந்த தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான் உட்பட எத்தனையோ நண்பர்கள் சிறைச்சாலைகளுக்குக் கொண்டு போகப்பட்டுப் பயங்கரமான சித்திரவதைக்கு ஆட்பட்டோம். போலீஸ் உத்தியோகஸ்தர் என்னிடம் “தேவிகுளம், பீர்மேடு தமிழ்நாட்டுடன் சேரணுமோடா, புலையாடி மகனே” என்று கேட்டார். தேவிகுளம் பகுதியில் போலீசார் என்னை எப்படியாவது தீர்த்துக் கட்டி விடுவது என்று கங்கணம் கட்டிவிட்டனர். ஆனாலும் தமிழ் மக்களின் பேராதரவுடன் தமிழகம் முழுவதும் நான் சுற்றிப் பேசி வருகிறேன். தமிழக மக்கள் ஆதரவோடு எங்கள் இலட்சியம் நிச்சயம் வெற்றிபெறும் என உறுதி கூறுகிறேன்.[43]

ஆகஸ்ட் பதினோராம் தேதி விடுதலை நாள் போராட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. ஆகஸ்ட் ஒன்பதாம் நாளே சிறையிலிருந்த தலைவர்கள் அனைவரையும் விடுவிக்குமாறு ஆணை வந்தது. பாலாயில் சிறைவைக்கப்பட்டிருந்த இராமசாமி பிள்ளை ஆகஸ்ட் பத்தாம் நாள் விடுவிக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலை பெற்ற போராட்ட வீரர்களுக்கு ஆகஸ்ட் பத்தாம் நாள் நாகர்கோவில், மார்த்தாண்டம், கருங்கல், இரணியல் முதலிய இடங்களில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. இராமசாமி பிள்ளையால் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலவில்லை. நேசமணி பேசிய விடுதலை நாள் பற்றிய பேச்சு

ஆகஸ்ட் பன்னிரண்டாம் நாளிட்ட தினமலரில் பின்வருமாறு வெளியானது.

"நீண்ட பிரசங்கம் செய்ய நான் விரும்பவில்லை. நாளைய தினத்தை ஒருவித கட்சி பேதமும் காட்டாது திரு–தமிழக விடுதலை தினமாகக் கொண்டாட வேண்டும். ஆகஸ்ட் 15 ஆம் தேதி கொண்டாடுவார்களே இந்தியா முழுவதும், அதுபோலக் கொண்டாட வேண்டும், அகிம்சா பூர்வமாகக் கொண்டாட வேண்டும். இங்குப் பெரிய அளவில் போலீஸ் வந்திருக்கிறதாம். அவர்களுக்கு நாம் வேலை கொடுக்க வேண்டாம். ஒவ்வொருவரும் தன்னாலியன்ற ஊழியத்தைச் செய்து போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டும். நம் போராட்டத்தை இந்தியா முழுவதும் கவனித்துக் கொண்டிருக்கிறது. நமது பிரதமர் நேருவுக்குத் தக்க ரிப்போர்ட்டுகள் இங்குள்ள நிலை குறித்துப் போய்க் கொண்டே இருக்கிறது. தாயகப் பத்திரிகைகளும் நமக்கு ஆதரவு தந்திருக்கின்றன. இது நம் ஜீவ மரணப் போராட்டம். ஒவ்வொருவரும் ஒரு வீரன் எனக் கச்சை கட்டிப் போராட்டத்தில் இறங்க வேண்டும். கோழையாகக் கூடாது. உரிமைப் போராட்டம் நாட்டுக்கான போராட்டம் என்ற தன்னம்பிக்கையோடு இறங்க வேண்டும். பொருளுதவி மிகத் தேவை. வேண்டும் பொருட்களை அந்தந்தக் கிராமத்தாரே வசூலித்துக் கொள்ள வேண்டும். இன்றுள்ள அதிகாரிகள் பலரும் நீதிகேடான முறையில் நடக்கின்றனர். தண்டனைகள் கூட ஒவ்வொரு விதமாக இருக்கின்றன. அவர்களின் தொழிலையும் தரத்தையும் பார்த்துத் தண்டிக்கின்றனர். இந்தத் தமிழ் அதிகாரிகள் இன்றைய அரசாங்கத் தலைவர்கள், தங்களை என்றென்றும் காப்பார்கள் என எண்ண வேண்டாம். நாட்டுக்காகப் பாடுபடும் வீரர்களை அவர்கள் கண்ணியமாக நடத்த வேண்டும். நாளை நாம் விடுதலை தினம் கொண்டாட வேண்டும். அது நமக்கும் நம் சந்ததியார்க்கும் சிறப்புத் தருவதாக இருக்க வேண்டும்"[44] என்று அவர் உரையாற்றினார்.

திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதிகள் விடுதலை பெற்றுவிட்டதாக அறிவிக்கும் நாள் தான் ஆகஸ்ட் பதினொன்று. இந்த நாளில் நாகர்கோவிலில் ஒரு பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பேரணி, நகர்மன்றத் திடலில் முடிவுபெற்றது. அந்தப் பேரணியின் இறுதியில் நேசமணி சிற்றுரையாற்றினார்.

"திருவிதாங்கூர்–கொச்சி சட்டக் கூட்டிலிருந்து தமிழ் மக்கள் பிரிந்து போக வேண்டும். எதற்கு? ஒரு தனி ராஜ்யம் அமைவதற்காகவா?

இல்லை. சென்னை ராஜதானியிலுள்ள தமிழகத்தோடு இணைவதற்கு என்றால், அந்தத் தமிழகமும் இந்திய சர்க்கார் ஆணைக் கோட்டுக்குள்ளாகத்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே நாம் அதோடு சேருவதற்கும் அது நம்மைச் சேர்த்துக் கொள்வதற்கும் மத்திய சர்க்கார் அங்கீகாரம் வழங்க வேண்டும். இதை நெஞ்சில் வைத்துக் கொண்டுதான் விடுதலை கேட்கிறோம். விடுதலையும் உடனே கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறோம்[45] என்று உரையாற்றினார்.

நேசமணியும் பிற தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டதால் விடுதலை நாள் தொடர்பான நிகழ்ச்சிகளில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. தற்போது நாகர்கோவில் நிகழ்ச்சியில் நேசமணியும் குஞ்சன் நாடாரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். தொடுவெட்டியில் காலையில் நடைபெற்ற ஊர்வலத்தை நடத்துவதற்குத் தாணுலிங்கம் நாடார் சென்றிருந்தார். அதில் 15 மறியல் வீரர்களுக்கு மாலை அணிவித்து, காலை 9.30 மணிக்கு ஊர்வலத்தை அவர் தொடங்கி வைத்தார்.

புதுக்கடையில் காவல் நிலையத்திற்கு அருகிலிருந்த பதிவாளர் அலுவலகத்தின் முன் மறியல் செய்வதற்கு ஏற்பாடாகியிருந்தது. இதற்கான ஏற்பாடுகளை வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் கவனித்துக் கொண்டார்.

இரண்டு மணிக்குக் குஞ்சன் நாடார் தொடுவெட்டியில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளப் புறப்பட்டார். ஆனால் தொடுவெட்டியிலிருந்து இரண்டு மைலுக்கு முன்பு சாலையில் குறுக்கே ஆலமரம் ஒன்று சாய்ந்து கிடந்தது.

தொடுவெட்டியில் நடைபெறும் கூட்டத்திற்குச் செல்ல இயலவில்லை என்றாலும் புதுக்கடையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் பங்கேற்கலாம் என்ற எண்ணத்தில் திரும்பி, கருங்கல் வழியாகப் புதுக்கடைக்குப் புறப்பட்டார். அங்கும் சாலையின் குறுக்கே பல தடைகள் போடப்பட்டிருந்தன. திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதிகள் முழுவதும் மக்கள், போராட்டம் நடத்தியதால் பல இடங்களில் காவலர்கள் வரம்பு மீறி நடந்து கொண்டனர். சாலைகளில் சென்ற வாகனங்கள் எல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டன. குஞ்சன் நாடாரால் புதுக்கடையில் நடைபெற்ற கூட்டத்திலும் கலந்து கொள்ள இயலவில்லை. ஐந்து மணிவரை குஞ்சன்

நாடாருக்காகக் காத்திருந்தவர்கள் அவர் வராததால் கோபால கிருஷ்ணன் தலைமையில் கூட்டத்தைத் தொடங்கினார்கள். கோபால கிருஷ்ணன் பேசி முடித்ததும் காவலர்கள் துப்பாக்கியும் கையுமாக வந்து கூட்டத்தைக் கலைத்தார்கள். கோபால கிருஷ்ணனையும் அவருடன் இருந்த வேறு மூவரையும் கைது செய்து வேனில் ஏற்றினர். வேனை மூடிவிட்டு உள்ளிருந்தபடி கூட்டத்தாரை நோக்கி 24 சுற்றுச் சுட்டனர். புதுக்கடையில் துப்பாக்கிச் சூட்டில் அதே இடத்தில் நான்கு பேர் மடிந்தனர். பதினெட்டுப்பேர் காயம்பட்டனர். 200க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தாணுலிங்க நாடார் தொடுவெட்டியில் தொடங்கிவைத்து நடத்திய ஊர்வலத்தில் 10000 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலமாகத் தாலுகா அலுவலகத்திற்கு வந்தவர்களைக் காவலர்கள் தடியால் அடித்தனர். அடியைத் தாங்கிக் கொண்டே மறியல் செய்தார்கள். தாலுகா அலுவலகத்திற்குள் பலர் நுழைந்து அங்கிருந்த கோப்புகளைக் கிழித்தனர். காவலர்களின் தாக்குதலுக்கு அஞ்சி ஓடியவர்கள் குழித்துறைப் பேருந்து நிலையத்திற்கு வந்தார்கள். அங்கே நின்ற காவலர்கள், அவர்களை அடித்துக் கைது செய்தனர். இந்தக் களேபரத்தில் நாணுலிங்கம் நாடார் கருங்கல் வழியாக நாகர்கோவிலுக்குப் போய்விட்டார்.

தொடுவெட்டியில் உள்ள அரசினர் பள்ளி மாணவர்கள், நாகர்கோவில் திருவனந்தபுரம் நெடுஞ்சாலையில் கல்லெறியில் ஈடுபட்டனர். அவர்களைக் கைது செய்து வேனில் ஏற்றினார்கள் காவலர்கள். மாணவர்களை உடனே விடுதலை செய்யச் சொல்லுமாறு பள்ளி மாணவர்கள், தலைமை ஆசிரியரை வேண்டிக் கொண்டார்கள். ஆனால் அந்தத் தலைமை ஆசிரியரோ பள்ளி வளாகத்திற்குள் காவலரை வரவழைத்து மாணவர்களை விரட்டச் சொன்னார்.

காவலர்களை மாணவர்கள் எதிர்த்ததால் அங்கே பெரும் போராட்டம் நடந்தது. போதிய காவலர் பலம் இல்லாததால் மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மாணவர்கள் பலர் தொலைபேசிக் கம்பங்களையும் மின்கம்பங்களையும் உடைத்து விட்டார்கள். மாணவர்களும் பொதுமக்களும் சேர்ந்து போராட்டத்தில் குதித்தனர்.

கூட்டத்தை நோக்கிக் குறிபார்த்துச் சுட்டனர் காவலர்கள். ஐந்துபேர் அந்த இடத்திலேயே இறந்தார்கள். பலரைக் கைது செய்தனர்.

சிறையில் இடம் இல்லாததால் திருவனந்தபுரத்துக்குக் கொண்டு போனார்கள்.

முன்சிறை அரசினர் பள்ளி மாணவர்களும் பொதுமக்களும் அஞ்சல் அலுவலகத்தையும் பதிவாளர் அலுவலகத்தையும் சீர் குலைத்தனர். காவலர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் கூட்டத்தை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் காவலர்கள் வரவழைக்கப்பட்டனர். காவலர்கள் எல்லை மீறிய வன்முறையில் ஈடுபட்டனர். அவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒன்பதுபேர் உயிரிழந்தனர். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

1. எம்.முத்துசாமி நாயகம், முள்ளுவிளை வீடு, கிள்ளியூர்
2. என்.குமரன் நாடார், தோட்டவாரம், புதுக்கடை
3. ஏ.பீர்முகம்மது, அம்சி, தேங்காப்பட்டணம்
4. ஏ.அருளப்பன் நாடார், வண்ணான் விளை, புதுக்கடை
5. ஏ.பொன்னையன் நாடார், தேமனூர், ஆற்றூர்
6. என்.செல்லப்பா பிள்ளை, ஆர்.சி.தெரு, புதுக்கடை
7. எஸ்.இராமையன் நாடார், மேக்கன்விளை, நட்டாலம்
8. ஸ்ரீ. பப்பு பணிக்கர், தொடுவெட்டி, மார்த்தாண்டம்
9. எம்.பாலையன் நாடார், மணலி சாரோடு, தக்கலை

இரவு எட்டு மணி வரை காவலர்களின் வெறியாட்டம் தொடர்ந்து நடைபெற்றது. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தைக் காவலர்கள் கைப்பற்றினார்கள். நேசமணியின் வீட்டில் குஞ்சன் நாடார், தாணுலிங்கம் நாடார், இராமசாமி பிள்ளை, பொன்னப்ப நாடார், சைமன், ராஜாபிள்ளை, ரசாக் முதலானோர் கூடினார்கள்.

போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது தொடர்பாக அவர்கள் ஆலோசனை செய்தார்கள். 'போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது தான் நல்லது' என்ற நேசமணியின் கருத்தை ஏற்கவில்லை. போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்துவது என்று முடிவெடுத்தனர். கூட்டத்தை முடித்துக் கொண்டு எல்லோரும் வீட்டுக்குச் சென்றனர்.

நள்ளிரவில் குஞ்சன் நாடாரை வீட்டுக்குள் புகுந்து காவலர்கள் கைது செய்தனர்.

1954 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் நாள் நகரில் வாகனப் போக்குவரத்து மிகக் குறைவாக இருந்தது. ஒரு சில கடைகள் மட்டுமே திறந்திருந்தன. கல்குளம், விளவங்கோடு தாலுகாவைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் நேசமணியின் வீட்டில் கண்ணீருடன் நின்றனர். அவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் தவித்தார் நேசமணி.

நேசமணியின் வீடு காவலர்களின் முற்றுகைக்கு உட்பட்டது.

முந்தைய நாள் துப்பாக்கிச் சூடும் கலவரமும் நடந்த இடங்களைப் பார்ப்பதற்காக முதல் அமைச்சர் பட்டம் தாணுபிள்ளை வந்தார். அவரது பாதுகாப்பிற்காகக் காவலர்கள் நூற்றுக்கணக்கில் வந்தார்கள்.

காவலர்களின் தீரச்செயல் பட்டம் தாணுபிள்ளைக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்களை வெகுவாகப் பாராட்டினார். தென் திருவிதாங்கூரில் நடைபெற்ற காவலர் நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு திருவனந்தபுரம் மாஜிஸ்ரேட்டைப் பணித்தார்.

**ம.பொ.சி.யின் வருகை**

நாகர்கோவிலில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 12 ஆம் தேதி வந்திருந்த ம.பொ.சி., திருவிதாங்கூரின் நிலைமையைக் கண்டு மிகவும் வருந்தினார். 13 ஆம் தேதி காலையில் ரசாக்கின் வீட்டில் அவரை ம.பொ.சி. சந்தித்தார். ரசாக்குடன் நேசமணியைப் பார்க்கச் சென்ற ம.பொ.சி. நடந்த வன்முறைகளுக்குக் காவலர்களே முழுப்பொறுப்பு என்பதைத் தெரிவித்தார். அன்று மாலைவரை தங்கி நகர் மன்றத் திடலில் உரையாற்றுமாறு வேண்டினார் நேசமணி. ஆனால், இந்தச் சூழ்நிலையில் பொதுக்கூட்டம் நடத்துவது சரியல்ல என்ற ம.பொ.சி. அங்கிருந்து தென்காசிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

**காவலர்களின் வெறியாட்டம்**

பட்டம் தாணுபிள்ளையுடன் பாதுகாப்புக்கு வந்த காவலர்கள் அங்கங்கே நிறுத்தப்பட்டனர். அவர்கள் கண்ணில் பட்ட பொருள்களை எல்லாம் கொள்ளையடித்தார்கள். வீடு புகுந்து திருடினார்கள். தட்டிக் கேட்டவர்களைத் தடியால் அடித்தார்கள்.

குலசேகரத்தில் செருப்பாலூரில் உள்ள ஓர் அந்திக்கடையில் காவலர்கள் திடீரென்று தாக்குதல் நடத்தினார்கள். அதில் நிறைமாத கர்ப்பிணியான ஒரு பெண் கீழே விழுந்த இடத்திலேயே பிரசவித்தாள்.

ஆகஸ்ட் 13 ஆம் நாள் மட்டும் தொடுவெட்டி, கருங்கல், பைங்குளம், புதுக்கடை ஆகிய இடங்களில் 1000 க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்தார்கள்.

ஆகஸ்ட் 14 ஆம் நாள் தாணுலிங்க நாடார் கைது செய்யப்பட்டார். காவலர்களின் தாக்குதலில் காயம் அடைந்து மருத்துவமனையில் இருந்த இருவர் இறந்தனர். புதுக்கடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இறந்த ஒருவரின் பிணம் சாலையோரம் கிடந்தது. அவரது பெயர் பீர்முகம்மது, தேங்காய்ப் பட்டணத்தைச் சேர்ந்தவர்.

பார்சல் செல்லப்பன் என்ற சாமுவேல் செல்லப்பனைக் கழிவறைக்குக் கூட்டிக் கொண்டு போய் அவரது குதிகாலை அடித்து உடைத்தார்கள் காவலர்கள். நடக்க முடியாமல் அவர் தவழ்ந்து சென்றதைக் காவலில் இருந்தவர்கள் பார்த்துக் கண்ணீர் விட்டனர்.

நேசமணியால் வீட்டை விட்டு வெளியே வரமுடியாத அளவிற்கு வீட்டுக் காவல் போடப்பட்டிருந்தது. தென் திருவிதாங்கூர்ப் பகுதியில் மையம் கொண்டுள்ள காவலர்களை உடனே திரும்பிப் போகச் செய்ய வேண்டும்; மக்களிடம் அமைதியை ஏற்படுத்த வேண்டும்; அதற்குத் திருவிதாங்கூருக்கு வெளியே உள்ள தலைவர்களின் துணைவேண்டும். ரசாக் ரகசியமாக வெளியேறித் திருநெல்வேலிக்குச் சென்றார். அங்கே கோசல்ராம், சங்கர் ரெட்டியார் முதலானவர்களைச் சந்தித்து, திருவிதாங்கூரில் உள்ள நிலைமையை விளக்கினார்.

ஆகஸ்ட் 17 ஆம் நாள் காலையில் கோசல்ராமும் சங்கர் ரெட்டியாரும் நேசமணியை அவரது வீட்டில் சந்தித்தனர். துப்பாக்கிச் சூடும் தடியடியும் நடந்த இடங்களைப் பார்வையிட்டு அந்தக் கொடுமைகளைப் பிரதம மந்திரி நேருவுக்குத் தெரிவித்தனர். முன்னாள் சட்ட அமைச்சராக இருந்த பாஷ்யம் ஐயங்கார், நேசமணிக்கு ஒரு தந்தி அனுப்பினார். அதில், தாமே நேரில் வந்து திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் சார்பாகப் போராடி, கைதானவர்களுக்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்தார்.

**காமராசர்-ரசாக் சந்திப்பு**

திருவிதாங்கூரில் நடைபெற்ற கொடுமைகளைக் காமராசரிடம் விரிவாக எடுத்துக் கூறுவதற்காக ரசாக் சென்றிருந்தார். காமராசருக்கு நேசமணி எழுதியிருந்த கடிதத்தைக் கொடுத்தார். அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருந்தவர் எஸ்.எஸ். கரையாளர். அவரிடம் பேசுவதாகக் காமராசர் குறிப்பிட்டார். சொன்னதன்படி கரையாளரிடம் காமராசர் பேசினார். அன்று இரவே (16.08.1954) ரசாக்கைத் தேடி, கரையாளர் வந்துவிட்டார். சிதம்பரநாதன், நூர்முகம்மது, ரசாக், கரையாளர் நால்வரும் காமராசரிடம் சென்றார்கள். அவர்களுக்காகவே காத்திருந்த காமராசர் அவர்கள் சொன்னவற்றை முழுமையாகக் கேட்டார்.

'காவல்துறை அத்துமீறல்களைத் திருவிதாங்கூரிலேயே கண்டிக்க வேண்டும் அல்லது விளம்பரப்படுத்த வேண்டும். அங்குள்ள நேசக் கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டும்' என்றார் காமராசர். அருகிலிருந்த கரையாளர் 'இங்கிருந்து ஒரு நல்லெண்ணக் குழுவைத் தமிழ்நாடு காங்கிரசே அனுப்பிவைத்தால் நல்லது என்றார். அந்த முடிவை உடனே எடுங்கள்' என்று தெரிவித்தார் காமராசர். 25.08.54 அன்று குழுவை அனுப்புவதாக முடிவானது.

**சாஸ்திரி-ரசாக் சந்திப்பு**

சென்னையிலிருந்து டில்லிக்குச் சென்ற ரசாக், லால்பகதூர் சாஸ்திரியைச் சந்தித்தார். அப்போது சாஸ்திரி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயலாளராக இருந்தார். சாஸ்திரிக்கு மாதவன் நாயர் வாயிலாகத் திருவிதாங்கூர்ப் பிரச்சனை தெரிந்திருந்தது. அதை அவர், தேவிகுளத்திலும் பீர்மேட்டிலும் இரண்டு தொழிற்சங்கங்களுக்கு இடையே எழுந்த போட்டியின் பின்விளைவு என்று எண்ணியிருந்தார். அவரிடம் ரசாக் உண்மை நிலையை எடுத்துக் கூறினார். மாநிலங்களைச் சீரமைப்பதற்காக அமைக்கப்பட்ட ஃபசல் குழுவினரைத் தேவிகுளம் பீர்மேடு பகுதிகளைப் பார்வையிட முடியாமல் பிரஜா சோசலிஸ்ட் கட்சி அரசு தடுத்ததை எடுத்துக் கூறினார். மேலும் தேவிகுளத்திலும் பீர்மேட்டிலும் தமிழர்கள் தாக்கப்பட்டதையும், இனப் பிரச்சனையைத் தூண்டிவிட்டதையும் ரசாக் எடுத்துரைத்தார்.

**உள்துறை அமைச்சர்-ரசாக் சந்திப்பு**

நேசமணி கேட்டுக் கொண்டதற்கிணங்க பலரையும் சந்தித்த ரசாக் 22.08.1954 அன்று இந்திய உள்துறை அமைச்சர் கைலாஷ்நாத்

கட்ஜைச் சந்தித்தார். திருவிதாங்கூர்த் தமிழர்கள் அனுபவித்த கொடுமைகளை எழுத்து வடிவில் கொடுத்தார் ரசாக்.

புதுக்கடையிலும் மார்த்தாண்டத்திலும் (தொடுவெட்டி) நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பதினோரு பேர் இறந்தனர். முந்நூறுக்கு அதிகமானோர் காயம் அடைந்தனர் என்பதையும் அறிந்த உள்துறை அமைச்சர் வருந்தினார். மேலும் பல விவரங்களை ரசாக்கிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

**நேரு-ரசாக் சந்திப்பு**

ஆகஸ்ட் 26 ஆம் நாள் நேருவை ரசாக் சந்தித்தார். நேசமணி சொல்லியிருந்தபடி, திருவிதாங்கூரில் தமிழர் அடைந்த இன்னல்களை நேருவிடம் விளக்கினார் ரசாக். எல்லாவற்றையும் கேட்ட நேரு 'நான் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டார்.

தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் நீங்க வேண்டும் என்றால், தொடர்ந்து காவல்துறை செய்துவரும் அத்துமீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறினார். பஞ்சாயத்துத் தலைவர்கள், நகராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள் ஆகியோர் போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்தார். விளக்கினார். தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை விசாரிக்க வெளிமாநில நீதிபதி ஒருவரை நியமித்தால் நீதி கிடைக்கும் என்றும் ரசாக் தெரிவித்தார்.

**காமராசரின் செயல்பாடு**

காமராசரின் ஆலோசனைப்படி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் எஸ்.எஸ்.கரையாளர் தலைமையில் ஒரு குழு ஆகஸ்ட் 26 ஆம் நாள் திருவிதாங்கூருக்கு வந்தது. தமிழ் மக்களைச் சந்தித்த இந்தக் குழுவினர் அவர்களுக்கு ஆறுதல் கூறினர். கரையாளரை நேரில் பார்த்த கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட கொடுமைகளைக் கண்ணீருடன் எடுத்துக் கூறினார்.

**நேசமணியின் அறிக்கை**

1954 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் நாள் நேசமணியின் அறிக்கை பத்திரிகைகளில் வெளியானது. அதில் திருவிதாங்கூர்ப் பகுதியில் அரசு நடத்திய காட்டாட்சியை விளக்கியிருந்தார். ஆகஸ்ட்

பதினோராம் நாளும் அதற்குப் பிறகும் நடைபெற்ற காவல்துறைக் கொடுமைகளை விசாரிக்க வெளிமாநில நீதிபதியின் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

திருவிதாங்கூரில் வாழ்ந்த தமிழர்களை ஊக்கப்படுத்தும் வகையில் விரைவில் வெற்றி தமிழர்களுக்குக் கிடைக்கும். அடைந்த துயரங்களைத் துடைத்துவிட்டுத் துணிச்சலுடன் போராடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

**இராம் மனோகர் லோகியா**

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளராக இருந்தவர் இராம் மனோகர் லோகியா. அவர் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன்படி உடனடியாக ஆகஸ்ட் 26 ஆம் நாளே திருவிதாங்கூர்–கொச்சியை ஆண்டுவந்த பட்டம் தாணுபிள்ளையின் அரசு பதவி விலக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். 'எந்த சோஷலிஸ்ட் சர்க்காருக்கும் மக்களைச் சுட்டு வீழ்த்துவதற்கு உரிமை கிடையாது. ஆகவே இங்கு நடந்த துப்பாக்கிச் சூடுகள் காங்கிரஸ் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட சூடுகள். சிறுபான்மை சர்க்கார், பெரும்பான்மைக் கட்சியான காங்கிரஸ் ஆதரவுக்காகச் செய்த ஈனத்தனமான செயல் இது. சோஷலிஸ்ட் கட்சியின் பெயரால் செயல்படும் தாணுபிள்ளை சர்க்கார் இந்தக் கறை படிந்த கையோடு ஒரு நிமிடம் கூடப் பதவியில் தொடரக்கூடாது' என்ற அறிக்கைவிட்டார். இந்த அறிக்கையை வெளியிடும் போது லோகியா நைனிட்டால் சிறையிலிருந்தார்.

சிறையிலிருந்து வெளியே வந்ததும் பட்டம் தாணுபிள்ளை அரசைப் பதவி விலகச் செய்யும் முயற்சியை மேற்கொண்டார். கட்சித் தலைவர் கிருபளானியைச் சந்தித்து இதை வற்புறுத்தினார். 'பட்டம் தாணுபிள்ளை அரசு பதவி விலக வேண்டும் அல்லது நான் எனது பொதுச்செயலாளர் பதவியிலிருந்து விலகுவேன்' என்றார். 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் ஐந்தாம் நாள் சொன்னபடியே தமது பதவியிலிருந்து விலகினார். செப்டம்பர் 15 ஆம் நாள் இன்னொரு பொதுச் செயலாளரான மதுலிமாயியும் பதவியைத் துறந்தார்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் ஓர் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்குமாறு கேட்டுக் கொண்டன. அதன்படி திருவிதாங்கூர்– கொச்சி உயர்நீதிமன்ற நீதிபதி சி.சங்கரனைத் தாணுபிள்ளை அரசு செப்டம்பர் 25 ஆம் நாள் நியமித்தது.

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினரைச் சிறையிலிருந்து விடுவிக்க பாஷ்யம் ஐயங்காரும் தைக்காடு சுப்பிரமணிய ஐயரும் வாதிட்டனர். அவர்கள் நியாயமாக எடுத்துவைத்த விவாதங்கள் விழலுக்கு இறைத்த நீராகின. பெரும்பாலான மனுக்கள் நீதிபதியால் நிராகரிக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதி சங்கரன் விசாரணைக் கமிஷனின் அறிக்கையும் தமிழர்க்குப் பாதகமாகவே இருக்கும் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

காங்கிரஸ் கட்சிக்கும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கும் இடையே உறவு சரியில்லை. எனவே காங்கிரசுடன் கூட்டணியைத் தொடர இயலாது என அறிந்த தாணுபிள்ளை, ஐக்கிய முன்னணியின் ஆதரவுடன் ஆட்சியைத் தக்க வைக்க நினைத்தார். அதற்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைச் சேர்ந்த 12 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. எனவே வழக்குகளில் சிக்கிய திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்களைப் பிணையாக வைத்து நேசமணியைச் சரணடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்.

**கிருபளானி வீட்டுமுன் மறியல் திட்டத்தின் தோல்வி**

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் ஆட்சிதான் திருவிதாங்கூர்–கொச்சியில் நடைபெறுகிறது. இந்தக் கட்சியின் தலைவர் கிருபளானி. தாணுபிள்ளை அரசை நீக்க வேண்டும் என்று இராம் மனோகர் லோகியாவும் மதுலிமாயியும் தங்கள் பொதுச்செயலாளர் பதவியை உதறிய பிறகும் துணிச்சலான நடவடிக்கை எடுக்கவில்லை கிருபளானி. இதைக் கண்டித்து டில்லியில் உள்ள அவரது வீட்டின் முன் மறியல் செய்வது என்று திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் முடிவெடுத்தனர். மறியல் நாளாக 1954 நவம்பர் முதல்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேவிகுளத்தைச் சேர்ந்த குப்புசாமி, காந்திராமன், துரைசாமி ஆகிய மூவருடன் துணைக்கு ரசாக்கும் டில்லிக்குப் புறப்பட்டனர். ஆனால் குறிப்பிட்ட நாளில் மறியல் நடைபெறவில்லை. ரசாக் மட்டும் டில்லியில் தங்கினார். மற்ற மூவரும் ஊருக்கு அனுப்பப்பட்டார்கள்.

திருவிதாங்கூரில் தாணு பிள்ளையின் அரசு நடத்திய கொடுமைகளை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் (Rule of Steel and Fire in Travancore-Cochin) நூலை ஏ.நேசமணி எம்.பி.யும் ஏ.ஏ.ரசாக் எம்.பி.யும் உருவாக்கியிருந்தார்கள்.

அந்தப் புத்தகத்தை நாகபுரியில் நவம்பர் மாதம் 27ஆம் நாள் நடைபெற்ற பிரஜா சோஷலிஸ்ட் கட்சி மாநாட்டில் அனைவருக்கும் வழங்கினார் ரசாக்.

**இராமசாமி பிள்ளையின் சமரசத் திட்டம்**

சிறையிலிருக்கும் தொண்டர்களை நீதிமன்றத்தின் மூலம் விடுவிக்க இயலாத சூழ்நிலையில் சமரசத் திட்டத்தின் மூலம் விடுவிக்க எண்ணம் கொண்டார் பி.இராமசாமி பிள்ளை. அதன்படி அவர் ஒரு சமரசத் திட்டத்தை உருவாக்கினார்.

'மார்த்தாண்டம், புதுக்கடை ஆகிய இடங்களில் ஆகஸ்ட் 11 இல் நடந்த சில நிகழ்ச்சிகள் எதிர்பாராதவை; துர்ப்பாக்கியமானவை. வேறு அரசியல் அமைப்புகளும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் மீது பகைகொண்ட சில தனிப்பட்டவர்களும் குறுக்கிட்டதால் அத்துமீறிய வன்முறைச் சம்பவங்கள் எங்கள் கட்டுப்பாட்டை மீறி நடந்துவிட்டன. அவற்றிற்காக நாங்கள் வருந்துகிறோம். அதனாலேயே எங்கள் போராட்டத்தை உடனே நிறுத்தி வைத்தோம். அதைத் தொடரும் நோக்கம் இப்போது இல்லை. ஆகவே எங்கள் தலைவர்கள், தொண்டர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்று அவர்களை விடுதலை செய்ய வேண்டும்'[47] என்னும் இந்த உடன்படிக்கையானது மன்னிப்புக் கோரும் தன்மையில் அமைந்துள்ளது என்று நேசமணி இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் சமரசத் திட்டத்தை எடுத்துக் கொண்டு பி.இராமசாமி பிள்ளையுடன் வந்த தமது இளநிலை வழக்கறிஞர் பக்ருதீனையும் அவர் கண்டித்தார்.

**சங்கரன் கமிஷன் அறிக்கை**

நீதிபதி சங்கரனை ஒரு நபராக நியமித்த விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கை டிசம்பர் 21இல் (1954) வெளியான அரசிதழில் வெளிவந்தது.

'திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் ஆவேசப்பட்டு முன்னெச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாமல் காவலர்களைச் சிரமத்திற்கு உள்ளாக்கினர். காவலர்கள் தற்காப்பு நடவடிக்கையாகத் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. அவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தாமலிருந்தால் காவலர்கள் பலர் அழிந்திருப்பார்கள்' என்று அந்த அறிக்கை தெரிவித்தது.

**எர்ணாகுளத்தில் காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டம்**

1954 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் நாள் எர்ணாகுளத்தில் திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரசார் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். இந்தக் கூட்டம் திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரசின் தலைவர் மாதவமேனனின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பனம்பள்ளி கோவிந்தமேனன் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். பட்டம் தாணுபிள்ளை அரசுக்கு வழங்கி வந்த ஆதரவைத் திரும்பப் பெறுவது என்பதுதான் அந்தத் தீர்மானம். அந்தத் தீர்மானத்தை ஒருவர் தவிர மற்றவர்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக் கொண்டனர். இந்தத் தீர்மானத்திற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஒப்புதல் வாங்கும் பொறுப்பு மாதவமேனனுக்கு வழங்கப்பட்டது. மாதவமேனன் அந்தத் தீர்மானத்துடன் டில்லிக்குச் சென்றார். டிசம்பர் 16 ஆம் தேதியே தீர்மானத்திற்குக் காங்கிரசின் நாடாளுமன்றக் கட்சி ஒப்புதல் வழங்கிவிட்டது.

பட்டம் தாணுபிள்ளை டில்லிக்குச் சென்று நேருவைச் சந்தித்தார். ஆதரவைத் திரும்பப் பெறக் கூடாது என்று வேண்டிக்கொண்டார். ஆதரவைத் திரும்பப்பெறும் ஒப்புதலை மாற்றாமல் சில யோசனைகளை நேரு கூறினார். அதன்படி திருவிதாங்கூர்–கொச்சி காங்கிரஸ் எதிர்க்கட்சியாகச் செயல்படும். ஆனால் ஆட்சி கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும். பட்டம் தாணுபிள்ளை அரசு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவை நாடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். இதைப் பத்திரிகைகளுக்கும் நேரு தெரிவித்தார்.[48]

**உச்சநீதி மன்றத்தில் வழக்கு**

திருவிதாங்கூர்–கொச்சி உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்குகளை உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்வதுதான் தற்போது செய்யக்கூடியது என்று இராஜாஜி முதலான தலைவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அதன்படி திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர்கள் தொடர்பான அனைத்து வழக்குகளையும் திருவிதாங்கூர்–கொச்சி உயர்நீதி மன்றத்திலிருந்து அண்டை மாநில நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்னும் கோரிக்கையை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றே வழக்கறிஞர் தைக்காடு சுப்பிரமணிய ஐயரைத் தொடர்பு கொண்டு

சொன்னார்கள். அதை ஏற்றுக் கொண்ட வழக்கறிஞர் சுப்பிரமணியம், இந்த வழக்குகளுக்கான மனுக்களைத் தயாரிக்கும் பணியை நேசமணியிடமே ஒப்படைத்துவிட்டார். நேசமணி இரவு பகல் பாராமல் உழைத்து வழக்குகளுக்கான மனுக்களைத் தயாரித்தார். 1954 டிசம்பருக்குள் அவற்றை உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்ய டில்லிக்கு ரசாக் புறப்பட்டார்.

உச்சநீதி மன்றத்தில் இந்த வழக்குகளைச் சுப்பிரமணிய ஐயரும் கணபதி ஐயரும் தாக்கல் செய்தனர். அந்த வழக்குகளை ஆய்வு செய்த பிறகு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இந்த வழக்குகளின் விசாரணை 27.01.1955 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

27 ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கும் விசாரணையில் கலந்து கொள்வதற்காக நேசமணியும் அப்துல் ரசாக்கும் டில்லிக்குச் சென்றார்கள்.

அவர்கள் வழக்குக்குத் தேவையான ஆவணங்கள் அனைத்தையும் தயாரித்துக் கொண்டு வழக்குப் பற்றி விவாதித்துக் கொண்டே சென்றார்கள்.

உச்சநீதி மன்றத்தில் வழக்கு விசாரணை குறிப்பிட்ட நாள் அன்று தொடங்கியது. வழக்கறிஞர் சுப்பிரமணிய ஐயரும் கணபதி ஐயரும் நேசமணியும் ரசாக்கும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்கள்.

உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி முகர்ஜி தலைமையில் நீதிமன்றம் கூடியது. நீதிபதிகள் விவிலியன் போஸ், பி.ஜெகன்நாத் தாஸ், டி.ஆர்.வெங்கடராம ஐயர் ஆகியோர் உடனிருந்தார்கள். விசாரணை தொடங்கியது. மனுதாரர்களின் வழக்கறிஞர்களாகிய சுப்பிரமணிய ஐயரும் கணபதி ஐயரும் நீதிபதியின் கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களைக் கூறினார்கள்.

அந்தப் பதிலில் திருவிதாங்கூர்–கொச்சி நீதி மன்றத்தில் வழக்கு நடந்தால், அது மலையாளிகளுக்குச் சாதகமானதாக இருக்கும். எனவே வேறு மாநில நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்பதும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதிக்குள் வர இயலாமல் தவிக்கிறார்கள் என்பதும் தலைவர்களும் தொண்டர்களும் சிறையில் வாடுகிறார்கள் என்பதும் வெளிப்பட்டன.

அதன் பின்னர், திருவிதாங்கூர்–கொச்சியின் வழக்கறிஞர் மாத்யூ முரிக்கனிடம் விசாரணை தொடங்கியது. அவரிடம் நீதிபதி விவிலியன், "எதிர் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தமிழர்–மலையாளிகளுக்கு இடையே போட்டி பூசல்களும் வஞ்சமும் நிலவுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் அண்டை மாநிலத்தில் உள்ள ஒரு நீதிமன்றத்தில் தமிழரோ மலையாளியோ அல்லாத ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவதில் உங்களுக்கு மறுப்பு என்ன?" என்று கேட்டார்.

"அங்கே மலையாளி விரோத மனப்பான்மை மேலோங்கி நிற்கிறது. ஆகவே நேர்மையான விசாரணைக்கு அங்கேயும் வாய்ப்பில்லை" என்று மாத்யூமுரிக்கன் பதில் சொன்னார். நீதிபதிகள் இருதரப்பினரின் கூற்றையும் பதிவு செய்தனர். நீதிபதி விவிலியன் போஸ் பின்வருமாறு தீர்ப்பு வழங்கினார்.

"திருவிதாங்கூர்–கொச்சி சர்க்கார் ஒரு மலையாள சர்க்காராகையால் அது திருவிதாங்கூர்த் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைவதை எதிர்க்கும். அதனால் அது எவ்வளவுதான் நடுவுநிலைமை பாவித்துக் கொண்டாலும் அதன் உறுதிமொழியிலிருந்தும் அதன் வழக்கறிஞர் வாய்மொழியிலிருந்தும் மலையாளி–தமிழர்களுக்கு இடையே நிலவும் வேறுபாடுகள் கசப்பானவை, தீவிரமானவை என்பது வெளிப்படை.

நாங்கள் வழக்குகளைப் பக்கத்து மாநிலத்தில் உள்ள திருநெல்வேலிக்கு மாற்றம் செய்யலாமா என்றும் அதே சமயம் விசாரணையைத் தமிழரோ மலையாளியோ அல்லாத ஒரு மாஜிஸ்திரேட்டால் நடத்தச் செய்யலாம் என்றும் ஆலோசனை சொன்னோம். அதை எதிர்த்து, திருவிதாங்கூர்–கொச்சி வழக்கறிஞர் தமது மாநிலத்திற்கு எதிராக அங்கும் எதிர்ப்பு வளர்ந்திருப்பதாகவும் அதனால் விசாரணை அங்கு நடந்தால் அது நடுவுநிலையான விசாரணையாக இருக்க முடியாது என்றும் தமது மாநிலம் அஞ்சுவதாகவும் தெரிவித்தார். அதே காரணத்திற்காகக் கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களுக்கு மாற்றுவதையும் அவர் எதிர்த்தார். இதனால் என்ன தெளிவாகிறது என்றால், சார்பற்ற முறையில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு மாநில சர்க்கார், நிகழ்ச்சிகளோடு தொடர்பில்லாத வேறொரு மாநிலத்தில் அதுவும் இரண்டு இனத்தையும் சாராத ஒரு

மாஜிஸ்திரேட்டால் விசாரிக்கப்படுவதை, தமிழ்ப் பிரதேசத்தில் நடத்தப்படும் விசாரணை என்ற ஒரு காரணத்திற்காக அது நேர்மையான விசாரணையாக இராது என்று கருதினால், அதே முறையில் மலையாளப் பிரதேசத்தில் அதுவும் சம்பவ இடத்தில் நடத்தப்படும் விசாரணை தங்களுக்கு நேர் விரோதமாகத்தான் இருக்கும் என்று மனுதாரர்கள் கலங்குவது நியாயமானது. இது தவிர இரு சாராரையும் சாராத எந்த நடுநிலைவாதியும் இந்த மனப்பான்மை கொண்ட ஒரு மாநிலத்தில் நடக்கும் எந்த விசாரணையும் நேர்மையானதாக இருக்கும் என்று நம்பிக்கை கொள்ள முடியாது. இந்த ஒரே அடிப்படையில் இந்தப் பிரச்சனையை நாங்கள் அணுகுகிறோம். ஆகவே எங்கள் அபிப்பிராயத்தில் இருதரப்பிலும் சுமத்தப்பட்டிருக்கும் கடுமையான குற்றச்சாட்டுகளை நீதிபூர்வமாக விசாரிப்பதற்குரிய நிதானமான சூழ்நிலை இங்கே நிலவவில்லை. எனவே சம்பந்தப்பட்ட வழக்குகளை மைசூர் உயர்நீதி மன்ற வரம்புக்கு உட்பட்ட நீதிமன்றத்திற்கு மாற்றும்படி ஆணை பிறப்பித்தார்.''[49]

வழக்குகளை மைசூருக்கு மாற்றும் பணிகளைக் கவனித்துக் கொள்ளுமாறு சுப்பிரமணிய ஐயரிடமும் கணபதி ஐயரிடமும் தெரிவித்து விட்டு நேசமணியும் ரசாக்கும் உடனே திரும்பினர்.

உயர்நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்குகளுக்குத் தேவையானவை அனைத்தும் டில்லியிலிருந்தும் நாகர்கோவிலிலிருந்தும் மைசூருக்குக் கொண்டு செல்லப்பட்டன. நேசமணியே நேரில் போய் ஜாமீன் மனு தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டார்.

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞராக ஈ.வி. மாத்யூ வாதாடினார். 1955 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நாள் ஜாமீன் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சிறையிலிருந்த ஏழு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கப்பட்டது.

மனுக்கள் மீதான விசாரணை பிப்ரவரி 18 ஆம் நாள் நடைபெறும் என்று நீதிபதி மேடப்பா அறிவித்தார்.

**தாணுபிள்ளை அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்**

தாணுபிள்ளை அரசு மீது திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் சிதம்பரநாதன்

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தாக்கல் செய்திருந்தார். அந்தத் தீர்மானம் 1955 ஆம் ஆண்டு சனவரி 27 ஆம் நாள் விவாதத்திற்கு எடுக்கப்பட இருந்தது. அன்று தான் உச்சநீதி மன்றத்தில் விசாரணையும் நடைபெற்றது. எனவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தைப் பிப்ரவரி 5 ஆம் நாளுக்குத் தள்ளி வைக்குமாறு சிதம்பரநாதன் கேட்டுக் கொண்டார். சிதம்பரநாதனுக்குத் துணையாகச் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பனம்பள்ளி கோவிந்தமேனனும் கேட்டுக் கொண்டார். ஆனால் தாணுபிள்ளை அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவைத்தலைவர் அந்த விவாதத்தை 29 ஆம் தேதிக்கு மாற்றி வைத்தார்.[50]

சனவரி மாதம் 29 ஆம் நாள் பேரவைக் கூட்டத்தில் "நான் கேட்டுக் கொண்டபடி பிப்ரவரி ஐந்துக்கு மாற்றாததால் தீர்மானத்தை முன்மொழிய விரும்பவில்லை" என்று சிதம்பரநாதன் கூறிவிட்டார்.

பிப்ரவரி முதல்நாள் எம்.எல்.ஏ.க்களுக்கு ஜாமீன் வழங்கப்பட்டதால் அன்றே இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த இரண்டு தீர்மானங்களில் ஒன்று டி.எஸ். இராமசாமி தாக்கல் செய்தது. அந்தத் தீர்மானம் மீதான விவாதத்தைப் பிப்ரவரி எட்டாந்தேதிக்கு எடுத்துக் கொண்டார் அவைத்தலைவர்.

சிறையிலிருந்த ஏழு பேரவை உறுப்பினர்களும் பிப்ரவரி நான்காம் நாள் மாலையில் விடுவிக்கப்பட்டனர். சிறைக்கு வெளியிலிருந்த இரண்டு உறுப்பினர்களும் சனவரி 25 ஆம் தேதியிலிருந்தே பட்டம் தாணுபிள்ளையின் காவலர்களிடம் பிடிபடாமல் மறைந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பி.இராமசாமி பிள்ளையும் ஆர்.பொன்னப்ப நாடாரும் ஆவர். ஏழாம் தேதிக்குள் இந்த இருவரையும் எப்படியாவது பிடித்துச் சிறைக்குள் அடைத்துவிட முயற்சி செய்தது அரசு.

"சட்டசபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஒட்டிய ஓட்டெடுப்பு நடக்கும் அன்று பொன்னப்ப நாடாரைத் திருவனந்தபுரம் சட்ட சபையினுள் நுழைய விடாமல் கைது செய்ய, போலீசாரும் சட்டசபையின் வெளியே காத்திருந்தனர். ஆனால் சிந்தனையில் சிறந்த பொன்னப்ப நாடார் தான் தலைமறைவாக இருந்த இடத்திலிருந்து மாறுவேடம் பூண்டு காரில் சட்டசபைக்குள் சென்றுவிட்டார். அவரைக் கைது செய்யக் காத்திருந்த போலீசார் ஏமாற்றம் அடைந்தனர்"[51] என்று இரா.இயற்கை அரசன் என்பார் தெரிவித்துள்ளார்.

டி.எஸ்.இராமசாமி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்தார். உடனே காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் பனம்பள்ளி கோவிந்த மேனன் அந்தத் தீர்மானத்தை ஆதரித்து, "கனம் முதல் மந்திரி அவர்கள் ஆனைமேல் ஏறி இருந்து கொண்டு கண்ட உயரம் அத்தனையும் தனது உயரமே என்று கணக்கிட்டுவிட்டார். இந்த இறுமாப்பு ஆனைப் பிசகு என்றால் இதன் அடிப்படையில் பல மலைப் பிசகுகளைச் செய்துவிட்டார். அதனால் இன்னும் சிறிது நேரத்தில் தனது எதார்த்த உயரம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளப் போகிறார்"[52] என்று உரையாற்றினார்.

தீர்மானத்திற்கு ஆதரவாக இருந்த இடதுசாரிக் கட்சியினர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. தீர்மானத்திற்கு ஆதரவாகத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் 12 உறுப்பினர்களும் காங்கிரசின் 45 உறுப்பினர்களும் வாக்களித்தனர். பட்டம் தாணுபிள்ளையின் மந்திரி சபை கவிழ்ந்தது.

**காங்கிரஸ் மந்திரி சபை**

பட்டம் தாணுபிள்ளையின் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கு இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 17. சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 118. இதில் 17 பேர் கொண்ட ஒரு கட்சியின் அமைச்சரவை கவிழ்ந்தது என்பதற்காக மீண்டும் தேர்தலை நடத்துவதைப் பெரும்பாலோர் விரும்பவில்லை. பேரவையில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சி காங்கிரஸ். அதற்கு 45 உறுப்பினர்கள் இருந்தனர். சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு ஆதரவாகக் காங்கிரசார் நடந்து கொண்டதால் அவர்களின் ஆதரவு கிடைக்கும். எனவே காங்கிரஸ் ஆட்சி அமைப்பதற்கு வாய்ப்பு உண்டு எனத் தோன்றியது. அதன்படி, திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் நிபந்தனையற்ற ஆதரவு அளிக்க முன்வந்தார்கள். காங்கிரஸ் கட்சிக்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவு அளிக்கும் என்று நேருவுக்குத் தந்தி அனுப்பினர். மாதவன் நாயர் உடனே டில்லிக்கு அழைக்கப்பட்டார். 'திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தரும் ஆதரவு நிரந்தரமானதாக இருக்குமோ?' என்று மாதவன் நாயர் காங்கிரஸ் தலைவர்களையும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களையும் கலந்து ஆலோசித்தார். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் காங்கிரஸ்

கட்சியின் அடிப்படை உறுப்பினர்களாக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் ஆதரவு அளிக்காவிட்டால் சட்டப்பேரவையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் அதற்கு ஒப்புக் கொண்டனர். 1955 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 ஆம் நாள் பட்டம் தாணுபிள்ளை தமது அமைச்சரவையின் பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தார். அன்றே பனம்பள்ளி கோவிந்த மேனன் முதல் அமைச்சர் ஆனார்.

திருவிதாங்கூர்ப் பகுதிகளிலிருந்து காவல் துறையின் அடக்கு முறைக்குப் பயந்து திருநெல்வேலிக்குப் போனவர்கள் திரும்ப வந்து கொண்டிருந்தார்கள்.

பிப்ரவரி 18 ஆம் நாள் பெங்களூரில் உள்ள மைசூர் நீதிமன்றத்தில் அரசு சார்பில் எதிர் வழக்காடுவதில்லை என்று காங்கிரஸ் அமைச்சரவை முடிவெடுத்தது. என்றாலும் நேசமணி பெங்களூருக்குச் சென்று திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் பேரவை உறுப்பினர்களின் விடுதலைக்கு வழி கோலினார். அரசு கொடுத்த வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டன.

**ஃபசல் அலி கமிஷன் அறிக்கை**

மாநிலங்களைச் சீரமைப்பதற்காக அமைக்கப்பட்ட ஃபசல் அலி கமிஷன் அறிக்கையின் முன்வடிவம் நாடாளுமன்ற மக்கள் அவையின் விவாதத்திற்கு வந்தது. அதை 1955 டிசம்பர் 14 ஆம் நாள் உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லப பந்த் சமர்ப்பித்தார். அறிக்கையின் உள்ளீட்டை அவர் விளக்கிப் பேசினார். அவரைத் தொடர்ந்து கிருபளானி, ஏ.கே.கோபாலன் ஆகியோர் உரையாற்றினர். எர்ணாகுளம் தொகுதி உறுப்பினர் ஏ.எம்.தாமஸ், தமது உரையில், 'மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே உள்ள பிரதேசம் அனைத்தும் கேரளம் என்றும் மேற்குத் தொடர்ச்சி மலை கன்னியாகுமரி வரை இருப்பதாகவும் கூறினார். திருவிதாங்கூர்த் தமிழ்ப் பகுதியில் வாழும் மக்களுக்குப் பல நலத் திட்டங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்களின் நலனுக்காகவே திருவிதாங்கூர்–கொச்சி உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவு திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தாமசின் பேச்சில் 'மாநிலங்களைச் சீரமைக்கும் குழு, தென் திருவிதாங்கூரிலிருந்து நான்கு தாலுகாக்களைச் சென்னையோடு

இணைக்கப் பரிந்துரைத்திருப்பது தவறு என்றும் அது அமைய இருக்கும் கேரள மாநிலத்தை அலங்கோலப்படுத்தும்' என்றும் கூறினார்.

அவரைத் தொடர்ந்து நேசமணிக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. நேசமணி தமது பேச்சில் தாமசின் பேச்சுக்குப் பல வகைகளில் மறுப்பு வழங்கினார். தாமஸ் தமது பேச்சில் 'திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஆகிய தொகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வேட்பாளர்கள் ஜாமீனை இழந்தனர். எனவே அந்தத் தொகுதிகளைச் சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்று திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் கேட்க முடியாது' என்று கூறியிருந்தார்.

நேசமணி தமது உரையில் 'தோவாளை, அகஸ்தீஸ்வரம் உள்ளிட்ட நாடாளுமன்றத் தொகுதியில் வென்றது யார்?' என்று கேட்டார். அந்த நாடாளுமன்றத் தொகுதியில் நேசமணி வெற்றி பெற்றதை அனைவரும் அறிவர்.

விளவங்கோடு தாலுகாவுடன் பொருந்தியும் இணைந்தும் கிடக்கும் நெய்யாற்றங்கரை தாலுகாவை நெய்யாறு பாயும் ஈட்டான் வரையாவது விளவங்கோட்டோடு சேர்த்துச் சென்னையோடு இணைப்பதற்கு மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு ஆலோசனை தந்திருக்க வேண்டும். ஏன் அவ்வாறு செய்யவில்லை என்றால் 1951 இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது மலையாளம் தெரிந்தவர்களை எல்லாம் மலையாளிகள் என்று குறிப்பிட்டுவிட்டார்கள். தாய்மொழியைப் பற்றிக் கேட்காமல், 'மலையாளம் தெரியுமா?' என்று மட்டும் கேட்டுக் கணக்கெடுத்துவிட்டார்கள். மிகுதியான தமிழர்களை மலையாளிகள் எனப் பதிவு செய்ததால் அங்கே மலையாளிகளே மிகுதி எனக் கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது.

மாநிலங்களைச் சீரமைக்கும் போது ஆறு, குளம், மலை, மேடு என்று பார்க்காமல் மனித சமுதாயத்திற்கு ஏற்பட இருக்கும் இன்ப துன்பங்களையே கருத்தில் கொள்ள வேண்டும். இந்த நெறிமுறையைத் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களில் கடைப்பிடிக்க வேண்டும்.

'பூஞ்சார் ராஜா யார்' என்ற கேள்வியைக் கேட்டுப் புதிய வரலாறு எழுத வேண்டாம். இருக்கின்ற வரலாற்றை எடுத்துப் படியுங்கள். பூஞ்சார் ராஜா ஒரு பாண்டிய அரசின் வாரிசு. இந்தப் பாண்டிய வாரிசு,

மீனாட்சி சுந்தரம், மதுரை மீனாட்சி துணையோடு தன் சுய அதிகாரத்தில் வரிவிதித்து வசூல் செய்து பாதுகாப்பும் அளித்திருக்கிறார். 1879 இல் கண்ணன் தேவன் கம்பெனிக்குப் பாட்ட அடையோலை வழங்கி, குத்தகை ஒப்படைப்புக் கொடுத்திருக்கிறார். இந்த ஒப்பந்தம் 1899 இல் மீண்டும் வழங்கும் போதுதான் திருவிதாங்கூர் ராஜா வருகிறார். அப்போதும் எந்த வழியாக வந்தார்.

மதுரை மாவட்டம் கம்பம், குமிளி வழியாக வந்தார். 1935 க்கு முன்பாகத் திருவிதாங்கூரிலிருந்து இந்தப் பிரதேசத்திற்கு நேரடி வழித்தடம் இருந்ததா என்று கவனிக்க வேண்டும். கரடு முரடான இந்தக் காட்டு வனாந்திரத்தைப் பசுமைச் சோலையாகப் பாங்கான தேயிலைத் திட்டுகளாக ஏலத் தோட்டங்களாக உருமாற்றி வனப்புறச் செய்தது யார்? பூர்வ குல மலைவாசிகள். பாண்டி நாட்டுப் பரம்பரையினர். இவர்கள் மட்டும் போதுமா? அங்கு நடந்த தோட்டப் புரட்சிகளுக்குத் திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை, தென்னாற்காடு முதலிய மாவட்டங்களிலிருந்து குமிளி, தேவாரம், கொடைக்கானல், உடுமலைப் பேட்டை வழியாக வந்து குடியேறிக் குடிபதியாகி இருக்கிறார்கள். அங்குள்ள குத்துச் செடிகளைக் கேட்டுப் பாருங்கள். அவற்றில் இவர்களின் மூதாதையர்களின் விரல் அடையாளங்கள் தெரியும். அவற்றின் செழிப்பில் தெரியும் இவர்களின் பாட்டன், பூட்டன் எலும்பும் சாம்பலும் ஏற்றிய ஊட்டச்சத்து. அவர்களுக்குக் குடியுரிமை இல்லையா? வழிகளை அடையுங்கள், கணவாய்களை மூடுங்கள் என்று ஒரு முதல் அமைச்சர் பட்டம் தாணுபிள்ளை முழக்கம் செய்திருக்கிறார். அதுவும் எங்கே? திருவிதாங்கூர்–கொச்சி சட்டப்பேரவையில். அந்த வழியாக வரும் தொழில் வர்க்கத்தைத் தடை செய்ய வேண்டுமாம். இப்போதைக்கு மட்டும் அல்ல, எப்போதைக்குமாக. எதற்கென்றால், இங்குள்ள மலையாளிகள் குடியேறி வாழவேண்டுமாம். அடுத்தடுத்து நடந்த தேர்தல்களில் தேவிகுளம்–பீர்மேடு தொகுதிகளில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மலையாளிகள் அங்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்கோ குடியேறுவதற்கோ எந்தத் தடையுமில்லை. மலையாளிகள் அங்கே குடியேறுவதற்காக அங்குள்ள தமிழர்களை வெளியேற்ற வேண்டுமா? இதுதான் அங்குள்ள பிரச்சனை. அங்குள்ள தமிழர்கள் 20 பெண்கள் உட்பட 434 பேர் மீது பொய் வழக்குகள் தொடர்ந்து ஆண் பெண் பாகுபாடின்றி, காவல்துறைக் காவலில் அடைத்து வைக்கப்பட்டார்கள்.

இந்தக் கொடூர நிகழ்ச்சிகளுக்கு உடந்தையாக இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றும்படி கேட்ட நான்கு சட்டப் பேரவை உறுப்பினர்களை அரசாங்கம் மிரட்டியிருக்கிறது.

இவை எல்லாவற்றையும் நாட்டில் உள்ள எல்லோருக்கும் தெரிவிப்பதற்காகத் 'தேவிகுளம் நாள்' என்று கண்டன நாள் மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பான கூட்டத்தில் பேசுவதற்கு நானும் மாநிலங்கள் அவை உறுப்பினர் ஒருவரும் முன்னாள் அமைச்சர் ஒருவரும் போன போது 144 தடையுத்தரவு முன் தேதியிட்டுப் பிறப்பிக்கப்பட்டது. அதை மீறிய எங்களைக் கைது செய்தனர். தடையை மீறியதற்காக எங்களைக் கைது செய்தனர். அது சரி. 434 தமிழர்களை எதற்காகக் காவலில் வைத்தார்கள்? இவர்களது மனிதாபிமானம் எங்கே போயிற்று? என்று கேட்கிறேன். மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழுவினர் தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களை அப்படியே கேரள மாநிலத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இதை இந்த மன்றம் கவனத்தில் எடுத்து மாநிலங்கள் மறு சீரமைப்புக் கூறியிருக்கும் கருத்துகளில் உள்ள அநீதிகளை அகற்ற வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன் என்று உரையாற்றினார்.[53]

**கன்னியாகுமரி மாவட்டம்**

ஃபசல் அலி கமிஷன் சித்தூரை மலபாருடன் இணைத்தது. நெய்யாற்றங்கரை தாலுகாவில் மலையாளிகள் மிகுதியாக வாழ்வதால் அதைக் கேரளத்துடன் இணைத்தது.[54]

தமிழ்த் தாலுகாக்களான விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீசுவரம், தோவாளை ஆகிய நான்கையும் திருவிதாங்கூர்–கொச்சியிலிருந்து பிரித்து, கன்னியாகுமரி மாவட்டம் ஆக்கியது. அதைச் சென்னை மாநிலத்துடன் இணைத்தது.[55] திருநெல்வேலி மாவட்டத்துடன் செங்கோட்டை இணைக்கப்பட்டது.

திருவிதாங்கூர் மன்னர்களின் அரண்மனை இருந்த இடமான பத்மநாபபுரம், புதிதாக உருவாக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் இடம்பெற்றது. திருவனந்தபுரத்திலிருந்து முப்பத்து மூன்று மைலுக்குத் தெற்கே அமைந்துள்ள பத்மநாபபுரம் அரண்மனையானது மார்த்தாண்ட

வர்மாவால் 1750 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. திருவிதாங்கூருக்குச் சொந்தமான அரண்மனையில் பல பழங்கால ஓவியங்களும் அரிய பொருள்களும் உள்ளன. அவற்றைச் சிதைவடையாமல் கேரளத்துக்குக் கொண்டு செல்வது கடினம். மேலும் அந்த அரண்மனையே மிகச் சிறந்த நினைவிடமாக விளங்கும் போது அதை எவ்வாறு கேரளத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்? எனவே 'பத்மநாபபுரம் அரண்மனையைக் கேரளாவுக்குரியதாக வழங்குவதற்கு ஒரு முடிவு எட்டப்பட்டது. ஆனால், அது இருக்கின்ற இடத்திலேயே இருக்க வேண்டும். அந்த அரண்மனையிலிருந்து ஏதேனும் ஒரு பொருளைக் கேரள அரசு எடுக்க வேண்டும் என்றால் அதற்குச் சென்னை அரசிடம் அனுமதி வாங்க வேண்டும். அந்த அரண்மனையைப் பராமரிப்பதற்கான செலவைக் கேரள அரசும் சென்னை அரசும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முடிவானது.[56]

கன்னியாகுமரியில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் கேரளாவின் விருந்தினர் விடுதி உள்ளது. அதைக் கேரள அரசுக்கு அப்போதைய சென்னை மாநில முதல் அமைச்சர் (கு. காமராசர்) 99 ஆண்டு குத்தகைக்குக் கொடுப்பதாக ஒப்பந்தம் கையெழுத்தானது.[57]

**இணைப்பு விழா**

திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதிகள் 1956 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதை ஒரு விழாவாகக் கொண்டாடுவதற்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் திட்டமிட்டது. ஒவ்வொரு தாலுகாவிலும் விழா நடத்துவதற்கும் உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

நாகர்கோவிலில் எஸ்.எல்.பி. உயர்நிலைப் பள்ளியில் பகல் விருந்தும் பொதுக்கூட்டமும் நடத்த ஏற்பாடானது. அந்த விழாவிற்குச் சென்னை மாநில முதலமைச்சர் காமராசரையும் அவரது அமைச்சர்களையும் அழைப்பதற்குத் திட்டமிடப்பட்டது. மாலையில் நடைபெற இருந்த பொதுக்கூட்டத்திற்கு நேசமணி தலைமை தாங்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. திருவிதாங்கூர்த் தமிழர்

போராட்டத்தின் நாயகராக அவர் விளங்கியதால் அனைவரும் நேசமணியை மார்ஷல் நேசமணி என்றே குறிப்பிட்டனர். விழாவுக்கு வருகை தரும் காமராசரையும் அமைச்சர்களையும் திருவிதாங்கூரின் எல்லையான காவல் கிணறு சந்திப்பில் எதிர்கொண்டு வரவேற்பு வழங்கவும் ஏற்பாடு நடந்தது. நவம்பர் முதல் நாள் எஸ்.எல்.பி. பள்ளி வளாகத்தில் இணைப்பு விழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இணைப்பு விழாவை வெற்றி விழா என்ற தலைப்பில் தினமலர் செய்தியாக வெளியிட்டது.

திருவிதாங்கூர்த் தமிழர்கள் தாய்த் தமிழகத்துடன் இணைவதற்கான போராட்டம் நவம்பர் முதல் தேதி 1956 இல் வெற்றி பெற்றது. அன்றைய தினம் குமரி மாவட்டம் முழுவதும் தேசியத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. சரித்திரம் கண்டிராத முறையில் திருவிதாங்கூர்த் தமிழகத்தில் உள்ள வீடுகளும் வீதிகளும் அரசாங்க அலுவலகங்களும் மற்றும் பொது நிறுவனங்களும் கொடி, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை பிரதான சாலையில் நூற்றுக்கணக்கான அலங்கார வளைவுகள் போடப்பட்டிருந்தன.

நவம்பர் இரண்டாம் நாள் இரணியலில் உள்ள ஹவ்வா திரையரங்கில் கூட்டம் போட்டு, காமராசருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. 'காமராசரைப் படிக்காத மேதை என்று அரசியல் மேடைகளில் சில மாற்றுக் கட்சியினர் வருணிப்பது உண்டு. அது சரி அல்ல. அவரிடம் மேதாவித்தனம் உண்டு என்பது சரிதான். இவர் படிக்காதவர் என்று சொல்வது சரி அல்ல. அவர் படித்த புத்தகங்களைப் 'படித்தவர்கள்' படைத்தார்கள். இவர் படித்தவர்களையும் புத்தகங்கள் எழுதியவர்களையும் சேர்த்துப் படித்தார். ஆகவே அந்த அளவுக்கு அவருக்கு மேதாவித்தனம் ஏற்பட்டிருந்தது' என்று குறிப்பிட்டுள்ள அப்துல் ரசாக் அவரை இப்படிப்பட்ட பாராட்டு விழாக்களின் மூலம் மயக்கமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனால் தான் அந்த இரணியல் கூட்டத்தில் 'காங்கிரஸ் மகாசபையின் கதவுகள் எப்போதுமே திறந்திருக்கும் என்றும் யாரும் உள்ளே வரலாம் என்றும் உள்ளே வந்தவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்து

காங்கிரஸ் கட்சி தரும் பாராட்டுகள்' என்றும் ஒரு நல்லாசிரியர் பாணியில் பேசினார்[59] என்றும் அப்துல் ரசாக் குறிப்பிட்டுள்ளார்.

**திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ்-காங்கிரஸ் இணைப்பு**

கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கூரிலிருந்து பிரிந்த பிறகு 1957 இல் பொதுத் தேர்தல் வந்தது. பொதுத் தேர்தலில் கிள்ளியூர்த் தொகுதியில் மார்ஷல் நேசமணி போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் தாணுலிங்க நாடார் வெற்றி பெற்றார். குளச்சல் தொகுதியில் லூர்தம்மாள் சைமன் வெற்றி பெற்றார். விளவங்கோடு தொகுதியில் வில்லியம் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் இருந்தவர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தாம். அவர்கள் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் என்ற தனிக்கட்சியை உருவாக்கியது திருவிதாங்கூரின் தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகத்தான். அந்த வேலை முடிந்துவிட்டதால் அக்கட்சியைக் காங்கிரஸ் கட்சியுடன் இணைக்க முடிவு செய்தனர். அதற்காக 1957 ஆம் ஆண்டு சனவரி 26 ஆம் நாள் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசார் ஆலன் நினைவு மண்டபத்தில் கூடினர். அந்தக் கூட்டத்திற்கு மார்ஷல் நேசமணி தலைமை தாங்கினார். அந்தக் கூட்டத்தில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைச் சென்னை மாநிலக் காங்கிரசுடன் இணைக்கும் தீர்மானம் நிறைவேறியது.

## சான்றெண் விளக்கம்


1. K. Nambi Arooran, **Tamil Renaissance and Dravidian Nationalism 1905-1944**. p.233.
2. K. Nambi Arooran, **Tamil Renaissance and Dravidian Nationalism 1905-1944**. p.7.
3. Letter to Governor General on 22.08.1948.
4. பி.எஸ்.மணி, திரு–தமிழர் இயக்கம், ப. 34.
5. திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் கூட்ட முடிவு.
6. தமிழ் முரசு, மே 1946.
7. ம.பொ.சி., **எனது போராட்டம் –இரண்டாம் பாகம்**, பக். 30–33.
8. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 60.
9. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 70.
10. A.Nesamani, **Inside Travancore Tamilnad**, p.2.
11. Dr.B. Maria John, **Linguistic Reorganisation of Madras Presidency**, p. 44.
12. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 90.
13. 'Reporter of the Linguistic Provinces Committee, Appointed by the Jaipur Congress, pp. 15-16.
14. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 87.
15. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 88.
16. நத்தானியல், ப. 20.
17. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 92.
18. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 93.
19. நேர்காணல் 'தியாகி ஆ.சிங்காராயர்' நாள். 02.03.2006.
20. நேர்காணல் 'தியாகி ஆ.சிங்காராயர்' நாள். 02.03.2006.
21. நேர்காணல் 'தியாகி ஆ.சிங்காராயர்' நாள். 02.03.2006.

22. நேர்காணல் 'தியாகி ஆ.சிங்காராயர்' நாள். 02.03.2006.

23. 'கவிமணியின் தென் எல்லை மாநாட்டு உரை'–சிறு பிரசுரம்.

24. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப. 110.

25. நேர்காணல், 'தியாகி ஆ.சிங்காராயர்', நாள். 02.03.2006.

26. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப.117.

27. நேர்காணல், 'தியாகி ஆ.சிங்காராயர்', நாள். 02.03.2006.

28. நேர்காணல், 'தியாகி ஆ.சிங்காராயர்', நாள். 02.03.2006.

29. நத்தானியல், ப.20,

30. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, ப.138.

31. M.Manoharan, 'A.Nesamani, Socio-Political Study', Ph.D., Thesis, p.135. (Madurai Kamaraj University), 1995.

32. The Hindu, 23.12.1953.

33. Government of India, Ministry of Home Affairs, File No, 53/69/53, Public, 29, Dec. 1953, p.1.

34. The Hindu, 28.04.1954.

35. தினமலர் 14.04.1953.

36. K.Sankaran Commission Report Gazattee No,51, dated 21.12.1954, p.6.

37. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, பக். 196–197.

38. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, பக்.198–199.

39. ஏ.ஏ.ரசாக், **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, பக்.200–201.

40. ஏ.சிங்காராயர், **கன்னியாகுமரி மாவட்டம்–அரசியல் சமூக வரலாறு**, பக்.105–106.

41. தினமலர், 09.08.1954.

42. தினமலர், 07.08.1954.

43. தினமலர், 08.08.1954.

44. தினமலர், 12.08.1954.

45. ஏ.ஏ.ரசாக், நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம், ப.229.

46. தினமலர், 14.08.1954.

47. ஏ.ஏ.ரசாக், நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம், ப.302.

48. Hindustan Times, Madras Mail, 18.12.1954.

49. '1954ஆம் ஆண்டு பெறப்பட்ட மனு எண் 680 முதல் 683 வரையிலானவற்றிற்கு 1955 ஜனவரி 27ஆம் நாள் உச்சநீதி மன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு', ப. 4.

50. திருவிதாங்கூர்–கொச்சிப் பேரவை நடவடிக்கை 1955, Vol.XII. No.2, p.54–68.

51. பொன்னப்ப நாடார், ப. 6.

52. ஏ.ஏ.ரசாக், நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம், பக்.229–230.

53. மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு அறிக்கை, மக்கள் அவை விவாதத் தொகுப்பு–1, பக்.133–147.

54. Report of the State Reorganisation Commission, p.83, para 299.

55. Report of the State Reorganisation Commission, p.84, para 300-301.

56. Government of Madras, Public Partition II Department G.O.No.3477, 11.10.1956, p.1-25.

57. K.Rajayyan, **History of Tamilnadu, 1565-1985**, p. 398.

58. தினமலர், 03.11.1956.

59. ஏ.ஏ.ரசாக், நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம், ப.364.

# தமிழக வட எல்லைப் போராட்டம்

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கு முன்பு சென்னை மாகாணத்தில் மலபார் பகுதி, ஆந்திராவின் தென்பகுதி, கர்நாடகத்தின் தென்பகுதி ஆகியவை சேர்ந்தே இருந்தன. மொழிவாரியாக மாநிலங்களைப் பிரிக்கத் தொடங்குவதற்கு முன்பே கேரளம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் மாநிலங்களுக்கு உரிய பகுதிகளைச் சென்னை மாகாணத்திலிருந்து பிரித்துக் கொள்ள முயற்சி செய்தனர். ஆனால் தமிழ்நாட்டிலிருந்த தமிழ் மக்கள் 'நமது நிலப்பகுதியில் நாம் தான் வாழ்கிறோம், நாம் கேட்டுப் பெறுவதற்கு எதுவும் இல்லை' என்ற எண்ணத்தில் இருந்தனர். தங்கள் மாநிலங்களுக்கு நிலம் சேர்க்க விரும்பியவர்கள் தமிழ் மக்கள் மிகுதியாக வாழும் பகுதிகளையும் தங்கள் பகுதி என்று சொந்தம் கொண்டாடத் தொடங்கினர். அப்போது தான் தமிழ்நாட்டில் சிலருக்குத் தமிழ்ப் பகுதிகள் நம்மை விட்டுப் போய்விடும் என்ற அச்சம் எழுந்தது.

தமிழ் நாட்டின் வட எல்லையாக வேங்கட மலையையும் தென் எல்லையாகக் கன்னியாகுமரியையும் தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. இந்த எல்லைகளில் தெற்கில் உள்ள கன்னியாகுமரி இப்போதும் தமிழனுக்குச் சொந்தமானதாக இருக்கிறது. ஆனால் வடமாலவன் குன்றம் என்றும் வேங்கடமலை என்றும் கூறப்பட்ட திருப்பதி நம்மிடம் இல்லை. ம.பொ. சிவஞானம் அவர்கள் முன்நின்று போராடியிருக்காவிட்டால் அதற்குத் தெற்கே உள்ள திருத்தணியும் தமிழ் நாட்டை விட்டுப் போயிருக்கும். வேங்கடத்தையும் திருத்தணியையும் மீட்பதற்கு நடந்த வடக்கு எல்லைப் போராட்டத்தை இந்தப் பகுதியில் காண்போம்.

### மொழி வழி மாநிலம்

ஆங்கிலேயர்கள், தங்களின் ஆட்சி வசதிக்காக இந்தியாவை ஒரே நாடாக வைத்திருந்தனர். இந்தியா முழுவதும் அவர்களுக்கு

அடிமைப்பட்டிருந்ததால் இந்தியர்கள் அனைவரும் ஆங்கிலேயரின் அடிமைகள். அடிமைகளாக இருந்த மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கிய வேளையில் தங்கள் மொழி, தங்கள் இனம், தங்கள் நாடு என்னும் எண்ணம் மேலோங்கத் தொடங்கியது.

இந்தியாவில் கூட்டாட்சி நிலைபெற்றிருக்க வேண்டும் என்றால் மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பகுதிகளின் ஆட்சி நிர்வாகத்தை அந்தந்த மக்களே நடத்த வேண்டும் என்று அறிஞர்கள் எண்ணினார்கள்.

"இந்திய தேசம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுத் தான் அரசாட்சி நடைபெற வேண்டும். நாடு முழுவதும் மத்திய அரசாங்கத்தாரால் நடத்தப்பட முடியாது. அரசாங்கத்தின் வேலைகளையும் அதிகாரங்களையும் இரண்டாகப் பிரித்து, ஒரு சில வேலைகளையே மத்திய அரசாங்கத்தின் கையில் கொடுக்க முடியும். மற்ற அரசியல் வேலைகளெல்லாம் மாகாண அரசாங்கத்தின் பூரண ஆதிக்கத்தில் இருந்தே தீரும்.

மத்திய அரசாங்கத்தின் வேலைகளும் அதிகாரங்களும் வேறு அன்னியர்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய ராணுவ ஏற்பாடுகள், வெளிநாட்டு வியாபார நியமங்கள், நாணயச் செலவாணி விஷயங்கள், ரயில் முதலிய போக்குவரத்துச் சாதனங்கள் இவையும், இவை போன்ற வேறு விஷயங்களும் மத்திய அரசாங்கத்தின் கீழ் நடைபெறும்.

மற்ற விஷயங்கள் அனைத்தையும் பூரண அதிகாரத்துடன் மாகாணக் குடியரசு சர்க்கார் நடத்தும். மாகாண ஆட்சியின் மேல் மத்திய சர்க்காருக்கு யாதொரு அப்பீல் பாத்தியமும் கிடையாது. மாகாண சர்க்கார் செய்த காரியங்களையாவது சட்டங்களையாவது மாற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்குக் கிடையாது"[1] என்று 'காந்தி–ஜின்னா பேச்சு' என்ற நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் இராஜாஜி குறிப்பிட்டுள்ளார்.

இதே கருத்தைத் தான் ம.பொ.சியும் கொண்டிருந்தார். இதைச் செயல்படுத்துவதற்காக ம.பொ.சி. 1946 ஆம் ஆண்டு நவம்பர் இருபத்தொன்றாம் நாள் தமிழரசு கழகத்தைத் தொடங்கினார். அதன்

முதல் செயற்குழுக் கூட்டம், சென்னையில் உள்ள கிருஷ்ணாம்பேட்டையில் உள்ள இருசப்ப கிராமணி தெருவில் கூடியது. திரு.வி.கலியாண சுந்தரனார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கூட்டத்தில் தமிழரசு கழகத்தின் கொள்கைகள் வகுக்கப்பட்டன. அந்தக் கொள்கைகளில் மொழி வழியில் அமையப்போகும் தமிழ்நாட்டின் எல்லைகளாகத் தென்குமரியும் திருப்பதியும் குறிப்பிடப்பட்டிருந்தன.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகவும், தமிழ் நாட்டைத் தாய் நாடாகவும் கொள்ளும் தமிழ் நாட்டின் நிரந்தரக் குடிகள் எல்லோரும் தமிழராகக் கருதப்படுவர்.

தெற்கே குமரி முனைக்கும், வடக்கே திருப்பதி மலைக்கும் இடையேயுள்ள நிலப்பரப்பு தமிழகமாக, தமிழர் தாயகமாகக் கொள்ளப்படும். (சென்னை நகரம், செங்கற்பட்டு, வடஆற்காடு, சித்தூர், தென்னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, நீலகிரி ஆகிய 13 ஜில்லாக்களும் திருவிதாங்கூர் சமஸ்தானத் தமிழ்ப் பிரதேசங்களும், புதுக்கோட்டை சமஸ்தானமும், காரைக்கால்–புதுவை ஆகிய பிரெஞ்சிந்தியப் பிரதேசங்களும் இதில் அடங்கும்)

மேற்சொன்ன புதிய தமிழகத்தைச் சுதந்திர நாடாகச் செய்வதுடன், உழைப்பாளிக்கே உரிமை என்ற கொள்கையுடையதும் உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்ற ஊதியம் தருவதுமான சோஷலிசக் குடியரசை நிறுவவேண்டும்.

தமிழ் சோஷலிசக் குடியரசில் தமிழ் மொழியை அரசியல் மொழியாகச் செய்வதுடன், இதர எல்லாத் துறைகளிலும் கூடத் தமிழுக்கே முதன்மை தேடித் தருதல், சாதி, சமய வேற்றுமையற்ற தமிழ் இனத்தின் பொதுக் கலைகள், இலக்கியங்கள், பண்பாடுகள் ஆகியவற்றைப் போற்றி, அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும்.

தமிழ் இனத்தின் நலத்திற்குத் தீங்கற்ற வகையில் பிற இனத்தவருடன் உறவுகொள்ளவும் இந்தியாவின் பூகோள ரீதியான ஒற்றுமையைப் பாதுகாக்கவும் தமிழ் சோஷலிசக் குடியரசு இந்தியக் கூட்டரசில் இணைய வேண்டும்.

தமிழகத்துக்கு வெளியே இந்தியாவின் மற்றப் பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழர் நலனுக்காகப் பாடுபடுதல் ஆகியவை தமிழரசு கழகத்தின் கொள்கைகளாக வரையறுக்கப்பட்டன.[2]

**வடக்கு எல்லைப் பிரச்சனைக்கான காரணம்**

1911 ஆம் ஆண்டுவரை வடஆற்காடு மாவட்டத்தில் தான் திருப்பதி இருந்தது. வடஆற்காடு மாவட்டம் அளவில் பெரியதாக இருந்ததால் நிர்வாக வசதிக்காக அது இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

சித்தூர், கங்குந்திக் குப்பம், திருத்தணி, புத்தூர் பல்லவன் ஏரி, காளத்தி, திருப்பதி (சந்திரகிரி) ஆகிய தமிழ்த் தாலுகாக்களைத் தென்ஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரித்து ‘சித்தூர் மாவட்டம்’ எனத் தனியான மாவட்டம் ஆக்கினர். அவ்வாறு தனி மாவட்டம் உருவாக்கும் போது கர்நூல் மாவட்டத்திலிருந்து மதனபள்ளி, வாயல்பாடி ஆகிய இரு தெலுங்குத் தாலுகாக்களையும் சித்தூர் மாவட்டத்துடன் சேர்த்தனர்.

சித்தூர் மாவட்டம் தனி மாவட்டமாக ஆக்கப்பட்ட பின்னரும் வேலூரே தலைநகராகத் தொடர்ந்தது. வேலூர் தலைநகராகத் தொடர்ந்ததுவரை சித்தூர் மாவட்டம், தமிழ் மக்கள் மிகுதியாக வாழும் மாவட்டமாகத் தான் இருந்தது. அதன் தலைநகரம் சித்தூருக்குப் போன பிறகு தமிழ் மக்கள் மிகுதியாக வாழ்ந்த பகுதிகளான சித்தூர், புத்தூர், காளத்தி முதலான பகுதிகளில் தெலுங்கு மக்கள் படிப்படியாகக் குடியேறத் தொடங்கினார்கள்.

திருப்பதியில் திருமால் கோயில் கொண்டிருப்பதால் அங்கு ஆந்திரர்களின் வருகை மிகுதியாக இருந்தது. மெல்ல, மெல்ல திருப்பதியின் நிர்வாகம் ஆந்திரர்களுக்குச் சொந்தமானது.

தமிழர்களின் நெஞ்சில் வேங்கடம் என்ற திருப்பதி தங்களுக்கு உரியது என்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. எனவே ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசி மாதம் தமிழர்கள் திருப்பதிக்குச் சென்று வந்ததை ம.பொ.சி. பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“எல்லையைக் காக்கும் குறிக்கோளுடனும் ஆண்டுதோறும் புரட்டாசித் திங்களிலே வைணவத் தமிழர்கள் திருப்பதிக்கு அணி அணியாகச் செல்லும் வழக்கத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத்தினர். திருப்பதிக்கு வாகனங்களில் செல்வதைத் தவிர்த்து, நடந்தே செல்ல

வேண்டும் என்றும், தமிழில் பக்திக் கோஷங்களை உரத்த குரலில் எழுப்பிக் கொண்டு செல்ல வேண்டுமென்றும், திருப்பதிக்குச் செல்வோர் தங்களுடன் கொண்டு செல்லும் பணத்தை மிச்சப்படுத்திக் கொண்டு வராமல் செலவழித்து விட்டே திரும்ப வேண்டுமென்றும் நம்முடைய முன்னோர் விதிகள் வகுத்தனர். இவ்வளவும் திருப்பதி பறிபோகாமல் பாதுகாக்கத்தான்.

இவ்வளவிருந்தும், திருப்பதி செல்லும் தமிழர் எண்ணிக்கையானது ஆந்திரர் எண்ணிக்கையை எந்தக் காலத்திலும் விஞ்சவில்லை போலும்! ஆம்; தமிழகத்து வைணவர்களுக்குத் திருவரங்கம், கள்ளழகர் கோயில், ஆழ்வார் திருநகரி, திருப்பெரும்புதூர் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வைணவத் தலங்களிருத்தலால் ஆந்திரரை விஞ்சுமளவுக்கு அவர்கள் திருப்பதிக்குச் செல்லவில்லை போலும்! ஆந்திரர் நிலை வேறு. அவர்களுக்குத் திருப்பதி தான் முதலும் முடிவுமான பெரிய கோயில். இத்தனை காரணங்களாலும் திருப்பதியையும் அதைச் சுற்றியுள்ள தாலுகாக்களையும் ஆந்திரர் ஆக்கிரமித்துக் கொண்டனர்”.[3]

**திருப்பதியை மீட்கப் பயணம்**

திருத்தணியும் திருப்பதியும் சித்தூர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தாலும் திருத்தணியில் ஆந்திரர்களின் குடியேற்றம் குறைவாகவே இருந்தது. புகழ்பெற்ற வைணவத் தலமாக விளங்கிய திருப்பதியை மீட்க முயலா விட்டால் அது தமிழ்நாட்டை விட்டுப் போய்விடும். எனவே 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதினாறாம் நாள் ம.பொ.சி. ஒரு தொண்டர் குழுவுடன் திருப்பதிக்குப் புறப்பட்டார்.

ம.பொ.சி. திருப்பதிக்கு அணி திரட்டிச் செல்வதற்குத் துணை நின்றவர்களில் முதன்மையானவர் மங்கலம் கிழார் என்னும் தமிழ் ஆசிரியர் ஆவார். ம.பொ.சி.யுடன் திருப்பதிக்குப் பன்னிரண்டு பேர் புறப்பட்டனர். அவர்கள் கொ.மோ. ஜனார்த்தனம், சோம. சுவாமிநாதன், ஆ. தாமோதரம், சி. வேங்கடசாமி, அ.வை. கிருஷ்ணமூர்த்தி, அம்மையப்பன், விசுவநாதன், அ. லூயிஸ், மு. வேணுகோபால், தங்கவேலு, டி.ஆறுமுகம், ஜி. சுப்பிரமணியம் ஆகியோர் ஆவர்.

**திருவாலங்காட்டில் கூட்டம்**

“ஆகஸ்ட் 16 ஆம் நாள் காலை சென்னையிலிருந்து ரெயிலில் புறப்பட்டோம். திருவாலங்காடு ரெயில்வே நிலையத்தில் மங்கலங்கிழாரும், அவ்வூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.டி.எம். திருமலைப்பிள்ளை அவர்களும் பெருங்கூட்டத்துடன் பிளாட்பாரத்தில் காத்திருந்து மிகுந்த உற்சாகத்துடன் எங்களை வரவேற்றனர். சைவ சமயப் புலவர்களால் பக்திப் பெருக்குடன் பாடப்பெற்ற திருவாலங்காடும் அந்நாளில் ஆந்திர மாநிலத்தின் பகுதியாகவே இருந்து வந்தது என்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும். திருவாலங்காட்டில் அரக்கோணத்திலிருந்து தமிழறிஞர் சங்கரன் அவர்கள் தலைமையில் வந்திருந்த மற்றொரு படையும் எங்களுடன் கலந்து கொண்டது. இப்படையினர் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் ஆவர்.

திருவாலங்காடு சென்ற நாளன்று மாலை அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் எல்லைக் கிளர்ச்சியின் ஆரம்பக் கூட்டத்தை நடத்தினோம். இவ்வூர் நூற்றுக்கு நூறு தமிழ் மக்களே வாழும் பகுதியாதலால் எங்கள் பிரச்சாரத்துக்கு இடையூறு செய்வார் எவருமில்லை. முதல் கூட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்தது”[4] என்று திருப்பதிக்குப் புறப்பட்ட அணியினர் திருவாலங்காட்டில் இறங்கி நடத்திய திருப்பதி மீட்புக் கூட்டம் பற்றி ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

**கனகம்ம சத்திரத்தில் கூட்டம்**

திருவாலங்காட்டிலிருந்து மீட்புப் படையினர் கனகம்ம சத்திரத்திற்குப் புறப்பட்டனர். ம.பொ.சி. ஒரு மாட்டு வண்டியிலும் மற்றவர்கள் நடந்தும் சென்றனர். கனகம்ம சத்திரத்தில் கூட்டம் நடத்துவதற்கு ஒரு மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது மண்டபத்திற்கு வெளியே கலவரம் மூண்டது. அந்தக் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் தமிழ்நாட்டில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் ஆவர்.

இந்தச் சலசலப்பைப் பற்றிக் கவலைப்படாமல் கூட்டம் தொடர்ந்து நடந்து முடிந்தது. கூட்டம் முடிந்து வெளியே வந்த ம.பொ.சி.யையும் தொண்டர்களையும் தாக்குவதற்குச் சிலர் முயன்றனர். அந்தத் தாக்குதல் முயற்சி தமிழர்களால்

முறியடிக்கப்பட்டது. கனகம்ம சத்திரத்திலிருந்து ம.பொ.சி.யும் தொண்டர்களும் பேருந்தில் திருத்தணிக்குப் புறப்பட்டனர்.

**திருத்தணியில் பொதுக்கூட்டம்**

"திருத்தணியை அடைந்து தெருக்களில் நடைபோட்ட போது அங்கே நாங்கள் கண்டதும் கேட்டதும் எங்களுக்கு உற்சாகம் தருபவையாக இல்லை. நூற்றுக்கணக்கான கடைகள் தணிகையிலே இருந்தும் ஒரு கடையில் கூடப் பெயர்ப் பலகை தமிழிலே எழுதப்பட்டிருக்கவில்லை. எல்லாம் தெலுங்கு மயமாக இருந்தன.

தணிகை மக்களில் அநேகமாக எல்லோருமே தெலுங்கு மொழியே பேசக் கேட்டேன். தணிகையில் தமிழ்த் தெய்வம் முருகன் கோயில் இருப்பதால் அந்த ஊரில் தமிழே மிகுதியாக வழங்கப்படும் என்று நம்பிச் சென்ற எனக்கு, காண்பதெல்லாம்–கேட்டதெல்லாம் தெலுங்காக இருந்ததால் மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டது. இதற்கு முன்னர் இருமுறை ஆடிக் கிருத்திகையின்போது நான் முருக பக்தனாகத் தணிகை சென்றதுண்டு. ஒன்றிரு நாட்கள் அங்கே தங்கியிருந்ததும் உண்டு. அப்பொழுதெல்லாம் கிருத்திகை விழா காரணமாகத் தமிழ்நாட்டு மக்கள் திரண்டிருந்தாராதலால், தணிகைப்பதி மக்களைத் தனியாகப் பிரித்துப் பார்க்க எனக்கு வாய்ப்பில்லை.

தமிழ் இலக்கியங்களிலே தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமலைதான் என்று நான் படித்திருந்ததால் வேங்கடத்துக்குத் தெற்கேயுள்ள ஊர்களில் தமிழே வழங்கி வருவதாக நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கை, தணிகைக்குள் புகுந்த ஒரு மணி நேரத்திலேயே தகர்ந்து போய்விட்டது"[5] என்று திருத்தணியின் அப்போதைய நிலையை ம.பொ.சி. தெரிவித்துள்ளார்.

திருத்தணியில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்பாக மங்கலங்கிழார், சித்தூர் வழக்கறிஞர் எஸ். அரங்கநாத முதலியார் ஆகியோருடன் திருத்தணி நிலவரம் பற்றி ம.பொ.சி. ஆலோசனை மேற்கொண்டார்.

மாலையில் பொதுக்கூட்டத்தில் ம.பொ.சி உரையாற்றினார். அவர் உரையாற்றும்போது சிலர் குழப்பம் செய்தனர். ஆனால்

அதைப்பற்றிக் கவலைப்படாமல் ம.பொ.சி. தொடர்ந்து உரையாற்றினார். திடீரென்று மழை பெய்யத் தொடங்கியதால் கூட்டம் கலைந்தது. 'எப்படியும் கூட்டம் நடக்க வேண்டும்' என்று எண்ணிய ம.பொ.சி. ஏதாவது ஒரு மண்டபத்தில் கூட்டத்தை நடத்த விரும்பினார். தெலுங்கு மக்களுக்குப் பயந்து யாரும் மண்டபம் கொடுக்க முன்வரவில்லை.

எங்கே கூட்டத்தை நடத்துவது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தவேளையில் விநாயகம் என்னும் இளைஞர், ம.பொ.சி.யிடம் மண்டபம் தருவதாகக் கூறினார்.

'இது வன்னியர் சத்திரம், என்னுடைய சாதியாருடையது. இங்கே கூட்டம் நடத்துங்கள். இங்கும் தெலுங்கர் வந்து குழப்பம் செய்தால் அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றார். அந்த இளைஞரின் கம்பீரத் தோற்றமும் துணிவான மொழியும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அவர் எம்.ஏ. பட்டதாரி. வியப்பு என்னவென்றால் அவரும் என்னுடன் தெலுங்கில் பேசியது தான். 'நாயகர்' என்னும் சாதிப் பெயருடைய சுத்தத் தமிழரான அவர் 'விநாயக ரெட்டி' என்று தான் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். வடக்கு எல்லையிலே நாயகர், முதலியார் ஆகிய சாதியார் எல்லாம் 'ரெட்டி'களாக மாற்றப்பட்டிருந்தனர் [6] என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

வன்னியர்களுக்குச் சொந்தமான அந்த மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. மண்டபம் கொள்ளாத அளவுக்குத் தமிழர்கள் திரண்டு வந்திருந்தனர். அந்தப் பொதுக் கூட்டத்திற்குப் பிறகு தமிழ் மக்கள் தமிழ் பேசுவதை உணர்வாகக் கருதினர்.

**நகரியில் பொதுக்கூட்டம்**

1947 ஆகஸ்ட், 18 ஆம் நாள் ம.பொ.சி.யும் அவரது குழுவினரும் பேருந்தில் நகரிக்குப் புறப்பட்டனர். நகரியில் வரதப்ப முதலியாரும் சுவாமிநாத முதலியாரும் ம.பொ.சி.யையும் அவரது குழுவினரையும் வரவேற்று உணவளித்து ஊர்வல ஏற்பாடுகளைச் செய்தனர்.

நகரியில் ம.பொ.சி.யும் தொண்டர்களும் ஊர்வலமாகச் சென்றார்கள். அந்த ஊர்வலத்தில்

*'வேங்கடத்தை விடமாட்டோம்'*

*'வேங்கடம் தமிழகத்தின் எல்லை'*

*'தமிழா தூங்காதே'*

*'தணிகை தமிழர்களுக்கே'*

என்று முழங்கியபடி சென்றனர்.

அப்போது சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் உறுப்பினராக கே. வரதாச்சாரியார் என்பவர் இருந்தார். அவரது சகோதரியார் போட்டி ஊர்வலம் ஒன்றை நடத்தினார். அவர்கள், 'எங்களுக்குத் தமிழ்நாடும் வேண்டாம்; ஆந்திராவும் வேண்டாம். சித்தூர், சித்தூர்க்காரர்களுக்கே' என்று தமிழில் முழங்கினார்கள்.

ம.பொ.சி.யும் தொண்டர்களும் சிவசக்திவேல் என்னும் திரையரங்கம்வரை ஊர்வலமாகச் சென்றனர். அங்கே பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

"சித்தூர் மாவட்டம் சித்தூர்க்காரர்களுக்குத் தான் ஆகும். அதை யாரும் அபகரிக்க முடியாது. ஆனால் அந்தப் பகுதியை எந்த நாட்டோடு சேர்த்துப் பட்டா செய்வது என்பது தான் இன்றைய பிரச்சனை. தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டால் இங்குள்ள யாரும் வெளியேற்றப்பட மாட்டார்கள். ஆந்திரர்கள் கூட இங்கே இருந்து வாழவும், அவர்கள் தங்கள் தாய்மொழியான தெலுங்கைக் கற்கவும் தடை இருக்காது. சித்தூர் தமிழர்கள்–தெலுங்கு பேசும் தமிழர்கள் உட்பட–தமிழகத்தோடு சேர உறுதி கொண்டு உட்பட்டனர். இதை எத்தனை கூனிகள் தோன்றினாலும் தடுக்க முடியாது. சித்தூர் ஜில்லா தமிழ்த் தாலுகாக்களை ஆந்திரர்களுக்கு அடிமைப்படுத்த விரும்புபவர்கள் தான் 'சித்தூர் சித்தூர்க்காரர்களுக்கே' என்று கூச்சலிடுகின்றனர். தமிழரைத் தமிழ்நாட்டின் பாதுகாப்பிலிருந்து பிரிப்பதற்காகச் செய்யும் இந்தப் பொய்மான் போன்றவர்களின் கோஷங்களில் ஏமாறாமல் வடக்கெல்லைத் தமிழர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்"[7] என்று ம.பொ.சி. உரையாற்றினார். போட்டி ஊர்வலத்தை நடத்தியவர்கள் ம.பொ.சி.யின் உரையைக் கேட்டு அடங்கினார்கள்.

**புத்தூரில் பொதுக்கூட்டம்**

ம.பொ.சி.யும் மற்றவர்களும் நகரியிலிருந்து புத்தூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். புத்தூர் எல்லையில் போராட்டக் குழுவினரைத்

துரைசாமி முதலியார் வரவேற்றார். ஆயிரக்கணக்கானோர் அந்த வரவேற்பு விழாவில் கூடி நின்று மேளதாளத்துடன் ம.பொ.சி.யையும் போராட்டக் குழுவினரையும் புத்தூருக்குள் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அந்த ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ம.பொ.சி. உரையாற்றினார்.

"புத்தூருக்குத் தனிப் புகழ் உண்டு. ஒடிந்த எலும்பை ஒன்று கூடச் செய்யும் ஒப்பற்ற வைத்தியரைப் படைத்ததே அப்பெருமை. பெரிய பெரிய சர்ஜன்களும் கைவிட்டவர்களை எல்லாம் கைகொடுத்துக் காப்பாற்றி வருபவர் இங்குள்ள பச்சிலை மருத்துவர்.

நான் கையொடிந்து வரவில்லை. மனமொடிந்து ஓடி வந்தேன். திருப்பதி மலை திரும்பாது என்று தமிழகத்தின் அரசியல் சர்ஜன்கள் பலர் கைவிட்டுவிட்டனர். புத்தூர் மக்களே! உங்கள் ஒத்துழைப்பு என்ற பச்சிலை மருத்துவத்தால் ஒடிந்த என் உள்ளத்தை உருவாக்குங்கள். தமிழகத்திலிருந்து சிதைக்கப்பட்ட சித்தூர் ஜில்லாவின் தமிழ்த் தாலுக்காக்களைச் சேர்த்து ஒரு புதிய தமிழகத்தை உருவாக்க உதவி புரியுங்கள்.

ஆந்திரர்கள், தெலுங்கு பேசும் தமிழரைக் கொண்டு திருப்பதியைப் பறிக்கத் திட்டமிட்டுவிட்டனர். குரங்கொன்று கடலைக்காய் தின்ன விரும்பியது. பச்சைக் காய்களை நெருப்பிலிட்டு வேக வைத்தது. ஆனால் எடுக்கப் பயந்து கை சுடுமென்ற காரணத்தால் அருகே சென்ற பூனையைக் கூப்பிட்டுக் காய்களை எடுக்கும்படி கனிவுடன் வேண்டியது. 'கை சுடுமே' என்றது பூனை. 'நானும் உன் கையைப் பிடித்துத் துணை செய்கிறேன். சுட்ட காயை எடுத்ததும் பங்கிட்டுக் கொள்ளலாம்' என்றது குரங்கு. பூனை, காய்களை எடுக்க முயன்றது. கை சுட்ட போதும் குரங்கு விடாது அழுத்த, கடலைக் காய்கள் அனைத்தையும் பூனை வெளியே எடுத்தது. ஆனால், அத்தனை காய்களையும் குரங்கே அபகரித்துச் சென்றுவிட்டது. பூனைக்கோ ஏமாற்றம் தான். கைகள் சூடுபட்டதைத் தவிர காய்கள் கிடைக்கவில்லை.

ஆந்திரர் கதையும் அப்படித்தான் இருக்கிறது. சென்னையும் சித்தூரும் ஆந்திரருக்கே என்ற கோரிக்கையை ஆராய்ச்சியின்றிக் கிளப்பிவிட்டனர். பின்னர் கோரிக்கை வெற்றி பெறத் தெலுங்கரின்

துணையைக் கோருகின்றனர். 'நீங்களும் ஆந்திரர்களே' என்று ஆசைமொழி கூறுகின்றனர். இதெல்லாம் கோரிக்கை நிறைவேறும் வரைதான். குரங்கு, காயைப் பெற்ற பின்னர் பூனையை ஏமாற்றியது போன்று, நமது ஆந்திர ஆதிக்கவாதிகள் தமிழ்நிலத்தைக் கொள்ளை கொண்ட பிறகு, ஆந்திரர் வேறு; தெலுங்கர் வேறு–அதாவது அரவ ஆந்திரவாடு; அசல் ஆந்திரவாடு என்று பேதம் பிரித்துப் பேசி, பங்கு கொடுக்க மறுப்பார்கள். இதைச் சென்னையில் உள்ள தெலுங்கர்களிடம் செய்து காட்டியும் இருக்கிறார்கள்.

எனவே, வீட்டில் தெலுங்கு பேசினாலும் இங்குள்ள தெலுங்கர் இதர தமிழருடன் சேர்ந்து தங்கள் தாயகமாம் தமிழகத்தின் எல்லையைக் காக்க முயல வேண்டும்"[8] என்று உரையாற்றினார். ம.பொ.சி.யின் உரை, புத்தூரில் வாழ்ந்த தமிழரிடம் எழுச்சியை உருவாக்கியது.

**திருப்பதியில் ம.பொ.சி.**

1947 ஆகஸ்ட் மாதம் 19ஆம் நாள் ம.பொ.சி.யும் மற்றவர்களும் திருப்பதிக்குச் சென்று சேர்ந்தனர். வெங்கடேசுவரா கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் நாராயணசாமி நாயுடுவும் அங்கே தமிழ் படிக்கும் மாணவர்களும் தொடர்வண்டி நிலையத்தில் ம.பொ.சி.யையும் போராட்டக் குழுவினரையும் வரவேற்றார்கள்.

திருப்பதியில் உள்ள தெருக்களில் தெலுங்கில் 'மீசைக்கார கிராமணியே திரும்பிப்போ, திருப்பதி ஆந்திரருக்கே சொந்தம்' என்று எழுதி வைத்திருந்தார்கள். பல இடங்களில் கறுப்புக் கொடி கட்டி வைத்திருந்தார்கள். திருப்பதியில் போராட்டக் குழுவினருக்கு எதிர்ப்பு மிகுதியாக இருந்ததால் திரும்பிப் போய்விடுவது தான் நல்லது என்று வெங்கடேசுவரா கல்லூரியின் பேராசிரியர் கருதினார். அமைதியான முறையில் செயல்படும் ஆசிரியர் மங்கலங்கிழாரும் திரும்பிப் போய்விடலாம் என்று ம.பொ.சி.யிடம் கூறினார். தமிழ் மாணவர்கள் 'எப்படியாவது பொதுக்கூட்டத்தை நடத்த வேண்டும்' என்றார்கள். திருப்பதிக்கு வந்த வேலையைச் செய்யாமல் திரும்புவது ம.பொ.சி.க்குப் பிடிக்கவில்லை. பொதுக்கூட்டத்தை நடத்தி விடுவோம் என்று முடிவு செய்தார்.

கீழ்த் திருப்பதியில் உள்ள கோயிலின் குளக்கரையில் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பொதுக்கூட்ட மேடையில் ம.பொ.சி.யைப் பார்த்ததும் தமிழர்கள் ஆரவாரம் செய்தனர். ஆனால் எதிர்ப்பாளர்கள் ‘கிராமணி ஒழிக, இது ஆந்திரதேசம், தமிழ்நாட்டுக்குத் திரும்பிப் போ’ என்று முழங்கினர். அவர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் கூட்டம் தொடங்கியது. ஆசிரியர் மங்கலங்கிழாரும் கொ.மோ. ஜனார்த்தனமும் உரையாற்றினர். எதிர்ப்பாளர்கள் சிலர் மரங்களின் மேல் ஏறிக்கொண்டு கிளைகளை ஒடித்து, மேடையின் மேல் இருந்தவர்களை நோக்கி வீசினார்கள். தமிழில் பேசியவர்களைத் தெலுங்கில் பேசுமாறு சத்தம் போட்டனர். அவற்றைப் பொருட்படுத்தாமல் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

“வேங்கடத்துக்கு வரவேண்டுமென்ற ‘பிரார்த்தனை’ நெடுநாளாக உண்டு. கைவிட்டுப் போனதாகக் கருதப்படும் திருப்பதி மலையைத் தமிழகத்தின் வடக்கெல்லையைத் திரும்பவும் கைப்பற்றித் தீருவதென்பதே அப்பிரார்த்தனை. அது நிறைவேறும் காலம் நெருங்கி விட்டதனாலேயே நான் இங்கு வந்துள்ளேன். நான் மட்டும் வரவில்லை. தமிழரசு கழகப் படை ஒன்றும் என்னுடன் வந்துள்ளது. அப்படை ஆயுதம் கொண்டு வரவில்லை; வரலாற்றின் வாய்மையை உணர்த்தவே வந்துள்ளது; அதுவும் ஆந்திரத் தோழர்களுக்கு அல்ல தமிழர்களுக்கு; சூழ்நிலையால் தெலுங்கு படிக்கும் தமிழர்களுக்கு அவர்களது தாயகத்தின் எல்லை இதுவென எடுத்துக்காட்டி, அதைக் காப்பாற்றும் கடமையை உணர்த்துவதற்காகவே வந்துள்ளது.

பந்தாடும் விஜயநகர ராஜா முதல் பண்ணை ஜமீன்தார் பர்லாகிமிடி வரை சட்ட நிபுணர் அல்லாடி முதல் சமயவேதாந்தி ராதாகிருஷ்ணன் வரை பார்ப்பன எதிரி பொப்பிலி அரசர் முதல் பார்ப்பனப் பெரியார் பட்டாபி சீதாராமய்யா வரை எல்லோரும் ஆந்திரா மகா சபையின் நிழலில் ஐக்கிய முன்னணி வகுத்து ‘சென்னையோடு சித்தூரையும் சேர்த்து ஆந்திர மாகாணத்தை அமைத்தே தீருவோம் என்று போர்முரசு கொட்டுகின்றனர். இதன் எதிரொலியே தமிழரின் விழிப்பு.

இனியும் கேட்பாரற்ற நிலையில் ஆந்திரர்கள் தமிழரைக் கேவலப்படுத்த தமிழரின் நிலத்தைப் பறிக்க, தமிழரசு கழகத்தார் விட்டு வைக்கப் போவதில்லை.

சென்னை நகரில் ஆந்திரர்களின் பிரச்சாரம் வரவர அதிகரித்து விட்டது. ஆட்களை இறக்குமதி செய்து ஆந்திரர் எண்ணிக்கையைப் பெருக்குவதும் அன்றாடக் காட்சியாகிவிட்டது. காந்தியடிகள் பெயரால் காங்கிரசின் பெயரால்—சுதந்திரத் திருநாளின் பெயரால் சென்னை நகரில் கூட்டம் போட்டு மூவர்ணக் கொடியின் கீழ்நின்று தமிழரைப் பழித்தும் தமிழ் நிலத்தைப் பறிக்கவும் பேசுவதை இனியும் அனுமதிக்க முடியாது.

தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமலை என்பது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பனம்பாரனார் கண்ணால் கண்ட காட்சி. அன்று முதல் பாரதியார் காலம் வரை தோன்றிய இலக்கியங்களில் இதை வழிவழியாகப் புலவர் பெருமக்கள் பலர் வற்புறுத்தி வந்திருப்பது வரலாறு.

என்னருமைத் தமிழ் மக்களே! நம் முன்னோர் மண்ணை வைத்து மனை கோலவில்லை; கல்லை நட்டு எல்லை கோலவில்லை. ஏனெனில் அவை நாட்டின் எல்லையைக் காக்கும் நல்ல அரண்களாக இருக்கமாட்டா. பக்கத்து நாட்டார்—பகை நாட்டார் மண்ணைக் கடந்து மனையைத் திருடலாம்; கல்லைப் பிடுங்கி எறிந்து எல்லைக் காவலை அழிக்கலாம். ஆகவே தமிழகத்தின் வடக்கெல்லையில் இயற்கை வழங்கிய மலையை வைத்து மனமகிழ்ந்தனர்.

'மலை போன்ற உண்மை' என்பது தமிழ்ப் பழமொழி. தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடம் தான் என்ற உண்மை மலையாகவே நின்று காட்டும் மாபெரும் உண்மையாகும். ஆனால் ஆந்திரத் தலைவர்கள் மலை விழுங்கி மகாதேவன்கள் ஆகப் பார்க்கின்றனர்.

வேங்கடத்தை விடமாட்டோம் என்று முழங்குங்கள். உங்கள் பண்டைத் தமிழகத்தின் எல்லையைப் பறிகொடுக்காதீர்கள். இன்று வாழும் நம்முடைய சொந்த நலத்துக்காக அல்ல உங்களை நான் வேண்டுவது, இனி நமக்குப் பின்னேயும் என்றென்றும் வாழக்கூடிய தமிழகத்தின் தமிழினத்தின் நலத்துக்காக உங்களை வேண்டுகிறேன். வேங்கடத்தை விடாதீர்கள். குமரி முதல் வேங்கடம் வரை புதிய தமிழகத்தை உருவாக்கி அதில் சோஷலிசத் தமிழ்க் குடியரசை அமைத்து, பண்டைப் பெருமையையும் வருங்காலத் தமிழினத்தின்

உரிமையையும் காப்போமாக"[9] என்று அந்தப் பொதுக் கூட்டத்தில் ம.பொ.சி. உரையாற்றினார்.

சென்னையிலிருந்து திருப்பதி வரை ம.பொ.சியும் தமிழரசு கழகத்தாரும் தமிழ் உணர்வு கொண்டோரும் நடத்திய மீட்புப் பயணம் திருப்பதியில் நிறைவு பெற்றது.

**தமிழரசு கழக மாநில மாநாடு**

1947 இல் தமிழரசு கழகத்தின் மாநில மாநாட்டைச் சென்னையில் நடத்துவதற்கு ம.பொ.சி. ஏற்பாடு செய்தார். அதற்கு முன்னதாகத் தமிழின மாணவர் மாநாடு ஒன்றைத் தற்போதைய இராஜாஜி மண்டபத்தில் (அப்போது அரசினர் விருந்தினர் மாளிகை) நடத்தினார். 06.09.1947 இல் நடைபெற்ற தமிழின மாணவர் மாநாட்டிற்கு அப்போது மருத்துவக் கல்லூரி மாணவராக இருந்த மு. சிதம்பரம் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டில் பெருந்தலைவர் காமராசரும், அப்போது சட்ட, உள்துறை அமைச்சராக இருந்த டாக்டர் ப. சுப்பராயனும் கலந்து கொண்டனர்.

தமிழரசு கழகத்தின் முதலாவது மாநில மாநாடு 09.11.1947 அன்று சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகச் செயல்பட்டார். மாநாட்டின் தொடக்கமாக ம.பொ.சி. தமிழரசு கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மேலே வெள்ளை நிறமும் (இரண்டு பங்கு) கீழே சிவப்பு நிறமும் (ஒரு பங்கு) கொண்டு நடுவில் வில், புலி, மீன் ஆகிய சின்னங்களைக் கொண்டு விளங்கியது அந்தக் கொடி.

"எந்தக் கை இத்தனை நாளும் மூவர்ணக் கொடியைத் தாங்கியதோ, அதே கைதான் இன்று தமிழ்க் கொடியை ஏற்றுகின்றது. எந்த வாய் 'தாயின் மணிக்கொடி வாழ்க' என்று வாழ்த்தியதோ, அதே வாய்தான் இன்று, 'தமிழ்க் கொடி வாழ்க' என்று வாழ்த்துகிறது. இதில் முரண்பாடு ஒன்றுமில்லை. மூவர்ணக் கொடி, இன்று காங்கிரஸ் கட்சியின் கொடி அல்ல. இந்திய உப கண்டத்திலுள்ள பல்வேறு இனங்களையும் இணைக்கும் உறவுக் கொடி. தமிழ்க் கொடியோ வரலாற்று வழியே தமிழகத்தில் தமிழரசை நிலைநாட்டும் உரிமைக்

கொடி. உறவுக்குச் சின்னம் தேசியக் கொடி; உரிமைக்குச் சின்னம் தமிழ்க் கொடி. இதை மறத்தல் கூடாது"[10] என்று அவர் பேசினார்.

இந்த மாநாட்டில் காமராசர், சி. தாதுலிங்க முதலியார் (சி. நடேச முதலியாரின் தம்பி), திரு.வி.க., த. செங்கல்வராயன், பி.எஸ். மணி (திருவிதாங்கூர்த் தமிழர்), சித்தூர் எஸ். ரங்கநாத முதலியார், சரஸ்வதி பாண்டுரங்கம், சச்சிதானந்தம் பிள்ளை, பேராசிரியர் அன்பு கணபதி, கொ.மோ. ஜனார்த்தனம் முதலானோர் உரையாற்றினர்.

வ.உ. சிதம்பரனாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, திரு.வி.க. உரையாற்றினார். அவரது பேச்சில் திராவிடத் தாக்கம் இருந்தது. அவரது பேச்சைத் தொடர்ந்து ம.பொ.சி. உரையாற்றினார்.

"நாடு சுதந்திரம் பெற்று விட்டது. அந்தச் சுதந்திர நாட்டிலே தமிழ்நாடும் சுதந்திரத்தைப் பெற வேண்டும். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மொழிவழி மாநிலத்தின் மீதும் சுதந்திர ஒளி பாய்ச்சப்பட வேண்டும். 'சுதந்திரம்' என்ற சொல்லைப் பிரிவினை என்னும் பொருளில் தமிழரசு கழகம் பயன்படுத்தவில்லை. ஒவ்வொரு மாநிலமும் தானே விரும்பிச் சேர்ந்த சமஷ்டி அரசே மத்தியில் அமைய வேண்டும். இந்தப் பொருளில்தான் "சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழகம்" என்கின்றோம்.

மாநிலங்கள் விட்டுக்கொடுத்த அதிகாரங்களே மத்தியில் இருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி அரசியல் சட்டத்தைப் பெற்று, சுயாட்சி அந்தஸ்துடன் வாழவேண்டும். சுயாட்சித் தமிழகம் கோரும் தமிழரசு கழகத்தாராகிய நாம் யார்? பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து காங்கிரஸ் நடத்திய விடுதலைப் போரிலே கலந்து தியாகத் தழும்பு பெற்றவர்கள். ஆம்; விடுதலைப் போரில் கடமையைச் செய்தவர்கள்தான் விடுதலை பெற்ற இந்தியாவில் தமிழகத்திற்கு உரிமை கோருகிறோம்.

டில்லியில் நடந்து கொண்டிருக்கும் அரசியல் நிர்ணய மன்றத்திலுள்ள தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்வார்களானால், அரசியல் நிர்ணய மன்றம் தயாரிக்கும் அரசியல் அமைப்பு சுதந்திர அந்தஸ்தோடு கூடிய மாநிலங்கள் கொண்ட சமஷ்டி அரசையே மத்தியில் அமைக்கும். உறவுக்கு எல்லை இமயம். உரிமைக்கு எல்லை வேங்கடம். இதுவே நமது பிரகடனம்."[11]

என்று சுதந்திர இந்தியாவில் மாநிலங்கள் சுயாட்சி பெற்று விளங்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

தமிழரசு கழக முதலாவது மாநாட்டிலே மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியத் தீர்மானங்கள் வருமாறு.

தமிழகத்தைத் தனியரசு மாநிலமாக்குவதில் மத்திய சர்க்கார் தயக்கம் காட்டி வருவதை இம் மாநாடு கண்டிப்பதுடன், இனியேனும் விரைவில் அதைச் செய்யுமாறு வற்புறுத்துகிறது. மற்றும், ஆறு மாதத்திற்குள் தமிழ் மாநிலம் ஏற்படுத்துவதற்காக எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

இந்தியாவை மொழிவாரி மாநிலங்களாகப் பிரித்து, அந்த மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் சுதந்திர சோஷலிசக் குடியரசை நிலைநாட்டும் உரிமையை ஆங்காங்குள்ள மக்களுக்குத் தந்து, அக்குடியரசுகளைக் கொண்ட இந்தியக் கூட்டரசை அமைக்க வேண்டுமென்றும், தமிழகத்தின் அரசியலைத் தமிழரே அமைக்க சுய நிர்ணய உரிமை பெறவும், அரசியல் நிர்ணய மன்றத்தின் தமிழ்நாட்டு உறுப்பினர்கள் பாடுபட வேண்டுமென்றும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

இருமொழி மாவட்டமாக்கப்பட்டுவிட்ட சித்தூர் மாவட்டத்தில் திருப்பதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தையும், கேரள மன்னராட்சிக்குட்பட்ட திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே நெய்யாற்றங்கரை தொடங்கி, குமரிமுனை வரையுள்ள தெற்குப் பிரதேசத்தையும் தமிழகத்தோடு இணைத்துக் குமரிமுதல் வேங்கடம் வரையுள்ள புதிய தமிழகத்தைப் படைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சென்னை மாகாண அரசையும் தமிழ்நாடு காங்கிரஸ் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

பிரெஞ்சுப் பேரரசின் பிடியிலுள்ள புதுவை ராஜ்யத்தையும், மன்னர் சமஸ்தானமாகவுள்ள புதுக்கோட்டையையும் தமிழகத்தோடு இணைக்கவும் சென்னை மாகாண அரசு முயல வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.[12]

இந்தத் தீர்மானங்களை மாநாட்டிற்கு வந்திருந்தோர் ஒரு மனதாய் ஏற்றுக்கொண்டனர்.

ஒரு தனி நாடு, தமிழர் ஒரு தனித் தேசிய இனத்தவர் என்ற வரலாற்று உண்மைகளைக் கூட அரசியல் நிர்ணய மன்றத்தார் மறந்து விட்டனர். அதில் கலந்து கொண்ட தமிழகத்துப் பிரதிநிதிகள் கூட வற்புறுத்தவில்லை. தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதியைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி தமிழ்மாநிலப் பிரிவினையை வற்புறுத்துவதும், சுதந்திர சோசலிசத் தமிழ்க் குடியரசை அமைத்துக் கொள்ள, தமிழினத்துக்கு உரிமை உண்டென்று பிரகடனம் செய்வதுமாகும். இது காங்கிரசின் அடிப்படைக் கொள்கைக்கு முரண்பட்டதன்று. காங்கிரஸ் வேண்டுவது ஏதேனும் ஒரு வகையில் ஐக்கிய இந்தியா. அதை நாம் ஏற்போம். அதே சமயத்தில் மொழி, கல்வி, தொழில், வர்த்தகம் இவை போன்ற தமிழ்நாட்டின் உயிர்நாடியான உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாதென மறுப்போம். இதுதான் தேசபக்தி மார்க்கம். இதற்கு மாறுபட்ட ஏகாதிபத்திய முதலாளித்துவ—பாசிசப் பாதைகளில் அடியெடுத்து வைக்க முடியாதென்று அழுத்தந்திருத்தமாகத் தீர்மானிக்கும்படி கோவை மாநாட்டினரைக் கோருகிறோம்"[13] என்று தமிழ் முரசின் தலையங்கத்தில் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

மாநாட்டின் முதல் நாள் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதின் நான்காவது தீர்மானமாக மொழிவழி மாகாணக் கோரிக்கை நிறைவேறியது.

மொழிவழி மாகாணப் பிரிவினைத் தீர்மானத்தை எம். பக்தவச்சலம் படித்தார். 'தமிழர் பெருவாரியாகவுள்ள பிரதேசங்களை ஒன்றுபடுத்தித் தமிழ் மாகாணம் அமைக்கப்பட வேண்டும்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை ஒட்டி, பக்தவச்சலம் பேசும் போது, ஆந்திரர்கள் சென்னை தமது என்று கூறுவதை அழுத்தமாகக் கண்டித்ததுடன் 'திராவிடஸ்தான்' கோரிக்கை மேலும் நாட்டைத் துண்டாடுவதாகும் என்றார்.

தீர்மானம் ஏற்றுக் கொண்ட பிறகு அதில் ஒரு திருத்தத்தை ம.பொ.சி. குறிப்பிட்டார்.

'குமரி முதல் வேங்கடம் வரையுள்ள தமிழகத்தைத் தனி மாகாணமாகச் செய்வதுடன் அதில் சோசலிசத் தமிழ்க் குடியரசு அமைக்க வேண்டும்' என்பது தான் அந்தத் திருத்தம்.

**தமிழ் மாநில காங்கிரஸ் மாநாடு**

காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநில மாநாடு 1948 ஆம் ஆண்டு சனவரி 18, 19 தேதிகளில் கோயம்புத்தூரில் நடைபெற்றது. இந்த மாநாட்டுத் தலைவருக்கான தேர்தலில் காமராசருக்கும் ம.பொ.சி.க்கும் போட்டி ஏற்பட்டது. போட்டியில் காமராசர் வெற்றி பெற்றார்.

“கோவையில் தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடு கூடப்போகிறது. அந்நிய ஆட்சியை வெளியேற்றிய பிறகு கூடும் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் இதுவே முதலாவதாகும். எனவே இதில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளின் பொறுப்பு மகத்தானது.

கோவை மாநாட்டினர் தமிழ் வழிப்பட்ட தமிழ் இனத்திற்கு வாழ்வளிக்கக் கூடிய வேலைத் திட்டங்களை உருவாக்குவார்களென்று நம்புகிறோம்.

அத்தகைய வேலைத் திட்டம் எதுவாயிருக்க முடியும்? ஏகாதிபத்தியம் வெளியேறிய அதே கணத்தில் நடந்திருக்க வேண்டியதும், ஆனால் மேலிடத்தார் நடத்தவும் மனமின்றி மறுக்கவும் மார்க்கமின்றிக் காலம் கடத்தி வருவதுமான தமிழ் மாநிலப்பிரிவினை, சுயநிர்ணய வழித் தமிழ்க் குடியரசு அமைத்தல் ஆகியவையாகும்.

தமிழ்நாடு தனி மாநிலமாகும். அதே நேரத்தில் சுதந்திர சோசலிசத் தமிழ்க் குடியரசு அமைத்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை தமிழினத்துக்கு உண்டென்று கோவை மாநாட்டினர் வற்புறுத்த வேண்டும். இந்தியாவின் பூகோள அமைப்புக் காரணமாக மத்தியில் ஒரே அரசு அமைய வேண்டும் என்பதே காங்கிரசின் கொள்கை. இதற்குத் தான் காங்கிரஸ்வாதிகள் கட்டுப்பட்டிருக்கின்றனர். இதை எப்படி அமைப்பது என்ற விஷயத்தில் அபிப்பிராயம் கூற மாகாண காங்கிரசுக்கு உரிமை உண்டு.

அந்நிய நாட்டு அரசியல் உறவு, இந்தியாவின் பாதுகாப்பு, போக்குவரத்து ஆகிய பொறுப்புகளை மட்டும் மாகாணங்கள் தம் விருப்பத்தின் பேரில் விட்டுக்கொடுத்து இந்திய சமஷ்டியை அமைப்பதே நியாயமான முறை.

இன்று நடப்பதென்ன? பலம் வாய்ந்த மத்திய சர்க்கார் என்ற பெயரால் மாகாணங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு

மாநாட்டுத் தலைவர் காமராசர் 'கிராமணியார் திருத்தத்திலுள்ள குமரி முதல் வேங்கடம் வரையிலுள்ள தமிழகம் அமைய வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டதுடன் 'தமிழகத்தில் சோசலிசக் குடியரசு அமைய வேண்டும்' என்ற பின்பகுதி காங்கிரஸ் காரிய கமிட்டியின் தீர்மானங்களுக்கு விரோதமாகையால் அதை நான் நிராகரிக்கிறேன்' என்றார்.

அதன் பிறகு மாநாட்டில் பல்வேறு வாதங்களும் எதிர்வாதங்களும் எழுந்தன. இறுதியில் மாநாட்டுத் தலைவரின் தீர்ப்புக்கு உடன்படுவதாகக் குறிப்பிட்டு அந்த வாதத்தை ம.பொ.சி. முடித்து வைத்தார்.[14]

**தமிழக எல்லை மாநாடு**

தமிழகத்தின் எல்லைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு மாநாடு நடத்துவதற்கு ம.பொ.சி. திட்டமிட்டார். அதன்படி 1949 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் நாள் சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் மாநாடு நடைபெற்றது.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், மாநாடு தொடங்குவதற்கு முன், தமிழ் மாகாணக் கோரிக்கை, தமிழக எல்லைப் போராட்டம் ஆகியவற்றை ஆதரித்து ஒரு வில்லுப்பாட்டு நடத்தினார். அதற்கு உடுமலை நாராயணகவி பாடல்களை எழுதியிருந்தார். எம்.எம். தண்டபாணி தேசிகரின் இறைவணக்கப் பாடலுடன் மாநாடு தொடங்கியது. மாநாட்டில் ஔவை தி.க. சண்முகம் 'பட்டணத்தைப் பறி கொடுக்காதே! தமிழா, பறி கொடுக்காதே' என்ற பாடலைப் பாடினார்.

வி.எஸ். தியாகராச முதலியார் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டுத் தலைவராக டாக்டர் ஆர்.கே. சண்முகத்தைச் செட்டிநாட்டு அரசர் எம்.ஏ. முத்தையா செட்டியார் முன்மொழிந்தார். அவரை வழி மொழிந்து "தமிழ்த் தென்றல்" திரு.வி. கலியாண சுந்தரனார் பேசினார். அவர் தமது பேச்சில் "தலைநகரான சென்னையைக் காப்பதற்கும் வடக்கு–தெற்கு எல்லைகளை மீட்பதற்கும் என் கெழுதகை நண்பர் சிவஞானம் அவர்களையே தமிழகத்தார் நம்பியிருக்கின்றனர்" என்று கூறினார்.

"தமிழ் மாநாட்டின் எதிர்காலத்தையொட்டிய பெரிய பிரச்சினையைப் பற்றி ஆலோசிக்கவே இவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருக்கிறது. சுதந்திரப் போராட்டத்தைத் திறம்பட நடத்த காங்கிரஸ் மாகாணங்களை மொழிவாரியாகப் பிரிக்கச் செய்தார் மகாத்மா காந்தி. தேச சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா தலைமை ஏற்பதற்கு முன்பு நாட்டில் தேசியக் கிளர்ச்சியும் சுதந்திர தாகமும் இல்லாமல் இல்லை. ஆனால், அது ஒரு சிலரிடமே இருந்தது. ஏன், ஆங்கிலக் கல்வி கற்றவர்களிடம் மட்டுமே இருந்தது. பாமர மக்கள் மனதில் சுதந்திர உணர்ச்சி ஏற்படவில்லை. இதை ஏற்படுத்த மொழிவாரியாக மாகாணங்களைப் பிரித்துப் பிரசாரம் செய்ய வேண்டும் என்ற உண்மையை மகாத்மா உணர்ந்தார்.

முப்பது வருஷ காலத்தில் சுதந்திர உணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டது ஆங்கிலத்தின் மூலம் பிரச்சாரம் செய்ததால் அல்ல. தமிழ் மக்களுக்கு அவ்வேட்கையை உண்டாக்கியவை சுப்பிரமணிய பாரதி, ராமலிங்கம் பிள்ளை ஆகியவர்களின் பாட்டுகளே.

இங்ஙனம் பெற்ற சுதந்திரத்தை மொழியின் மூலமாகத் தான் காப்பாற்ற முடியும். தமிழ் உணர்ச்சி ஏற்பட்டிருப்பது தேசியத்தின் ஒரு சிறந்த பலன் என்பதை ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. சில தலைவர்கள் இதை ஒப்புக் கொள்ளாததால்தான் சச்சரவு ஏற்பட்டிருக்கிறது.

தேசம் சுதந்திரம் அடைந்தவுடன் பாஷா வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும் என்று நம்பியிருந்தோம்; ஆசைப்பட்டோம். அந்த ஆசை வீணாகிவிட்டது. மொழிவாரி மாகாணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த தலைவர்களே பிரிக்கப் பயப்படுகிறார்கள். காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. "ஒற்றுமை குலைந்து போய்விடும்" என்று கூறுகின்றனர். என் அபிப்பிராயம் இதற்கு மாறுபட்டதாகும்.

நாட்டை மொழிவாரி பிரிப்பதை ஒரு நிமிஷ நேரம் கூட ஒத்திப் போடக்கூடாது. ஒத்திப் போடுவதால், மனவேற்றுமையும் மனக் கசப்பும் விபரீதமாக முடியும் என்பதே என் அபிப்பிராயம்.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தாய்மொழிக்கு இடமில்லையென்றால், சுதந்திரத்தால் பலன் இல்லை. தாய்மொழியை மறந்து, அம்மொழியில் எண்ணவும் சக்தியற்றுப் போயிருக்கும் இப்போதைய நிலை மாறவேண்டும். தமிழை– தாய் மொழியை ஒவ்வொருவரும் உணர்ச்சியோடு வளர்க்க வேண்டும்; வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் அதை உபயோகிக்க வேண்டும்; சட்ட சபையில் நாம் தமிழில் தான் பேச வேண்டும்; பொருளாதாரத்தை நாம் தமிழில் ஆராய வேண்டும்; விஞ்ஞானத்தைத் தமிழில் கற்க வேண்டும்.

மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிப்பது சம்பந்தமாக மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தார் கமிஷன் தெரிவித்திருக்கிறது. மகாத்மாவை விடவா இந்தக் கமிட்டியினர் அறிவாளிகள்?

இந்தியாவின் சுதந்திரம் நிலை பெற்றதாக இருக்க வேண்டுமென்றால் மொழி, கலை, கலாச்சார வளர்ச்சிக்கு இன்றியமையாததான மொழிவாரி அடிப்படையில் மாகாணங்கள் அமைந்தாக வேண்டும். இதில் தாமதம் ஏற்படுத்தினால் கலகம், சச்சரவு அதிகமாகும்.

ஆந்திர மாகாணத்தை உடனடியாகப் பிரிக்க முடிவு செய்திருக்கிறார்கள். ஆந்திரர்களை விட இவ்விஷயத்தில் தமிழர்கள் ரொம்ப ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்து வந்தோம். பிரிக்க வேண்டுமென விரும்பும்போது, அதைத் தவிர்ப்பது சரியல்ல. குடும்பத்தில் வயது வந்த சகோதரர் தனிக் குடித்தனம் நடத்த இஷ்டப்பட்டால், அவருக்கு வீடு ஏற்பாடு செய்து பிரித்து அனுப்புவது போல, ஆந்திரர்களை அனுப்பத் தயார்! ஆனால், ஆந்திர சகோதரர் பிரிந்து போகும் போது பிதுரார்ஜிதச் சொத்தில் கை வைக்கப் பார்த்தால், அது திருப்திகரமான நிலையல்ல.

சென்னை நகர் பற்றிச் சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு இதுவரை தமிழர் சொல்லியுள்ள பதிலுக்கு மேல் கூறுவதற்குப் புதிதாக ஒன்றுமில்லை. நம் நல்ல காலம் காங்கிரஸ் மூவர் கமிட்டி அறிக்கை வெளியாகியிருக்கிறது. ஆனால், அதற்கு வியாக்யானம் கூறப் புறப்பட்டிருக்கிறார்கள். டாக்டர் பட்டாபி சீதாராமையா கூறும் வியாக்யானம் அவரை அறிந்தவர்களுக்கு ஆத்திரத்தை அளிக்காது.

வியாக்யான அபத்தம் ஒருபுறமிருக்க, ராஷ்டிரபதி பதவி வகிக்கும் ஒருவர் இப்படி, அப்பதவியின் அந்தஸ்துக்கேற்ப நடக்காமல் போவதைக் கண்டு வெட்கப்படுகிறோம்.

பம்பாயை வேண்டுமானால், தனி மாகாணமாக்கலாம். ஆனால் சென்னை நகர் விஷயம் அப்படியல்ல. தமிழர் வாழ்க்கையோடு அது ஐக்கியப்பட்டிருக்கிறது. ஆந்திரர்கள் சென்னை மீது கொண்டாடும் உரிமையைக் கைவிட வேண்டும். அப்படியானால், வேறு எந்த மாகாணத்தோடு சென்னை சேருவது? தமிழ் மாகாணத்தில் தான் என்பது மூவர் குழுவின் கருத்து என்பதில் சந்தேகமில்லை.

சித்தூர் பற்றித் தமிழர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். இது, வடக்கெல்லை. தெற்கு–மேற்கு எல்லை என்ன? நாஞ்சில் நாட்டை நாம் எப்படி மறக்க முடியும்? தனி மாகாணம் நிர்ணயிக்கும் போது அந்த மாகாணத்தோடு சேர வேண்டிய பிரதேசங்களுக்காக நாம் போராடியே தீருவோம். ஆகவே, அப்பிரதேச மக்கள் பயப்பட வேண்டியதில்லை."[15] என்று டாக்டர் ஆர்.கே. சண்முகம் தமது தலைமை உரையில் கூறினார்.

> *"தமிழகம் வடக்கே திருப்பதியையும் தெற்கே குமரி முனையையும் தனது புராதன எல்லைகளாகக் கொண்டு விளங்குகிறது. இதைப் பற்றி எழுந்துள்ள தகராறுகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்க மத்திய அரசு ஓர் எல்லைக் கமிஷனை நியமிக்க இம்மாநாடு கோருகிறது."[16]*

என்னும் தீர்மானத்தை ம.பொ.சி. படித்தார். தீர்மானத்தை ஆதரித்து வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் ஆசிரியர் மங்கலங்கிழார் பேசினார். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் நேசமணி தென்எல்லைப் போராட்டக் குழுவின் சார்பில் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்.

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**

வடக்கு எல்லையாகிய வேங்கடத்தைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்றால் தமிழ் மக்களுக்கு முதலில் தமிழ் உணர்வு ஏற்பட வேண்டும். எனவே திருத்தணியில் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1949 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆறாம் நாள் தொடங்கப்பட்டது.

தொடக்க விழாவிற்கு மங்கலங்கிழார் தலைமை தாங்கினார். சித்தூர் வழக்கறிஞர் எஸ். ரங்கநாத முதலியார், கே. விநாயகம், திருவாலங்காடு டி.எம். சபாபதி தேசிகர் ஆகியோர் அதில் உரையாற்றினர். இந்தத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு விநாயகம் தலைவராக நியமிக்கப்பட்டார். மங்கலங்கிழாரும் ந. சுப்பிரமணியமும் இந்தக் கழகத்தைச் செயல்படச் செய்து தமிழ் உணர்வை ஊட்டினர்.

## சித்தூர் மாவட்டத் தமிழர் மாநாடு

சித்தூர் மாவட்டத் தமிழர் மாநாட்டைத் தணிகையில் நடத்துவதற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் ஏற்பாடு செய்தனர். 1949 ஆம் ஆண்டு நவம்பர் பதினோராம் நாள் ம.பொ.சி.யின் தலைமையில் நடைபெற்ற மாநாட்டைச் சென்னை மேயர் இராமசாமி நாயுடு தொடங்கிவைத்தார். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மங்கலங்கிழார், கே. விநாயகம், எஸ். ரங்கநாத முதலியார் முதலானோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த மாநாட்டில் சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்று வேண்டி மத்திய, மாநில அரசுகளுக்குத் தீர்மானம் அனுப்பப்பட்டது. சித்தூர், புத்தூர், திருத்தணி தாலுகாக்களிலிருந்து அறிஞர்கள் பலர் வந்திருந்தனர்.

## நாராயணவனத்தில் தமிழர் மாநாடு

1949 ஆம் ஆண்டில் புத்தூர் தாலுகாவில் உள்ள நாராயணவனம் என்னும் ஊரிலும் தமிழர் மாநாடு நடைபெற்றது. இதற்கு மங்கலங்கிழார், நாராயணவனத்தைச் சேர்ந்த எம்.எஸ். தேசப்ப முதலியார், புத்தூர் முத்துவேல் முதலியார் ஆகியோர் முயற்சி எடுத்தனர். இந்த மாநாட்டில் ம.பொ.சி., தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், ரங்கநாத முதலியார் ஆகியோர் பங்கேற்றனர். திருத்தணியிலிருந்து வி.கே.சடகோபாலாச்சாரியார், கோல்டன் சுப்பிரமணியம், டி.சரவணய்யா ஆகியோரும் இந்த மாநாட்டிற்குச் சென்றிருந்தனர்.

“மாநாடு நடந்து கொண்டிருந்தபோது அங்கிருந்த தெலுங்கர்கள் (சாலியர்கள் என்று அழைக்கப்படும் இனத்தவர்கள்) குழப்பம் ஏற்படுத்த முயன்று கொண்டிருந்தார்கள். அவர்களை எவ்வளவோ சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார் மங்கலங்கிழார்.

இப்படி ஒரு பகுதியில் குழப்பம் நடந்து கொண்டே இருந்த போதிலும் மாநாட்டிற்கு வருகை தந்த தலைவர்கள் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டே இருந்தார்கள்"[17] என்று மாநாட்டில் பங்கேற்ற கோல்டன் சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

**வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழு**

சென்னை மாநிலத்திலிருந்து ஆந்திரப் பகுதி பிரிக்கப்படும் போது சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் சேர்க்கப் பாடுபடுவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைவராக எஸ். ரங்கநாத முதலியாரும் துணைத் தலைவராக வி.கே. சடகோபாலாச்சாரியாரும் செயலாளராக பி. கண்ணப்ப முதலியாரும் நியமிக்கப்பட்டனர்.

மங்கலங்கிழார், கே. விநாயகம், டி. சரவணய்யா, கே.சி. இராமசாமி ரெட்டியார், பி. சிவகுருநாத முதலியார், பி. சுப்பிரமணிய ரெட்டியார், சி. ஜெகதீச முதலியார், ஆர்.எஸ். இராமசாமி ரெட்டியார், கே.எம். வெங்கடேச முதலியார், டாக்டர் சேஷாத்திரி, எஸ். சுந்தரம், சி. இராமசாமி முதலியார், அம்மையார் குப்பம் சரவண கண்ணப்ப முதலியார், பொதட்டூர் பேட்டை இ.எஸ். தியாகராஜ முதலியார், புத்தூர் முத்துவேல் முதலியார், புதுப்பேட்டை இ.கே. வரதப்ப முதலியார், திருவாலங்காடு டி.எம். திருமலைபிள்ளை, டி.எம். சபாபதி தேசிகர், குன்னமேடு துரைசாமி ரெட்டியார், ஆற்காடு குப்பம் முனிசாமி ரெட்டியார், வெடியங்காடு துரைசாமி ரெட்டியார், நாராயணவனம் எம்.எஸ். தேசப்ப முதலியார், ஏகாம்பர குப்பம் எஸ்.எம்.டி. பொன்னுசாமி முதலியார், கோல்டன் சுப்பிரமணியம் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

**ஆந்திரப் பிரிவினைக் குழு**

இதே காலகட்டத்தில் ஆந்திரத்தைத் தனியாகப் பிரிப்பதற்கு ஆந்திர கேசரி டி. பிரகாசம் தலைமையில் கோரிக்கை எழுந்தது. 1949ஆம் ஆண்டின் இறுதியில் ஆந்திரப் பிரிவினைக் குழுவை மத்திய அரசு அமைத்தது.

டி. பிரகாசம், அன்றைய சென்னை மாநிலத்தின் அமைச்சர்கள் என். சஞ்சீவிரெட்டி, பி. கோபால் ரெட்டி, களா.வெங்கட்ராவ் ஆகியோர் ஆந்திரத்தின் சார்பில் பிரிவினைக் குழுவில் நியமிக்கப்பட்டனர்.

சென்னை மாநில முதலமைச்சர் குமாரசாமி ராஜா, அமைச்சர்கள் எம். பக்தவச்சலம், மாதவமேனன் ஆகியோரும் டி.டி. கிருஷ்ணமாச்சாரியும் தமிழ்நாட்டின் சார்பில் நியமிக்கப்பட்டனர்.

இந்தக் குழுவிடம் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர், தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்துடன் சேர்க்கக் கூடாது என்று வற்புறுத்தினர். ஆந்திரப் பிரிவினைக் குழு 1950 ஆம் ஆண்டு ஜூன் மூன்றாம் நாள் தனது அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தது. சென்னை மாநிலத்தின் தலைநகராக இருந்த சென்னையை ஆந்திர மாநிலத்துடன் சேர்க்க முடியாத நிலை இருந்ததால் ஆந்திரத் தலைவர்கள் பிரிவினையில் ஆர்வம் காட்டவில்லை.

**தமிழ் வளர்ச்சிக் கழக மாநாடு**

1952 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை எனினும் தனிப்பெருங் கட்சியாக இருந்த காங்கிரஸ் ஆட்சி அமைக்க அழைக்கப்பட்டது. இராஜாஜி முதல்வராகப் பதவியேற்றார். பதவியேற்றதும் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ராஜாஜி முன்னிலையில் ம.பொ.சி. உரையாற்றினார்.

“இராஜாஜி பதவி வகிக்கும் காலத்திலேயே ஐக்கிய இந்தியாவில் தமிழகம் தனியரசாக, தமிழ் அரசாங்க மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று தமிழ் மக்களாகிய நாம் விரும்புகிறோம். இந்தக் கோரிக்கையை இராஜாஜி நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கையோடுதான் தமிழரசு கழகம் அவரது அமைச்சரவைக்கு மனமுவந்து ஆதரவு அளித்து வருகிறது.

தமிழரசு கழகம், காங்கிரசிடம் எதிர்பார்ப்பதெல்லாம் தமிழகத்தைத் தனி மாகாணமாக்க வேண்டும் என்பதாகும். காங்கிரஸ் கற்றுத் தந்ததும் நான் கனவு காண்பதுமான இன்பத் தமிழரசை விரைவில் அமைக்க வேண்டும் என்ற ஒரே கருத்துடன்தான் தேர்தல் களத்தில் காங்கிரசின் வெற்றிக்காகத் தமிழரசு கழகம் பாடுபட்டது.”[18] என்று குறிப்பிட்டுத் தமிழகம் தனியரசாக வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

1952 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சிக் கழக மாநாடு சென்னை, தேனாம்பேட்டையில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் வரவேற்புக்

குழுத் தலைவராக எம். பக்தவச்சலம் செயல்பட்டார். மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினார் இராஜாஜி.

"ஆந்திர மாநிலம் வேண்டுமென்று ஆந்திரர்கள் கேட்கிறார்கள். ஆனால், சென்னை என்ற தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு போக வேண்டுமென்றால் அது முடியாது. சென்னை என்னும் தூணை அவர்கள் விட்டுவிட்டால் தாராளமாக ஆந்திர மாநிலம் அமைப்பதில் நமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை"[19] என்று இராஜாஜி உரையாற்றினார்.

**ஆந்திரப் பிரிவினை**

தமிழ் வளர்ச்சிக் கழக மாநாட்டில் இராஜாஜி ஆற்றிய உரையை ஆந்திரத் தலைவர்கள் ஏற்கவில்லை. தனி ஆந்திர மாநிலம் அமைக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ஆந்திரர்கள் வற்புறுத்தினார்கள்.

"மொழிவாரி மாகாணப் பிரிவினை சம்பந்தமாகத் தமிழர்களின் உணர்ச்சி ஆந்திரர்களுக்கு எந்த வகையிலும் குறைந்ததல்ல. எனது தலைமையில் உள்ள தமிழரசு கழகம் பொதுத் தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்கு உழைத்தது என்றால் தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் ஆட்சி, மொழிவாரி மாகாணப் பிரிவினையை அமுல் நடத்தும் என்று நம்பியது தான் காரணம். இதில் இராஜாஜி அரசு தயங்கினால் ஒரு போராட்டத்தில் ஈடுபடவும் தமிழரசு கழகம் தயங்காது"[20] என்று ம.பொ.சி. அறிக்கை வெளியிட்டார்.

தனி ஆந்திர மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி பொட்டி ஸ்ரீராமுலு என்னும் ஆந்திரர், சென்னையில் உண்ணாவிரதம் இருந்தார். அவரைப் பார்ப்பதற்காக ம.பொ.சி. போயிருந்தார். அந்நிகழ்ச்சியைப் பின்வருமாறு 'எனது போராட்டம்' என்னும் நூலில் ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

"அந்த வீரத் தியாகி என்னைக் கண்டதும் கைகூப்பி வணங்கி வரவேற்றார். அப்போது அங்கு ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களும் இருந்தார். அப்பெரியவர், பொட்டியின் உயிரைக் காப்பாற்ற நான் உதவி புரிய வேண்டும் என்றார். அதற்கு நான், 'சென்னை நகர் மீது உரிமை கொண்டாடுவதை விட்டு, ஆந்திர மாநிலம் கோரினால் தமிழரசு கழகம் ஆந்திரர்களுடன் பூரணமாக ஒத்துழைக்கும்' என்றேன்.

பிரகாசம் சிறிது சினங் கொண்டவராகி, 'தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு தாலுகாவின் தலைநகரும் மாநிலத் தலைநகராக இருக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளன. ஈரோட்டின் நிலையிலுள்ள ஒரு நகரம் கூட ஆந்திராவில் இல்லை. இந்த நிலையில் சென்னை இல்லாத ஆந்திராவைக் கொடுத்தால் தலைநகருக்கு நாங்கள் எங்கே போவது ?' என்று படபடப்புடன் பேசினார். அவருடன் மேலும் விவாதம் நடத்த நான் விரும்பாமல் 'ஆந்திரத்திற்குத் தலைநகர் கொடுப்பது என் கையில் இல்லை; டில்லி அரசின் கையில் இருக்கிறது' என்று சொல்லிவிட்டு எழுந்திருக்க முயன்றேன்.

இந்த நிலையில் தலைவர் பிரகாசம் என் கைகளைப் பற்றிக் கொண்டு, 'ஆந்திர அரசு தற்காலிகமாகச் சென்னையில் இருக்க அனுமதித்தால் போதும். விசால ஆந்திரம் அமையுங்கால் எங்களுக்கு ஐதராபாத் நகரம் கிடைத்துவிடும். நாங்கள் போய்விடுவோம். இதற்கு நீங்கள் இசைந்துவிட்டால் மற்றவர்கள் எதிர்க்கமாட்டார்கள்' என்று அன்பு ததும்பக் கூறினார். அதற்கு, 'ஆந்திர அரசுக்குத்' தற்காலிகமாகச் சென்னையில் இடம் அளிக்க மற்றவர்கள் இசைந்தாலும் நான் இசைய மாட்டேன்' என்று உறுதியாகக் கூறிவிட்டுத் திரும்பினேன்"[21] என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்ணாவிரதம் இருந்த பொட்டி ஸ்ரீராமுலு இயற்கை எய்தினார். அதனால் ஆந்திரத்தில் வன்முறை வெடித்தது. தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். இந்த வன்முறைத் தாண்டவத்தைக் கேள்விப்பட்ட நேரு 19.10.1952 அன்று "ஆந்திர மாநிலம் 02.10.1953இல் பிரிக்கப்படும்" என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அந்த அறிவிப்பில், சென்னை நகரம் அல்லாத தகராறுக்கு இடமில்லாத் தெலுங்கு வழங்கும் மாவட்டங்களைக் கொண்டு சித்தூர் மாவட்டம் முழுவதையும் சேர்த்து ஆந்திர மாநிலம் அமைக்கப்படும் என்றும் ஆந்திரத் தலைநகர் பற்றிப் பின்னால் அறிவிக்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

"ஆந்திர மாநிலம் விரைவில் அமைக்கப்படுமென்ற அறிவிப்பு எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது என்றாலும், ஆந்திரத் தலைநகர் பற்றி அறிவிக்காமல் விட்டது எனக்குப் பயத்தைத் தந்தது. அத்துடன் தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு மாவட்டங்களின் பட்டியலில் சித்தூர் மாவட்டத்தையும் சேர்த்தது எனக்கு மிகுந்த ஆத்திரத்தைத்

தந்தது. சித்தூர் மாவட்டத்தில் வட வேங்கட மலைக்குத் தெற்கே உள்ள தாலுகாக்கள் தமிழகத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று தமிழரசு கழகம் கோரி வந்ததை நேருஜி மறைமுகமாக நிராகரித்து விட்டதாகவே நான் கருதினேன். அதனால் நேருஜியின் அறிவிப்பை எதிர்த்துப் போராடத் தயாரானேன்"[22] என்று ம.பொ.சி. தெரிவித்துள்ளார்.

1952 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் நாள் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் எஸ். ரங்கநாத முதலியார் தலைமையில் திருத்தணியில் நடைபெற்றது. அதில் நேருவின் அறிவிப்பு விவாதிக்கப்பட்டது.

"1949 ஆம் ஆண்டு முதல் இன்று வரை சித்தூர் தமிழ்ப் பகுதிகளைப் பற்றிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மத்திய மாநில அரசுகளுக்குத் தீர்மானம் மூலமாகவும் மாநாடு மூலமாகவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. நிலைமை இவ்வாறிருக்கப் பிரதமர் நேருவின் அறிவிப்பை– சித்தூர் ஜில்லா, தகராறு இல்லாத தெலுங்குப் பிரதேசம் என்ற பிரதமர் கருத்தைக் குறித்து இக்கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

1953 ஆம் ஆண்டு ஜனவரி 4, 5 தேதிகளில் தணிகையில் தமிழர் மாநாடு நடத்துவது என்றும் இதற்குத் தலைவர் ம.பொ.சி. அவர்களையும் தமிழகத்தில் உள்ள தலைவர்களையும் மாநாட்டுக்கு அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவராக கே. விநாயகம் நியமிக்கப்படுவார்"[23] என்னும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

அன்று மாலையே திருத்தணியில் ஒரு பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது. பொதுக் கூட்டத்திற்கு பி. சுப்பிரமணிய ரெட்டியார் தலைமை தாங்கினார். சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளை அமையப் போகும் ஆந்திர மாநிலத்துடன் சேர்க்கக் கூடாது என்று கே. விநாயகம், ஆசிரியர் மங்கலங்கிழார், எஸ். ரங்கநாத முதலியார், டி. சரவணய்யா, வி.கே. சடகோபாலாச்சாரியார், என். சுப்பிரமணியம், டி.எம். திருமலைபிள்ளை, இ.எஸ். தியாகராஜன், என்.ஏ. ரஷீது ஆகியோர் பேசினார்கள்.

**தலைநகரைக் காக்கத் தீர்மானம்**

03-01-1953 அன்று மாலை சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் மேயர் த. செங்கல்வராயன் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில் ம.பொ.சி. ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்.

"சென்னை மாநகரம் நீங்கலான ஆந்திர மாநிலம் அமைப்பது பற்றிய பாரதப் பிரதமரின் அறிக்கையை இந்த மாநகராட்சிக் கவுன்சில் வரவேற்கிறது. சென்னை மாநகரமானது தமிழ்நாட்டின் பகுதி என்பது மட்டும் அல்லாது அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட முடியாத உட்பகுதியும் ஆகும். சென்னை மாநகர் இயற்கையால் தமிழகத்தோடு ஒன்றிவிட்டதுமல்லாது அதற்குத் தேவையான ஒரு பகுதியும் கூட. இதைக் குலைக்கும் எந்தவிதமான முயற்சியையும் இம்மன்றம் முழு மூச்சுடனும் தீவிரமாகவும் எதிர்க்கிறது.

ஆந்திர மாநிலம் அமையும் அதே நேரத்தில் அதன் தலைநகரமும் அந்த மாநிலத்துக்குள்ளேயே கருத்து வேறுபாடற்ற ஓர் இடத்தில் அமைய வேண்டும் என்று இந்த மாமன்றம் கருதுகின்றது.

ஆந்திர மாநிலத்தின் தலைநகரம் தற்காலிகமாகச் சென்னை நகரத்தில் அமைந்தாலும் கூட இந்த இரு மாநிலங்களின் நல்லுறவு பாதிக்கப்படும் என இம்மாமன்றம் அஞ்சுகின்றது. இந்த இரு மாநிலங்களின் வளர்ச்சிக்கும் நல்வாழ்விற்கும் தனித்தனித் தலைநகரம் அந்தந்த மாநிலத்தில் அமைய வேண்டியது மிகவும் தேவையான ஒன்றாகும். ஆதலால், ஆந்திர மாநிலத்தின் தலைநகரம் தற்காலிகமாகச் சென்னையில் அமைய வேண்டும் என்ற கருத்தையும் இந்த மன்றம் கடுமையாக எதிர்க்கிறது" [24] என்னும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

இந்தத் தீர்மானத்தை எம். இராதாகிருஷ்ணபிள்ளை வழிமொழிந்தார். ம.பொ.சி. முன்மொழிந்த தீர்மானத்தில் ஒரு திருத்தத்தைக் குண்டூர் நரசிம்மராவ் முன்மொழிந்தார்.

"சென்னை மாநகர் என்று தொடங்கும் இரண்டாவது வாக்கியம் முதல் கடுமையாக எதிர்க்கிறது என்பது வரையிலும் உள்ள பகுதியை நீக்கிவிட்டு, கீழ்க்கண்ட திருத்தத்தைச் சேர்க்க வேண்டும்.

ஆந்திர மாநிலம் அதன் தலைநகரத்தை அந்த மாநிலத்தில் அமைக்கும் வரையிலும் ஆந்திர மாநிலத்தின் தலைநகரம் சென்னை மாநகரத்திலேயே இருக்க வேண்டும். தற்போது ஆந்திர மக்கள் இந்நகரில் அனுபவித்து வரும் கல்வி, மருத்துவம், பொது நிர்வாகத்தில் வேலை ஆகிய வசதிகளைச் சென்னை மாநிலத்தில் ஆந்திர மக்களின் தொகை விகிதாச்சாரப்படி வழங்க வேண்டும். கேரளா, கர்நாடகம் ஆகிய மொழிவாரி மாநிலங்களை உருவாக்கும் போது சென்னை நகரத்தையும் அதைச் சுற்றியுள்ள எல்லைப் பகுதிகளையும் கமிஷனர் மாநிலம் ஆக உருவாக்கிட வேண்டும்."[25] என்பதுதான் அந்தத் திருத்தம். இத்திருத்தத்தை டாக்டர் கே.வி. சாமி வழிமொழிந்தார்.

ம.பொ.சி. தமது தீர்மானம் பற்றிய விளக்கத்தை மாநகராட்சிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

"மதிப்பிற்குரிய மேயரவர்களே! சென்னைத் தமிழர்கள் சார்பாக மட்டுமல்லாமல், நகரிலுள்ள 14 லட்சம் பிரஜைகள் சார்பிலும் இந்தத் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கின்றேன். சென்னையைப் பற்றிய பிரச்சனை, தமிழருருக்கும் ஆந்திரருக்குமிடையில் நடக்கும் இனச் சண்டையன்று; ஆதிக்கப் புத்திக்கும் நியாய உணர்ச்சிக்குமிடையில் நடக்கும் போராட்டமேயாகும்.

மொழிவாரி மாகாணப் பிரிவினை என்பது, ஒரு சில தலைவர்களின் சுயநலக் கோரிக்கையன்று, சாதாரண மக்களின் தேசியக் கோரிக்கையாகும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவே மொழிவாரிப் பிரிவினைக் கோரிக்கையைக் காங்கிரஸ் மகாசபை ஆதரித்து வந்திருக்கிறது. காங்கிரசின் வற்புறுத்தல் காரணமாக பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே வடக்கே மொழிவாரி மாகாணங்கள் பல படைக்கப்பட்டன. இப்போது மத்திய இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் மொழிவாரி மாகாணங்கள் அமைந்துவிட்டால், மொழிவாரி ராஜ்யக் கோரிக்கை அதோடு பூர்த்தியாகி விடுகிறது.

காங்கிரசின் கொள்கைவழி ஆந்திரப் பிரிவினை பற்றிப் பிரதமர் நேரு வெளியிட்ட அறிக்கையை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆந்திரரைப் போன்றே தமிழரும் தமிழ் மாகாணம் கோருகின்றனர். ஆந்திர மாகாணம் பிரிவது தமிழ் மாகாணம்

அமைவதற்கான ஆரம்ப வேலையென்று நான் எண்ணுகிறேன். ஆகவே, ஆந்திரப் பிரிவினையை இரட்டை மகிழ்ச்சியுடன் நான் வரவேற்கின்றேன்.

ஆந்திர மாகாணத்தின் தலைநகரம் பற்றி ஆந்திரத் தலைவர்களிடையே அபிப்பிராய ஒற்றுமை இல்லை. மேலும், ராயலசீமை மக்கள் சென்னை இல்லாத ஆந்திரப் பிரிவினையில் திருப்தியடையவில்லை. ஆகவே, அண்டை நாடான தமிழ்நாட்டின் தலைநகரைப் பறிப்பதில் ஆந்திரத் தலைவர்கள் முனைந்திருக்கின்றனர். ஆம்; தருமத்தை முன்னிட்டோ, நியாயத்தை முன்னிட்டோ ஆந்திரத் தலைவர்கள் சென்னையைக் கேட்கவில்லை. தேவையை முன்னிட்டும் ராயலசீமைத் தெலுங்கரைத் திருப்தி செய்விப்பதற்காகவுமே கேட்கின்றனர்.

சென்னை சந்தேகத்துக்கிடமில்லாமல் தமிழ் நாட்டின் உட்பகுதியாக இருக்கிறது. சென்னை நகரில் வடக்கேயும் தமிழ் நிலம்; மேற்கேயும் தமிழ் நிலம்; தெற்கேயும் முழுத் தமிழ் நாடு; கிழக்கே வங்காளக் குடாக் கடல். இந்த நாற்பாங்கெல்லைக்கு நடுவே இருக்கிறது சென்னை நகரம். அப்படியிருக்க, சென்னையை ஆந்திரத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்பது, அரசியலுக்கும் அனுபவத்துக்கும் ஒவ்வாத ஆதிக்கக் கூச்சலாகும்.

வாதத்திற்காகச் சென்னையை ஆந்திர நாட்டோடு சேர்ப்பதாகவே வைத்துக் கொள்வோம். அப்புறம் சென்னைக்கும் ஆந்திர நாட்டின் எல்லைக்கும் இடையேயுள்ள தமிழ் நிலத்தையும் ஆந்திரருக்குக் கொடுக்க வேண்டி வரும். ஆம்; ஹிட்லர் போன்ற சர்வாதிகாரிகள் கேட்பது போல, ஆந்திரத் தலைவர்களும் பின்னால் ‘காரிடார்’ (இடைநிலம்) கேட்கலாம். இதை இந்தக் கவுன்சில் மறந்துவிடக்கூடாது.

சென்னையிலுள்ள தெலுங்கு பேசும் மக்களின் கணக்கைக் காட்டி இந்த நகரைப் பறிக்க விரும்புகின்றனர் ஆந்திரத் தலைவர்கள். தெலுங்கு பேசுவோர் எல்லோருமே ஆந்திரராகிவிட முடியாது. சென்னையிலுள்ள தெலுங்கரில் பெரும்பாலோர் தமிழ்நாட்டையே தங்கள் தாய் நாடாக எண்ணுகின்றனர். தமிழ்க் கலாச்சாரத்தோடு

அவர்கள் இரண்டறக் கலந்துவிட்டனர். ஒரு சிறு கூட்டத்தாரைத் தவிர, மற்ற தெலுங்கர்கள் தங்களை ஆந்திரர் என்று சொல்லிக் கொள்வதில்லை. இந்தக் கவுன்சிலிலும் தெலுங்கு மொழி பேசும் அங்கத்தினர்கள் 15 பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஓரிருவர் தவிர, மற்றவர்கள் தங்களை ஆந்திரர்கள் என்று சொல்லிக் கொள்வதை நான் கேட்டதே இல்லை. சென்னை நகரை ஆந்திரத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்களில் பெரும்பாலோர் ஆதரிக்கவில்லை என்பதை நான் அறிவேன்.

சென்னை நகரம் தமிழ் நாட்டோடு நீடித்து இருப்பதால், இங்குள்ள மொழிவழி சிறுபான்மையினருக்கு எந்தவிதமான கெடுதலும் ஏற்படாது என்று மூன்று கோடித் தமிழ் மக்கள் சார்பாக நான் உத்தரவாதம் கொடுக்க முடியும். ஆந்திரம் பிரிந்த பிறகும் சென்னையிலுள்ள தெலுங்கரும் ஆந்திரரும் இங்கேயே இருக்கலாம். இதர சிறுபான்மையினரைப் போல் அவர்களும் எல்லாவித சுகங்களையும் அனுபவிக்கலாம். இதைத் தமிழ் மக்கள் தடுக்க மாட்டார்கள். தமிழ் அரசாங்கமும் தடை செய்யாது. சென்னையில் தமிழருக்கும் தெலுங்கருக்குமிடையே நிலவி வரும் இந்த நல்லுறவைக் கெடுத்துவிட வேண்டாமென்று நான் ஆந்திரத் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."[25] என்று பேசிய ம.பொ.சி. சென்னையில் இருக்கும் கந்தகோட்டம், பட்டினத்தார் சமாதி, மயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயில், திருஞான சம்பந்தர் பாடிய மயிலைக் கோயில் முதலியவற்றை எடுத்துக் கூறினார். எனவே சென்னை தமிழ்நாட்டுடன் தான் இருக்க வேண்டும் என்றார். இறுதியில், "கடைசி ஒரு தமிழன் உயிருடன் இருக்கும் வரை நீங்கள் சென்னையை அடைய முடியாது. தலையைக் கொடுத்தேனும் தமிழ் மக்கள், தங்கள் தலைநகரைக் காப்பார்கள் இது உறுதி"[26] என்று கூறி முடித்தார். மன்றத்தில் ம.பொ.சி. முன்மொழிந்த தீர்மானம் நிறைவேறியது.

**திருத்தணியில் தமிழர் மாநாடு**

1953 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஐந்தாம் நாள் திருத்தணியில் தமிழர் மாநாடு நடைபெற்றது. மாநாட்டை எம். பக்தவச்சலம் தொடங்கிவைத்தார். மாநாட்டின் தலைவர் டி. செங்கல்வராயன் பேசும் போதும் "தமிழ்நாட்டின் தலைநகரைக்

காப்பாற்றிவிட்டு வடக்கெல்லையை மீட்க வந்திருக்கிறோம்" என்று மாநகராட்சியில் சென்னையைக் காத்த தீர்மானத்தைத் தெளிவுபடுத்தினார்.

"1911 இல் வடஆற்காட்டிலிருந்து பிரிக்கப்பட்ட ஆறு தாலுகாக்களைக் கொண்ட சித்தூர் ஜில்லா தகராறுக்கு இடமுள்ள பிரதேசம் என்று இம்மாநாடு பிரகடனம் செய்கிறது.

தென்சித்தூரில் உள்ள திருத்தணி, புத்தூர், சந்திரகிரி (திருப்பதி) சித்தூர், பல்லவனேரி, கங்குந்தி குப்பம் ஆகிய தாலுகாக்கள் பெருவாரியாகத் தமிழர் வாழும் பிரதேசம் ஆதலாலும் அவற்றில் வாழும் மக்களின் வாழ்க்கை நலம், குடும்பத் தொடர்பு, வாணிபம் முதலியன தமிழ்நாட்டோடே தொடர்புடையது ஆதலாலும், அந்தப் பிரதேசங்களை அமையவிருக்கும் ஆந்திரத்தில் சேர்க்கக்கூடாது என்றும் ஆந்திரம் இல்லாத சென்னை மாகாணத்தோடே சேர்க்கப்பட வேண்டும் என்றும் இம்மாநாடு கோருகிறது.

ஆந்திரம் பிரிந்த பிறகு எஞ்சியுள்ள தென் கன்னடத்தையும் மலபாரையும் பிரித்துவிட்டுத் தனித்தமிழ் மாகாணம் அமைக்க வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது"[27] என்னும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மாநாட்டில் ஜீவாவும் ம.பொ.சி.யும் உரையாற்றினார்கள்.

ஆந்திரத்தைச் சென்னை மாநிலத்திலிருந்து பிரிப்பதற்காக, வான்சூ என்னும் நீதிபதியை மத்திய அரசு நியமித்திருந்தது. இவர் இராஜஸ்தான் மாநிலத்தின் முதன்மை நீதிபதி ஆவார்.

தமிழ்நாடு வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினர் கே. விநாயகம் எம்.எல்.ஏ., (செங்கல்பட்டுத் தொகுதி) தலைமையில் 1953 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆம் நாள் வான்சூவைச் சந்தித்தனர். திருப்பதி, திருக்காளத்தி, திருத்தணி, திருவாலங்காடு போன்றவை தமிழ்ப் பகுதிகள் என்பதைத் தெரிவித்தனர். அதற்கான இலக்கியச் சான்றுகளையும் கல்வெட்டுச் சான்றுகளையும் தெரிவித்தனர்.

**தமிழரசு கழக இரண்டாம் மாநாடு**

தமிழரசு கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு 1953 ஆம் ஆண்டு சனவரி 24, 25 ஆகிய நாள்களில் திருவல்லிக்கேணியில்

உள்ள என்.கே.டி. கலா மண்டபத்தில் நடைபெற்றது. முதல் நாள் மாநாடு இலக்கிய மாநாடாக நடைபெற்றது. இரண்டாம் நாள் அரசியல் மாநாடாக நடைபெற்றது. இரண்டாம் நாள் காலையில் சென்னையில் உள்ள கந்த கோட்டத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, திருவல்லிக்கேணியை அடைந்தது. மாநாட்டின் தொடக்க உரையைத் திரு.வி.க. நிகழ்த்தினார்.

“வீரம் செறிந்த தமிழ் நாட்டில் தமிழ் இளைஞர்கள் எழுச்சியைக் கண்டு தமிழ்நாடு எல்லா வகையிலும் முன்னேறும் என்ற உறுதியுடன் மகிழ்ச்சியடைகிறேன். தமிழரசு கழகத்தில் ஆங்கில ஞானமும் தமிழ்ப் புலமையும் உடைய பல வீர இளைஞர்கள் சேர்ந்திருக்கின்றனர். இந்தக் கழகத்தின் தலைவர் சிறந்த தேசபக்தர்; தமிழ்ப் பண்பாடு உடையவர். இவ்வளவு நல்லவர்கள் நடத்துகின்ற தமிழரசு இயக்கம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

என் காலத்திலேயே தமிழரசு கிடைத்து விடும் என்றும் அதைப் பார்த்து நான் மகிழ வேண்டும் என்றும் தலைவர் சிவஞானம் கூறினார். தமிழரசு விரைவில் கிடைத்துவிடும். நான் இன்னும் பல்லாண்டுகள் வாழ்வேன்.

தமிழகத்தின் எல்லை தெற்கே குமரிமுனையும் வடக்கே வேங்கடமும் என்பது எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்து விட்ட உண்மை. தெற்கெல்லை பற்றிய பிரச்சினையை இப்போதைக்குக் கொஞ்சம் தள்ளி வைப்போம். வடக்கெல்லை பற்றிய போராட்டத்தில் நாம் ஈடுபடுவோம். திருப்பதியே தமிழகத்தின் வடக்கெல்லை. அதைக் காக்க தமிழர் முனைந்து நிற்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தோன்றிய அறிஞர்கள் அரசு எப்படி இருக்க வேண்டுமென்பதை விளக்கியுள்ளனர். அவர்கள் கூறியுள்ள அருளாட்சியே இன்று வேண்டும் . மக்கள் அனைவரும் நல்லவர்களாக வாழ்ந்து, தாங்களே தங்களை ஆண்டு கொள்ளும்படியான ஆட்சியே வேண்டும். தமிழக ஆட்சி அருளாட்சியாகத் தமிழரசு கழகத்தின் முயற்சியால் விரைவில் அமைய வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்.

தமிழருக்கு, தமிழ் மொழிக்குப் பகைவரே கிடையாது. உலகம் என்பதுதான் தமிழ் மனப்பான்மை. சுருங்கிய உணர்ச்சியே கிடையாது.

சென்னை நகரம் தங்களுக்குக் கிடையாது என்று தெரிந்த பின் அதில் தற்காலிகமாகத் தங்கள் தலைமை ஸ்தானத்திற்கு இடம் கொடுக்கும்படி ஆந்திரர் கேட்கின்றனர். மேற்குறித்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. சிவஞான கிராமணி இடித்துக் காட்டியது போலத் தன்மான முள்ளவர்கள் வெளியிடக் கூடிய கோரிக்கையல்ல அது. இடத்தைப் பெற்ற பிறகு மடத்தைப் பிடுங்கும் கதையாகி விடுமோ என்று தமிழர் சந்தேகிக்கக் காரணம் உண்டு. எப்படியும் மறுபடியும் தகராறுக்கு வித்திடக் கூடிய ஓர் ஏற்பாட்டை ஏற்கத் தமிழர் சிறிதும் தயாராக இல்லையென்பதை அம்மாநாடு தெளிவாக்கிவிட்டது.

ஆந்திரருக்குத் தனி ராஜ்யம் தோன்றும் போதே, தமிழ் ராஜ்யமும் ஸ்தாபித்தாகிவிட்டதென்ற பிரகடனம் வெளியாக வேண்டுமென்று தமிழரசு கழக மாநாடு கோரியிருப்பது இயற்கையே. தமிழ் ராஜ்யத்திடமிருந்து ஆந்திரர்கள் சென்னை நகருக்காகவோ, வேறுவித சொத்துக்காகவோ நஷ்ட ஈடு கேட்க எந்த நியாயமும் கிடையாது[30] என்று 'சுதேசமித்திரன்' எழுதியுள்ளது.

"தலைகொடுத்தேனும் தலைநகர் காப்போம்! கடைசித் தமிழர் உயிருள்ளவரை எமது உரிமைகளை விடோம்! வீரப் பரம்பரையை மறவோம்! வீறுகொண்டெழுவோம்! தமிழ்த் தாயைப் பாதுகாப்போம்! என்ற வீரமிக்க கோஷங்கள் தமிழரசு கழக மாநாட்டில் விண்ணைப் பிளந்தன. தமிழ் ஆர்வமும் ஆவேசமும் கரை புரண்டோடின. உரிமைக்காகத் தலை நிமிர்ந்து மார்தட்டி நிற்கும் தமிழனைக் கண்டு பூரிப்படையாதவர் யார் இருக்க முடியும்?"[31] என்று 'ஜனசக்தி' பாராட்டியுள்ளது.

ஆந்திரப் பிரிவினைக்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி வான்சூ தமது பரிந்துரையில் ஆந்திர மாநிலத்தின் தலைநகராகத் தற்காலிகமாகச் சென்னையை அமைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டிருந்தார். அதை அறிந்ததும் அப்போது தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த இராஜாஜியிடம் ம.பொ.சி. தெரிவித்தார். உடனே டில்லிக்குச் சென்ற இராஜாஜி, நேருவைச் சந்தித்துப் பேசினார். அந்த விவரத்தை ம.பொ.சியிடம் தெரிவித்தார்.

"சென்னை நகரில் ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாக இடம் கொடுக்க மத்திய அமைச்சரவை முடிவெடுத்துவிட்டதாகப்

தமிழன் பண்பாடு இதுதான். தமிழ்நாட்டில் பேச்சு மேடைகள் சுத்தமடைய வேண்டும். நல்ல தமிழில், நல்ல கருத்துகளைப் பேச வேண்டும். அதற்குக் கழகம் உதவ வேண்டும். எல்லைப் போராட்டம் முடிந்ததும் இதற்காக இக்கழகம் பெரியதொரு மன்றம் அமைக்க வேண்டும். பகைமை உணர்ச்சியின்றி, கருத்து வேற்றுமையால் அறிவுப் போராட்டத்தை நடத்த வேண்டும்.

தமிழரசு இயக்கத்தில் தமிழ்த் தாய்மார்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். உறுதி கொண்டு எல்லைக்காகப் போராடி, தமிழரசைப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டும்"[28] என்று திரு.வி.க. தமது உரையில் குறிப்பிட்டார்.

மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய ம.பொ.சி. தமது உரையில் தமிழர் ஒற்றுமையை வலியுறுத்தினார். தமிழ்நாடு, தனி மாகாணம் ஆக வேண்டும், தமிழரசு அமைய வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த மாநாட்டில் பதினான்கு தீர்மானங்கள் நிறைவேறின. மாநாட்டுத் தீர்மானம் பற்றிப் பத்திரிகைகள் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளன.

"சித்தூர் ஜில்லாவில் தமிழர் பெரும்பான்மையினராக வசிக்கும் பிரதேசங்கள் ஆந்திராவில் இருப்பது நியாயமல்ல. அம்மாதிரி இருக்கும் பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்று தமிழரசு கழக மாநாடு கோரியிருப்பது நியாயமாகும். அந்தப் பகுதிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஆவன செய்வது அவசியமென்றே கருதுகிறோம். இதில் அனாவசியமான காலதாமதம் கூடாது. ஏற்கெனவே இத்தகைய பிரதேசங்களில் சூழ்நிலை கெட்டு, தாபங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே, நியாயம் தவறாது இதிலும் எல்லைப் பகுதிகள் பிரச்சினையிலும் தாமதமின்றி திரு. வான்சூ கவனம் செலுத்துவார் என்று நம்புகிறோம்"[29] என்று 'தினமணி' தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

"ஆந்திரரிடமுள்ள பாகப்பிரிவினை தகராறின்றி நியாயமாக நடந்தேற வேண்டுமென்பதே தமிழரின் ஆவல். அத்தகைய ஆவல் உண்மையில் ஆந்திரருக்கு உண்டானால், அவர்கள் அசட்டுத்தனம்— அக்கிரமம் இரண்டும் மலிந்த தங்கள் கோரிக்கைகளை உடனடியாகக் கைவிட வேண்டும். இதுதான் மாநிலத் தமிழரசு கழக மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் பலவற்றின் முக்கியக் கருத்து.

பத்திரிகைகளில் வெளியான செய்தி உண்மைதான். பிரதமர் நேரு அதைப்பற்றி என்னிடம் மனம்விட்டுப் பேசவில்லை. தமது மனத்திலுள்ளதை மௌனத்தில் மறைத்துக் கொண்டு விட்டார் என்றார்.

சென்னை நகரில் ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாக இடம் கொடுப்பதானால், மாகாண முதல்வர் பதவிக்கு வேறு நபரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன். ஆனால், எனது எச்சரிக்கை நேருவின் மனத்தை மாற்றிவிடும் என்று நான் நம்பவில்லை. எனக்குப் பதிலாக வேறு நபரைத் தரத் தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரம் தயாராக இருக்கிறது. இனி, சென்னையைக் காப்பது உங்கள் கையில்தான் இருக்கிறது"[32] என்று இராஜாஜி தெரிவித்தார்.

அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் லால் பகதூர் சாஸ்திரி. அவருக்குத் தமிழ்நாட்டிலிருந்து 2000 தந்திகள் அனுப்பப்பட்டன. 'சென்னை நகரில் ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாக இடம் தந்தாலும் ஆந்திரர் தமிழர் இனப்பூசலுக்கு வழி வகுத்துவிடும்; சென்னையில் இரத்த ஆறு ஓடும்' என்னும் வாசகம் அத்தந்திகளில் எழுதப்பட்டிருந்தது.

சென்னை மாநகராட்சித் தீர்மானம், இராஜாஜியின் எச்சரிக்கை, தந்திகள் ஆகியவை நேருவின் மனத்தை மாற்றின. "ஆந்திரப் பிரதேசத்திற்கு ஆந்திரத்திற்குள்ளேயே தலைநகருக்கு ஏற்பாடு செய்து 1953 அக்டோபர் முதல் நாள் ஆந்திர மாநிலம் அமைக்கப்படும்" என்று நேரு அறிவித்தார்.

**நகரியில் தமிழர் மாநாடு**

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவுடன் சித்தூர் மாவட்டத்தில் உள்ள நகரியில் தமிழர் மாநாடு 09.02.1953 இல் ஜெயந்தி திரையரங்கில் நடைபெற்றது. ஏகாம்பர குப்பத்திலிருந்து மாநாட்டு ஊர்வலம் மாலை 4.00 மணிக்குத் தொடங்கியது. நகரியின் பல வீதிகள் வழியாக வந்த ஊர்வலம் இறுதியில் திரையரங்கை அடைந்தது. சென்னைத் துணை மேயர் சரசுவதி பாண்டுரங்கன் அந்த மாநாட்டில் கொடியேற்றி வைத்தார்.

“இந்தியா விடுதலை அடைந்துவிட்டது. ஆகவே வெள்ளையர் ஆட்சியில் பல கூறாகப் பிரிக்கப்பட்டுக் கிடக்கும் தமிழ்ப் பகுதிகளை ஒன்று சேர்த்து, தமிழ் ராஜ்யம் அமைப்பதற்கு நாம் போராட வேண்டும். தமிழ் நாட்டின் வடக்கெல்லையைக் காக்க நடக்கும் இயக்கத்தில் பெண்களும் பங்கு கொள்ள வேண்டும்”[33] என்று அவர் தமது உரையில் தெரிவித்தார்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவர் மங்கலங்கிழார் வரவேற்புரை ஆற்றினார்.

“சித்தூர் மாவட்டத் தென்பகுதி மக்களின் வாழ்க்கை, எல்லா வகையிலும் சென்னையோடு சம்பந்தப்பட்டதாகும். ஆகவே சென்னை நகரம் எந்த மாகாணத்தில் சேருகிறதோ அந்த மாகாணத்தோடு தான் சேர வேண்டும் என்று இந்த மாவட்டத்தில் வாழும் தமிழர் மட்டுமல்லாமல் தெலுங்கர் கூட விரும்புகின்றனர். சென்னை, தமிழ் நாட்டின் ஒரு பகுதி, உட்பகுதி. ஆகவே ஆந்திரம் பிரிந்த பிறகும் சென்னை தமிழ்நாட்டோடு தான் இருக்கப் போகிறது. ஆகவே, சித்தூர் தமிழ்த் தாலுகாக்களைச் சென்னையைத் தலைநகராகக் கொண்ட தமிழ்நாட்டோடு சேர்க்க வேண்டும்”[34] என்று குறிப்பிட்டார். ம.பொ.சி. மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார்.

“சித்தூரில் வாழும் தெலுங்கர் ஆந்திரர் அல்லர். ‘ஆந்திரம்’ என்பது நாட்டின் பெயர்; மொழிப் பெயரல்ல. ஆகவே சித்தூர் மாவட்டத்தில் வாழும் மக்களில் பலர், பேசும் மொழியால் தெலுங்கராயிருக்கலாம். ஆனால் அவர்கள் வாழும் நாட்டால் தமிழர். அவர்கள் பேசுவது சுத்தத் தெலுங்கல்ல. தமிழகத்தின் தென்கோடி குமரிமுனை வரையுள்ள தமிழர்களுக்குச் சித்தூரில் பேசப்படும் தெலுங்கைப் புரிந்து கொள்ள முடியும். பலருக்குப் பேசவும் தெரியும். ஆனால் வடக்கேயுள்ள ஆந்திரருக்குச் சித்தூர் தெலுங்கு புரியாது. ஆம், சித்தூரில் பேசப்படுவது தமிழ் மணம் வீசும் தெலுங்கு. ஆகவே சித்தூர் மாவட்டத்தில் வாழும் நாயுடு, ரெட்டியார் போன்ற தெலுங்கோடு தமிழும் பேசுவோர் தமிழர் அல்லர் என்றால் அவர்களை அசல் ஆந்திரர் என்றும் சொல்ல முடியாது. வேண்டுமானால் அவர்களை ‘இருமொழியாளர்’ என்று சொல்லலாம். ஆகவே இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான ஒரே வழி, வாக்கெடுப்பு தான்”[35] என்று அவர் பேசினார்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். கே. விநாயகம், தமிழ்நாட்டுப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். கவிஞர் கா.மு. ஷெரீப், கவிஞர் வானம்பாடி முதலானோர் உரையாற்றினர்.

**சித்தூரில் தமிழர் மாநாடு**

சித்தூரில் 22.02.1953 அன்று தமிழர் மாநாடு நடைபெற்றது. சித்தூர் முசாபரி பங்களாவிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மாநாட்டு அரங்கை அடைந்தது. தமிழரசு கழகக் கொடியை ஏற்றிவைத்து, கவிஞர் கா.மு. ஷெரீப் பேசினார். டாக்டர் குருபாதம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். ம.பொ.சி. தமது தலைமை உரையில், “சித்தூர் ஜில்லா தமிழ்த் தாலுகாக்களைத் தற்காலிகமாகக் கூட ஆந்திர நாட்டில் சேர்க்கக் கூடாது. ஏனெனில் ஆந்திரர்களின் நல்லெண்ணத்தில் நமக்கு நம்பிக்கையில்லை” என்று குறிப்பிட்டார்.

எம். பக்தவச்சலம் தமது சிறப்புரையில், “ஆந்திர ராஜ்யத்தோடு தமிழ்ப் பகுதிகளைச் சேர்த்து வைப்பது நியாயமல்ல. ஜில்லாக்கள் நிர்வாக வசதிக்காக உருவாகின்றன. அவற்றின் அமைப்பு சாஸ்வதமானதல்ல. ஆகவே சித்தூர் ஜில்லாவை மொழிவாரிப் பகுதிகளாக பிரிப்பது அவசியம். சென்னை நகரில் ஒரு நாளைக்குக் கூட ஆந்திர அரசுக்குத் தமிழர் இடம் தரப் போவதில்லை. தமிழ்த் தலைவர்கள் ஆந்திரத்தைத் தாக்கிப் பேசுவதாகச் சில ஆந்திரத் தலைவர்கள் கூறுகின்றனர். முதலில் இந்த மேதாவிகள் தங்கள் நாக்கை அடக்கிப் பேசட்டும்” என்றார். மேலும் பலர் இந்த மாநாட்டில் உரையாற்றினார்கள்.[36]

**வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுக்கூட்டம்**

வேங்கடத்தைத் தமிழ்நாட்டின் எல்லையாக அமைப்பதற்கு உருவாக்கப்பட்ட வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு 25.03.1953 அன்று கூடியது. சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்த் தாலுகாக்களைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வலியுறுத்த வேண்டும் என்று அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு கே. விநாயகத்திடம் முழுப்பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது.

வடக்கெல்லைப் போராட்டம் பற்றிய செய்திகளை மேலிடத்திற்கும் பத்திரிகைகளுக்கும் தெரிவிக்கும் பொறுப்பு வி.கே. சடகோபாலாச்சாரியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஆசிரியர் மங்கலங்கிழார், வி.கே. சடகோபாலாச்சாரியார், கே. விநாயகம், என்.ஏ. ரஷீது, என். சுப்பிரமணியம், எஸ். ரங்கநாத முதலியார், டி.எம். திருமலை பிள்ளை, இ.எஸ். தியாகராஜன் ஆகியோர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

இக்குழுவினர் தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி. அவர்களைச் சந்தித்துப் பேசுவது என்று முடிவு செய்தனர். அதன்படி குழுவினர் ம.பொ.சியை **29.3.1953, 30.3.1953** ஆகிய நாள்களில் சந்தித்து ஆலோசனை நடத்தினர். மீண்டும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் **3.4.1953** அன்று திருத்தணியில் உள்ள வன்னியர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உறுப்பினர்களுடன் பொதுமக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

1. சித்தூர்த் தமிழ்ப் பகுதிகளுக்குத் ‘தனி எல்லைக் கமிஷன்’ அனுப்பி நீதி வழங்க வேண்டும்.

2. சித்தூர் ஜில்லா தகராறுக்குரிய பிரதேசம் என்று பிரதமர் நேரு பிரகடனம் செய்ய வேண்டும்.

3. ஒன்பதாம் தேதி சித்தூர்த் தமிழ்ப் பகுதிகளில் அமைதியான முறையில் கடையடைப்பும் கண்டன ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்த வேண்டும்.

4. ஏப்ரல் 10ஆம் தேதி திருத்தணியில் உள்ள மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன்பு அமைதியான முறையில் அறப்போராட்டம் (சத்தியாக்கிரகப் போர்) நடத்த வேண்டும்.

5. இந்த வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு இன்று முதல் தமிழ்நாட்டு வடக்கெல்லை நேரடி நடவடிக்கைக் குழு என்று அழைக்கப்படும்.

6. இந்தக் குழுவின் தலைவராக ம.பொ.சி. செயல்பட வேண்டும்.

என்பவை அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகும்.

**அறப்போராட்டம்**

ஏப்ரல் 9ஆம் தேதி சித்தூர் மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகளில் அறப்போராட்டம் தொடங்கியது. கடையடைப்பும் கண்டன ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. பள்ளிகளைப் புறக்கணித்து மாணவர்கள் வெளியேறினர். போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

'சென்னையோடு சேர்ந்து வாழ்வோம்! வேங்கடத்தை விட மாட்டோம்! சித்தூர்த் தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்துடன் சேர்க்காதே'! என்ற வாசகங்களுடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

வங்கனூரில் பாலசுப்பிரமணியம் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. அம்மையார் குப்பத்தில் கடையடைப்புப் போராட்டமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

ஏகாம்பர குப்பம், புதுப்பேட்டை ஆகிய பகுதிகளில் கடையடைப்பு நடைபெற்றது. ஏகாம்பர குப்பத்தில் உள்ள அஞ்சலகம் மூடப்பட்டது. மாலையில் ஏகாம்பர குப்பத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதட்டூர் பேட்டையில் இ.எஸ். தியாகராஜன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அத்திமாஞ்சேரியில் ப. முத்துவேல் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவாலங்காட்டில் திருமலைபிள்ளை தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

திருத்தணியில் கடையடைப்புடன் கறுப்புக் கொடி ஊர்வலமும் நடைபெற்றது. 2000 பேர் ஊர்வலத்தில் பங்கேற்றனர். ம.பொ.சி. ஒன்பதாம் தேதியே திருத்தணிக்கு வந்துவிட்டார்.

**10.4.1953** அன்று திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்துக்கு முன்பு மறியல் நடைபெற்றது. மறியல் ஊர்வலம் வன்னியர் மண்டபத்திலிருந்து புறப்பட்டது. விநாயகம், எ.டி.கே. ராமசாமி, எம். ஏழுமலை, கே.என். வெங்கடேசன், ஆர். சண்முகம், அவரது துணைவியார் ஞானபூங்கோதை ஆகியோர் ஊர்வலத்தின் முன்னால் நடந்து சென்றனர். வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பு காவல் துறையினரால் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது. வட்டாட்சியர்

அலுவலகத்திற்கு வெளியே மறியல் நடத்துமாறு காவல்துறையினர் கேட்டுக் கொண்டனர். மறியல் நடத்தும் இடத்திற்கு முன்பே பொதுமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். ம.பொ.சி. மறியல் களத்தில் இருந்ததால் காவல்துறையினர் அமைதியாக இருந்தனர்.

இந்த மறியல் போராட்டம் **25** ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெற்றது. திருத்தணிப் பஞ்சாயத்துத் தேர்தல் நெருங்கியதால் போராட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

**சித்தூர் தினம்**

**03.05.1953** அன்று தமிழ்நாடு முழுவதும் 'சித்தூர் தினம்' கொண்டாடுமாறு தமிழ் மக்களுக்குத் தமிழரசு கழகம் வேண்டுகோள் விடுத்தது. தமிழ்நாடு முழுவதும் சித்தூர் தினத்தன்று ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. அந்தப் பொதுக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம் பற்றி ம.பொ.சி. அறிக்கை வெளியிட்டார்.

"சித்தூர் ஜில்லாவில் தமிழர் பெரும்பாலோராக உள்ள பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்க்க வேண்டும் என்று தமிழ் மக்கள் தங்கள் ஏகோபித்த அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தும் அந்த ஜில்லாவை அமையவிருக்கும் ஆந்திர மாகாணத்தோடு சேர்த்து விடுவதென்று மத்திய அரசினர் முடிவு செய்திருப்பதை இக்கூட்டம் பலமாக ஆட்சேபிக்கின்றது.

மேலும் சித்தூர் ஜில்லாவைத் தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு ஜில்லாக்களின் பட்டியலில் மத்திய அரசினர் சேர்த்து விட்டிருப்பதால் வரவிருக்கும் எல்லைக் கமிஷன் சித்தூர் தமிழ்ப் பகுதிகள் பற்றிய பிரச்சனையை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிடுவதற்குச் சந்தர்ப்பமிருப்பதாக இக்கூட்டம் அஞ்சுகின்றது.

சித்தூர் தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்றும் உடனடியாக அது தொடர்பான அறிக்கை விடுமாறும் மத்திய அரசினரை இக்கூட்டம் வற்புறுத்துகின்றது. மற்றும் சித்தூர் பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்று கோரி

சித்தூர் தமிழ்மக்கள் நடத்திவரும் சாத்வீகக் கிளர்ச்சியை இக்கூட்டம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறது.

மேற்படி தீர்மானங்களைக் குடியரசுத் தலைவர், இந்தியப் பிரதமர், சென்னை மாகாண முதலமைச்சர் ஆகியோருக்குத் தாமதமின்றி அனுப்பி வைக்க வேண்டும்" என்று அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டார்.

சென்னை, திருவல்லிக்கேணிக் கடற்கரையில் சித்தூர் தினப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ம.பொ.சி., தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், கே. விநாயகம் எம்.எல்.ஏ. ஆகியோர் அதில் பேசினார்கள்.

சின்ன அண்ணாமலை, கவிஞர் கா.மு. ஷெரீப், கவிஞர் வானம்பாடி, வி.கே. குப்புசாமி, எஸ்.கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் வெளியூரில் நடைபெற்ற கூட்டங்களில் பேசினார்கள். சித்தூர் மாவட்டத்தில் தமிழர் மிகுதியாக வாழும் கிராமந்தோறும் சித்தூர் தினம் கொண்டாடப்பட்டது.

**மீண்டும் அறப்போர்**

திருத்தணிப் பஞ்சாயத்துத் தேர்தலில் தமிழர் சார்பில் நிறுத்தப்பட்ட பத்துப் பேரில் ஒன்பது பேர் வெற்றி பெற்றனர். பஞ்சாயத்துத் தலைவராகவும் தமிழரே தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் முடிந்ததும் மீண்டும் அறப்போராட்டத்தைத் தொடங்குவதற்கு வடக்கெல்லை நேரடி நடவடிக்கைக் குழு மே ஆறாம் நாள் திருத்தணியில் கூடியது. இந்தக் கூட்டத்தில் ம.பொ.சியும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். மீண்டும் அறப்போராட்டத்தை மே 12 ஆம் நாள்முதல் தொடங்குவது என்று இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

காலையில் மட்டுமே மறியல் செய்து வந்த நிலையை மாற்றிக் காலையிலும் மாலையிலும் இரண்டு அணியாகப் பிரிந்து மறியல் செய்தனர். ஏ.டி.கே. இராமசாமி தலைமையில் காலையில் பத்துப் பேரும் கன்னியப்பன் தலைமையில் மாலையில் பத்துப் பேரும் மறியல் செய்தனர். திருத்தணியில் மட்டும் நடைபெற்ற மறியல் போராட்டம் சித்தூர், புத்தூர் ஆகிய இடங்களிலும் நடைபெற்றது.

சித்தூரில் மே மாதம் 12ஆம் நாள் சி.வி. சீனிவாச முதலியார் தலைமையில் மறியல் நடைபெற்றது.

**ம.பொ.சி. கைது**

18.05.53 அன்று புத்தூரில் மறியலுடன் பொதுக்கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ம.பொ.சி., என். சுப்பிரமணியம், மங்கலங்கிழார், கே. விநாயகம் ஆகியோர் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றனர். அப்போது திடீரென்று பொதுக்கூட்ட மேடையை நோக்கிக் கற்கள் வீசப்பட்டன. இந்தக் கல்வீச்சில் பலர் காயம் அடைந்தனர். அப்போது வட்டாட்சியர் மேடைக்கு வந்து பொதுக்கூட்டம் நடத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் 144 தடை உத்தரவை ம.பொ.சி.யிடம் காண்பித்தார். அந்த உத்தரவை வாங்க மறுத்த ம.பொ.சி.யும் மற்றவர்களும் தொடர்ந்து கூட்டத்தை நடத்தினார்கள்.

காவல்துறையினர் ம.பொ.சி.யையும் கே. விநாயகத்தையும் கைது செய்து புத்தூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். புத்தூரில் ஆந்திரர்கள் தாக்குதல் நடத்துவதற்குத் தயாராக இருந்ததால் அங்கே அவர்களை இறக்காமல் திருத்தணிக்கு அழைத்துச் சென்றனர். திருத்தணியில் இருவரும் இரவு 10.00 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

புத்தூரில் நடைபெற்ற கலவரத்தை அறிந்த முதலமைச்சர் இராஜாஜி பத்திரிகை வாயிலாக ஓர் அறிக்கை விட்டார். அதில் மறியல் போராட்டத்தை உடனே கைவிடுமாறு குறிப்பிட்டிருந்தார்.

“தனி ஆந்திர ராஜ்யம் பிரிந்த பிறகு அந்த ராஜ்யத்தின் எல்லையைச் சரியாக வரையறுக்க எல்லைக் கமிஷன் நிறுவப்படும் என்று இந்தியப் பிரதம மந்திரி நேரு மார்ச் 25–ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். சித்தூர் ஜில்லாவில் தமிழர்கள் உரிமை கோரும் பிரதேசங்கள் பற்றி அச்சமயத்தில் பூரணமாகவும், அமைதியாகவும் ஆராயலாம். தற்போது கிளர்ச்சி செய்ய வேண்டிய அவசியமே இல்லை. ஏற்கனவே இந்தக் கிளர்ச்சி அருவெறுக்கத்தக்க நிலையை அடைந்துவிட்டது. இந்தக் கிளர்ச்சி இதுகாறும் அமைதியும் நல்லெண்ணமும் நிலவி வரும் பிராந்தியங்களில் வீண் மனக் கசப்பை உண்டு பண்ணக் கூடியது. நான் கூறுவதையெல்லாம் மக்களும் ஒப்புக்

கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அமைதியான சூழ்நிலை மீண்டும் ஏற்படுமென்று நம்புகிறேன்." [37] என்று பத்திரிகையில் அறிக்கைவிட்ட இராஜாஜி, ம.பொ.சி.யை நேரில் அழைத்து, மறியல் போராட்டத்தை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு, வடக்கெல்லைப் பாதுகாப்பு நேரடி நடவடிக்கைக் குழுவினரிடம் கலந்து பேசிவிட்டுத் தெரிவிப்பதாக ம.பொ.சி. கூறினார்.

**22.05.53** அன்று வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு திருத்தணியில் கூடியது. அக்கூட்டத்தில் இராஜாஜியின் அறிக்கை, வேண்டுகோள் இரண்டும் விவாதிக்கப்பட்டன. விவாதத்தின் முடிவில் அறப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவை அறிக்கையாக ம.பொ.சி. வெளியிட்டார்.

"சித்தூர் கிளர்ச்சி பற்றி முதலமைச்சர் ராஜாஜி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதிலே, ஆந்திர மாகாணத்தின் எல்லைக் கோட்டை வரவிருக்கும் எல்லைக் கமிஷன் நிர்ணயிக்குமென்றும், அந்தச் சமயத்தில் சித்தூர் தமிழர்களின் கோரிக்கையும் கவனிக்கப்படலாம் என்றும் அவர் கூறியிருக்கிறார். இது சென்னை மாகாண முதல் அமைச்சரின் சொந்த அபிப்பிராயமேயன்றி, ஆந்திரர்களையும் கொண்ட அவரது அமைச்சரவையின் முடிவு அல்ல. இராஜாஜியின் அபிப்பிராயம் அவருடைய நல்லெண்ணத்தைக் காட்டுகிறது. அதற்காக, சித்தூர் தமிழர்கள் அவருக்கு நன்றி செலுத்துகின்றனர். ஆயினும், அவருடைய அபிப்பிராயத்தை மத்திய அரசினரும் உறுதி செய்தாலொழிய சித்தூர் தமிழர்கள் ஆறுதலடைவதற்கில்லை. ஆந்திர– தமிழக எல்லைப் பிரச்சினையில் இறுதி முடிவு செய்யும் அதிகாரம் மத்திய அரசிடமே இருக்கிறது.

ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பிறகு நியமிக்கப்படலாமென்று சொல்லப்படும் எல்லைக் கமிஷன் நிச்சயமாக ஒரு நீதிபதியை அல்லது நீதிபதிகளைக் கொண்டதாகவே இருக்கும். "சித்தூர் ஜில்லா தகராறுக்கிடமில்லாத ஆந்திர ஜில்லா" என்று மத்திய அரசினர் அறிவித்திருப்பதால் அந்த ஜில்லாவிலுள்ள தமிழ்த் தாலுகாக்கள் குறித்து, தமிழர் எழுப்பியுள்ள தகராறைப் பற்றி எல்லைக்

கமிஷன் விசாரிக்கும் என்று நம்புவதற்கில்லை. விசாரிக்க முயன்றாலும் ஆந்திர மாநில அரசு அந்தக் கமிஷனுடன் ஒத்துழைப்பது சந்தேகம். இராஜாஜியின் கருத்தை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டு சித்தூர் விஷயத்தில் எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று உறுதி கொடுக்கும் வரை கிளர்ச்சி நீடிக்க வேண்டும் என்று வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு தீர்மானித்திருக்கிறது. இதைவிட வேறுவிதமாக அது தீர்மானித்திருக்க முடியாது என்பது தெளிவு.''[38]

இந்த அறிக்கையைப் பார்த்த முதலமைச்சர் இராஜாஜி, ம.பொ.சி.யின் செயல்பாட்டில் வருத்தம் கொண்டார். முதலமைச்சரின் துணையுடன்தான் வடக்கெல்லையை மீட்க வேண்டும். எனவே 'தற்காலிக நிறுத்தம்' என்று மறு அறிக்கையை ம.பொ.சி. வெளியிட்டார்.

''வடக்கெல்லைப் போராட்டத்தில் மாறுதல் செய்திருக்கிறது நேரடி நடவடிக்கைக் கமிட்டி. ஆம், சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய தாலுகாக்களில் அரசாங்க அலுவலகங்கள் முன்பு நடைபெற்று வந்த மறியல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதனால், சித்தூர் மாவட்டத்தில் நேரடி நடவடிக்கைக் கமிட்டி நிரந்தரமாக நிறுத்தி விட்டதாகவோ, அல்லது சத்தியாக்கிரகப் போராட்டத்திலிருந்து பின்வாங்கி விட்டதாகவோ யாரும் கருத வேண்டாம். அப்படிப்பட்ட தவறான எண்ணத்தைக் கொடுக்கும் ஒரு செய்தி ''இந்து''விலும், ''சுதேச மித்திரனி''லும் வெளிவந்திருப்பது வருந்தத்தக்கதாகும்.

மறியல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பினும் ஊர்வலம், பொதுக்கூட்டம் போன்ற நடவடிக்கைகள் மூலம் வடக்கெல்லை மீட்புக் கிளர்ச்சி சித்தூர் மாவட்டம் உள்படத் தமிழகம் முழுவதிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.

வடக்கெல்லைக் கிளர்ச்சி சம்பந்தமான மேல் நடவடிக்கைகள் சித்தூர் மாவட்டத்திலிருந்து சென்னை நகருக்கு மாற்றப் பட்டிருக்கின்றன. ஜூன் 15ஆம் தேதிக்குள் தமிழரசு கழகச் செயற்குழு கூடி நடவடிக்கைகளுக்கான திட்டத்தை உருவாக்கிவிடும். சென்னை நகரத் தமிழர்களின் பேராதரவுடன் விரைவில் கிளர்ச்சி தொடங்கப்படும்''[39] என்று அறிவித்தார்.

வடக்கெல்லை மீட்சிக் கிளர்ச்சியைச் சித்தூர் மாவட்டத்தில் நிறுத்திவிட்டு, தமிழரசு கழகத்தின் மேற்பார்வையில் அதனைச் சென்னையில் நடத்துவதென்று எடுத்த முடிவுக்கு "கல்கி" வார இதழ் மனமுவந்து வரவேற்பளித்தது.

"திருத்தணிப் பகுதியில் உள்ள தமிழர்களுக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் இப்போது மிகமிகத் தர்ம சங்கடமான நிலையில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டுத் தலைவர்கள் "கிளர்ச்சி இப்போது வேண்டாம். எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் போது உங்கள் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும்" என்று கூறுகிறார்கள்.

எல்லைக் கமிஷன் தீர்ப்புக்கு இந்தப் பிரச்சினை விடப்படும் என்பது என்ன நிச்சயம்? சித்தூர் ஜில்லா விவாதத்துக்கிடமில்லாத தெலுங்கு ஜில்லா என்று இந்திய சர்க்கார் உத்தரவில் குறிப்பிடப் பட்டிருக்கிறதே? என்று திருத்தணித் தமிழர்கள் கேட்கிறார்கள். இதற்குத் தக்க பதில் தமிழ்நாட்டுத் தலைவர்களால் சொல்ல முடியவில்லை.

கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதனால் புத்தூரில் நடந்தது போன்ற விபரீத விளைவுகள் ஏற்படவும் இடம் இருக்கிறது. அப்படி நேரிடாமல் தடுப்பது ராஜாஜி சர்க்காரின் பொறுப்பு என்று சொல்வதில் பயனில்லை. ராஜாஜி சர்க்கார் இப்போது எந்த நிலையில் இருந்து நிர்வாகம் நடத்துகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. எத்தனை நேர்மையாகச் செய்யும் காரியத்திலும் குற்றம் கண்டு பிடித்து அவதூறு கூற ஆந்திர அரசியல்வாதிகள் தயாராயிருக்கிறார்கள்.

ஆகவே, திருத்தணித் தமிழர்கள் ராஜாஜியிடம் தங்கள் நேர்மையான கட்சிக்கு ஆதரவும் அனுதாபமும் எதிர்பார்ப்பது போல், ராஜாஜியும் திருத்தணித் தமிழர்களிடம் தமது தர்மசங்கடமான நிலைமைக்கு அனுதாபத்தை எதிர்பார்க்கிறார். எந்தப் பக்கம் போனாலும் திருத்தணிப் பகுதித் தமிழர்களுக்குக் கஷ்டமும் தொல்லையும் இருக்கத்தான் செய்கின்றன.

இத்தகைய நிலைமையில் திருத்தணிப் பகுதியில் கிளர்ச்சி நடத்தி வந்த எல்லைப் பாதுகாப்புக் கமிட்டியார் கடைசியாகச் செய்திருக்கும் தீர்மானத்தை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

அந்தப் பகுதியில் கிளர்ச்சியை நிறுத்தி வைத்துவிட்டு, சென்னை நகரில் தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

சென்னையில் நடத்தும் கிளர்ச்சியில் மறியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மற்றப்படி பொதுக்கூட்டம், ஊர்வலம் முதலிய கிளர்ச்சி முறைகளைக் கடைப்பிடிக்கலாம். சித்தூர் பகுதித் தமிழர்களின் கோரிக்கையை இந்திய சர்க்காருக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கலாம்.

இத்தகைய கிளர்ச்சிக்குச் சென்னை நகரவாசிகளும் தமிழர்கள் அனைவரும் ஆதரவு அளித்து வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை" [40] என்று கல்கி இதழ் தெரிவித்தது.

வடக்கெல்லைப் போராட்டத்தைச் சித்தூர் மாவட்டத்தில் நிறுத்தி வைத்ததை நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை வரவேற்றார்.

"சித்தூர் ஜில்லாவில் தமிழர் அதிகமாக வசிக்கும் பகுதிகளைத் தமிழ் நாட்டோடு தான் சேர்க்க வேண்டும் என்பதற்காகத் திருத்தணி, சித்தூர், புத்தூர் தாலுகாக்களில் நடத்தி வந்த மறியல் போராட்டத்தை நிறுத்தி வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். எனினும், சித்தூர் ஜில்லா விவாதத்திற்கிடமில்லாத தெலுங்குப் பிரதேசம் என்று மத்திய சர்க்கார் எண்ணியிருப்பது முற்றிலும் தவறு என்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டி, ஓர் எல்லைக் கமிஷன் ஏற்படுத்தும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தக் கூடிய எல்லா விதமான முயற்சிகளையும் வெற்றி கிடைக்கிறவரைக்கும் தமிழ் மக்கள் விடாது செய்ய வேண்டும்"[41] என்று குறிப்பிட்டார்.

விடுதலைப் போரில் பன்முறை சிறைபுகுந்த வீரரும் வடக்கெல்லைப் போராட்டம் நடந்தபோது காங்கிரஸ் சார்பில் மாகாண சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்தவருமான நெல்லை

ந. சோமையாஜுலுவும் எல்லைப் போராட்டம் சித்தூர் மாவட்ட எல்லைக்குள்ளே நிறுத்தி வைக்கப்பட்டதை வரவேற்று அறிக்கை விடுத்தார்.

“ஸ்ரீ சிவஞான கிராமணியார் ஆரம்பித்திருக்கும் தமிழக எல்லைப் பாதுகாப்பு வேலைகள் அனைத்திற்கும் என் மனப்பூர்வமான ஆதரவைக் கொடுக்கிறேன். சித்தூர் ஜில்லாவின் தமிழ்த் தாலுகாக்கள் பற்றிய பிரச்சினை பற்றி வரவிருக்கும் எல்லைக் கமிஷன் விசாரணை நடத்தி அந்தத் தாலுகாக்களில் வாழும் தமிழரிடையே வாக்கெடுத்து முடிவு செய்யும் என மத்திய அரசியலார் வாக்குறுதி தரவேண்டுமெனத் தமிழரசு கழகம் கோருவதை நான் ஆதரிக்கிறேன். மற்றும், கமிஷன் வருவதற்கு முன்புள்ள இடைக்காலத்தில் சித்தூர் தமிழர்களின் கல்வி, உத்தியோக நலன் என்பது பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதங்களையும் தமிழரசு கழகம் கோருவது நியாயமானதாதலால் அவற்றையும் ஆதரிக்கிறேன்”[42] என்று தெரிவித்தார்.

தமிழ் எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணனும் சித்தூர் மாவட்ட எல்லைக்குள் வடக்கெல்லைப் போராட்டம் நிறுத்தப்பட்டதை வரவேற்று அனைவராலும் புகழப்படும் நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

“சித்தூர்ப் பகுதிகள் விவகாரத்திற்குரிய இடங்களே. அதாவது, தமிழ்நாட்டின் ஊர்களே என்ற உண்மையை உலகுக்கு அறிவிக்க தமிழரசு கழகத்தின் மாபெரும் தலைவர் ம.பொ. சிவஞானம் அவர்களும் மற்றவர்களும் கிளர்ச்சி செய்வது நியாயமானதாகும். ஆகவே, தமிழகத்திலுள்ள அனைவரும் தமிழன் என்று சொல்லிக் கொள்ள உரிமையுடைய ஒவ்வொருவரும் இவ்வுரிமைக் கிளர்ச்சிக்குப் பேராதரவு தர வேண்டியது அவசியம்.

ஒருவேளை, ஆந்திரர்களின் பெருங்கூக்குரலுக்கு அஞ்சி மத்திய அரசாங்கம் தமிழர்களுக்கு நியாயம் வழங்கத் தவறினால் அதன் விளைவாக எழக்கூடிய போராட்டத்தில் தமிழர் அனைவரும் கட்சி, சாதி, சமயம் முதலிய வேற்றுமைகளைப் பாராட்டாமல் ஒன்று சேர்ந்து வெற்றி காண வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்”[43] என்பது அந்த அறிக்கையின் முக்கியப் பகுதி ஆகும்.

**முதல்வரின் உறுதிமொழி**

சித்தூர் மாவட்டத்தில் நடந்த போராட்டத்தைச் சென்னை நகருக்கு மாற்றப் போவதாகத் தமிழரசு கழகம் எடுத்த முடிவிலே முதலமைச்சர் ராஜாஜிக்கு முழு திருப்தியில்லை என்றாலும், தற்காலிகமாகவேனும் கிளர்ச்சி நின்றதே என்று ஆறுதலடைந்தார். அவரது அழைப்பின் பேரில் ம.பொ.சி. அவரை நேரில் சந்தித்துப் பேசினார்.

"சித்தூரில் போராட்டத்தை நிறுத்தி வைத்தது சரி; சென்னையில் தொடங்குவதற்கு அவசரப்பட வேண்டாம். ஆந்திரப் பிரிவினை சட்ட முன்வடிவு மத்திய அரசால் தயாரிக்கப்பட்டு விட்டது. அது சென்னை மாகாண சட்டமன்றத்தின் பரிசீலனைக்கு வரும்போது அதிலே ஒரு திருத்தத்தைப் புகுத்தித் தமிழக ஆந்திர எல்லைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு எல்லைக் கமிஷன் நியமிக்க வேண்டிய கட்டாயத்தை மத்திய அரசுக்கு ஏற்படுத்த முடியும். அதைச் செய்ய முயல்கிறேன்"[44] என்று உறுதி கூறினார்.

**வானொலிப் பெட்டி உடைப்பு**

திருத்தணியின் பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் உறுப்பினர்களாகத் தமிழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதால் தெலுங்கர்கள் ஆத்திரம் கொண்டனர். அதுவரை திருத்தணிப் பஞ்சாயத்தில் இருந்த வானொலிப் பெட்டியில் விஜயவாடாவிலிருந்துதான் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. அதை மாற்றிச் சென்னையின் நிகழ்ச்சியை ஒலிபரப்புமாறு பஞ்சாயத்து உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதை நிர்வாக அதிகாரி ஏற்றுக்கொள்ளவில்லை.

1953 ஆம் ஆண்டு ஜூன் 20 அன்று, தெலுங்கை மட்டுமே ஒலிபரப்பிய வானொலிப் பெட்டியைத் திருத்தணி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து உடைத்தனர்.

மேலும், நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஒன்றுசேர்ந்து திருத்தணிக்கும் இச்சிப்புத்தூருக்கும் இடையில் வந்து கொண்டிருந்த பம்பாய் விரைவு வண்டியை நிறுத்தினர். அவர்கள்

தண்டவாளத்தில் அமர்ந்து கொண்டு மறியல் போராட்டம் நடத்தினர். ரிசர்வ் போலீசார் வந்து தடியடி நடத்தி அவர்களை அப்புறப்படுத்தினார்கள்.

ஆத்திரங்கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தணிகை வீதிகளிலே ஊர்வலமாகச் சென்று, "மத்திய அரசே, வடக்கெல்லைப் பிரச்சினையைத் தீர்க்க எல்லைக் கமிஷனை அனுப்பு!" ஆந்திரப் பிரிவினை மசோதாவிலுள்ள "தகராறுக்கிடமில்லாத ஜில்லாக்கள் என்னும் வாசகத்தை நீக்கு" "ஆந்திர தமிழக எல்லைப் பிரச்சினை தீரும்வரை சித்தூர் மாவட்டத்தை எஞ்சிய சென்னை மாகாணத்திலேயே விட்டு வை" என்றெல்லாம் முழக்கங்கள் எழுப்பினர்.

இந்த வேளையில் ம.பொ.சி., கே.விநாயகம் முதலானோர் சென்னையில், வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்தனர்.

திருத்தணியில் ரயில் நிறுத்தப் போராட்டம் நடைபெற்ற செய்தியை அறிந்து ம.பொ.சி., கே. விநாயகம் முதலானோர் திருத்தணிக்குப் புறப்பட்டனர். ம.பொ.சி.க்கு இச் செய்தியை 'இந்து' நாளிதழிலிருந்து தெரிவித்தனர். அவர்கள் திருத்தணிக்குப் போவதற்கு முன்பாகவே திருத்தணியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தலைமறைவாகி விட்டார்கள். அவர்களைத் தேடுவதாகக் கூறிக் கொண்டு காவல் துறையினர் வீடுகளில் இருந்தவர்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள்.

எல்லைப் பாதுகாப்புக் குழுவின் செயலிடமாக இருந்து வந்த திருத்தணியில் உள்ள வன்னியர் மண்டபத்தைக் காவல்துறையினர் கைப்பற்றிவிட்டனர். எல்லைப் பாதுகாப்புக் குழுவினர் மீண்டும் திருத்தணியில் கூடி ஆலோசித்தனர்.

ஒரு நாள் இடைவெளிவிட்டு, ஜூன் 22 இல் சப்மாஜிஸ்திரேட் விதித்திருக்கும் 144 தடையுத்தரவை மீறி, அரசாங்க அலுவலகத்தின் முன் மறியல் செய்தல், ஊர்வலமும்

பொதுக் கூட்டமும் நடத்துதல், தெலுங்கில் எழுதிய பெயர்ப் பலகைகளுக்குத் தார் அடித்தல் போன்ற சட்டமறுப்பு நடவடிக்கைகளை வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் பெயரால் நடத்த வேண்டுமென்று ம.பொ.சி. ஆலோசனை கூறினார். அது ஏற்கப்பட்டது.

போராட்டத் திட்டத்தில் தணிகையை நோக்கி வரும் பம்பாய் எக்ஸ்பிரஸ் ரெயில் ஒன்றை மட்டும் தினந்தோறும் அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்துவதும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது. மறுநாள் காலையிலேயே தணிகையை நோக்கி வந்து கொண்டிருந்த பம்பாய் எக்ஸ்பிரஸ் ரயிலானது இச்சிப்புத்தூருக்கும் தணிகைக்குமிடையே அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்தப்பட்டது. இந்தச் செயலில் ஈடுபட்ட கோல்டன் என். சுப்பிரமணியம், என்.ஏ. ரஷீத், முனுசாமி உள்பட ஐவர் கைது செய்யப்பட்டனர்.

ஜூன் 22 ஆம் தேதியன்று ஒரு நாள் மட்டும் திருத்தணி, புத்தூர், சித்தூர் ஆகிய தமிழர் மிகுதியாக வாழ்கின்ற மூன்று தாலுகாக்களில் கடையடைப்பும் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தப்படவேண்டுமென்று எல்லைப் பாதுகாப்புக் குழு அறிக்கை விட்டது. இதற்கு எதிர்பார்த்ததை விடவும் அதிகமாகத் தமிழ் மக்களிடமிருந்து ஆதரவு கிடைத்தது.

சித்தூர் தாலுகாவில் வி.எஸ். சீனிவாச முதலியார் பொறுப்பேற்று வடக்கெல்லைக் கிளர்ச்சியை நடத்தினார். இவர் ஆந்திர மாகாண காங்கிரசில் கமிட்டியின் அங்கத்தினராகவும், காங்கிரஸ் சார்பில் சித்தூர் நகர மன்றத்தின் தலைவராகவும் இருந்தார்.

அம்மையார் குப்பம் கிராமத்திலே கண்ணப்ப முதலியார், வி. துரைசாமி முதலியார் ஆகியோர் தலைமையில் தடையுத்தரவை மீறிக் கடையடைப்பு, ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவை நடத்தப்பட்டன.

தணிகைக்கு 18 மைல் தொலைவிலுள்ள ராமகிருஷ்ண ராஜூபேட்டை (ஆர்.ஆர். பேட்டை) யில் காவல் நிலையத்திற்கெதிரே

மக்கள் திரளாகக் கூடித் தெலுங்கில் எழுதியிருந்த பெயர்ப் பலகையைத் தார்பூசி அழித்தனர். போலீசார் எதிர் நடவடிக்கை எடுத்ததில், கலவரம் ஏற்பட்டது. சப்–இன்ஸ்பெக்டர் துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டு, மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துக் கூட்டத்தைக் கலைக்க வேண்டியிருந்தது.

தணிகை சப்–மாஜிஸ்திரேட் தணிகைத் தாலுகா எல்லைக்குள் அமல் நடத்தக் கூடிய தடையுத்தரவைப் பிறப்பித்திருந்ததால், அதை மீறி, தாலுகாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஜூன் 22 இல் மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். “பொது மக்கள் போராட்டம்” என்று சொல்லும் வகையிலே தணிகைத் தாலுகாவில் எல்லைக் கிளர்ச்சி நடைபெற்றது.

**மீண்டும் அறப்போர்**

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு திட்டமிட்டபடி 1953 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் நாள் மீண்டும் அறப்போர் தொடங்கியது. முதல்நாள் நடைபெற்ற அறப்போரில் (சத்தியாக்கிரகத்தில்) பொதட்டூர்பேட்டை தியாகராசன், ராஜூ பிள்ளை ஆகியோர் பங்கேற்றனர். காந்தியடிகள் சிலைக்கு அருகில் அறப்போர் நடத்திய அவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தப் போராட்டத்தில் ஜூலை மூன்றாம் நாள் வரை நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

**மீண்டும் ம.பொ.சி. கைது**

ஜூலை மூன்றாம் நாள் அறப்போரில் தாமே ஈடுபடப்போவதாக ம.பொ.சி. அறிவித்தார்.

“சரியாக இரவு 9 மணிக்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டென்டின் மேற்பார்வையில் ராஜாஜி அனுப்பிய தந்தியொன்று என் கைக்குக் கிடைத்தது. அதிலே,

“தாங்கள் தடையை மீறிச் சிறைப்படத் தயாராகி விட்டதாக அறிகிறேன். அது தேவையற்றது. முடிவை மாற்றி அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிட்டு, உடனே சென்னைக்கு வந்து என்னைச்

சந்தியுங்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதை நான் எதிர் பார்க்கவில்லை. தந்தி கிடைத்த சிறிது நேரத்திற்குள் ஸ்தல இன்ஸ்பெக்டர் என்னிடம் வந்து, "முதல்வருக்கு ஏதேனும் தகவல் தெரிவிக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"எனது முடிவில் மாறுதல் இல்லை. நாளை காலை நான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவேன்" என்று கூறினேன்.

ராஜாஜியின் தந்தி கிடைத்ததும், அதற்கு மிகுந்த பணிவோடு பதில் கடிதம் எழுதி, நண்பர் ஒருவரிடம் கொடுத்து நான் சிறைப்பட்டபின் நேரில் கொண்டு போய் அவரிடம் கொடுக்குமாறு சொன்னேன். அந்தக் கடிதத்திலே,

"தங்கள் தந்தி கிடைத்தது, தடையை மீற வேண்டாம் என்று தனிப்பட்ட முறையில் அன்போடு கேட்டுக் கொண்டதற்கு நன்றி. தமிழக–ஆந்திர எல்லைப் பிரச்சினையைத் தீர்க்கும் அதிகாரம் தங்களிடம் இருந்தால் இதற்குள் தீர்த்து வைத்திருப்பீர்கள். அரசிடம்தான் இருக்கிறதாகையால், தங்கள் அன்புக் கட்டளையை மீறி நான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட வேண்டியவனாகி விட்டேன். மன்னியுங்கள். நாளை தடையை மீறினால் எனக்குத் தண்டனை கிடைக்கலாம். சிறையிலிருந்து மீண்டதும் தங்களை நேரில் சந்திக்கிறேன்"[45] என்று ம.பொ.சி. அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

காவல் துறையினரின் அச்சுறுத்தல் காரணமாகத் திருத்தணியில் உள்ள கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டிருந்த ஜூலை 3 அன்று காலை 9.00 மணிக்கு ம.பொ.சி. யும் திருத்தணி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் வெங்கடேசனும் அறப்போரில் ஈடுபட காந்தி சிலைக்குச் சென்றனர். ம.பொ.சியும் வெங்கடேசனும் கைது செய்யப்பட்டனர்.

ம.பொ.சி.யும் வெங்கடேசனும் கைது செய்யப்பட்டதைக் கண்டித்துத் திருத்தணியில் தொண்டர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். அவர்களைக் காவல்துறையினர் அடித்து விரட்டினார்கள்.

என்னைக் கைது செய்த போலீஸ் அதிகாரிகள் உடனடியாக சப்–மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்குக் கொண்டு சென்று வழக்கைத் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை. தணிகைத் துணைச் சிறையிலுள்ள அதிகாரிகளின் அறையில் என்னை அமர்த்திவிட்டு, என்னைக் கைது செய்திருப்பது பற்றி முதலமைச்சருக்குத் தகவல் தந்தனர். அவர், "இப்போது அவரை விடுதலை செய்து விட்டால் நேரில் சென்னை வந்து என்னைக் காண இசைவாரா என்று நான் கேட்டதாகச் சொல்லுங்கள்" என்றாராம். மாவட்டக் காவல்துறைத் துணை சூப்பிரண்டெடன்ட் அவர்கள் முதல்வரின் கருத்தை என்னிடம் சொல்லிவிட்டு, எனது பதிலை எதிர்பார்த்தார்.

முதல் நாளில் ராஜாஜி அனுப்பிய தந்திக்கு மதிப்பளித்துச் சத்தியாக்கிரகத்தை நான் கைவிட்டால், என் மதிப்புக் குறைந்து விடும் என்று நான் அஞ்சியிருக்க வேண்டும் என்றும், அதனாற்றான் ராஜாஜியின் அன்புக் கட்டளையைப் புறக்கணித்ததாகவும் அவர் கருதியிருக்க வேண்டும். சத்தியாக்கிரகம் செய்து விட்டதால் அதிகாரிகள் விடுதலை செய்தால் நான் சென்னை திரும்பக் கூடும் என்று அவர் கருதினார்.

"“என்னை விடுதலை செய்தால் திரும்பவும் சத்தியாக்கிரகம் செய்வேன்" என்று காவல் துறைத் துணை சூப்பிரண்டெண்டிடம் உறுதியாகக் கூறிவிட்டேன். ஆயினும், மாலை 5 மணி வரை ராஜாஜியிடமிருந்து எனக்கு அடிக்கடி காவல் துறை அதிகாரி மூலம் என் மனதை மாற்றத் தூண்டும் செய்திகள் வந்து கொண்டிருந்தன. நான் இறுதி வரை உறுதியாக இருந்து விட்டேன்"[46] என்று ம.பொ.சி.யின் சிறைத் தண்டனையைத் தவிர்ப்பதற்கு இராஜாஜி மேற்கொண்ட முயற்சிகளை ம.பொ.சி. தெரிவித்துள்ளார்.

திருத்தணியின் சப் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் மாலை 5.00 மணியுடன் முடிந்துவிடும். ஆனால் ம.பொ.சி.யை விசாரணை செய்ய வேண்டியிருந்ததால் அது 7.00 மணிவரை முடியாமல் இருந்தது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி ம.பொ.சி.க்கு ஆறு வாரக் கடுங்காவல் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். சிறையில் ம.பொ.சிக்கு 'ஏ' பிரிவு வகுப்பும் வெங்கடேசனுக்கு 'சி' பிரிவு வகுப்பும் வழங்கப்பட்டன. என்னுடன் போராட்டத்தில் கலந்து கொண்ட வெங்கடேசனுக்கும் 'ஏ' பிரிவு வகுப்பு வழங்கவேண்டும் அல்லது எனக்கும் 'சி' பிரிவே கொடுங்கள் என்றார் ம.பொ.சி. வேறு வழியில்லாமல் வெங்கடேசனுக்கு 'ஏ' பிரிவே நீதி மன்றத்தால் வழங்கப்பட்டது.

விசாரணை எட்டு மணிக்கு முடிந்தது. ம.பொ.சி.யையும் வெங்கடேசனையும் வேலூர் சிறைக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அப்போது திருத்தணியில் முகாமிட்டிருந்த காவல்துறைத் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் வி.ஆர். இராசரத்தினத்திற்கு ஒரு தகவல் வந்தது.

"பிரதமர் நேரு அவர்கள் சித்தூர் மாவட்டம் தகராறுக்குரிய பிரதேசம் என்பதனை ஒப்புக்கொண்டு அதற்காக விரைவில் எல்லைக் கமிஷன் அனுப்பப்படும் என்று, செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இதைத் தங்களிடம் தெரிவித்துத் தங்கள் கருத்தை அறிந்து உடனே தமக்குத் தகவல் தருமாறு முதலமைச்சர் இராஜாஜி கேட்டுள்ளார்" என்ற தகவலை வி.ஆர். இராசரத்தினம் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்பாக ஆந்திர மாநிலம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் நேரு பதினொரு மாவட்டங்களைத் தெரிவித்திருந்தார். அவை ஸ்ரீ காகுளம், விசாகப்பட்டினம், கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், கர்நூல், அனந்தப்பூர், படப்பை, சித்தூர் ஆகியவை.

"பிரதமர் நேருவின் அறிக்கையிலே சித்தூர் மாவட்டம் தகராறுக்கு இடமான பிரதேசம் என்பது தெளிவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகள் பற்றி விசாரணை நடத்த எல்லைக் கமிஷன் அனுப்பப்படும் என்றும் உறுதி கூறியுள்ளார். ஆகவே நேருவின் அறிக்கையை மனநிறைவுடன் ஏற்கிறேன்.

எந்தக் கோரிக்கைக்காக வடக்கெல்லைப் போராட்டம் நடத்தப்பட்டதோ அந்தக் கோரிக்கையைப் பிரதமர் நேரு ஏற்றுக்கொண்டுவிட்டதால், அவருக்கு நன்றி தெரிவிப்பதோடு, போராட்டத்தை நிபந்தனையின்றி நிறுத்திவைக்கிறேன். சென்னை மாநில அரசும் எல்லைக் கிளர்ச்சி காரணமாகச் சிறைப்பட்டுள்ளவர்களை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்வதோடு விசாரணையிலுள்ள வழக்குகளை வாபஸ் பெறும் என்றும் நம்புகின்றேன்.

வடக்கெல்லைக் கிளர்ச்சிக்கு உதவிபுரிந்த தமிழ்நாட்டு மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தமிழரசு கழகம், வடக்கெல்லைப் பாதுகாப்பு குழு ஆகியவற்றின் தலைவன் என்ற முறையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்''[48] என்று ம.பொ.சி. அறிக்கை வெளியிட்டார்.

இந்த அறிக்கையைக் காவல்துறையினர் முதலமைச்சர் இராஜாஜிக்கு அனுப்பிவைத்தனர். 'வடக்கெல்லைப் போராட்டம் காரணமாகச் சிறைவைக்கப்பட்டவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்றும் திருத்தணியில் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு திரும்பப் பெறப்படும்' என்றும் சென்னை மாநில அரசு அறிக்கை வெளியிட்டது. இருப்பினும் ஐந்து நாள் கழிந்த பிறகுதான் ம.பொ.சி.யும் மற்றவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

**வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுக்கூட்டம்**

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் செயற்குழுக் கூட்டம் சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள கே. விநாயகம் எம்.எல்.ஏ., வீட்டில் 10.07.1953 அன்று கூடியது. கூட்டத்திற்கு ம.பொ.சி. தலைமை தாங்கினார். இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'சித்தூர் மாவட்டத்தில் தகராறுக்குரிய பிரதேசங்கள் உண்டென்பதை ஒப்புக் கொண்டு அதைப்பற்றி விசாரித்து முடிவு செய்ய எல்லைக் குழு அனுப்பப்படும்' என்று பிரதமர் நேரு அளித்த

வாக்குறுதியை இக்குழு வரவேற்பதுடன் **1953** டிசம்பர் **31** ஆம் தேதிக்குள் எல்லைக்குழு அனுப்பப்பட்டுச் சித்தூர்ப் பிரச்சினை முடிவு செய்யப்பட வேண்டும் என்று இக்குழு வற்புறுத்துகின்றது.

சித்தூர்ப் பிரச்சினை பற்றி ஆராய்ந்து முடிவு செய்ய எல்லைக் குழு வருவதற்கு முன்பு உள்ள இடைக்காலத்தில் சித்தூர் மாவட்டத் தமிழர்களின் கல்வி உத்தியோக நலன்களுக்குப் பாதுகாப்புத் தரும்படி மத்திய அரசினரை வற்புறுத்தத் தூதுக்குழு ஒன்றைப் பிரதமர் நேருவிடம் அனுப்புவது என்று இக்குழு தீர்மானிக்கிறது என்பவை அத்தீர்மானங்களில் குறிப்பிடத் தக்கவை.

**ஆந்திரம் பிரியும் மசோதா**

ஆந்திர மாநிலப் பிரிவினை தொடர்பாக மத்திய அரசு ஒரு மசோதாவைச் சென்னை மாநில அரசுக்கு அனுப்பியது. அதில் 'தகராறுக்கு இடமில்லாத மாவட்டங்கள்' என்ற வாசகமும் இருந்தது. அதனை நீக்குவதற்கு மாநில அரசு முடிவு செய்தது. 'ஆந்திர மாநிலம் அமைந்ததும் தமிழக – ஆந்திர எல்லைத் தகராறைத் தீர்த்து வைப்பதற்காக மத்திய அரசு ஓர் எல்லைக் கமிஷனை நியமிக்க வேண்டும்' என்னும் விதியையும் அந்த மசோதாவில் மாநில அரசு சேர்த்தது.

இந்தத் திருத்தத்தை அப்போது ஆந்திர மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த என். சஞ்சீவி ரெட்டி வரவேற்று அறிக்கை விட்டார்.

இந்த மசோதா சட்டப் பேரவையில் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின்போது 'சென்னை நகரமானது ஆந்திரத்தின் வரிப்பணத்தையும் பயன்படுத்தி வளர்ந்ததென்று காரணம் சொல்லி, அதை இழந்து விட்டு ஆந்திரம் பிரிவதால், எஞ்சிய சென்னை மாநிலம் அதற்கு இழப்பீடு தரவேண்டும்' என்று கேட்டனர் ஆந்திரர்கள். அதற்கான விதியும் அந்த மசோதாவில் இருந்ததால், இரண்டு கோடி ரூபாய் இழப்பீடாக வழங்குவதற்கு அரசு ஒப்புக் கொண்டது.

**மேலவையில் மசோதா**

இந்த மசோதா மேலவையில் 21.7.53 அன்று தாக்கல் செய்யப்பெற்றது. அதன் மீது நடைபெற்ற விவாதத்தில் மேலவை உறுப்பினராக இருந்த ம.பொ.சி. பேசினார்.

ஆந்திர சகோதரர்கள், தங்களுடைய மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகத்தான் தனி ராஜ்யம் கேட்டார்கள். ஆகவே, அமைக்கப்படும் ஆந்திர ராஜ்யத்தில் தெலுங்கே அரசாங்க மொழியாக இருக்க வேண்டும். அந்த வகையில் ஆந்திர ராஜ்யம் தமிழ் நாட்டிற்கு வழி காட்ட வேண்டும்.

தமிழர்களிடமிருந்து பிரியும் ஆந்திரர்கள் தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதை வாங்கிக் கொண்டு நல்லெண்ணத்தோடும் நட்புணர்ச்சியோடும் பிரிந்து செல்ல வேண்டும்.

தமிழக-ஆந்திர எல்லைப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம்; எனக்கு முன்னே சித்தூர்த் தொகுதியின் பிரதிநிதி சித்தூர் ஜில்லாவிலுள்ள தகராறுக்குரிய தாலுகாக்களைப் பற்றி ஏதேதோ சொன்னார். சித்தூர் ஜில்லாவில் உள்ள தகராறுக்குரிய தாலுகாக்கள் பற்றி விவரமாக விவாதிக்க இந்தக் கவுன்சில் ஏற்ற இடமல்ல. அவற்றை எல்லைக் கமிஷன் முன் வைத்து வாதாடலாம். அதுவரை, நண்பர் செங்கல்வராய நாயுடு ஆந்திரருக்குச் சாதகமாகத் தாம் சேகரித்துள்ள ஆதாரங்களைப் பத்திரமாக வைத்துக் கொள்ளட்டும்.

இந்த அவையிலுள்ள ஆந்திர உறுப்பினர்களும் சரி; தமிழ் உறுப்பினர்களும் சரி; ஒரு விஷயத்தை ஒன்றுபட்டு வற்புறுத்துகிறோம். அது தமிழக – ஆந்திர எல்லைகளை நியாயமான முறையில் வரையறுக்க எல்லைக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்பதாகும்.

சித்தூர் மாவட்டத்தில் தமிழர் நடத்தும் கிளர்ச்சியோடு என்னைத் தொடர்புபடுத்திப் பல உறுப்பினர்கள் எனக்கு முன்பு பேசினார்கள். எல்லைக் கமிஷன் வரவேண்டும் என்று வாக்குறுதி

கோரியே நாங்கள் போராடினோம். அந்த வாக்குறுதி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. எவ்வளவு விரைவில் எல்லைக் கமிஷன் வருகிறதோ, அவ்வளவு விரைவில் எல்லை பற்றிய சர்ச்சைக்கு முடிவு காண முடியும்.

சித்தூர் மாவட்டத்திலுள்ள தகராறுக்குரியவை என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள தாலுகாக்களை, எஞ்சிய சென்னை ராஜ்யத்திலேயே விட்டுவைக்க மசோதாவில் விதி வகுத்திருக்க வேண்டும். மாறாக, மொழிவழி அமைக்கப்பட்டுள்ள – தெலுங்கு மொழியால் ஆளப்படவிருக்கின்ற ஆந்திர ராஜ்யத்தில் தமிழ்த் தாலுகாக்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இந்த அநியாயத்திற்குச் சாதகமாக இருந்துவிட்டன. ஆகவே, இதற்கு முடிவு காண எல்லைக் கமிஷன் வரும்வரை தமிழர் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று.

ராஜ்யங்களை மொழிவழிப் பிரிக்க வேண்டுமென்று நான் கோருவதற்கான முதல் காரணம் அரசியல்; இரண்டாவது காரணம் பொருளாதாரம்; மூன்றாவது காரணம் மொழி; நான்காவது காரணம் கலாச்சாரம்.

ஆந்திரம் பிரிந்த பிறகும் எஞ்சிய சென்னை ராஜ்யம் அப்படியே இருக்கட்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படியே ஏன் இருக்க வேண்டும்–தென் கன்னட, மலையாள மாவட்டங்களையும் பிரித்துவிட்டு, உடனடியாகத் தமிழ் ராஜ்யமும் அமைத்தால் என்ன கெட்டுப் போய்விடும்?

ஆந்திர ராஜ்யம் அமைத்து அதனால் கிடைக்கும் அனுபவம் தெரிந்த பிறகுதான் தமிழ் ராஜ்யத்தைப் பற்றி ஆலோசிக்கப் போவதாக மேலிடத்தார் கூறுகின்றனர். ஆந்திரத்தைப் போலல்லாமல், தமிழ்நாட்டிற்கு முதல்தரமான தலைநகரம் இருக்கிறது. தன் காலிலேயே நின்று சமாளிக்கக்கூடிய பொருளாதாரப் பலம் இருக்கிறது. நிர்வாகத் திறமை உடையவர்களும் நிறைய இருக்கிறார்கள். அப்படியிருந்தும், ஆந்திர ராஜ்யத்தின் அனுபவம் தெரியும்வரை தமிழர் காத்திருக்க வேண்டும் என்று சொல்வது எனக்கு வியப்பைத் தருகிறது.

ஆந்திர ராஜ்ய அமைப்பையொட்டி சொத்துப் பிரிவினை, பொக்கிஷப் பிரிவினை, கடன் பிரிவினை ஆகியவற்றைப் பற்றியும் பேசப்படுகின்றது. இந்த மசோதாவின் விதிகளைப் படித்துப் பார்த்தால், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தபோது நடந்த ஏற்பாடுகள் எல்லாம் இதிலே காணப்படுகின்றன.

நம்மிடமிருந்து ஆந்திரர் பிரிந்தாலும், அந்தப் பிரிவினைக்குப் பின்னும் அவர்களும் நாமும் "இந்தியா" என்ற ஒரு பெரிய குடும்பத்தில் சேர்ந்தே இருக்கப் போகின்றோம். அப்படியிருக்க ஏன் இவ்வளவு விரிவான பிரிவினைகள்?

ஆந்திர ராஜ்யத்திற்கு எஞ்சிய சென்னை ராஜ்யம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமாம்! வடக்கே மொழி வழி ராஜ்யங்கள் அமைக்கப்பட்ட போதெல்லாம் தன்னிடமிருந்து பிரிந்து போகும் பிரதேசத்திற்கு எஞ்சிய ராஜ்யம் நஷ்ட ஈடு கொடுத்ததா? இல்லையே!

கல்கத்தா மாகாணத்திலிருந்து அசாமும் ஒரிசாவும் பிரிந்து சென்றபோது எஞ்சிய கல்கத்தா மாகாணம் நஷ்ட ஈடு கொடுக்கவில்லையே!

பம்பாய் மாகாணத்திலிருந்து சிந்துவும் பஞ்சாபும் பிரிந்த போதும் எஞ்சிய பம்பாய் மாகாணம் நஷ்ட ஈடு கொடுக்கவில்லையே!

அப்படியிருக்க, இங்கு மட்டும் எதற்காகப் புதிய தவறான சம்பிரதாயத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும்?

வேண்டுமானால், ஆந்திரம் நமது சகோதர மாகாணம் என்பதற்காக "நஷ்ட ஈடு" என்ற பெயரால் பணம் கேட்கட்டும். கொடுக்கலாம். "நஷ்ட ஈடு" என்ற சொல்லையே நான் ஆட்சேபிக்கிறேன். நஷ்ட ஈடு கோரவோ கொடுக்கவோ, எந்த நியாயமும் கிடையாது.

இந்த நஷ்ட ஈடும் 1950 இல் ஆந்திரம் பிரிந்து செல்வதாக இருந்தபோது ஆந்திரப் பிரிவினைக் கமிட்டியானது ஒரு கோடி ரூபாய் என்று வரையறுத்தது. அண்மையில் நீதிபதி வான்சூ மத்திய அரசுக்குத் தந்த அறிக்கையில் அது இரண்டு கோடி முப்பது லட்சம்

ரூபாய் என்று உயர்த்தப்பட்டது. இப்போது அதுவும் போதாதென்று ஆந்திரரிலே ஒரு சாரார் நாலரைக் கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்கிறார்கள். மற்றொரு சாரார் அதைப் பத்துக் கோடியாக உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த மட்டிலேனும் நிறுத்திக் கொண்டார்களே, அதற்காக மனமார்ந்த நன்றி.

"தற்போதைய முதலமைச்சர் ராஜாஜி ஒரு தமிழர். ஆயினும், அவர் ஆந்திரருக்கும் தமிழருக்கும் பொதுவானவர். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் ஆந்திரருக்கும் நீதி வழங்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே அவரும் அவரது மந்திரி சபையும் தமிழருக்கும் நீதி வழங்க வேண்டும்.

"நஷ்ட ஈடு விஷயத்தில் எஞ்சிய சென்னை ராஜ்யத்தின் நிதி நிலையையும் கவனிக்க வேண்டும். நஷ்ட ஈடு கொடுப்பதன் மூலம் பொக்கிஷத் துறையில் சென்னை ராஜ்யம் வறுமைப்பட்டுத் திருவோடு ஏந்தக் கூடிய நிலையில் வைக்கப்படுமோ என்று அஞ்சுகிறேன். அந்த நிலைமை ஏற்படக்கூடாது. இதையெல்லாம் கவனத்தில் வைத்து இந்தக் கவுன்சில் அங்கத்தினர்கள் ஆந்திர ராஜ்ய மசோதாவைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

"பொதுவாக, ஆந்திர ராஜ்ய மசோதாவை மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியோடும் ஆதரிக்கிறேன். நமது ஆந்திர சகோதரர்கள், "இந்தியா" என்ற வீட்டிலுள்ள பல குடித்தனங்களில் ஒரு குடித்தனக்காரராக இருந்து, தனி வாழ்க்கை – நல் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்"[49] என்று தமது நீண்ட உரையை முடித்தார்.

ம.பொ.சி.யின் உரைக்குப் பிறகு இழப்பீடு கொடுப்பதுபற்றி முதலமைச்சர் இராஜாஜிக்கு மாற்றுக் கருத்துத் தோன்றியது. எனவே இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை மத்திய அரசே முடிவு செய்யட்டும் என்று விட்டுவிட்டார்.

சென்னை மாகாண சட்டமன்றம் ஆந்திரப் பிரிவினை மசோதாவைச் சில திருத்தங்களுடன் ஏற்றுக் கொண்டு மத்திய அரசுக்கு அனுப்பியது. இறுதியாக, நாடாளுமன்றத்தில்

விவாதிக்கப்பட்ட போது சென்னை மாகாண அரசு செய்த – சித்தூர் மாவட்டப் பிரச்சினை பற்றி எல்லைக் கமிஷன் நியமிக்க வேண்டுமென்ற திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சட்டமாக்கப்பட்டது.

1953 அக்டோர் முதல் தேதியன்று கர்நூல் நகரைத் தற்காலிகத் தலைநகராகக் கொண்டு "ஆந்திர மாநிலம்" அமைந்தது. திரு. டி. பிரகாசம் தலைமையில் அமைச்சரவை நிறுவப்பட்டு, "ஆந்திர ராஜ்ய நாள்" கொண்டாடப்பட்டது.

ஆந்திர மாநிலம் பிரிந்த நாளைத் திருத்தணியில் உள்ள தெலுங்கர்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள். அந்த ஆரவாரத்தைத் தமிழ் மக்கள் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

திருத்தணிப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்குத் தங்களுக்குச் சொந்தமான பகுதி ஆந்திரர்களிடம் இருக்கிறதே என்ற கவலை. இது தலைவர்களைப் பெரிதும் வாட்டியது.

"வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவைச் சார்ந்த தளபதி கே. வினாயகம் எம்.எல்.ஏ., உள்பட நாங்கள் அனைவரும் தமிழகத்தில் தணிகைப் பகுதிகள் சேரும்வரை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குச் செல்வதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டோம். திருவாலங்காடு டி.எம். திருமலை பிள்ளை, தணிகைப் பிரச்சனை முடியும் வரை தாடி வளர்ப்பதென்று முடிவு செய்தார்"[50] என்று கோல்டன் சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

**கே. வினாயகம் – ராஜாஜி சந்திப்பு**

சென்னை மாநிலத்தின் முதல்வராக இருந்த இராஜாஜி, கே. வினாயகத்தை அழைத்துப் பேசினார். அப்போது 1951 ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகைக் கணிப்புப்படி தமிழர் வாழும் பகுதியைப் பிரித்துத் தமிழ்நாட்டுடன் சேர்க்க மத்திய அரசு எண்ணுகிறது என்று அவர் தெரிவித்தார். இதை, கே. வினாயகம் ஏற்றுக்கொள்ளவில்லை. 1951 ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் வன்னியர்களையும் வேளாளர்களையும்

'ரெட்டி' என்றே குறிப்பிட்டுள்ளனர். ரெட்டி என்பது தெலுங்கர்களின் சாதிப்பெயராக இருப்பதால் ரெட்டி என்று அழைக்கப்படும் வன்னியர்களும் வேளாளர்களும் தெலுங்கர்களாகவே கருதப்படுவார்கள். மேலும் தாழ்த்தப்பட்டவர்களை இந்தக் கணக்கெடுப்பில் ஆதி ஆந்திரர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். எனவே, பழைய கணக்கெடுப்பின்படி, பிரிக்காமல் மொழி அடிப்படையில் புதுக்கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இதை ஏற்றுக் கொண்ட இராஜாஜி மத்திய அரசுக்குத் தெரிவித்தார். அதற்கிணங்க ஜெ.ஜெ. அற்புதநாதன் என்பவர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேலதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவருக்குச் சென்னை மாநில, ஆந்திர மாநிலப் பிரதிநிதிகள் துணைபுரிந்தனர்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குச் சித்தூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி, புத்தூர், சித்தூர், கங்குந்திகுப்பம், பல்லவனேரி, திருப்பதி ஆகிய ஆறு தாலுகாக்களும் உட்படுத்தப்பட்டன. மேலும் ஆந்திர அரசின் வேண்டுகோளுக்கு இணங்க அப்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பொன்னேரி, திருவள்ளூர், சேலம் மாவட்டத்தில் உள்ள ஒசூர், கிருஷ்ணகிரி, வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், குடியாத்தம் முதலிய பகுதிகளிலும் மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டது.

முதல்வர் ராஜாஜியும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராசரும், தமிழ் மாநிலக் கிளர்ச்சியையும் தமிழக வடக்கெல்லைக் கிளர்ச்சியையும் விரும்பவில்லை. போராட்டம் இல்லாமல் மத்திய அரசிடம் கேட்டே தமிழ்ப் பகுதிகளைப் பெறமுடியும் என்று அவர்கள் நம்பினார்கள். தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களிலே பெரும்பாலோர் நடத்திய கிளர்ச்சிகளுக்கு மனமுவந்து ஆதரவளித்தனர். காங்கிரஸ் கமிட்டிகளும், காங்கிரசின் செல்வாக்கு மிகுந்த நகர மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும், "தமிழ் மாநிலம்" கோரியும், வேங்கடமே தமிழகத்தின் வடக்கெல்லையாக வேண்டும் என்று வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றின.

டி. பிரகாசம், என். சஞ்சீவரெட்டி ஆகிய ஆந்திரத் தலைவர்கள், மத்திய அரசின் மார்ச் 25 ஆம் தேதிய பிரகடனப்படி,

சித்தூர் மாவட்டம் பற்றி விசாரணை நடத்த எல்லைக் கமிஷனுக்கு அதிகாரமில்லையென்று ஆளுக்கு ஆள் நாளுக்கு நாள் அறிக்கை விட்டனர்.

அப்போது, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக இருந்த டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் கூட, சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திரத்தில் இணைத்து விடுவதை வெளிப்படையாக ஆதரித்தார். திருத்தணிவாசியாதலால், வடக்கெல்லைச் சிக்கலில் இவரது கருத்துக்கு மதிப்பு இருந்தது.

டில்லி நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகராகவிருந்த அனந்தசயனம் ஐயங்காரும் வரிந்து கட்டிக்கொண்டு ஆந்திரருக்கு ஆதரவாக வேலை செய்தார். "சித்தூர் தமிழ் ஐயங்காரான இவர் அசல் ஆந்திரரைவிடவும் தீவிரமாக இருந்தார். இப்படி, ஆந்திரரெல்லாம் டாக்டர் இராதாகிருஷ்ணன், அனந்த சயனம் போன்ற இருமொழி (தமிழ்– தெலுங்கு) பேசுவோருட்பட ஒரே அணியிலிருந்தது போல, தமிழர் இருக்கவில்லை.

ஆர். வெங்கடராமன் எம்.பி. சித்தூர் மாவட்டம் ஆந்திரத்திலே சேர்க்கப்பட்டுவிட்டது. அதன் எந்தப் பகுதி மீதும் தமிழர் உரிமை கொண்டாடுவதற்கில்லை என்று அறிக்கை விட்டார்.[51]

**திருப்பதியைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க மக்கள் விருப்பம்**

திருப்பதி, சித்தூர், திருக்காளத்தி, பல்லவனேரி, கங்குந்தி குப்பம், திருத்தணி ஆகிய பகுதிகளைத் தமிழ் மாநிலத்துடன் இணைக்கவேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள்.

"அந்தத் தாலுகாக்களில் வாழ்வோர் சுத்தத் தமிழர் அல்லரென்றால், அப்படியே அவர்கள் சுத்தமான ஆந்திரர்களுமல்லர். அவர்களில் பெரும்பாலோர் இருமொழி (தமிழ், தெலுங்கு) பேசுவோர். அவர்களுடைய குடும்பத் தொடர்புகள் ஆந்திரத்தோடு இருப்பதைவிடத் தமிழகத்தோடுதான் அதிகம் உள்ளன.

இத்துடன், இயற்கை அரணாகிய திருப்பதி மலை தமிழகத்திற்கும் ஆந்திரத்திற்குமிடையே நிலையான இயற்கை எல்லையாக அமைந்திருக்கிறது.

தார் கமிஷன் கூட, மாநிலங்களை மொழிவாரியாகப் பிரிக்குங்கால், அவற்றினிடையே மலை அல்லது ஆறு போன்ற இயற்கை அரண் இருக்க வேண்டும். அதிலே, மொழி வரம்பு வேறுபட்டாலும் அதற்கு முக்கியத்துவமளிக்கக்கூடாது என்று கூறியிருந்தது.

மற்றும் திருப்பதி, சித்தூர் ஆகிய நகரங்களிலுள்ள தெலுங்கு மொழி பேசும் வழக்கறிஞர்களை நான் அணுகிப் பேசியபோது, "விசால ஆந்திரம் அமையுங்கால், அதன் தலைநகரம் ஐதராபாத்தாகத்தான் இருக்கும். அந்நகரம் சித்தூர் மாவட்டத்திலுள்ள எங்களுக்கு 500 மைல் தெலைவிலிருக்கிறது. அங்குச் செல்ல மூன்று ரயில்கள் மாறவேண்டும். சென்னையோ, 90 மைல் தொலைவிலிருக்கிறது. ஆகவே, சென்னை நகரம் எந்த ராஜ்யத்தோடு சேருகிறதோ அந்த ராஜ்யத்தில்தான் சித்தூர் மாவட்டத்தைச் சேர்க்க வேண்டும்" என்று என்னிடம் கூறினார்கள்.

சென்னை எந்த மாநிலத்தோடு சேருகிறதோ அந்த மாநிலத்தோடு சித்தூர் மாவட்டத்தைச் சேர்க்க வேண்டுமெனச் சித்தூர் – திருப்பதி வக்கீல் சங்கங்கள், திருப்பதி – திருமலை தேவஸ்தான போர்டு ஆகியவை தீர்மானங்கள் நிறைவேற்றின. திருப்பதி, சித்தூர் நகரமன்றங்கள் கூட இதேபோலத் தீர்மானங்கள் நிறைவேற்றியதாக நினைவிருக்கிறது"[52] என்று ம.பொ.சி தமது எனது போராட்டம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழக முதல்வர் காமராசர்**

1954 ஆம் ஆண்டு தமிழக முதல்வராகப் பெருந்தலைவர் காமராசர் பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் நிதிஅமைச்சர், கல்வி அமைச்சர் பொறுப்புகளை சி. சுப்பிரமணியம் வகித்தார். சி. சுப்பிரமணியத்தின் பொறுப்பில் எல்லைப் பிரச்சினை விடப்பட்டது. வெங்கடேஸ்வரன் என்னும் இந்திய ஆட்சிப் பணியாளர் அவருக்குத் துணைபுரிந்தார்.

**எல்லைக் குழு வேண்டிக் கோரிக்கை நாள்**

ஆந்திரத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளைப் பிரித்துத் தமிழ்நாட்டுடன் சேர்ப்பதற்கு ஓர் எல்லைக் குழுவை நியமிக்க

வேண்டும் என்று தமிழரசு கழகம் கோரியது. எனவே, 04.07.1954 இல் எல்லைக் குழு வேண்டிக் கோரிக்கை நாள் கொண்டாடத் தமிழரசு கழகம் முடிவு செய்தது.

"சித்தூர் மாவட்டத் தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு சேர்ப்பது பற்றி விசாரணை நடத்த ஆந்திர ராஜ்யம் அமைக்கப்பட்டவுடனேயே எல்லைக் கமிஷன் அனுப்பப்படுமென்று 1953 ஜூலை 3 ஆம் தேதி பிரதமர் நேரு பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டார். இந்த வாக்குறுதியின் பேரில்தான் சித்தூர்த் தமிழ் மக்கள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டம் ஜூலை மாதம் 4 ஆம் தேதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் வாக்குறுதி கொடுத்து ஓராண்டாகிறது, ஆந்திர ராஜ்யம் அமைந்தும் ஒன்பது மாதங்களாகிவிட்டன. இன்னமும் எல்லைக் கமிஷன் நியமிக்கப்படவில்ல. எல்லைக் கமிஷன் மூலம்தான் சித்தூர்ப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் சென்னை ராஜ்ய முதலமைச்சர் உறுதி காட்டுகிறார். ஆயினும், எல்லைக் கமிஷன் நியமனத்தைத் துரிதப்படுத்த அவரால் முடியவில்லை.

இந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆந்திர முதலமைச்சர் எல்லைக் கமிஷன் நியமிப்பதை ஒப்புக்கொள்ள முடியாதென்று தெளிவாகத் தெரிவித்துவிட்டார். சித்தூர் ஜில்லாவில் தமிழகத்தோடு சேர்க்கப்பட வேண்டிய பகுதிகளே இல்லை என்று கூடப் பொறுப்பு வாய்ந்த ஆந்திரத் தலைவர்கள் அடிக்கடிக் கூறிவருகின்றனர். கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்களில், சித்தூர் ஜில்லா தமிழ்ப் பகுதிகளை அசல் ஆந்திரப் பிரதேசமாகவே எண்ணி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் ஆந்திர ராஜ்ய அதிகாரிகள். சித்தூர் தகராறுக்கிடமான ஜில்லா எனப் பிரதமர் நேரு அறிவித்திருந்தும், திருமலை–திருப்பதி தேவஸ்தான போர்டு சம்பந்தமாக ஆந்திர ராஜ்யம் ஒருதலைப் பட்சமாகச் சட்டம் இயற்றியிருப்பதோடு, திருப்பதியில் வெங்கடேஸ்வரா சர்வகலா சாலை ஒன்றை நிறுவவும் திட்டமிட்டிருக்கிறது.

இதையெல்லாம் பார்க்கின்ற போது, சித்தூர்த் தமிழ்ப் பகுதிகளை மீட்கும் விஷயத்தில் இனியும் அஜாக்கிரதையாக

இருந்தால் அவை நிரந்தரமாக ஆந்திர ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டு விடுமோ என அஞ்ச வேண்டியிருக்கிறது.

ஆகவே, பிரதமர் நேரு முன்பே வாக்களித்துள்ளபடி ஜூன் 30 ஆம் தேதிக்குள் எல்லைக் கமிஷன் நியமித்து சித்தூர் மக்கள் மீண்டும் கிளர்ச்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று ஏப்ரல் 30 ஆம் தேதி கூடிய வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் செயற்குழு தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தின் நகல் இந்தியப் பிரதமருக்கும், சென்னை ராஜ்ய முதலமைச்சருக்கும் அனுப்பப்பட்டிருந்தும் இதுவரை அவர்களிடமிருந்து எத்தகைய பதிலும் கிடைக்கவில்லை.

போதாக்குறைக்குத் திருத்தணி போன்ற தமிழ்ப் பிரதேசங்களைத் தாய்த் தமிழகத்தோடு சேர்க்கும்படி கேட்பது தவறென்றும், அதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆதரிக்காதென்றும் அக்கமிட்டியின் காரியதரிசி திரு. ஆர். வெங்கட்ராமன், எம்.பி., சமீபத்தில் திருநெல்வேலியில் பேசியிருக்கிறார். அவர் தெரிவித்துள்ள கருத்துதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கொள்கை என்றால், மீண்டும் ஒரு போராட்டம் இன்றிச் சித்தூர் தமிழ்ப் பகுதிகளை அடையமுடியாதோ என்று வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி இன்னமும் நம்புகின்றது.

என்றாலும், சித்தூர் தமிழ்ப் பகுதிளை மீட்பதில் தமிழ் மக்களுக்குள்ள உறுதியை ஆந்திர ராஜ்யத்தினர் அறிந்துகொள்ளும்படி செய்யவும், வாக்குறுதி தந்தபடி எல்லைக் கமிஷன் உடனடியாக அனுப்பும்படி மத்திய அரசினரை வற்புறுத்தவும், கடந்த ஆண்டில் சித்தூர் போராட்டம் நிறுத்தப்பட்ட தினமாகிய ஜூலை மாதம் 4–ஆம் தேதியை "எல்லைக் கமிஷன் தினம்" ஆகக் கொண்டாடுமாறு வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி தமிழ் இனத்தவரை வேண்டிக் கொள்ளுகிறது. இந்தக் கொண்டாட்டத்தைக் கட்சி பேதமின்றி, எல்லா அரசியல் கட்சியினரும், பிற ஸ்தாபனத்தினரும் கொண்டாடுவார்களென்று எதிர்பார்க்கின்றது.

பிரஸ்தாப தினத்தன்று அமைதியான முறையில் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்திச் சித்தூர்

பிரச்சினையைப் பொது மக்களுக்கு விளக்கிக் கூறுவதுடன் வாக்குறுதி தந்தபடி தாமதமின்றி எல்லைக் கமிஷன் அனுப்பிவைக்க வேண்டுமென்று மத்திய அரசினரை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அதன் நகலை இந்தியப் பிரதமருக்கும், சென்னை ராஜ்ய முதலமைச்சருக்கும் தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

10/6/54 ம.பொ. சிவஞானம்
சென்னை தலைவர், வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு"[53]

எல்லைக் குழுவின் கோரிக்கை நாள் கூட்டங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்றன. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கோரிக்கை நாள் கூட்டங்களில் பங்கேற்கக் கூடாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தடை விதித்திருந்தது. அந்தத் தடையையும் மீறித் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் பலர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். சென்னையில் நடைபெற்ற கோரிக்கை நாள் பொதுக்கூட்டத்தில் ம.பொ.சி. பங்கேற்றார்.

"நான் காங்கிரசுக்கு விசுவாசமுடையவன். ஆனால், காங்கிரசின் பேரால் ஒரு சிலர் செய்யும் மிரட்டல்களுக்காகத் தமிழ் இனத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளை நான் கைவிட்டுவிட முடியாது. காங்கிரசிலிருந்து மட்டுமல்ல, உலகத்திலிருந்தே வெளியேற்றப்படுவதானாலும் இந்த ம.பொ.சி. யாருக்கும் மண்டியிடமாட்டான்.

எல்லைக் கிளர்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ள வேண்டாமென்று முதலமைச்சர் காமராசர் அறிக்கை விடுத்திருக்கிறார். அவருடைய தூண்டுதல் பேரில் தமிழ்நாடு காங்கிரசும் எல்லைக் கமிஷன் தினத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்று காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குத் தனித்தனியே கட்டளை அனுப்பியிருக்கிறது. போதாக் குறைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் காரியதரிசி, சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி தலைவர், செயலாளர் ஆகியோரும் பகிரங்கமாக எங்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆம், காங்கிரஸ் அலுவலக பியூன் ஒருவர் தான் இது விஷயத்தில் எனக்கு எதிராக அறிக்கை விடவில்லை.

தமிழரசு கழகம், காங்கிரசுக்கு எதிராகவோ, காமராசரின் ஆட்சிக்கு விரோதமாகவோ கிளர்ச்சி நடத்தவில்லை. தமிழினத்தின் எல்லைகளை ஆக்கிரமிப்பவர் யாராயிருந்தாலும் அப்படிப் பட்டவர்களை எதிர்த்துப் போராடத் தமிழரசு கழகம் தயங்காது.

நான் காங்கிரஸ்காரன் என்பதனாலேயே தமிழகத்தின் எல்லைகள் பறிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? அந்த அநீதியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வது காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு விரோதமா? 'ஆம்' என்றால், அப்படிப்பட்ட ஒரு கட்சி தங்களுக்கு வேண்டுமா என்பதைப் பற்றி, தமிழ்மக்கள் முடிவு கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். மகத்தான காங்கிரசுக்கு அந்த அபாய நிலையைத் தேடிவிட வேண்டாமென்று தமிழ்நாடு காங்கிரசை நிர்வகிக்கும் என் சகாக்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

இன்றைய கட்டத்தில் காங்கிரஸ்காரன் என்ற முறையில் அல்லாமல் ஒரு தமிழன் என்ற முறையில்தான் நான் கலந்து கொள்ளுகிறேன். ஏன் என்றால், எல்லைப் பிரச்சினை அரசியல் கட்சி சார்பற்ற விஷயம். ஆகவே, அதில் ஈடுபடுவதைத் தடுக்க எந்தக் கட்சிக்கும் உரிமை இல்லை"[54] என்று ம.பொ.சி. அக்கூட்டத்தில் உரையாற்றினார்.

எல்லைக்குழுவின் கோரிக்கை நாள் கூட்டத்தில் கலந்து கொண்டதால் ம.பொ.சி.க்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஆர். வெங்கட்ராமன் ஒரு கடிதம் அனுப்பினார். அதில் ம.பொ.சி.யைத் தமிழரசு கழகத்திலிருந்து விலகக் கோரியிருந்தார்கள். அவ்வாறு விலகவில்லை என்றால் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கப்படுவீர்கள் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தக் கடிதம் தொடர்பாக, காமராசரைச் சந்தித்துப் பேசினார் ம.பொ.சி. காமராசருடன் சந்தித்துப் பேசிய செய்திகள் அனைத்தையும் 03.08.1954 அன்று நடைபெற்ற தமிழரசு கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூறும் காரணங்களுக்காகத் தமிழரசு கழகத்தார் காங்கிரசிலிருந்து

வெளியேற வேண்டிய அவசியமில்லையென்றும் மாறாக, இனியும் காங்கிரசில் நீடித்திருக்க அவர்களுக்கு உரிமை உண்டென்றும் இந்தச் செயற்குழு கருதுகிறது.

ஆயினும் மொழிவழி மாநிலப் பிரிவினை, எல்லைப் பிரச்சனை, தாய் மொழியை ஆட்சி மொழியாக்குதல் ஆகிய அகில இந்திய காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளைச் செயல்படுத்த மற்ற மாநிலங்களில் அந்தந்த மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளே பொறுப்பேற்றுச் செயலாற்றுவது போல, தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகள் தங்கள் கடமையைச் செய்யாததோடு, தமிழர் சம்பந்தப்பட்டவரையில் இந்த நலன்களைப் பாதிக்கக்கூடிய வகையிலும் நடந்து கொள்ளுவதால், இவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் இனியும் காங்கிரசில் நீடித்திருப்பதன் மூலம் தமிழ் இனத்தின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என்று இச்செயற்குழு நம்புவதால், தமிழரசு கழக அங்கத்தினர்கள் காங்கிரசிலிருந்து விலகிவிட அனுமதிப்பதென்று தீர்மானிக்கிறது."[55]

தமிழரசு கழகத்தின் செயற்குழுவில் எடுத்த தீர்மானத்தின்படி ம.பொ.சியும் மற்றவர்களும் **08.08.1954** அன்று காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார்கள்.

**எல்லைக் குழு வேண்டி வினாயகம் எழுதிய கடிதம்**

ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளைப் பிரிப்பதற்கு எல்லைக் குழு நியமிக்க வேண்டும் என்று நேருவுக்கு வினாயகம் ஒரு கடிதம் எழுதினார்.

"அன்பார்ந்த ஐயா, வணக்கம். சித்தூர் தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் சார்பிலும், வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் தளபதி என்ற முறையிலும் சில முக்கிய விஷயங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதி கோருகிறேன்.

ஆந்திர ராஜ்யத்தில் இணைக்கப்பட்டிருக்கும் சித்தூர் ஜில்லாவிலுள்ள, திருத்தணி, புத்தூர், சித்தூர், கங்குந்தி குப்பம், பல்லவனேரி, சந்திரகிரி (திருப்பதி) ஆகிய ஆறு தாலுகாக்கள் தமிழருக்குரியவை–தமிழ் ராஜ்யத்தோடு சேர்க்கப்பட வேண்டியவை.

அப்படி இருந்தும், அந்தப் பகுதிகளடங்கிய ஜில்லா சித்தூர் எனப் பெயரிடப்பட்டு, அதை ஆந்திர ராஜ்யத்தில் சேர்த்துவிட்டதாக 1953 மார்ச் 25 ஆம் தேதி தாங்கள் வெளியிட்ட பிரகடனத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள்.

பிறகு, சித்தூர்த் தமிழ் மக்கள் செய்த சாத்வீகக் கிளர்ச்சியின் காரணமாகச் சித்தூர் ஜில்லாவில் தமிழர் கோரும் பகுதிகள் பற்றி விசாரணை செய்து முடிவு காண எல்லைக் கமிஷன் அனுப்பப்படுமென்று உறுதிகூறி 1953ஆம் வருடம் ஜூலை மாதம் 3ஆம் தேதி தாங்கள் மற்றொரு அறிக்கை வெளியிட்டிருந்தீர்கள்.

அந்த அறிக்கையின் மூலம் சித்தூர் ஜில்லா தகராறுக்குரிய ஜில்லா என்று ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டதாலும், எல்லைக் கமிஷன் மூலம் தகராறு தீர்க்கப்படுமென்ற உத்தரவாதம் கிடைத்து விட்டதாலும் சித்தூர் தமிழ் மக்கள் சார்பில் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகத்தை வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. தாங்கள் கொடுத்த வாக்குறுதி காலத்தோடு நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கையால்தான் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி சத்தியாக்கிரகத்தை விட்டது.

1953 செப்டம்பர் 2ஆம் தேதி எனது தலைமையில் டில்லியில் தங்களைப் பேட்டி கண்ட தூதுக்குழுவிடமும் எல்லைக் கமிஷன் அனுப்பப்படுமென்ற பழைய உத்தரவாதத்தை மறுமுறையும் தாங்கள் உறுதிப்படுத்தினீர்கள்.

ஆந்திர ராஜ்ய அமைப்பு மசோதா மீது இந்தியப் பார்லிமெண்டின் விவாதம் நடந்த போதும், சித்தூரில் தகராறுக்கிடமான பகுதிகளை விசாரிக்க எல்லைக் கமிஷன் அனுப்பப்படுமென்றும் உள்துறை அமைச்சர் டாக்டர் கே.என்.கட்சுவும் உறுதி கூறினார்.

ஆந்திர மாகாணம் அமைந்த உடனேயே எல்லைக் கமிஷன் நியமிக்கப்படுமென்று, தாங்களும், டாக்டர் கட்சுவும் காலம் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால் சித்தூரில் நடைபெற்ற போராட்டம் நிறுத்தப்பட்டு ஓராண்டாகிவிட்டது. ஆந்திர ராஜ்ஜியம் அமைந்தும்

ஒன்பது மாதங்கள் கடந்துவிட்டன. இதுவரை எல்லைக் கமிஷன் நியமிக்கப்படவில்லை. மாகாணப் புனர் அமைப்புக் கமிஷன் நியமிக்கப்படுமென நாங்கள் எதிர்பார்த்தோம். அப்படி நடைபெறாதது குறித்துப் பெரிதும் ஏமாற்றமடைந்து விட்டோம்.

சித்தூர் தமிழ்ப் பகுதிகள் விஷயத்தில் ஆந்திர அரசாங்கத்தின் போக்கும் தமிழ் மக்களுக்கு ஆத்திரமூட்டுவதாகவிருக்கின்றது. 3–7–53 இல் தாங்கள் வெளியிட்ட அறிக்கைப்படி திருப்பதி தகராறுக்குரிய பிரதேசம் என்பது தெளிவாகிறது. அப்படி இருந்தும், திருமலை–திருப்பதி தேவஸ்தான போர்டு பற்றிய சட்டத்திற்குத் தனது விருப்பப்படி திருத்தம் கொண்டு வந்து அசெம்பிளியில் அதை நிறைவேற்றி வைத்திருக்கிறது ஆந்திர அரசாங்கம்.

திருப்பதிப் பிரதேசத்தில் வெங்கடேஸ்வரா சர்வகலாசாலை ஒன்றை நிறுவவும் ஆந்திர அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

மற்றும், திருப்பதி கீழ்த் திசைக் கல்லூரியில் இதுவரை இருந்து வந்தது போல் தமிழுக்கு இடங்கொடுக்க முடியாதென்றும் கூறப்படுகிறது.

சுருங்கச் சொன்னால், தகராறுக்குரிய பகுதிகள் என்று தங்களால் அறிவிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளை அசல் ஆந்திரப் பகுதிகளாக எண்ணி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் ஆந்திர ராஜ்ஜியத்தினர்.

நிலைமை இப்படியே நீடித்தால், சித்தூர் ஜில்லாவில் தமிழருக்கும் ஆந்திரருக்கும் இடையே விரும்பத் தகாத விளைவுகள் ஏற்பட்டு விடுமென்று வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி அஞ்சுகின்றது.

சித்தூர் ஜில்லாவில் தகராறுள்ள பகுதிகளுக்காக எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்று ஆந்திரம் பிரிந்து போவதற்கு முன்னிருந்த சென்னை அசெம்பிளியில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறி இருக்கிறது. இப்போது ஆந்திர

முதலமைச்சராயிருக்கும், பிரகாசம் உள்பட அசெம்பிளியில் அப்போது ஆஜராகி இருந்த ஆந்திர அங்கத்தினர்கள் அத்தனை பேரும் தீர்மானத்திற்கு ஆதரவளித்தனர்.

பிரகாசம், ஆந்திர ராஜ்ஜிய முதலமைச்சரான சில நாட்களுக்குப் பிறகுகூட திருத்தணி பிரச்சனை பற்றி விசாரிக்க எல்லைக் கமிஷன் நியமிக்கப்படுவது நிச்சயமென்று கர்நூலில் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறினார்.

அப்படி இருக்க, சென்னை ராஜ்ஜியத்தில் காமராசர் முதலமைச்சராக வந்த பிறகு, சித்தூர் பிரச்சனையை எல்லைக் கமிஷன் மூலம் தீர்க்க முயற்சிப்பதை ஒப்புக்கொள்ள முடியாதென்று ஆந்திர ராஜ்ய முதல் அமைச்சர் அடிக்கடி கூறிவருவது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி அவர் மனம் மாறியதன் அந்தரங்கத்தை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

போதாக்குறைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி ஆர்.வெங்கட்ராமன், எம்.பி. அவர்களும், சித்தூர் தமிழ் மக்களின் கோரிக்கைக்கும் வாக்குறுதிக்கும் விரோதமாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்.

திருத்தணிப் பகுதியைத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை சரியானதல்ல. ஜில்லா வாரியாக மாகாணம் அமைக்க நாம் ஒப்புக்கொண்டு விட்டதால் நாம் திருத்தணியைக் கேட்க முடியாது, என்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் அவர் பேசியதாக 'சுதேசமித்திரன்' பத்திரிகை **9–6–54**ஆம் தேதி இதழில் பிரசுரமாகி இருக்கிறது.

இதையெல்லாம் பார்த்தால், சித்தூர் பகுதிகள் மீண்டும் தமிழ்நாட்டோடு சேர்க்கப்படாமல் ஆந்திர ராஜ்ஜியத்திலேயே ஐக்கியப்படுத்தப்பட்டு விடுமோ என்று நாங்கள் பெரிதும் அஞ்சுகின்றோம். எங்களைப் பொறுத்தவரையில் **3–7–54** இல் தாங்கள் கொடுத்த வாக்குறுதிப்படி எல்லைக்கமிஷன் அமைத்துச் சித்தூர் தமிழர்களுக்கு நீதி வழங்குவீர்கள் என்றே இன்னமும் நம்புகின்றோம். ஆனால் ஆந்திர அரசினரின் போக்கும், தமிழ்நாடு

காங்கிரஸ் காரியதரிசியின் பிரச்சாரமும், சென்னை அரசினரின் தெளிவற்ற நிலையும் அந்த நம்பிக்கையை நாசமாக்குவதாய் இருக்கின்றன.

ஆகவே, ஜூன் மாதம் 30–ஆம் தேதிக்குள் எல்லைக் கமிஷன் அனுப்பிச் சித்தூர் மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கோரி 30–4–54 இல் கூடிய வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் செயற்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அதன் நகல் தங்களுக்கும் சென்னை முதலமைச்சர் காமராசருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் இதுவரை ஆறுதலான பதில் எதுவும் தங்களிடம் இருந்தோ சென்னை முதலமைச்சர் காமராசரிடமிருந்தோ கிடைக்கவில்லை.

ஆகவே, எல்லைக் கமிஷன் நியமனத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன், சித்தூர் சத்தியாக்கிரகப் போராட்ட நிறுத்த தினமாகிய ஜூலை மாதம் 4–ஆம் தேதி ‘எல்லைக் கமிஷன் தினம்’ கொண்டாட வடக்கெல்லைப் பாதுகாப்புக்குழு முடிவு செய்திருக்கிறது. அந்தத் தினத்தையொட்டி எங்கள் குழுவின் தலைவர் ம.பொ.சிவஞானம், பத்திரிகைக்கு வெளியிட்டுள்ள அறிக்கையின் நகலைத் தங்கள் பார்வைக்கு இத்துடன் அனுப்பியிருக்கின்றேன்.

சித்தூர் தமிழ்ப் பகுதிகளுக்கு எல்லைக் கமிஷன் எப்போது நியமிக்கப்படும் என்ற தகவலைத் தங்களிடமிருந்து வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. தயவு செய்து தங்கள் பதிலை அனுப்பி வைக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஜூலை 4ஆம் தேதிக்குள்ளேயே எல்லைக் கமிஷன் நியமன சம்பந்தமாகத் திருப்திகரமான பதில் தங்களிடம் இருந்து கிடைத்துவிடும் என்றும், அதன் மூலம் ஜூலை 4ஆம் தேதி அன்று பொதுக் கூட்டங்கள் நடத்துவது தவிர்க்கப்பட்டு விடுமென்றும் நான் நிச்சயமாக நம்புகிறேன்.”[56]

வினாயகம் எழுதிய கடிதத்திற்கு நேரு பதில் கடிதம் எழுதினார். அதில் எல்லைக்குழு விரைவில் நியமிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

**தணிகையில் பொதுக்கூட்டம்**

18.10.56 அன்று வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் ம.பொ.சி. உரையாற்றினார்.

“சுமார் ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் உங்களிடையே தோன்றிப் பேசுகின்றேன். ஓராண்டுக்கு முன்பு நான் கண்ட பெருங்கூட்டத்தை இன்றும் என் எதிரே காண்கிறேன். உங்களிடையே உற்சாகமும், போராட்ட உணர்ச்சியும் கரைந்துவிடவில்லை என்பதைக்காண எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களிடையே அமைதி நிலவுகின்றது. ஆணை பிறந்தால் எந்த நேரத்திலும் எதையும் செய்யத் தயங்கமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ‘எதையும்’ என்றால் நியாயமானதை என்று தான் அர்த்தம்.

ஆந்திர ராஜ்யம் அமைந்தவுடனேயே எல்லைக் கமிஷனை அனுப்புவதாகப் பிரதமர் நேரு உறுதி கூறினார். அதை நம்பியே போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தினோம். பத்து மாதங்கள் பொறுத்திருந்தோம். நேரு சொன்னபடி எல்லைக் கமிஷன் நியமிக்கப்படாததால் கடந்த ஜூலை மாதம் 4ஆம் தேதி போர் முரசு கொட்டினோம். அதாவது எல்லைக் கமிஷன் தினம் கொண்டாடி அரசாங்கத்திற்கு இறுதி எச்சரிக்கை விடுத்தோம். அதன் பயனாக ஜூலை மாதம் 7–ஆம் தேதி எல்லைக் கமிஷன் உடனே நியமிக்கப்படும் என்று சமாதானம் கூறிக் கடிதம் எழுதினார் நேரு. அதற்குப் பிறகும் மூன்று மாதங்கள் கடந்து நான்காவது மாதமும் நடக்கிறது. இன்னமும் நேரு அரசாங்கம் எல்லைக் கமிஷனை நியமிக்கவில்லை. நாம் பொறுமை இழக்கும் கட்டத்திற்கு வந்து விட்டோம்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் அதாவது 1954 ஆம் ஆண்டின் முடிவிற்குள் சித்தூர் தமிழ்ப் பகுதிகள் சென்னை ராஜ்ஜியத்தோடு சேர்க்கப்பட்டுவிடும் என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறினார். எல்லைக் கமிஷன் கூட அல்ல அதற்கு மேலும் சென்னை ராஜ்ஜியத்தோடு சேர்க்கப்படும் வேலையே இந்த ஆண்டுக்குள் பூர்த்தியாகிவிடும் என்றார் சுப்பிரமணியம். ஆனால்

ஆண்டு முடிய இன்னும் இரண்டு மாதங்கள் தான் இருக்கின்றன. இதுவரை எல்லைக் கமிஷன் நியமிக்கப்படவில்லை என்றால் சென்னை ராஜ்ஜியத்தோடு சேர்க்கப்படும் வேலை பூர்த்தியாவது இந்த ஆண்டுக்குள் எப்படிச் சாத்தியமாகும்?

இன்னும் எஞ்சியிருக்கும் இரண்டு மாதத்திற்குள் எல்லைக் கமிஷனையேனும் நியமித்து விட்டதால் நல்லதுதான். நியமித்து விடுவார்கள் என்றே நம்புகிறேன். தொல்லைகளை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை எனக்கில்லை. ஆனால் நாம் நம்புவது நடைபெறவில்லை என்றால் அடுத்த ஆண்டின் துவக்கத்தில் நாம் மீண்டும் கிளர்ச்சியில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை. யாரோ ஒரு அதிகாரி சித்தூர் தமிழ்ப் பகுதிகளைப் பற்றிப் புள்ளி விவரக் கணக்குகளைச் சேகரித்துக் கொண்டு இருக்கிறாராம் அவர் பெயரென்ன? இதுவரை எந்த அளவுக்குக் கணக்கை முடித்திருக்கிறார்? முழு வேலையையும் எப்போது முடிப்பார்? என்ற விவரங்களைச் சென்னை அரசாங்கம் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஒரு வருடமாக அப்படி என்னதான் கணக்கெடுக்கிறாரோ? அவர் கணக்கெடுத்து முடிக்கும்வரை எல்லைக் கமிஷன் நியமனத்தை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியமே இல்லை. கணக்கெடுப்பதாகச் சொல்லுவதெல்லாம் காலத்தைக் கடத்தி எல்லைப் பிரச்சனையைக் கை கழுவுவதற்குத்தானோ என்று சந்தேகிக்கின்றேன். இனியும் காலங்கடத்திக் கொண்டிருக்க அரசாங்கத்தாரை அனுமதித்தால் அப்புறம் சந்தர்ப்பம் நமக்கு விரோதமாகச் சதிசெய்துவிடலாம். நாம் பட்டபாடெல்லாம் பாழாகி விடும். ஆகவே நாம் எச்சரிக்கையாக இருந்து எல்லைப் பிரச்சனையை விரைவில் முடிக்க வேண்டும்.

இந்த முறை நாம் கிளர்ச்சியில் ஈடுபட்டால் ஆந்திர அரசாங்கம் நம்மிடம் கடுமையாக நடந்து கொள்ளலாம். பிரகாசம், பந்துலு ஆகியோர் (திருவிதாங்கூரின்) பட்டம் தாணு பிள்ளையாக மாறலாம். ஆனால் அடக்குமுறையைத் தாங்கும் ஆற்றலும், அனுபவமும் நமக்குப் புதிதல்ல! ஆங்கில சாம்ராஜ்ஜியத்தை விடவா ஆந்திர ராஜ்யம் நம்மைத் துன்புறுத்தப் போகிறது! அப்படித் துன்புறுத்தினாலும் அதற்கும் நாம் தயாராக வேண்டியதுதான்.

துன்பத்துக்குப் பயந்தால் நாம் எடுத்த காரியத்தில் வெற்றிபெற முடியாது.

திருத்தணி பஞ்சாயத்து போர்டின் நடவடிக்கைகள் நடைபெற வொட்டாமல் நிருவாக அதிகாரி தடைசெய்து வருகிறார் என்று கேள்விப்பட்டேன். அவருடைய செய்கை சட்ட விரோதமானது. பஞ்சாயத்து போர்டு கலைக்கப்படாதவரை அதன் அங்கத்தினர் சட்டப்படி கூடவும், போர்டின் நிர்வாகத்தை நடத்தவும் உரிமை பெற்றிருக்கின்றனர். போர்டின் முடிவுகளை அமல் நடத்த மறுப்பதற்கு நிர்வாக அதிகாரிக்கு உரிமை இருக்கலாம். ஆனால் போர்டின் கூட்டம் நடைபெறவொட்டாமல் சண்டித்தனம் செய்யச் சட்டப்படி அவருக்கு உரிமை இல்லை. பஞ்சாயத்து போர்டின் கட்டடத்திற்கு யாருடைய பெயரையும் வைக்கப் பஞ்சாயத்து போர்டுக்கு அதிகாரமிருக்கிறது. அதிலும் ராஜாஜியின் பெயரை வைத்தது ரொம்பவும் பொருத்தமானது. ராஜாஜி நாடாண்ட கவர்னர் ஜெனரல்— தமிழர் வாழும் திருத்தணியில் மட்டுமல்ல ஆந்திர ராஜ்ஜியத்தின் தலைநகரான கர்நூலில் கூட அரசாங்கக் கட்டடத்திற்கு அவர் பெயரை வைக்கலாம். முன்னாள் கவர்னர் ஜெனரல் பெயரைக் கவுரவிப்பதில் இனபேதத்திற்கு இடமே இல்லை.

பஞ்சாயத்து போர்டின் வானொலிப் பெட்டியில் சென்னை ஸ்டேஷனை ஒலிபரப்ப வேண்டுமென்று தீர்மானித்தது குற்றமாம். உண்மையில் சென்னை வானொலி நிலையத்தில் தெலுங்கிற்கே பிரதானமளிக்கப்படுகிறது. அப்படி இருந்தும் சென்னை வானொலி நிலையத்தை வைத்தது குற்றமென்று கூறுகிறது, தெலுங்கு ராஜ்ஜியம். நாம் நினைத்தால் சென்னை வானொலி நிலையத்தையே முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தவும் அஞ்சமாட்டோம்! திருத்தணி பஞ்சாயத்து போர்டு கலைக்கப்பட்டுவிட்டதாக ஆந்திர ராஜ்ஜியம் அறிவிக்குமானால் நாம் நிறுத்தி வைத்துள்ள போராட்டத்தைத் துவக்கும்படி நமக்குவிட்ட அறைகூவலாகவே அதைக் கருதுகிறோம்!

சென்னை ராஜ்ஜியமென்பது தமிழ் ராஜ்ஜியம் தான். தமிழர்கள் தான் அந்த ராஜ்ஜியத்தின் அமைச்சர்களாக இருக்கின்றனர். ஆனால் உண்மையாக ராஜ்ஜியத்தை ஆளுவது

தமிழர்கள் அல்லாத தமிழே தெரியாத அதிகார வர்க்கம்தான். அரசாங்க நிர்வாக இலாகாக்கள் அனைத்தும் ராமுன்னி மேனன் என்ற ஒரு மலையாளியின் அதிகாரத்தில் இருக்கிறது. அரசாங்க நீதிபரிபாலனம் முழுவதும் ராஜமன்னார் என்ற ஆந்திரரின் ஆதிக்கத்தில் இருக்கிறது. இந்த இலட்சணத்தில் சென்னை அரசாங்கம் சித்தூர் விஷயத்திலோ திருவிதாங்கூர் தமிழர் விஷயத்திலோ அக்கறை காட்டாததில் ஆச்சரியமென்ன இருக்கிறது. சென்னை ராஜ்ஜியத்தில் தமிழ் ஆட்சிமொழியானால் ஒழிய, தமிழர் அல்லாதாரின் ஆதிக்கம் அகலாது. ஆகவே தமிழருடைய குறைகள் எல்லாம் தீரவேண்டுமாயின் முதலில் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று கூறித் தனது உரையை முடித்தார். இக்கூட்டத்தில் தளபதி கே.வினாயகம் எம்.எல்.ஏ., என்.சுப்பிரமணியம், டி.எம். திருமலை பிள்ளை, ஈ.எஸ்.தியாகராஜன், டி.சரவணய்யா, வி.கே. சடகோபாலாச்சாரியார் மற்றும் பலர் பேசினார்கள்"[57] என்று செங்கோல் செய்தி வெளியிட்டுள்ளது.

1954 ஆம் ஆண்டு நவம்பர் முதல்நாள் ஆந்திர அரசு திருத்தணிப் பஞ்சாயத்தைக் கலைத்தது. இது அதன் தலைவர் டி.சரவணய்யாவுக்கு அறிவிக்கப்பட்டது. அந்தப் பஞ்சாயத்தைக் கலைப்பதற்கு ஆந்திர அரசு பின்வரும் காரணங்களைக் கூறியது.

1. தணிகைப் பஞ்சாயத்து, தன் கூட்டங்களையும் நடவடிக்கைகளையும் தமிழில் நடத்தியது.
2. புதிதாகக் கட்டப்பட்ட பஞ்சாயத்து அலுவலகத்திற்கு இராஜாஜியின் பெயரை வைத்தது.
3. தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று பஞ்சாயத்துக் கட்டடத்திற்கும் பஞ்சாயத்துப் பூங்காவுக்கும் காந்தி சிலைக்கும் ஒளி அலங்காரம் செய்தது மாபெரும் குற்றம்.
4. வடஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரித்தெடுத்த திருத்தணி தாலுகாவைச் சென்னை மாநிலத்தில் சேர்க்க வேண்டுமென்று தீர்மானித்தது.

திருத்தணிப் பஞ்சாயத்துக் கலைக்கப்பட்டதால் மக்கள் இடையே கலவரம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியது. கடைகள் அடைக்கப்பட்டன. மக்கள் அனைவரும் திரண்டு ஊர்வலமாகச்

சென்றார்கள். ஆந்திர அரசின் போக்கைக் கண்டித்துப் பொதுக்கூட்டம் நடத்தினார்கள். ம.பொ.சி, விநாயகம், சுப்பிரமணியம் முதலானோர் காமராசரைச் சந்தித்து இதுபற்றி ஆலோசித்தனர். அவரது ஆலோசனைக்கு ஏற்ப உயர்நீதி மன்றத்தில் திருத்தணிப் பஞ்சாயத்தைக் கலைத்ததை எதிர்த்து வழக்குத் தொடுக்கப்பட்டது.

ஆந்திர அரசின் உள்ளாட்சித்துறை நிர்வாகம் சென்னையில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் பஞ்சாயத்தைக் கலைக்கும் உத்தரவு சென்னையிலிருந்து பெற்றதாலும் இந்த வழக்கைச் சென்னை உயர்நீதி மன்றமே ஏற்று நடத்தும் வாய்ப்பு இருக்கிறது என்று வழக்கறிஞர் கே.ராஜா ஐயர் தெரிவித்தார். மேலும் இந்த வழக்கை இலவசமாக நடத்துவதாகவும் அவர் தெரித்தார்.

**மீண்டும் எல்லைப் போர்**

வடக்கெல்லைப் பாதுகாப்பு நேரடி நடவடிக்கைக் குழு ம.பொ.சியின் இல்லத்தில் 2–8–55 அன்று மாலை கூடியது. அக்குழுவின் ஐந்து அங்கத்தினர்களும் ஆஜராகி இருந்தனர். அவர்கள் ம.பொ.சி., கே.வினாயகம், சின்ன அண்ணாமலை, திருத்தணி ஈ.எஸ்.தியாகராாசன், சித்தூர் சி.வி.சீனிவாசன் ஆகியோராவர்.

சிறப்பு அழைப்பின் மீது சென்னை மாவட்டத் தமிழரசு கழகத் தலைவர் ஜி.உமாபதி, வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டிச் செயலாளர் ந.சுப்பிரமணியம் ஆகிய இருவரும் ஆஜராகியிருந்தனர். ம.பொ.சிவஞானம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

1955 ஜூலை 31ஆம் தேதிக்குள் எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இல்லையேல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வடக்கெல்லைப் போராட்டத்தை மீண்டும் துவக்க நேரிடுமென்றும், ஜூலை 14ஆம் தேதி தலைவர் ம.பொ.சி. எழுதியிருந்த கடிதத்துக்கு ஜூலை 26 ஆம் தேதியிட்டுப் பிரதமர் நேரு எழுதிய பதில் கடிதத்தைக் கமிட்டி பரிசீலனை செய்தது. அத்துடன் கடந்த இரண்டாண்டுகளாக எல்லைக் கமிஷன் நியமிப்பது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் அனுப்பிய கடிதங்களும்,

இந்த இரண்டு அரசாங்கங்களின் அமைச்சர்கள் எல்லைப் பிரச்சனை சம்பந்தமாக அவ்வப்போது தெரிவித்த கருத்துகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. சுமார் 3 மணி நேரம் எல்லாவற்றையும் மிகக் கவனமாகவும், கடமையுணர்ச்சியுடனும் பரிசீலனை செய்ததன்பின், கமிட்டி கீழ்க்கண்ட தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது.

"சித்தூர் தமிழ்ப் பகுதிகள் பற்றிய சிக்கலைத் தீர்த்து வைக்க 1955 ஜூலை 31ஆம் தேதிக்குள் எல்லைக் கமிஷன் நியமிக்குமாறு வற்புறுத்தி இக்கமிட்டியின் தலைவர் பிரதமர் நேருவுக்கு எழுதியிருந்த கடிதத்திற்கு நேருஜி அனுப்பியுள்ள பதில் கடிதத்தைக் கமிட்டி மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் ஆழ்ந்து பரிசீலனை செய்தது. பிரஸ்தாப கடிதத்தில் ஆந்திர–சென்னை அரசாங்கங்களிடையே நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள் மூலமே எல்லைப் பிரச்சனையில் ஒப்பந்தம் ஏற்படுமென்று பிரதமர் நேரு தெரிவித்திருப்பது குறித்து இக்கமிட்டி பெருத்த ஆச்சரியமும் அதிருப்தியும் அடைகின்றது. இதன் மூலம் எல்லைக் கமிஷன் அனுப்புவதாக 1953–ஆம் ஆண்டு ஜூலை 3–ஆம் தேதி இந்தியப் பிரதமர் தந்த வாக்குறுதி முற்றிலும் கைவிடப்பட்டு விட்டதாகவே இக்கமிட்டி கருதுகிறது. மேலும் சென்னை–ஆந்திர அரசாங்கங்களிடையே நடைபெறக் கூடிய பேச்சு வார்த்தைகளின் மூலம் வடக்கெல்லைப் பிரச்சனை விரைவாகவும், நியாயமாகவும் தீர்த்து வைக்கப்படுமென்று இக்கமிட்டி நம்பவில்லை. ஆகவே, எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று பிரதமர் தந்த வாக்குறுதி காரணமாகத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போராட்டத்தை மீண்டும் துவக்குவதற்குத் தலைவர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு இக்கமிட்டி பூரண அதிகாரமளிக்கிறது."[58]

**24.8.1955** ஆம் நாள் தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னால் மறியல்போர் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் தமிழ்நாடு அரசின் சார்பில் எல்லைப் பிரச்சனைக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம் போராட்டக் குழுவுக்கு அழைப்பு விடுத்தார். அந்த

அழைப்பை ஏற்று ம.பொ.சியும் வினாயகமும் சி.சுப்பிரமணியத்தை **23.8.1955** அன்று மாலை **4.30** முதல் **5.30** வரை கலந்து பேசினர்.

இந்தப் பேச்சில் ம.பொ.சி. தெரிவித்த பின்வரும் கோரிக்கைகளை சி.சுப்பிரமணியம் ஏற்றுக்கொண்டார்.

சித்தூர் மாவட்டத்திலுள்ள காளத்தி, திருத்தணி, புத்தூர், திருப்பதி, சித்தூர், பல்லவனேரி ஆகிய தாலுகாக்களும், நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த சூளூர்ப்பேட்டை தாலுகாவும் தகராறுக்குரிய பிரதேசங்களாகக் கருதப்பட்டு, அவற்றோடு சென்னை ராஜ்யத்திற்கு இருக்க வேண்டிய தொடர்பு பற்றி ஆராய வேண்டும்.

ஆந்திர—சென்னை அரசாங்கங்களிடையே எல்லைச் சிக்கலைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடைபெறும் போது, அதன் எல்லாக் கட்டங்களிலும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியில் உள்ள பிரதிநிதிகளின் கருத்துகளை அறிந்து கொள்ள வேண்டும்.

**1955**ஆம் ஆண்டு டிசம்பர் **31**ஆம் தேதிக்குள் எல்லைச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் உள்ளடக்கி, அவற்றை ஒப்புக் கொண்டு விட்டதாக உத்தரவாதம் கொடுத்தும், அதன் காரணமாகப் போராட்டம் நிறுத்தப்பட வேண்டுமெனக் கோரியும், அரசாங்கத்தின் சார்பில் அதிகாரப் பூர்வமாகப் பின்வரும் அறிக்கை வெளியிடப்பட்டது.

சித்தூர் மாவட்டத்தில் திருக்காளத்தி, திருத்தணி, புத்தூர், திருப்பதி (சந்திரகிரி), சித்தூர், பல்லவனேரி ஆகிய தாலுகாக்கள் பற்றியும் நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த சூளூர்ப்பேட்டை தாலுகா பற்றியும் ஆந்திர அரசினருடன் பேச்சு நடத்தப்படும்.

இவ்விஷயத்தில் எவ்வளவு சீக்கிரம் ஆந்திர அரசினருடன் ஒரு முடிவுகாண முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஆந்திர அரசினருடன் ஒரு உடன்பாட்டுக்கு வரச் சென்னை அரசாங்கத்தார் ஆவலாக இருக்கின்றனர். இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள் பேச்சு வார்த்தைகளை வெற்றிகரமாக முடிக்க அரசினர் எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்வர்.

தமிழ்நாடு வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி உட்பட சம்பந்தப்பட்ட அனைவரும் எல்லா நிலையிலும் தங்கள் கருத்துகளை அறிவிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இந்த நிலையில் எல்லை சம்பந்தமாக நடத்த உத்தேசித்திருக்கும் கிளர்ச்சி நிறுத்தி வைக்கப்படுமென அரசினர் நம்புகின்றனர் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

அன்றே ம.பொ.சி.யின் வீட்டில் வடக்கு எல்லை நேரடி நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் சி. சுப்பிரமணியத்துடன் நடைபெற்ற பேச்சுப் பற்றிய தகவல்களை ம.பொ.சி. தெரிவித்தார். ஆகஸ்டு 24 ஆம் நாள் நடைபெறுவதாக இருந்த மறியலை டிசம்பர் 31 ஆம் நாள் வரை ஒத்தி வைத்தனர்.

23.08.1955 ஆம் நாள் அன்று மாலையில் திருவல்லிக்கேணியில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டத்தில் டி.கே.சண்முகம் தமிழ் வாழ்த்துப் பாடல்களைப் பாடினார். ம.பொ.சி. உரையாற்றும் போது அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் தெரிவித்தார்.

“நான் கொடுத்த மூன்று நிபந்தனைகளையும் அரசாங்கம் ஒப்புக் கொண்டு விட்டதால், எல்லைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு காலவரம்பும் வைக்கப்பட்டு விட்டதால், நாளை நடக்கவிருந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை இவ்வாண்டு டிசம்பர் 31ஆம் தேதி வரை ஒத்தி வைத்து இருக்கிறேன்” என்று ம.பொ.சி. அறிவித்த போது, மக்கள் உற்சாகத்தால் கைதட்டிப் பலத்த ஆரவாரம் செய்தனர். ‘வேங்கடத்தைவிட மாட்டோம்’, ‘ம.பொ.சி. வாழ்க’ என்ற கோஷங்கள் கூட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் எழுந்தன. மக்களுடைய உற்சாக ஆரவாரத்தைக் கண்ட ம.பொ.சி. முறுவல் பூத்த முகத்துடன் சில நிமிஷம் பேச்சை நிறுத்தி விட்டார். பின்னர், ‘அரசாங்கத்தோடு நான் செய்து கொண்ட உடன்படிக்கையை என்னைப் பின்பற்றும் ஊழியர்களும், பொதுமக்களும் முணுமுணுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமே என்று கவலைப்பட்டேன். ஆனால், நீங்கள் காட்டிய உற்சாகமான ஆரவாரத்தைக் கண்ட பிறகு நான், மகிழ்ச்சிக் கடலில் மிதப்பது

போன்ற உணர்ச்சியை அடைந்திருக்கின்றேன். இன்னொரு முறையும் உங்கள் உற்சாகமான ஆரவாரத்தை என் கண்கள் காண வேண்டும்; உங்கள் கரகோஷத்தை என் காதுகள் கேட்க வேண்டும், என்றார். மீண்டும் முன்னைவிடப் பலமாகக் கரகோஷமும், வாழ்த்தொலியும் எழுந்தன.

பின்னர், சித்தூரிலிருந்து சி.வி.சீனிவாசன் தலைமையில் வந்திருந்த சத்தியாக்கிரகிகளை ஒவ்வொருவராகக் கூட்டத்தினருக்கு அறிமுகம் செய்து வைத்து அவர்களுக்கு மாலைகள் சூட்டினார்.

**1956** ஜனவரியில் மீண்டும் போராட்டம்தான் என்று விநாயகம் தமது உரையில் உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டார்.

சின்ன அண்ணாமலை பேசுகையில், திரு. காமராசர் முதல் அமைச்சராக வந்த பிறகு சென்னை அரசாங்கம் செய்த ஒரே நல்ல காரியம் ம.பொ.சி.யுடன் செய்து கொண்ட உடன்படிக்கைதான். ஆகவே, வசிஷ்டர் வாயாலேயே பிரம்மரிஷி என்ற பட்டம் விஸ்வாமித்திரருக்குக் கிடைத்தது போலவே, எனது வாயாலேயே இந்தக் காமராசர் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். நிதியமைச்சர் சுப்பிரமணியம் ஆரம்பத்தில் எவ்வளவோ கடுமையாகப் பேசினாலும், முடிவில், சமாதானமாக நடந்து கொண்டு போராட்டத்தைத் தவிர்த்ததற்காக அவரைப் பாராட்டவேண்டும்" என்றார்.

ஔவை டி.கே. சண்முகம் பேசுகையில், "கொலை வழி, கலைவழி என இருவழிகள் உண்டு. தலைவர் ம.பொ.சி. நம்மைக் கொலை வழியில் அழைத்துச் செல்கிறார். இன்று ஏற்பட்டுள்ள முடிவு கலைஞர்களால் பாராட்டத்தக்கது." போராட்டம் நடந்திருந்தால், என் போன்ற கலைஞர்கள் எண்ணற்றோர் அதில் ஈடுபடத் துடித்துக் கொண்டிருந்தனர். ஆயினும், போராட்டமின்றியே நமது கோரிக்கைக்கு வெற்றி தேடி விட்டார் ம.பொ.சி. அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்" என்று கூறினார்.

தலைவர் ம.பொ.சி. முடிவுரையாகச் சில வார்த்தை கூறிய பிறகு, வாழ்த்தொலிகளுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

'தலைவர் ம.பொ.சி. சொன்னபடி நாம் கட்டுப்பாடாகவும் மன நிறைவோடும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதைவிடச் சிறந்த ஒரு முடிவை, வெற்றியை வேறெவரும் வேறு எந்தப் போராட்டத்திலும் அடைந்ததில்லை– அடையவும் முடியாது என வடக்கு எல்லைப் போராட்ட நடவடிக்கைக் குழு முடிவெடுத்தது.

**1956** ஆம் ஆண்டு நவம்பர் மூன்றாம் நாள் ஆந்திர அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இடையே வடக்கு எல்லைப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சு நடைபெற்றது. அதில்,

1) **1951** ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பை ஏற்றுக் கொள்வது.

2) கிராம அடிப்படையில் பிரச்சினைகளை அணுகி **51** சதவீதம் எந்த மொழியினர் இருக்கின்றார்களோ அந்தக் கிராமத்தை அந்த மாநிலத்துடன் சேர்க்க வேண்டும்.

3) கிராமங்கள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

என்றும் முடிவுகள் முதல்நாள் பேச்சு வார்த்தையில் எடுக்கப்பட்டன.

நவம்பர் நான்காம் நாள் பேச்சு வார்த்தையில் ஓசூர் பிரச்சினை முக்கிய இடம் வகித்தது.

ஓசூரில் எந்த மொழியினரும் **51** சதவீதத்திற்கு மேற்படவில்லை. ஓசூரில் தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகள் பேசுவோர் வாழ்ந்தனர். ஓசூர் ஆந்திரத்தின் எல்லையில் வராதபோது ஓசூர் பிரச்சினையை ஆந்திரர்கள் எடுத்திருக்கத் தேவையில்லை. பேச்சு வார்த்தையைத் தள்ளிப் போடுவதற்குரிய உத்தியாகவே இதைப் பயன்படுத்தினார்கள்.

தமிழகத்தின் சார்பில் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட கு. காமராசரும், சி. சுப்பிரமணியமும் ஓசூர்ப் பிரச்சினையை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்தப் பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தது.

**சுப்பிரமணியத்தின் உண்ணா நோன்பு**

தமிழக அரசுக்கும் ஆந்திர அரசுக்கும் இடையே நடைபெற்ற பேச்சு தோல்வி அடைந்ததால் கோல்டன் ந. சுப்பிரமணியம் உண்ணா நோன்பு இருக்கப் போவதாகக்கூறி 1956 ஆம் ஆண்டு சனவரி 19 ஆம் நாள் உண்ணா நோன்பைத் தொடங்கினார். உண்ணா நோன்பை முன்னிட்டு ஊர்வலம் நடத்தப்பட்டதால் அன்று திருத்தணியில் கடைகள் அடைக்கப்பட்டன. ம.பொ.சி.யும் மற்ற தலைவர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அடுத்த நாள் காலையில் சுப்பிரமணியம் தமது உண்ணா நோன்பை முடித்துக் கொண்டார்.

**தணிகைப் பஞ்சாயத்துத் தேர்தலில் தமிழர் வெற்றி**

திருத்தணியிலிருந்த பஞ்சாயத்து ஆந்திர அரசால் கலைக்கப்பட்டதால் அங்கே மீண்டும் பஞ்சாயத்துத் தேர்தல் 1956 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினொரு உறுப்பினர்களில் ஒன்பது பேர் தமிழர்.

திருத்தணிப் பஞ்சாயத்து போர்டு தேர்தலில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி சார்பில் நின்ற தமிழர்கள் மகத்தான வெற்றி பெற்றிருக்கின்றனர். அதாவது போட்டியிட்ட அனைவருமே வெற்றி பெற்றிருக்கின்றனர். அவர்களை எதிர்த்து நின்ற ஆந்திரர்கள் அனைவருமே படுதோல்வி அடைந்திருக்கின்றனர். எல்லைப் பிரச்சினையின் மீதே இந்தத் தேர்தல் நடைபெற்றிருப்பது கவனத்திற்குரியதாகும்.

ஆந்திரர்கள் அரசாங்க பலத்தை உபயோகித்தும் தமிழரைத் தோற்கடிக்க முடியவில்லை. ஆம்; திருத்தணி தமிழருக்கே உரியதென்பது மற்றுமொருமுறை உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது.

ஆனால் ஜனநாயகத்தைப் பற்றி வாய் கிழியப் பேசும் காங்கிரஸ் மேலிடத்தார் வடக்கெல்லைப் பிரச்சனையில் இன்னும் தங்கள் ஜனநாயகப் பண்பைக் காட்டவில்லை. திருத்தணி தேர்தல் முடிவு பிரதமர் நேருவுக்கு விடுத்த அறை கூவலாகும்.

தேர்தல் வெற்றிக்கு அரும்பாடுபட்ட வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டித் தளபதி கே. வினாயகம் எம்.எல்.ஏ அவர்களுக்கும், அக்கமிட்டியின் செயலாளர் ந. சுப்பிரமணியம் அவர்களுக்கும் மற்றும் உள்ள தோழர்களுக்கும் நம் மனமுவந்த பாராட்டு[59] என்று ம.பொ.சி. பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

**வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுக் கூட்டம்**

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் ம.பொ.சி. தலைமையில் செங்கோல் அலுவலகத்தில் கூடியது. கே. வினாயகம் எம்.எல்.ஏ., எஸ். ரங்கநாத முதலியார் எம்.எல்.ஏ., என். சுப்பிரமணியம், ஈ.எஸ். தியாகராஜன் (பொதட்டூர் பேட்டை பஞ்சாயத்துத் தலைவர்), எஸ். வரதன், சச்சிதானந்தம் (சித்தூர்), எல்.ஏ. சரவணன், குப்புசாமி (சித்தூர் நகரசபை உறுப்பினர்கள்), டி.எம். திருமலை பிள்ளை (திருவாலங்காடு), என்.ஏ. ரஷீது, (வங்கனூர்), முத்துவேலு, பரதேசி (புத்தூர்), கவி. கா.மு. ஷெரீப் (சென்னை) ஆகியோர் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆந்திரத்தில் தனியரசு அமைத்து மூன்று ஆண்டுகளாகியும் தமிழக வடக்கெல்லைச் சிக்கல் தீர்க்கப்படாமலிருப்பது குறித்து இக்குழு தனது ஆழ்ந்த கவலையையும் அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்கிறது.

1955 டிசம்பர் 31க்குள் இந்த எல்லைச் சிக்கலைத் தீர்த்து வைப்பதாகச் சென்னை அரசாங்கம் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் தலைவர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தும் அதை நிறைவேற்றுதற்கு உறுதியானதும் தமிழ் மக்களுக்குத் திருப்தியளிக்கக் கூடியதுமான எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

சென்னை—ஆந்திர அரசாங்கங்களை விட மத்திய அரசினரின் போக்குத்தான் நிலைமையை மோசமாக்கி இருக்கின்றது. ஆந்திரம் பிரிக்கப்பட்ட தினமே எல்லைக் கமிஷன் நியமிப்பதாகப் பிரதமர் நேரு வாக்குறுதி கொடுத்து வருடங்கள்

மூன்றாகியும் அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. கடைசியாக 1956 மார்ச் 2 ஆம் தேதியும் ஆகஸ்ட் 4ஆம் தேதியும் எல்லைக் கமிஷன் நியமனத்தை வற்புறுத்தி இக்குழுவின் தலைவர் எழுதிய கடிதத்திற்கு மத்திய அரசாங்கம் இதுவரை எத்தகைய பதிலையும் அனுப்பவில்லை.

மத்திய அரசினரின் இந்தப் போக்கானது ஜனநாயகத்தை அவமதிப்பதாகவும் ஆந்திர அரசினரின் ஆதிக்க புத்திக்கு மறைமுகமாக ஆதரவளிப்பதாகவும் இருக்கிறது. எனவே முன்னர் வாக்குறுதி தந்தபடி உடனடியாக எல்லைக் கமிஷன் நியமித்து நவம்பர் முதல் தேதிக்குள் சித்தூர் ஜில்லாவின் தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் சேர்க்குமாறு மத்திய அரசினரையும் நிர்ப்பந்தத்திக்கும் பொருட்டு செப்டம்பர் 24 ஆம் தேதியன்று நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்று வடக்கெல்லைப் பாதுக்காப்புக் குழு தீர்மானித்திருக்கிறது.

தமிழக வடக்கெல்லைப் போராட்டம் வெற்றிபெறும் பொருட்டு செப்டம்பர் 23 ஆம் தேதி ஞாயிற்று கிழமையன்று "வடக்கெல்லைப் பாதுகாப்பு தினம்" கொண்டாடுமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொள்கின்றது. சென்னையில் நடைபெறும் எல்லைப் போராட்டத்தில் கலந்துகொள்ளத் தொண்டர் படைக்குழு ஒன்று தணிகையிலிருந்து புறப்பட்டுச் சென்னை வரை கால் நடையாகச் செல்லவேண்டும் என்றும் இப்படைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல திரு.ஈ.எஸ். தியாகராஜன் அவர்களை நியமிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**சட்டப்பேரவை முன் மறியல்**

வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவில் எடுத்த தீர்மானத்தின்படி 1956 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் சட்டப் பேரவை முன் மறியல் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த மறியலில் கலந்து கொள்வதற்கு ஈ.எஸ். தியாகராஜன் தலைமையில் திருத்தணியிலிருந்து 20.09.1956 அன்று ஒரு பாதயாத்திரைக் குழு புறப்பட்டது. மற்றும் கோல்டன் ந. சுப்பிரமணியம் (வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுச் செயலாளர்) என்.ஏ. ரஷீது, ஏ. முனுசாமி,

அம்மையார்குப்பம் சரவணகண்ணப்பா, ஆர்.கே. பேட்டை கோவிந்தசாமி, அத்திமாஞ்சேரிப்பேட்டை முத்துவேலு, மாத்தூர் ராஜலிங்கம், திருவாலங்காடு டி.எம். திருமலைபிள்ளை, பொன்னுசாமி ரெட்டியார், திருத்தணி எம்.கே. சுப்பிரமணியம், பாஷா, ஏ. ராமசாமி பீமன், வங்கனூர் பாலசுப்பிரமணியம், சங்கரன், மேல் திருத்தணி புண்ணியகோட்டி செட்டியார், சம்பந்தம் ஆகியோர் இப்பாத யாத்திரையில் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள்.

சுமார் 500 தொண்டர்கள் அணிவகுத்திருந்தனர். சிறிது நேரத்தில் தளபதி கே. வினாயகம் அவர்களும் வந்துவிட்டார். பாதயாத்திரை புறப்படும் சமயத்தில் தணிகை ஊராட்சி மன்றத் தலைவர் டி. சரவணய்யாவும், கே.சி. ராமசாமி ரெட்டியாரும், மற்றும் நகர மக்களும் தொண்டர்களுக்கு மாலைகள் அணிவித்து, தொண்டர்களோடு நகர எல்லைவரை வந்து வழியனுப்பி வைத்தனர். தளபதி கே. வினாயகம் அவர்களும் நடந்தே வந்தார்.

23.09.1956 அன்று மாலையில் சென்னைக் கடற்கரையில் ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தணிகையிலிருந்து புறப்பட்ட பாதயாத்திரைத் தொண்டர் படை சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, ம.பொ.சி. ஏற்பாடு செய்த இருப்பிடத்திற்குச் சென்றது. அன்று முதல் தொண்டர்களுக்குச் சிற்றுண்டியும் உணவும் தங்குவதற்கு இடமும் ம.பொ.சி. ஏற்பாடு செய்திருந்தார். மறுநாள் நடைபெற இருக்கும் போராட்டத்திற்குக் குழுவைச் சார்ந்த முக்கியஸ்தர்களுடன் அன்று இரவு வெகுநேரம் ஆலோசனை நடத்தினார். மறுநாள் போராட்டத்தில் தொண்டர்கள் அணி அணியாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தலைவர் ம.பொ.சி. சிறை செல்ல முடிவு செய்தால் அவருக்குப் பின்னால் இதனைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பைத் தமிழரசு கழகத்தின் சார்பில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி சார்பாக கோல்டன் சுப்பிரமணியத்தையும் கவி.கா.மு.ஷெரீப் அவர்களையும் நியமித்தார்.

செப்டம்பர் 24ஆம் தேதி முதல் கட்டப் போராட்டமாகக் காலை 9 மணிக்குத் தளபதி கே. வினாயகம் அவர்கள் தலைமையில்

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை வழியாக 50 தொண்டர்கள் சட்டமன்றத்தை நோக்கிக் கோஷங்கள் எழுப்பியவாறு சென்றனர். அன்றைய சட்டமன்றம் இப்போதுள்ள கலைவாணர் அரங்கில் சிறிது காலம் செயல்பட்டது.

தளபதி கே. விநாயகம் அவர்களும் அவருடன் சென்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். அதன் பிறகு ஈ.எஸ். தியாகராஜன் தலைமையில் சென்ற தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். மறியல் நடைபெறும் சட்டமன்றத்தின் உட்புறமும், வெளிப்புறமும் போலீஸ் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது. அதுபோல் ஆற்காடு ரோடு, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்தது. இச்சமயத்தில் ம.பொ.சி., மறியல் தொண்டர்கள் அணிவகுத்துச் செல்வதை ஓரிடத்தில் இருந்து பார்வையிட்டார்.

மறுநாள் செப்டம்பர் 25 ஆம் தேதி காலை ஒன்பது மணி அளவில் அம்மையார் குப்பம் சரவண கண்ணப்பா தலைமையில் ஒரு அணியினரும், சித்தூரில் இருந்து வந்த தொண்டர்களில் சித்தூர் சதானந்தம் தலைமையில் ஒரு அணியினரும், சித்தூர் காபர்கான் தலைமையில் ஒரு அணியினரும் அன்று கைதானார்கள்.

மறுநாள் செப்டம்பர் 26ஆம் தேதி ம.பொ.சி. போராட்டத்தில் கலந்து கொள்வார் என்ற செய்தி சென்னை நகரெங்கும் பரவி இருந்தது. இதனால் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை நெடுகிலும் மக்கள் கூட்டம் முற்றுகையிடத் தொடங்கிவிட்டது.

காலை 9 மணிக்கு வங்கனூர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் ஒரு அணியினரும், ஆர்.கே. பேட்டை என்.கே. கோவிந்தசாமி தலைமையில் ஒரு அணியினரும் பெத்த நாய்க்கன்பேட்டை தமிழரசு கழகத்தினரான பகவத்சிங் தலைமையில் ஒரு அணியினரும் கைது செய்யப்பட்டனர். சரியாகப் பத்து மணியளவில் ம.பொ.சி. அவர்கள் தொண்டர்களுடன் இருசப்ப கிராமணி தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை வழியாகச் சட்ட மன்றத்தை நோக்கிப் புறப்பட்டார். சாலையின் இரு மருங்கிலும் மக்கள் கூட்டம்

வெள்ளம் போல் திரண்டிருந்தனர். ம.பொ.சி. வாழ்க; ம.பொ.சி. வாழ்க என்ற கோஷம் வானை முட்டியது. ம.பொ.சி. அவர்கள் சட்டமன்றத்தை நெருங்க, நெருங்க மக்களின் ஆரவாரம் அதிகரித்தது. மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. நானும் திருமலைபிள்ளையும் தலைவரைப் பின் தொடர்ந்து சென்றோம். சட்டமன்றத்திற்குச் சற்றுத் தூரத்திலேயே போலீசார் மக்களைத் தடுத்து நிறுத்திவிட்டனர். ம.பொ.சி.யும் மறியல் தொண்டர்களும் சட்டமன்றத்தை நெருங்கியதும் போலீஸ் கமிஷனர் அருள் ம.பொ.சி.யையும், மறியல் தொண்டர்களையும் கைது செய்தார். இச்சமயத்தில் மக்கள் எழுப்பிய 'ம.பொ.சி. வாழ்க' என்ற கோஷம் சென்னை நகரெங்கும் எதிரொலித்தது.

ம.பொ.சி. கைது ஆன மறுநாள் செப்டம்பர் 27ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை சட்டமன்றத்தின் முன்பாக மறியல் தொடர்ந்து நடைபெற்றது. இன்றைய ஆனந்த் திரையரங்க உரிமையாளர் ஜி.உமாபதி அவர்கள் தலைமையிலும், புச்சிரெட்டி பள்ளி நாகலிங்கம், என்.ஏ.ரஷீது, ஏ.முனுசாமி, ஜி.எஸ்.துரைசாமி முதலியார், சின்ன அண்ணாமலை இவர்களது தலைமையிலும் தனித் தனியாகத் தொண்டர்களுடன் சென்று சட்டமன்றம் முன்பு மறியல் செய்து கைது ஆனார்கள்.

செப்டம்பர் 29ஆம் தேதி சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாளாகும். அன்றைய தினம் கவி.கா.மு.ஷெரீப் அவர்களும் நானும் டி.எம்.திருமலை பிள்ளை, டி.எம்.பொன்னுசாமி அவர்களும் மற்றும் தமிழரசு கழகத் தொண்டர்களும், வடக்கெல்லைக் குழுத் தொண்டர்களும், சட்டமன்றத்தின் முன் மறியலை நடத்தினோம்.

வழக்கம் போல் நாங்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு மத்திய சிறைக்கு அன்றே அனுப்பப்பட்டோம். ஆயினும் சென்னை அரசாங்கம் எந்தவித வாக்குறுதியும் அளிக்க முன் வரவில்லை. சட்டமன்றம் முடிந்துவிட்டதால் தொடர்ந்து போராட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் ஏற்படவில்லை. எங்கள் அனைவருக்கும் தண்டனை கொடுக்காமல் 15 நாள் ரிமாண்ட் கொடுத்தார்கள்.

மறுநாள் செப்டம்பர் 30ஆம் தேதி மாலை எங்கள் அனைவரையும் விடுதலை செய்துவிட்டனர். இது எங்களுக்குச் சற்று

ஏமாற்றமே அளித்தது. ம.பொ.சி. அவர்கள் எங்களிடையே மீண்டும் போராட்டம் நடைபெறும் என்று தெரிவித்தார். இது எங்களுக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது. சிறை அதிகாரிகள் எங்கள் அனைவருக்கும் இரயில்வே பாஸ் கொடுத்து அவரவர் ஊர்களுக்குச் செல்வதற்கு வகை செய்தனர். அன்று வரை கைதாகி விடுதலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 500க்கு மேல் இருக்கும். காலையில் நாங்கள் அனைவரும் ரேணிகுண்டா பாசஞ்சரில் புறப்பட்டுத் திருத்தணி வந்து அடைந்தோம். தணிகை நகரமக்கள் மகிழ்ச்சியுடன் எங்களை வரவேற்றனர்''[60] என்று ந.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

**தமிழகம் முழுவதும் எல்லைப் போர்**

1956 ஆம் ஆண்டு அக்டோபர் எட்டாம் நாள் நடைபெற்ற தமிழரசு கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது.

“தமிழக வடக்கெல்லைப் பிரச்சினையில் முன்னரே வாக்களித்துள்ளபடி மத்திய அரசினர் இதுவரை எல்லைக் கமிஷன் நியமனம் செய்யாததோடு அது பற்றிச் சென்னை முதலமைச்சரும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுத் தலைவரும் எழுதிய கடிதங்களுக்கு இதுவரை பதில் அளிக்காததற்கு இக்குழு தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மற்றும் சென்னைக்கு வந்த வடக்கெல்லைத் தமிழர்களைச் சிறையில் அடைத்த சென்னை அரசினரின் செயல் குறித்து வருந்துகிறது. இந்நிலை காரணமாக வடக்கெல்லைத் தமிழர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டுத் தகராறில் உள்ள பகுதிகள் உட்படத் தமிழகம் முழுவதும் அக்டோபர் 15 இல் சத்தியாக்கிரகப் போர் துவங்கித் தொடர்ந்து நடத்துதல்.

மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் ஆகியவற்றின் அலுவலகம் முன்பு மறியல் நடத்துதல்.

பொது ஜன அமைதிக்குப் பங்கமில்லாமலும் பிரயாணிகளுக்குத் தொல்லை தராமலும் தேர்ந்தெடுக்கப்படும்

தொண்டர்களைக் கொண்டு அடையாளப் பூர்வமாகச் சங்கிலியைப் பிடித்து இழுத்து ரயிலை நிறுத்துதல்.

மாகாண மத்திய அமைச்சர்கள், பொது அலுவல்களில் கலந்து கொள்ள வரும் பொழுது கருப்புக் கொடி காட்டல்.

அக்டோபர் மாத இறுதியில் நடைபெறும் அசெம்பிளி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துதல்.

சத்தியாக்கிரகத்திற்கு எதிராக விதிக்கப்படும் தடைகளை மீறுதல்"[61] முதலான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

போராட்டத்தைத் தலைமையேற்று ம.பொ.சி. **15.10.1956** அன்று நடத்தினார். தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் போராட்டம் நடைபெற்றது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற வடக்கு எல்லைப் போராட்டம் தொடர்பாக கே. வினாயகம் சட்டப்பேரவையில் கேள்வி எழுப்பினார்.

**1956** அக்டோபர் **23**ஆம் தேதி சென்னை சட்டமன்றத்தில் தளபதி கே.வினாயகம் எம்.எல்.ஏ., அவர்கள் எழுப்பிய பிரச்சனை மீது நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம் பேசியதன் பகுதி:

சென்னை–ஆந்திர எல்லைத் தகராறு ராஜ்ஜிய சீரமைப்புக்குப் பின்னர் அமையவிருக்கும் மண்டலக் கவுன்சிலுக்கு விடுவதால் பலன் ஏற்படாது. இந்தக் கருத்தை மத்திய அரசினருக்குத் தெரிவித்துவிடப் போகிறோம். ஆந்திர அரசினரின் போக்கு ஆந்திர அமைச்சர்கள் வெளியிட்டுள்ள கருத்துகள், அவர்கள் நிலை முதலியவற்றைக் கவனிக்குமிடத்து மண்டலக் கவுன்சிலால் வடக்கெல்லைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும் என்று நம்புவதற்கில்லை.

ஆகவே, மத்திய அரசாங்க அமைச்சர் ஒருவர் சென்னைக்கு வந்தோ அல்லது இரண்டு ராஜ்ஜியங்களின்

பிரதிநிதிகளை டில்லிக்கு அழைத்துக் குறிப்பிட்ட ஒரு அமைச்சரிடம் பேசச் செய்தோ, இப்பிரச்சனைக்கு ஒரு முடிவு காணலாம்.

வடக்கெல்லைச் சிக்கலை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு உதவி புரியும் வகையில் தமிழரசு கழகத்தார் தாங்கள் நடத்திவரும் கிளர்ச்சியைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லைச் சிக்கலில் சென்னை அரசினர் அக்கரையுடன் இருக்கின்றனர். அவர்களைத் தூண்டக் கிளர்ச்சி அவசியமில்லை.

கிளர்ச்சி நடத்துபவர்களைக் குறை கூறி நான் இதைச் சொல்லவில்லை. அவர்களுடைய உணர்ச்சியையும் நாம் அறிவோம். உண்மையாகவும் ஒரு கொள்கைக்காகவும் அவர்கள் போராடுகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் சென்னை அரசினரின் நிலை தெளிவாக்கப்பட்ட பின்னரும் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தத் தேவையில்லை. ஆகவே கிளர்ச்சியை நடத்துவோர் தங்கள் நிலைமையைப் புனராலோசனை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நான் டில்லிக்குச் செல்வதால் பலன் கிடைக்குமென்று தெரிந்தால் நடந்து அல்லது பறந்து செல்லவும் தயாராக இருக்கிறேன்.[62]

சட்டப்பேரவையில் சி.சுப்பிரமணியம் கூறியதற்கு ஏற்ப ம.பொ.சி.யும் கே.வினாயகமும் முதலமைச்சர் காமராசரையும் நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியத்தையும் சந்தித்தனர். அதன் பின்னர், போராட்டத்தை நிறுத்துவதாக ம.பொ.சி. 25.10.1956 அன்று அறிக்கை வெளியிட்டார்.

"தமிழக வடக்கெல்லைப் பிரச்சனை சம்பந்தமாக நேற்றும் இன்றும் சென்னை முதலமைச்சரையும், நிதி அமைச்சரையும் சந்தித்துப் பேசினேன். கே.வினாயகமும் இதில் கலந்து கொண்டார். இந்தச் சந்திப்பின் போது வடக்கெல்லைப் பிரச்சனையை மண்டல சபைக்கு விடும் யோசனையை நிராகரித்தும், மத்திய அரசாங்கமே நேரடியாகப் பொறுப்பேற்று மத்தியஸ்தமுறை மூலம் இப்பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்று மாற்று யோசனை

கூறியும் டில்லிக்குக் கடிதம் எழுதிவிட்டதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. இது எங்களுக்கு ஓரளவு திருப்தி அளித்தது என்றாலும் டில்லியின் பதில் வழக்கம் போல் தாமதித்து வருமென்று நாங்கள் அஞ்சினோம். ஆகவே நிதியமைச்சர் உடனடியாக டில்லி சென்று மத்திய அரசினரின் முடிவைத் தெரிந்துவர வேண்டுமென்று வற்புறுத்தினோம். அவரும் இன்னும் சில தினங்களில் இந்திய சர்க்காரின் உள்நாட்டு அமைச்சர் பந்த்தை இது விஷயமாகச் சந்தித்துப் பேசுவது நிச்சயமென்று உறுதி கூறினார்.

பிரச்சனையை விரைவில் தீர்க்கச் சென்னை அரசினர் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு இப்பொழுது நடைபெற்று வரும் சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் நிதியமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இது விஷயமாகச் சென்னை மத்திய சிறையில் இருக்கும் தமிழரசு கழகக் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை நானும், கே.வினாயகமும் சந்தித்துப் பேசினோம். அதன் விளைவாக வடக்கெல்லைப் போராட்டத்தின் இரண்டாவது கட்டத்தை இன்றோடு முடிப்பதென்ற முடிவுக்கு வந்தோம். அடுத்த நடவடிக்கை டில்லியிடமிருந்து கிடைக்கும் பதிலைப் பொறுத்திருக்கும்.

இது விஷயத்தில் சிறையிலிருக்கும் தமிழரசு கழகத் தோழர்கள் விடுதலை பெற்ற பிறகு விரைவில் கழகக் காரியக் கமிட்டி கூடி இறுதி முடிவு செய்யும்.

போராட்டம் நிறுத்தப்பட்டதுமே சிறையிலுள்ள சத்தியாக்கிரகிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்படுமென்றும் முதலமைச்சரும், நிதியமைச்சரும் எங்களிடம் உறுதி கூறினர்.

ஆகவே தமிழ்நாடு முழுவதிலுமுள்ள தமிழரசு கழகக் கிளைக் கழகங்களும் கழக ஆதரவாளர்களும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவினரும் நாங்கள் செய்துள்ள முடிவுக்கிணங்க, இனி நேரடி நடவடிக்கையில் இறங்காமலிருக்கக் கேட்டுக்

கொள்ளுகிறேன். வடக்கெல்லைப் பிரச்சனை விரைவில் தீர்க்கப்படும் வகையில் செயல்படும்படி சென்னை அரசினரைத் தூண்டும் பொருட்டே போராட்டம் துவக்கப்பட்டது. அந்த வகையில் போராட்டம் ஆரம்ப வெற்றியை அடைந்துவிட்டதாகவே கொள்ள வேண்டும்"[63] என்று அந்த அறிக்கையில் ம.பொ.சி. கேட்டுக்கொண்டார்.

போராட்டம் நிறுத்தப்பட்டாலும் போராட்டத்தில் கைதானவர்களை அரசு விடுதலை செய்யவில்லை. திருத்தணியில் நடைபெற்ற மறியலில் கலந்து கொண்ட ந.சுப்பிரமணியம் கைது செய்யப்பட்டு ராஜமந்திரி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவரைப் போலவே தமிழகத்திலும் பலர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

**தொண்டர்கள் மரணம்**

ராஜமந்திரி சிறையில் அடைக்கப்பட்டிருந்த பி.கோவிந்தசாமி என்ற தொண்டர் சிறையிலேயே காலமானார். அவரது உடலை உறவினர்களிடம் ஒப்படைக்க ஆந்திர அரசு மறுத்துவிட்டது. தமிழகத்தில் பழநியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்த மாணிக்கம் என்ற தொண்டரும் மரணம் அடைந்தார்.

**படாஸ்கர் நியமனம்**

ஆந்திரத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே உள்ள எல்லைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மத்திய சட்ட அமைச்சர் செ.ஷி.படாஸ்கர் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நியமிக்கப்பட்டார். இந்தப் பொறுப்பை ஏற்பதற்காகச் சென்னைக்கு ரயிலில் வந்த படாஸ்கரைத் திருத்தணி ரயில் நிலையத்தில் மாலை அணிவித்து வரவேற்றனர் வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவினர். அவர் அதே ரயிலில் சென்னைக்குச் சென்றார்.

வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவினர் படாஸ்கரை முறையாகச் சந்தித்துத் தங்கள் கோரிக்கையைத் தெரிவிப்பதற்கு 27.12.1956 அன்று நாள் ஒதுக்கப்பட்டிருந்தது. அன்று ம.பொ.சி, கே.வினாயகம், சுப்பிரமணியம் உட்படப் பலர் நேரில் சென்றார்கள்.

தங்கள் கோரிக்கை மனுவைப் படாஸ்கரிடம் வழங்கினார்கள். இவ்வாறு திருத்தணி, புத்தூர், சித்தூர் தமிழ் மக்கள் படாஸ்கரைச் சென்று சந்தித்ததை அவர் தமது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

I went to Madras in the third week of December 1956 and heard the prints of view that were urged by the Govt. of Madras. I also received representations from the Tamil Nadu North Boundry Protection Committee. A large number of people from the town and taluk of Tiruttani also came and saw me at Madras.

**படாஸ்கரின் தீர்ப்பைப் பாதுகாப்புக் குழு ஏற்றது**

படாஸ்கரின் தீர்ப்பு, காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. அக்குழுவில் முதல் அமைச்சர் கு.காமராசர், நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம், கே.விநாயகம் மற்றும் பலர் இருந்தனர். இந்தக் குழுவினர் படாஸ்கரின் தீர்ப்புப் பற்றிய முடிவெடுக்கும் அதிகாரத்தை முதல்வர் காமராசருக்கு வழங்கினர். இந்த நிலையில் வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவின் கூட்டம் **28–8–57** காலையும், பிற்பகலும் ம.பொ.சி. அவர்கள் இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெற்றது. படாஸ்கரின் சிபாரிசுகளைப் பற்றி ஆலோசிப்பதற்காகவே இக்கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டது. எஸ்.ரங்கநாத முதலியார் எம்.எல்.ஏ. (ஆந்திரம்), திரு.கே. வினாயகம் எம்.எல்.ஏ. (தமிழகம்), திருவாளர்கள் ஈ.எஸ்.தியாகராஜன் (பொதட்டூர்பேட்டைப் பஞ்சாயத்துத் தலைவர்), என்.சுப்பிரமணியம் (வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டிச் செயலாளர்), சரவண கண்ணப்பா (அம்மையார் குப்பம்), ஏ.முனுசாமி (திருத்தணி), மவுலானா, டி.எம்.திருமலை பிள்ளை, கே.சி.ராமசாமி ரெட்டியார், முத்துவேல் முதலியார் முதலிய பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ம.பொ.சி. முதலமைச்சர் காமராசரைச் சந்தித்துத் தான் நடத்திய பேச்சு வார்த்தைகளைக் கமிட்டியினரிடம் விளக்கமாக

அறிவித்தார். படாஸ்கர் சிபாரிசுகளின் நகல் அதிகாரப் பூர்வமாக வழங்கப்படாததால் அதைப்பற்றிப் பத்திரிகையில் வெளியான தகவல்கள் ஆலோசிக்கப்பட்டன. நெடுநேர விவாதத்துக்குப் பிறகு, பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தமிழக ஆந்திர எல்லைச் சிக்கல் குறித்து திரு.படாஸ்கர் வழங்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் பற்றிய பத்திரிகைகளில் வெளியான தகவல்களையும், இக்கமிட்டியின் தலைவர் திரு.ம.பொ.சி. இன்று காலை முதலமைச்சர் காமராசரைச் சந்தித்துப் பேசியது பற்றி அவர் தெரிவித்த விபரங்களையும் கமிட்டி கவனமாகப் பரிசீலனை செய்தது. அதன் விளைவாக நெடுங்காலமாய் இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த எல்லைப் பிரச்சனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு திரு.படாஸ்கர் வழங்கியுள்ள தீர்ப்பை நிபந்தனை இன்றி இக்கமிட்டி ஏற்றுக் கொள்கிறது.

2. திரு.படாஸ்கர் வழங்கியுள்ள தீர்ப்பால் தங்கள் சொந்த நலன்கள் பாதிக்கப்படுகிறதென்ற காரணத்திற்காக அந்தத் தீர்ப்பை நிராகரித்து இப்போதைய நிலையே நீடிக்க வேண்டுமென்று ஒரு சில சுயநலமிகள் செய்து வரும் பிரச்சாரத்தை இக்கமிட்டி வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர்களுடைய கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் திரு.படாஸ்கரின் சிபாரிசுகளை உடனடியாக அமுல் நடத்துமாறு மத்திய அரசினரையும் தமிழக அரசினரையும் இக்குழு கேட்டுக் கொள்கிறது.

3. நிலைமையை விளக்கிக் கூறி, திரு.படாஸ்கரின் தீர்ப்பை அமல் நடத்துமாறு வற்புறுத்த திரு.ம.பொ.சி. தலைமையில் ஒரு தூதுக்குழுவை டெல்லிக்கு அனுப்புவதென்று இக்குழு தீர்மானிக்கின்றது.”[64]

**டெல்லிக்குப் பயணம்**

வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி ம.பொ.சி, விநாயகம், சுப்பிரமணியம் முதலானோர் 30.08.1957 அன்று புதுதில்லிக்குப் புறப்பட்டனர். அவர்கள், மத்திய நிதி அமைச்சராக இருந்த

டி.கிருஷ்ணமாச்சாரி, மத்திய உள்துறை அமைச்சர் பந்த் ஆகியோரை 02.09.1957 அன்று சந்தித்துத் தங்கள் கோரிக்கையைத் தெரிவித்தார்கள்.

**காமராசரின் முயற்சி**

காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நடைபெற இருந்த நாள் காலையில் ம.பொ.சி.யை அழைத்துப் பேசினார் காமராசர். படாஸ்கரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பைக் காமராசரிடம் விட்டுவிட்டதால் காமராசருக்குப் பொறுப்பு அதிகமானது. அவர் ஆந்திர முதல்வர் நீலம் சஞ்சீவி ரெட்டியைப் புதுதில்லியில் சந்தித்துப் பேசினார். படாஸ்கரின் அறிக்கையைத் தமிழக அரசின் சார்பில் காமராசர் ஏற்றுக் கொண்டதோடு சஞ்சீவி ரெட்டியையும் ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

**எச்.வி. படாஸ்கரின் தீர்ப்பு ஏற்பு**

தமிழக வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியும், தமிழரசு கழகமும் இணைந்து தலைவர் ம.பொ.சி. அவர்களின் தலைமையில் 11 ஆண்டுகள் இடையறாது நடத்திய போராட்டத்தின் விளைவாக 1957ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களின் இறுதியில் எச்.வி.படாஸ்கர் தீர்ப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது.

படாஸ்கரின் தீர்ப்பைத் தமிழக–ஆந்திர அரசுகளின் ஒப்புதலோடு மத்திய அரசு ஏற்றுக் கொண்டதை மாலைச் செய்தித்தாளில் பார்த்ததும் தமது செயல்பாட்டைச் சுப்பிரமணியம், "ஆண்டவனுக்கு அடுத்தபடியாக நான் வணங்கும் தலைவர் ம.பொ.சி. அவர்களைக் காண விரைந்தேன், ஆம்; வெறுங்கையுடன் அல்ல. மிகப் பெரிய மாலை ஒன்றை எடுத்துக் கொண்டு எனது நண்பர் பி.சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு தலைவர் ம.பொ.சி. அவர்கள் இல்லத்திற்குச் சென்று தலைவருக்கு அந்த மாலையை அணிவித்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கித் தணிகை மக்களின் சார்பிலும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டேன். மறுநாள் காலை தளபதி கே.வினாயகத்திடமும் சென்று அவருக்கும் மலர் மாலை அணிவித்து

எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டேன்”[65] என்று குறிப்பிட்டுள்ளார்.

1957 செப்டம்பர் இறுதி வாரத்தில் மத்திய அரசால் படாஸ்கரின் தீர்ப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அது நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் சட்டமாக்கப்படுவது தாமதமானது. ம.பொ.சி.யும் வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவினரும் தொடர்ந்து முயற்சி செய்தனர். 1959ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தில் இச்சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1960ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் ஆந்திராவிலிருந்து பின்வரும் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்தோடு சேர்ந்தன.

| | | |
|---|---|---|
| திருத்தணி தாலுகாவில் | – | 290 கிராமங்கள் |
| சித்தூர் தாலுகாவில் | – | 29 கிராமங்கள் |
| புத்தூர் தாலுகாவில் | – | 1 கிராமம் |

திருப்பதி, தமிழ்நாட்டிற்குக் கிடைக்கவில்லை. இந்தப் போராட்டத்தின் விளைவாகத் தமிழ் நாட்டிற்கு 415.15 சதுர மைல் நிலப்பரப்புக் கிடைத்தது.

**வடக்கு எல்லை வெற்றி விழா**

1960 ஏப்ரல் முதல் தேதி தமிழக–ஆந்திர எல்லைத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருமென மத்திய அரசால் அறிவிக்கப்பட்டதுமே, தமிழரசு கழகத் தோழர்கள் வெற்றி விழா கொண்டாடத் தயாராயினர்.

ஏப்ரல் முதல் தேதியன்று காலை 7 மணிக்குச் சென்னையிலிருந்து மோட்டார் ஊர்வலமொன்று 55 மைல் தொலைவிலுள்ள திருத்தணியை நோக்கிப் புறப்பட்டது. இராயப்பேட்டை, லாயிட்ஸ் சாலையிலுள்ள ‘பரமசிவம் நிலையம்’ (அப்போது கலைஞர் ஏ.பி.என். வாழ்ந்த) பங்களாவிலிருந்து சுமார் 50 மோட்டார்கள் வரிசையாகப் புறப்பட்டு, கிருஷ்ணாம்பேட்டையிலுள்ள எனது இல்லத்திற்கு வந்தன. நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த மோட்டாரில் என்னை ஏற்றிக் கொண்டு ஊர்வலம் தணிகையை நோக்கி ஊர்ந்தது.

புகழ்மிக்க நாடக—திரைப்பட நடிகர்கள், எழுத்தாளர்கள், தமிழரசு கழக முன்னணித் தோழர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மோட்டார்களில் அமர்ந்திருந்தனர்.

ஊர்வலம் தணிகையை நெருங்கிக் கொண்டிருந்த போது எங்களில் யாரும் எதிர்பாராத வண்ணம் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் தமது காரில் வந்து எங்களோடு கலந்து கொண்டு தணிகைக்கு வந்தார். அவரது திடீர் வருகை எனக்கே பெரு மகிழ்ச்சியைத் தந்ததென்றால், பொதுமக்களின் மகிழ்ச்சிக்கு எல்லை ஏது?

செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லையிலுள்ள இராமாவரம் என்ற கிராமத்தை ஊர்வலம் அடைந்த போது, அதுகாறும் அங்கிருந்த "ஆந்திர மாநில எல்லை" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட எல்லைக்கல் அகற்றப்பட்டிருக்கக் கண்டு, நானும் தமிழரசு கழகத் தோழர்களும் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தோம். ஆம்; கத்தியின்றி ரத்தமின்றிச் சாதித்த சரித்திரச் சிறப்பு மிக்க சாதனையல்லவா. ஊர்வலம் தணிகை சேருவதற்குள் மோட்டார்களின் எண்ணிக்கை 80ஆக அதிகரித்துவிட்டது. தணிகை ஊராட்சியின் எல்லையிலே ஆந்திராவிலிருந்து 'விடுதலை'யான தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்து, எனக்குத் திருஷ்டி கழித்து என்னை வாழ்த்தி வரவேற்றனர். அவர்களுடைய உற்சாகத்திற்கு எல்லையே இல்லை.

நான் தணிகை செல்வதற்குள் செங்கை—சித்தூர் மாவட்ட ஆட்சியாளர்கள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்த எல்லை மாற்றச் சடங்கு முடிந்துவிட்டது. அமைச்சர் மீ.பக்தவச்சலனார் தான் தமிழ் நாட்டரசின் சார்பில் ஆந்திரா அரசிடமிருந்து தணிகைத் தாலுகாவைப் பெற்றுக் கொண்டார். அவர் பாக்கியசாலி. அந்தச் சடங்கில் கலந்து கொள்ளுமாறு அதிகாரப் பூர்வமாக, செங்கை மாவட்ட கலெக்டர் என்னை அழைத்திருந்தாரென்றாலும், அவகாசமின்மையால் நான் கலந்து கொள்ளவில்லை. இந்த வடக்கெல்லைக் கிளர்ச்சியைத் தொடங்குவதற்கு எனக்குத் துணைபுரிந்த காலஞ்சென்ற ஆசிரியர் மங்கலங்கிழார் முகவுருவச் சிலையொன்றும் ஊராட்சி மன்றத்தில் திரு.பக்தவச்சலனாரால்

திறந்து வைக்கப்பட்டது. தணிகை ஊராட்சி மன்றம் ஏற்பாடு செய்திருந்த வடக்கெல்லை வெற்றி விழா, மாலையில் அதற்கென அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில் நடைபெற்றது.

தமிழ் மாநில நிதியமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம், விழாவில் கலந்து கொண்டு, ஊராட்சி மன்றத்தில் எனது உருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். 'திருத்தணிகை திரும்பியதோடு வடக்கெல்லைக் கிளர்ச்சி முடிந்துவிட்டது' என்று சி.சுப்பிரமணியம் கூறினார். உடனே கூடியிருந்த தொண்டர்கள் அனைவரும் "இல்லை, இல்லை வேங்கடத்தை விடமாட்டோம்" என்று முழங்கினர்.

மேலும் அவர் பேசும் போது, "இந்த நல்ல நேரத்தில் நமது தலைவர் சிலம்புச் செவ்வர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழரசு கழகம் எந்தக் குறிக்கோள்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அவற்றில் பெரும்பாலானவை நிறைவேறிவிட்டன. திருத்தணிகை இன்று இணைந்து விட்டது. இந்தச் சாதனைகளுக்குப் பிறகும் தமிழரசு கழகம் ஒரு அரசியல் கட்சியாக நீடிக்க வேண்டுமா? என்பதை ம.பொ.சி யோசித்துப் பார்க்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

தமிழரசு கழகத்தை நான் தொடங்கியது, மொழிவழித் தமிழ் மாநிலம் அமைப்பதற்காகவோ, தமிழக எல்லைகளை மீட்பதற்காகவோ எங்கும் எதிலும் தமிழ் மொழிக்கு முதலிடந்தேடுவதற்காகவோ மட்டுமல்ல; இவற்றிற்கெல்லாம் மேலாகத் தமிழகத்தை முழு அளவு சுயாட்சியுடைய மாநிலமாக்கவுந்தான் தமிழரசு கழகத்தைத் தொடங்கினேன். அது முடியுமுன் கழகத்தைக் கலைத்துவிட்டு நான் காங்கிரசில் சேர்ந்து விடுவதற்கான சந்தர்ப்பமே இல்லாத நிலையில் திரு.சி.சுப்பிரமணியம் எனக்கு அழைப்பு விடுத்தார். நான் அந்த மேடையிலேயே மறுப்பது மரியாதையாகாது என்ற காரணத்தால், மழுப்பிப் பேசிச் சமாளித்தேன்[66] என்று ம.பொ.சி. தமது 'எனது போராட்டம்' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## சான்றெண் விளக்கம்


1. டி.எஸ். சொக்கலிங்கம்,'காந்தி–ஜின்னா பேச்சு' 'தினசரி' வெளியீடு, சென்னை, 1994.
2. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.65.
3. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.120.
4. ம.பொ.சி., எனது போராட்டம் (இரண்டாம் பாகம்), பக்.97–98
5. ம.பொ.சி., எனது போராட்டம் (இரண்டாம் பாகம்), ப. 99
6. ம.பொ.சி., எனது போராட்டம் (இரண்டாம் பாகம்), பக்.100–101.
7. தமிழ் முரசு,15.09.47.
8. தமிழ் முரசு,15.09.47.
9. தமிழ் முரசு, 01.09.47.
10. தமிழ் முரசு,15.11.47.
11. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 132–133.
12. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 133–134.
13. தமிழ் முரசு., 15.12.47.
14. ம.பொ.சி., எனது போராட்டம் (இரண்டாம் பாகம்), பக்.149–154.
15. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 207–209.
16. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 210–211.
17. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், ப. 37.
18. தினமணி, 15.4.52.
19. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், ப. 43.
20. தினத்தந்தி, 16.4.52.

21. ம.பொ.சி., எனது போராட்டம், பக். 309–310.

22. ம.பொ.சி., எனது போராட்டம், ப.314.

23. கோல்டன், பக். 44–45.

24. ம.பொ.சி.,புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.244

25. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப.245.

26. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 245–247. ப.252.

27. செங்கோல், 11.1.53.

28. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 255–256.

29. தினமணி, 28.1.53.

30. சுதேசமித்திரன், 27.1.53.

31. ஜனசக்தி, 1.2.53

32. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப, 263.

33. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், ப. 51.

34. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், ப. 51.

35. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், ப. 52.

36. செங்கோல், 1.3.1953.

37. இந்து, 21.5.1953.

38. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 278–279.

39. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 279–280.

40. கல்கி, 31.5.1953.

41. செங்கோல், 14.8.1953.

42. செங்கோல், 14.8.1953.

43. செங்கோல், 14.8.1953.

44. ம.பொ.சி.,புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப, 284.

45. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப, 293.

46. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, ப, 295.

47. ம.பொ.சி., எனது போராட்டம், (இரண்டாம் பாகம்) ப. 376.

48. ம.பொ.சி., எனது போராட்டம், (இரண்டாம் பாகம்) ப. 377.

49. ம.பொ.சி., புதிய தமிழகம் படைத்த வரலாறு, பக். 303–305.

50. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், ப. 126.

51. ம.பொ.சி., எனது போராட்டம், (இரண்டாம் பாகம்) பக். 344–305.

52. ம.பொ.சி., எனது போராட்டம், (இரண்டாம் பாகம்) பக். 348–349.

53. செங்கோல், 1.8.54.

54. செங்கோல், 11.7.54.

55. ம.பொ.சி., எனது போராட்டம், (இரண்டாம் பாகம்) பக். 339–340.

56. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 130–133.

57. செங்கோல், 24.10.54.

58. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 153–155.

59. செங்கோல், 22.05.1956.

60. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 179–181.

61. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 182–183.

62. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 184–185.

63. நே.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 185–186.

64. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 199–200.

65. ந.சுப்பிரமணியம், தமிழக வடக்கெல்லைப் போராட்டமும் தணிகை மீட்சியும், பக். 202–203.

66. ம.பொ.சி., எனது போராட்டம், (இரண்டாம் பாகம்) பக். 596–601.

# நிறைவுரை

மக்கள் இனத் தோற்றத்தில் முதல் மனிதனாகத் தோன்றியவன் தமிழன். உலக மொழிகளுக்கு எல்லாம் முதல் மொழியான தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவன் தமிழன். உலக நாகரிகங்களுக்கு எல்லாம் பழமையான நாகரிகத்தைக் கொண்டவன் தமிழன். கடல்கோளினால் தனது நிலப்பரப்பின் பெரும்பகுதியை இழந்த தமிழன் உலகப் பரப்பை எல்லையாகக் கொண்டவன் என்னும் தகுதியை இழந்தான். சிந்துவெளிக் காலத்தில் இந்தியாவின் வட இமயம் வரை தனது எல்லையைப் பரப்பியிருந்த தமிழன் அயலாரின் படையெடுப்பால் இந்தியாவின் தென்பகுதிக்குள் வாழ்ந்தான். தென் பகுதியிலும் மொழித் திரிபால் ஏற்பட்ட அயல்மொழிப் படையெடுப்பால் பல இழப்புகளைச் சந்தித்தான். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தனது வட எல்லையாகக் கொண்டிருந்த வேங்கடத்தையும் தென் எல்லையாகக் கொண்டிருந்த கன்னியாகுமரியையும் இழக்கும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டான். அண்டை மாநிலத்தவரின் ஆக்கிரமிப்பைக் கண்டு கொள்ளாமல் இருந்ததால் சொந்த நிலப்பரப்பை இழந்தான்.

புறநானூற்று வீரத்தை நினைவில் அசைபோட்டபடி இருந்த தமிழன் தற்கால நிலப்பரப்பு, கொள்ளை போவதை அறியாமல் இருந்தான். காலம் காலமாகத் தமிழ் மொழி வழங்கி வந்த பகுதிகளை அந்நியர் தமது என்று சொந்தம் கொண்டாடிய வேளையில் அது தன்னுடையது என்ற உணர்வுகூட இல்லாமல் இருந்தான். அயல் மொழியினர் தாங்கள் மிகுதியாக வாழ்வதாகப் பொய்யுரைகளைக் கூறித் தமிழ்ப் பகுதிகளைக் கையகப்படுத்தியதைக் கண்டும் காணாதது போல் இருந்தான்.

தமிழர்கள் எல்லோரும் இப்படித் தங்கள் நிலப்பரப்பை இன்னொரு மொழியினருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போது தமிழ்நாட்டின் தென்பகுதியாக விளங்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று குரல் கொடுக்கத் தொடங்கினர். அவர்களது குரலை எந்த வகையில் ஒடுக்க முடியுமோ அந்த வகையில் ஒடுக்குவதற்கு மலையாளிகள் முயன்றனர்.

திருவிதாங்கூர்ப் பகுதியிலிருந்து தமிழர் பகுதிகளைப் பிரிப்பதற்கு நேசமணியின் தலைமையில் விழிப்படைந்த தென்

எல்லைத் தமிழ் மக்கள் தொடர்ந்து போராடினார்கள். அந்தப் போராட்டத்தில் 11 பேர் உயிர்த் தியாகம் செய்தனர். உடல் உறுப்புகளையும் உறவினர்களையும் உடைமைகளையும் இழந்தவர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. ஓர் அரசை எதிர்த்து, தமிழ் மக்கள் போராட்டம் நடத்தித் தங்கள் பகுதிகளை மீட்டனர். அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டையின் ஒரு பகுதி ஆகியவற்றை 1956ஆம் நாள் நவம்பர் முதல் நாள் மீட்டனர். தமிழர்கள் மிகுதியாக வாழ்ந்த தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகளை அவர்களால் மீட்க இயலவில்லை. இந்தப் பகுதிகள் தவிர நெய்யாற்றங்கரை, நெடுமங்காடு போன்ற பகுதிகளிலும் தமிழ் மக்கள் மிகுதியாக வாழ்ந்தார்கள். அந்தத் தமிழருக்கு மலையாளமும் தெரிந்த காரணத்தால் அவர்களை மலையாளிகள் என்று கணக்கில் சேர்த்துக் கொண்டு அந்தப் பகுதிகளைத் தமிழருக்குக் கிடைக்காமல் செய்துவிட்டனர்.

இதே காலகட்டத்தில் தமிழ்நாட்டின் வட பகுதியில் வாழ்ந்த தமிழ்மக்கள் வேங்கடத்தை மீட்டாக வேண்டும் என்று ம.பொ.சிவஞானம் தலைமையில் போராடினார்கள். ஆனால் இந்திய தேசியக் காற்று வேகமாக வீசியடித்ததால் அந்தப் போராட்டத்தில் அவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

1911ஆம் ஆண்டுவரை திருப்பதி, திருத்தணி முதலான தமிழ்ப்பகுதிகள் தற்போதும் தமிழ்நாட்டில் உள்ள வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருந்தன. நிர்வாக வசதிக்காகச் சித்தூரைத் தனிமாவட்டமாகப் பிரிக்கும்போது இந்தப் பகுதிகளையும் அந்தச் சித்தூர் மாவட்டத்துடன் இணைத்துவிட்டார்கள். அப்போது தற்போதைய தமிழ்நாடு, கேரளப்பகுதிகள், ஆந்திரப் பகுதிகள், கர்நாடகப் பகுதிகள் இணைந்து சென்னை மாநிலம் என்ற பெயரில் இயங்கி வந்ததால் இந்த மாவட்டப் பிரிவினை பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் இந்தியா விடுதலை அடைந்த வேளையில் சித்தூர் மாவட்டதில் உள்ள தமிழ்ப்பகுதிகள் அனைத்தும் ஆந்திர மாநிலத்திற்குச் சென்றுவிடுமோ என்று தமிழ் மக்கள் அஞ்சத் தொடங்கினர். அந்த அச்சத்தின் காரணமாகத்தான் ம.பொ.சி. 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் பதினாறாம் நாள் திருப்பதிவரை தமது தொண்டர்களுடன் பயணம் மேற்கொண்டார். அந்தப் பயணத்தில் திருவாலங்காடு, திருத்தணி போன்ற பகுதிகளில் ஓரளவுக்குத் தமிழ்மக்கள் விழிப்போடு இருந்ததைக் காணமுடிந்தது. ஆனால் திருப்பதியில் வாழ்ந்த தமிழ் மக்களுக்குத் தாங்கள் தமிழர் என்ற நினைவே இல்லாமல் போனதுதான் வியப்பாக ம.பொ.சி.க்குத்

தோன்றியது. இந்தத் தமிழ்ப் பகுதிகளை அமையவிருக்கும் தமிழ் மாநிலத்துடன் இணைப்பதற்குப் பெரும்போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பது அப்போதே அவருக்குப் புலப்பட்டது.

ஆசிரியர் மங்கலங்கிழார், விநாயகம், ந.சுப்பிரமணியம், டி.எம். திருமலை பிள்ளை, அரங்கநாத முதலியார் ஆகியோரின் உதவியுடன் பல போராட்டங்களை ம.பொ.சி. நடத்தினார்.

1949 ஆம் ஆண்டு சென்னையில் தமிழக எல்லைப் போராட்ட மாநாட்டை நடத்தித் தமிழ் மக்களுக்குத் தங்கள் எல்லை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இந்த விழிப்புணர்வு ஆந்திரத்துடன் இணையும் என்னும் ஐயம் கொண்ட பகுதிகளில் ஏற்படவேண்டும் என்று அவர் விரும்பியதால் சித்தூர், புத்தூர், திருத்தணி போன்ற இடங்களில் மாநாடுகளை நடத்தித் தமிழ் மக்களுக்கு எழுச்சி ஊட்டினார்.

வடபகுதி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டவுடன் அவர்கள் பங்கேற்கும் வகையில் ஓர் எல்லைப் பாதுகாப்புக் குழுவை உருவாக்கினார். அந்த அமைப்பின் ஆலோசனையுடனேயே வட எல்லைப் போராட்டத்தை ம.பொ.சி. வகுத்து நடத்தியுள்ளார்.

1953 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் ஆந்திரம் தனிமாநிலமாகப் பிரிக்கப்பட்டது. அப்போதே பிரச்சனைக்கு உரிய திருத்தணி, திருப்பதி, சித்தூர், புத்தூர் முதலிய பகுதிகளைச் சென்னை மாநிலத்தில் விட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் ஆந்திரத்துடன் மேற்குறிப்பிட்ட பகுதிகளை இணைத்து விட்டு மாநில எல்லைகளை வரையறை செய்யும் போது தமிழ்ப் பகுதிகளைப் பிரித்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டது அரசு. தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் செயல்போல் அமைந்த இந்தச் செயலால் தமிழ் மக்கள் தொடர்ந்து போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இதில் வருத்ததிற்குரிய செயல் என்னவென்றால் மொழி வாரியாக நிலப் பகுதிகளைப் பிரித்து அந்தந்த மொழி பேசும் மக்கள் வாழும் நிலப்பரப்புகளை அந்தந்த மாநிலங்களோடு சேர்ப்பதற்கு ஓர் எல்லைக் குழுவை நியமிக்கச் செய்வதற்கே தமிழ் மக்கள் போராட வேண்டிய அவலநிலை ஏற்பட்டுவிட்டது.

வடக்கு எல்லையாக வேங்கட மலையை மீட்டாக வேண்டும் என்று நடத்திய போராட்டத்தில் சிறையில் இருவர் இறந்துள்ளனர். எவ்வளவோ போராட்டங்கள் நடத்திய பிறகும் இழந்த வேங்கடத்தை

வட எல்லைப் போராட்டக் குழுவால் மீட்க இயலவில்லை. முருகன் கோயில் கொண்டுள்ள திருத்தணியைப் பெறுவதற்கே பல போராட்டங்களை அவர்கள் நடத்த வேண்டியிருந்தது. மறியல், உண்ணாவிரதம், சிறைபுகும் போராட்டம் என்று தொடர் போராட்டங்களை நடத்தியதன் விளைவாகத் திருத்தணியையாவது மீட்க முடிந்தது. 1960 ஆம் ஆண்டு ஏப்பிரல் முதல் நாள் தான் திருத்தணியும் சித்தூர் தாலுகாவில் சில கிராமங்களும் புத்தூர் தாலுகாவில் ஒரு கிராமமும் தமிழ்நாட்டுடன் இணைந்தன.

தென் எல்லைப் போராட்டம், வட எல்லைப் போராட்டம் ஆகிய இரண்டிலும் ம.பொ.சிக்குத் தொடர்பு இருந்துள்ளது. ஆனால் தென் எல்லைப் போராட்டத்திற்கு ம.பொ.சி. ஆதரவு வழங்கி அந்தப் போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார். தென் எல்லைப் போராட்டத்தில் இடையூறு ஏற்பட்ட வேளைகளில் அவற்றைப் போக்குவதற்கு முயற்சி செய்திருக்கிறார். தென் எல்லைப் போராட்டத்திற்குக் களம் அமைத்ததும் போராடியதும் தென் திருவிதாங்கூரில் வாழ்ந்த தமிழ்மக்களே ஆவர். மார்ஷல் நேசமணியின் தலைமையில் அணிதிரண்டு போராடி வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் வட எல்லைப் போராட்டம் முழுக்க முழுக்க ம.பொ.சி. அவர்களைச் சார்ந்தே நடந்திருக்கிறது. போராட்டத் தலைவராகவும் போராட்டத் தொண்டராகவும் போராட்ட ஒருங்கிணைப்பாளராகவும் பல்வேறு பரிமாணங்களில் ம.பொ.சி. வட எல்லைப் போராட்டத்தில் பஙகேற்றுள்ளார். இராஜாஜி, காமராஜர், நேரு போன்ற தலைவர்களோடு ம.பொ.சி. கொண்டிருந்த தொடர்புகளை வடக்கு எல்லைப் போராட்டத்தில் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டார். சில வேளைகளில் இந்தத் தலைவர்களின் கருத்துகளை எதிர்த்தும் போராடியிருக்கிறார். தாம் கொண்ட இலட்சியத்திற்கு ஒத்துப் போகும்போது தலைவர்களிடம் இணக்கமாக இருந்திருக்கிறார். தமது இலட்சியப் பாதைக்குத் தலைவர்கள் தடையாக இருக்கும் போது இலட்சியத்தை மனத்தில் பதித்துக் கொண்டு செயல்பட்டிருக்கிறார்.

சிறைக்கும் அஞ்சாமல், கொண்ட கொள்கையில் விடாப்பிடியாக இருந்ததால் மட்டுமே அவரால் திருத்தணியையாவது வடக்கு எல்லையாகப் பெற முடிந்தது. ஏனெனில் தமிழ்நாட்டின் வடபகுதியில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தெலுங்கின மக்களின் ஆதிக்கம் மிகுதியாக இருந்தது. அந்த ஆதிக்கத்தை

வீழ்த்துவதற்கு ம.பொ.சி. பல போர்முறைகளைப் பின்பற்றியுள்ளார். போராட்டம் நடத்த வேண்டிய நேரத்தில் போராட்டம் நடத்தியும், போராட்டத்தை நிறுத்த வேண்டிய நேரத்தில் நிறுத்தியும் உணர்வு வழிச் செல்லாமல் அறிவு வழிச் செயல்பட்டிருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

ம.பொ.சி.யின் தமிழரசு கழகம் வடக்கு எல்லை, தெற்கு எல்லை என்னும் இரு எல்லைப் போராட்டத்திற்கு மட்டும் அல்லாமல் சென்னை நகரம் தமிழ்நாட்டோடு இருப்பதற்கும் களம் அமைத்துப் போராடியிருக்கிறது. தேசியவாதியாக இருந்து கொண்டே தமிழரின் தன்னுரிமைக்காகவும் தமிழ்நாட்டின்தன்னாட்சிக்காகவும் போராடிய ம.பொ.சி., அவர் காலத்திலேயே ஓரளவு வெற்றி பெற்று விட்டார் எனலாம். இருப்பினும் தமிழ்மொழியும் தமிழ் நிலமும் இன்னும் பல பெருமைகளைத் தன்னகத்தே கொண்டவை என்பதை நினைத்து அந்தப் பெருமைகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

தமிழ் மாநிலம் எங்கிருந்தெல்லாம் உரிமைகளைப் பெறவேண்டுமோ அங்கிருந்தெல்லாம் உரிமைகளைப் பெறுவதற்குப் போராடவேண்டியிருக்கிறது. நன்மைகளும் உரிமைகளும் தானே கிடைக்கும் என்று எண்ணியிருப்பது மடமை. உரிமைகளை உரிய முறையில் குரல் எழுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உலகத்தில் உள்ள மனிதர்களை எல்லாம் உடன்பிறப்பாகக் கருதி மனிதநேயத்தோடு பழகுவது நல்ல பண்பின் அடையாளம் என்றாலும் நமது உடைமைகளை நாம் இழக்காமல் இருக்க வேண்டும் என்றால் நம் மண்ணுக்கு நாமே உரிமை உடையவர்கள் என்று உணர்தல் வேண்டும். இந்த மண்ணில்தான் மனித இனத்தின் முன்னோடிகள் தோன்றியிருக்கிறார்கள் என்ற உணர்வு வேண்டும். உலக நாடுகளில் உள்ளஆய்வு அறிஞர்கள் அறிந்திருக்கும் தமிழனின் தனிப்பெருமைகளை நாமும் அறிந்து அறிவை ஆயுதமாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

தமிழ் மக்கள் தங்கள் பழைமையையும் பெருமையையும் உணர்ந்து குறுகிய நன்மைகளைக் கருத்தில் கொள்ளாமல் மொழியின், இனத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு செயல் பட்டால் இழந்த பெருமையைத் துறைதோறும் மீட்கலாம். வளரும் அறிவியல் தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப நம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டு தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டால் அறிவியலிலும் தகவல் தொழில் நுட்பத்திலும் முதன்மை பெறமுடியும்.

## துணை நூல்பட்டியல்


அலெக்ஸாண்டர் காந்திரதாவ் (மொழியாக்கம், பெ.இராமநாதன்) **தமிழ் நாகரிகமும் சிந்துவெளி நாகரிகமும்**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2006.

அறவாணன், க.ப. **தமிழ் மக்கள் வரலாறு-தொல் தமிழர் காலம்**, தமிழ்க் கோட்டம், சென்னை.

ஆறுமுகம் **திரு தமிழரியக்க வீர வரலாறு**, 143, பாலமோர் சாலை, நாகர் கோவில், 1987.

இயற்கை அரசன் **பொன்னப்ப நாடார் வாழ்க்கை வரலாறு**, நாகர் கோவில், 1977.

இராசமாணிக்கனார், மா. **தமிழக ஆட்சி**, பாரிநிலையம், சென்னை-1, 1972.

இராமச்சந்திர தீட்சிதர், வி.ஆர். (மொழியாக்கம், பெ.இராமநாதன்) **தமிழரின் தோற்றமும் பரவலும்**, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2006.

இளந்தோட்டம் சுகுமாறன் **குமரிச் சிற்பி நேசமணியும் தென்குமரித் தமிழ்மக்களும்**, சாந்தினி பதிப்பகம், நாகர்கோவில், 2004.

உவே. சாமிநாதையர் (ப-ர்) **சிலப்பதிகாரம்-அடியார்க்கு நல்லார் உரை**, உ.வே.சா. நிலையம், சென்னை.

குழந்தைசாமி, சி. **குமரி எல்லை**, அரசியல் நூலகம், சென்னை-5.

சிங்காராயர், ஆ. தியாகி (ப-ர்) கன்னியாகுமரி எல்லை மாநாட்டில் குமரித் தந்தை நேசமணி ஆற்றிய உரை, ஆறுமுக றாகேல் பதிப்பகம், நெய்யூர், 2005.

| | |
|---|---|
| சிங்காராயர், ஆ.தியாகி | கன்னியாகுமரி மாவட்ட விடுதலைப் போராட்டத்தின் சுருக்க வரலாறுகள், ஆறுமுக நாகேல் பதிப்பகம், நெய்யூர், 2003. |
| சிங்காராயர், ஆ.தியாகி | **தியாகதீபங்கள்**, ஆறுமுக நாகேல் பதிப்பகம், நெய்யூர், 2000. |
| சிங்காராயர், ஆ.தியாகி | **மார்ஷல் நேசமணியும் இன்றைய தினமலரும்**, ஆறுமுக நாகேல் பதிப்பகம், நெய்யூர், 1993. |
| சின்னத்தம்பி, பொன் | **நான் கலந்த திருவிதாங்கூர் போராட்டம்**, வெற்றி பதிப்பகம், அருமனை, 1989. |
| சுப்பிரமணியம், 'கோல்டன்' ந. | **தமிழக வடக்கெல்லைப் போராட்ட மும் தணிகை மீட்சியும்**, தணிகை முருகன் பதிப்பகம், திருத்தணி, 1985. |
| சொக்கலிங்கம், டி.எஸ். | காந்தி-ஜின்னா பேச்சு, 'தினசரி' வெளியீடு, சென்னை, 1994. |
| சோமலெ | **கன்னியாகுமரி மாவட்டம்**, பாரிநிலையம், சென்னை, 1961. |
| தோமா, ஞான | **குமரித் தந்தை நேசமணி**, வெற்றி பதிப்பகம், அருமனை, 1982. |
| பச்சைமால், கு. | **குமரி மாவட்டம் பிறந்த வரலாறு**, தமிழாலயம், சாமிதோப்பு, 2001. |
| பவானந்தம் பிள்ளை (ப-ர்) | **இறையனார் அகப்பொருள்-நக்கீரர் உரை**, முல்லை நிலையம், சென்னை, 2006. |
| பிதலிஸ், பா. | **விடுதலை வீரர் குழந்தைசாமி**, வளனார் பதிப்பகம், ஆசாரி பள்ளம், 1998. |

பீட்டர், ஐவி, பீட்டர், டி. **மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும்**, கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வுமன்றம், நாகர்கோவில், 2002.

பெருமாள், அ.கா. **தென்குமரியின் கதை**, யுனைட்டெட் ரைட்டர்ஸ், சென்னை, 2003.

பொன்னையா, பி.ஜெ. **நாஞ்சில் ஏடு**, மனோரமா பப்ளிசிட்டி கன்னியாகுமரி, 1961.

மணி, பி.எஸ். **இணைப்பா?**, நாகர்கோவில், 1953.

ம.பொ.சி. **எனது போராட்டம் (இரண்டாம் பாகம்)**, அன்னை சிவகாமி பதிப்பகம், சென்னை, 2003.

ம.பொ.சி. எனது போராட்டம் (முதல் பாகம்) அன்னை சிவகாமி பதிப்பகம் சென்னை, 2003.

ம.பொ.சி. **புதிய தமிழகம் படைத்த வரலாறு** பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2001.

முத்துகிருஷ்ணன், தி. **கடல்தாமரை**, தினமலர், சென்னை, 1986.

ரசாக், ஏ.ஏ. **நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்**, தமிழாலயம், சாமிதோப்பு, 1998.

வேலாயுதப் பெருமாள், இரா. **திருவிதாங்கூர் தமிழரியக்க ஆரம்பகால உண்மைகள்**, கன்னியா பிரசுராலயம், நாகர்கோவில், 1981.

அகநானூறு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்,
சென்னை, 1981.

கலித்தொகை,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்.,
சென்னை, 1981.

நத்தானியேல்,
இணைப்பு வெள்ளிவிழாக் குழு
நாகர்கோவில்-1, 1987.

நன்னூல்,
கோவன் பதிப்பகம்
சென்னை.

பத்துப்பாட்டு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட்,
சென்னை, 2004.

பதிற்றுப்பத்து,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்.,
சென்னை, 2004.

புறநானூறு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்.,
சென்னை, 2004.

## இதழ்கள்

கல்கி, 31.05.1953.
சுதேசமித்திரன், 27.01.1953.
செங்கோல், 11.01.1953, 01.03.1953, 14.08.1953, 01.08.1954, 11.07.1954, 24.10.1954, 22.05.1956,
தமிழ் முரசு, 01.05.1946, 01.09.1947, 15.09.1947, 15.11.1947, 15.12.1947.
தினத்தந்தி, 16.04.1952.
தினமணி, 15.04.1952, 28.01.1953.
தினமலர், 07.08.1954, 08.08.1954, 09.08.1954, 12.08.1954, 14.08.1954, 03.11.1956.
ஜனசக்தி, 11.02.1953
ஹிந்து, 21.05.1953.

## ஆங்கில நூல்கள்

Manickavasagam, M.E. — **P.S. Moni, An Historical Biography**, P.S. Moni's Completion of 70th Birthday Celebration Committee, Nagercoil, 1987.

Nesamony, A. — **Inside Travancore Tamilnad**, Nagercoil, 1948.

Maria John — **Linguistic Reorganisation of Madras Presidency**, Ajith Publications, Nagercoil, 1994.

**Proceedings of the Travancore-Cochin Legislative Assembly**, First Session 1955, Official Report, Vol.XII-No.2.

**Report of the Linguistic Provinces Committee**, Appointed by the Jaipur Congress, Dec, 1948, Indian National Congress Publication.

# பின்னிணைப்பு

*தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்ட **வீரர் தியாகி** பி.எஸ். மணியுடன் நேர்காணல். நாள்: 01.03.2003.*

**தென் திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் ம.பொ.சி.யின் பங்கு என்ன?**

ம.பொ.சி.யையும் போராட்டத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்திற்கான செயல் திட்டங்களை அவர் வகுத்துக் கொடுப்பார்; நாங்கள் செயல்படுவோம்.

**திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது பற்றி...**

தென்திருவிதாங்கூரில் உள்ள தமிழ்ப் பகுதிகளைப் பிரிக்கிறதுக்கு நடக்கும் போராட்டத்தில் கருத்து வேறுபாடு ஏன் வரணும்? வர வேண்டிய தேவையே இல்லை. ஆனால் நேசமணி வந்த பிறகு கருத்து வேறுபாடும் பிளவுகளும் வந்தன.

**திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு முன்னால் தமிழ்ப் பகுதிகளைப் பிரிக்க இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டனவா?**

நிறையப்பேர் சின்னச் சின்ன அமைப்புகளை நடத்தியிருக்கிறாங்க. ஆனா, அமைப்புரீதியா 1943ஆம் ஆண்டு நானும் சிவன்பிள்ளையும் சுந்தரமும் சேர்ந்து மத்திய வாலிபர் சங்கம் ஒன்று ஆரம்பித்தோம். அதுதான் தமிழ்ப் பகுதிகளைப் பிரிப்பதற்குக் குரல் கொடுத்தது.

**அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் எப்போது தொடங்கப்பட்டது?**

1945ஆம் ஆண்டில் நாகர் கோவில் ஜில்லா கோர்ட் முன்னால் ஒரு கட்டடத்தில் ஒரு கூட்டம் போட்டோம். அந்தக் கூட்டத்துக்கு சாம் நத்தானியல் தலைமை தாங்கினார். அந்தக் கூட்டத்தில் தான் அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் தொடங்கப்பட்டது. அந்த ஸ்தாபனத்துக்கு நத்தானியல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**சாம் நத்தானியலைத் தலைவராக நியமிக்கக் காரணம் ஏதாவது உண்டா?**

உண்டு. நத்தானியல் தலைவருக்குப் பொருத்தமானவர். தேசியத் தலைவர். அதனால் தான் அவரைத் தலைவராக நியமித்தோம்.

**அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் என்னென்ன செயல் திட்டங்களைக் கொண்டிருந்தது?**

ஒரு ஸ்தாபனம் தொடங்கிய உடனே செயல் திட்டங்கள் அமைந்துவிடாது. படிப்படியாத்தான் செயல் திட்டங்களை வகுக்க முடியும். அந்தச் செயல் திட்டங்கள் சரியாக அமைந்தால் நோக்கம் நிறைவேறும் என்ற எண்ணத்தில் நாங்கள் முதலில் அமைப்பைத் தொடங்கினோம். அந்த அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரசுக்கு நான்தான் அமைப்புச் செயலர். காந்திராமன், பென்ரசலையா, நாகலிங்கம், மார்க்கண்டன் எல்லோரும் செயற்குழு உறுப்பினர்கள். அது எனது மணிமலர் நிலையத்தில் இயங்கியது-மணிமேடைக்குப் பக்கத்தில்.

**செயல்பாடுகள் பற்றி. . .**

அதுதான் சொல்ல வாறேன். நாங்க எதிர்பார்த்ததை விட அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரசுக்கு ஆதரவு அதிகமா இருந்தது. தென்திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்து தமிழர் பகுதிகளைப் பிரிக்கிறதுக்குத் தமிழ்நாட்டில் ஆதரவு திரட்ட முடிவெடுத்தோம். அதனால் தலைவர் நத்தானியல், நான், ஸ்ரீ.வி.தாஸ், ரொம்ப பேர் மெட்ராசுக்குப் போனோம். அங்கே காமராஜைப் பார்த்தோம். அவர் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரா இருந்தார். அப்புறம் பக்தவச்சலம், முத்துரங்க முதலியார் எல்லாரையும் பார்த்தோம். எல்லோரும் ஆதரவு தர்றதா சொன்னாங்க.

**சென்னைக்கு நீங்கள் சாம் நத்தானியல் எல்லோரும் போனது எப்போது?**

1946இல் என்று நினைக்கிறேன். ஜனவரி மாதம். தினத்தந்தி ஆசிரியர் ஆதித்தனார், தினசரி ஆசிரியர் சொக்கலிங்கம், தினமணி ஆசிரியர் சிவராமன், இந்து ஆசிரியர் விசுவநாதய்யர், அப்புறமா கலைவாணர் என்.எஸ்.கே., டி.கே. பகவதி எல்லோரையும் பார்த்தோம்.

**எல்லோரும் ஆதரவு தந்தார்களா?**

ஆமாம். எல்லோரும் ஆதரவு தந்தார்கள்.

**தென் திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்திற்கு ம.பொ.சி. வகுத்த திட்டங்கள் யாவை?**

இங்கே நெருக்கடியான சூழல் ஏற்பட்ட போதெல்லாம் தலைவர் ம.பொ.சி. வந்திருக்கிறார். விட்டுக் கொடுக்காத மனிதர் அவர். இலட்சியப் பிடிப்புக் கொண்டவர். எனக்கு அவரைப் பிடிக்கும். என்னை அவருக்கும் பிடிக்கும்.

**ம.பொ.சி.யை நீங்கள் எப்போது முதன் முதலில் சந்தித்தீர்கள்?**

1945இல் நான் முதன் முதலில் ம.பொ.சியைச் சந்தித்தேன். வடிவீசுவரம் வாலிபர் சங்க விழாவில் சிறப்புரை ஆற்றுவதற்கு அழைத்து வந்தேன். நானும் ம.பொ.சியின் தமிழரசு கழகத்தில் உறுப்பினனாக இருந்தேன். தமிழரசு கழகத்தின் இரண்டு மாநாடுகளை நடத்தியிருக்கிறேன்.

**ம.பொ.சி.யுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நீங்கள் வடக்கு எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டீர்களா?**

இல்லை. வடக்கு எல்லைப் போராட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. நான் வடக்கு எல்லைப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று ம.பொ.சியும் விரும்பவில்லை.

**அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரசுக்கும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கும் என்ன வேறுபாடு?**

நேசமணி தொடங்கி நடத்தினது திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ். நாங்கள் நத்தானியல் தலைமையில் தொடங்கியது திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ்.

**அகில திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரஸ் 1945இல் தொடங்கப்பட்டது என்று கூறினீர்கள். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் எப்போது தொடங்கப்பட்டது?**

எப்போ என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆலன் மண்டபத்தில் அது அரசியல் கட்சியாகத் தொடங்கப்பட்டது என்று நினைக்கிறேன்.

**இரண்டு கட்சிகளும் எப்போது முதல் இணைந்து செயல்பட்டன?**

திருவிதாங்கூர் நிர்வாகத்திற்கு ஒரு தேர்தல் நடத்த ஏற்பாடு நடந்தது. அந்தத் தேர்தல் 1948 இல் நடைபெற்றது. அப்போது நேசமணி முன்னுக்கு வந்துவிட்டார். விளவங்கோடு தொகுதியில் நேசமணி போட்டியிட்டார். அதில் அவர் வெற்றிபெற்றார். மொத்தம் 120 உறுப்பினர்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. அதில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி சார்பில் 14 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்போது முதல் இரண்டு கட்சிகளும் இணைந்து செயல்பட்டன.

**திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசில் ஏன் பிரிவு ஏற்பட்டது?**

1949ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சமஸ்தானமும் கொச்சி சமஸ்தானமும் இணைந்தன. இந்த இரண்டு சமஸ்தானங்களும்

சேர்ந்த பிறகு அங்கே அரசியலில் குழப்பம் ஏற்பட்டது. அந்தக் குழப்பத்திற்கு இடையில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரவு குறைந்தது. சமஸ்தான காங்கிரசுக்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் ஆதரவு கொடுக்க வேண்டும் என்றனர். அதற்காக, பக்தவச்சலம் பாளையங்கோட்டைக்கு வந்தார். இங்கேயிருந்து நத்தானியல், நேசமணி, நான், தாணுலிங்கநாடார் எல்லோரும் பாளையங்கோட்டைக்குப் போயிருந்தோம்.

சமஸ்தான காங்கிரசுக்கு ஆதரவு கொடுப்பதில் ஒருமித்த கருத்து வரவில்லை. அதனால் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பொறுப்பிலிருந்து நத்தானியல் விலகினார். கட்சிக்கு அமைப்புத் தேர்தல் நடைபெற்றது. அதில் நேசமணி அறிவித்த தலைவர் பி.இராமசாமி பிள்ளை வெற்றி பெற்றார். நாங்கள் எல்லோரும் பி.தாணுலிங்க நாடாரின் தலைமையில் இயங்கினோம்.

**பிரிவு ஏற்பட்டதால் தமிழரின் ஒற்றுமை பாதிக்கப் பட்டிருக்குமே?**

அதனால் தான் மீண்டும் இரண்டு கட்சியும் ஒன்று சேர வேண்டும் என்று சொன்னார்கள். ஒன்று சேரவேண்டும் என்று தான் பெரும்பாலானவர்கள் விரும்பினார்கள். அதற்காக காந்திராமனும் நத்தானியலும் உண்ணாவிரதம் இருந்தார்கள். காமராஜர் கூட முயற்சி செய்தார். பலன் இல்லாமல் போய்விட்டது.

**வண்டி காங்கிரஸ், குடம் காங்கிரஸ் என்று தேர்தலில் தனித்தனியே போட்டியிட்டார்களே?**

ஆமாம். திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் ஒரே கட்சிதான். தலைவர் இரண்டு; அமைப்புக் குழு இரண்டு. அதனால் இரண்டுக்கும் இரண்டு கட்சிக்கும் வித்தியாசத்திற்காகப் பொதுத் தேர்தலில் தனித்தனிச் சின்னம் ஒதுக்கப்பட்டது.

எங்கள் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசுக்கு வண்டி சின்னம். நேசமணிக்குக் குடம் சின்னம் ஒதுக்கப்பட்டது.

**அந்தத் தேர்தலில் நீங்கள் போட்டியிட்டீர்களா?**

தேர்தல் 1952 ஆம் ஆண்டு நடைபெற்றது. நாகர்கோவில் தொகுதியில் நான் போட்டியிட்டேன். வண்டி தான் சின்னம். தோற்றுப்போனேன். சங்கர்தான் ஜெயித்தார்.

**சங்கர், குடம் சின்னத்திலா போட்டியிட்டார்?**

இல்லை. நாகர்கோவில் தொகுதியில் குடம் சின்னத்தில் போட்டியிட்டவர் தாமஸ். அவரும் தோற்றுவிட்டார்.

**தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் நீங்கள் கலந்து கொள்வதற்கு உங்கள் உறவினர்கள் ஆதரவு தந்தார்களா?**

எங்கள் அப்பா, பெருமாள் பிள்ளை எனக்கு ஆதரவு தந்தார். எனது வீட்டில் (மனைவி) எனக்கு ஆதரவு தரவில்லை.

**நீங்கள் கன்னியாகுமரி என்று ஒரு பத்திரிகை நடத்தினீர்களே, அது இப்போது கிடைக்குமா?**

1957இல் நான் கன்னியாகுமரி என்ற பத்திரிகையைத் தொடங்கினேன். இப்போதும் இருக்கு. அதோ அங்கே இருக்கு. உங்களைப் போல் வருகிறவர்கள் வாங்கிப் போகிறார்கள்.

**கன்னியாகுமரி மாவட்டம் உருவாகி ஐம்பது ஆண்டு ஆகிவிட்டதே?**

ஆமாம். ஐம்பது ஆண்டு ஆகிப் போச்சு. சரியா ஐம்பது வருஷத்துக்குப் பிறகு நீங்க வந்திருக்கீங்க. கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு சேர்ந்த இருபத்தைந்தாம் ஆண்டைக் கொண்டாடினோம். இப்போ யாராவது செய்யணும்.

**உங்களுக்குத் தியாகி பென்ஷன் வருகிறதா?**

ஆமாம். இரண்டு பென்ஷன் வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைத் தமிழ்நாட்டோடு சேர்த்ததற்கும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்கும். மொத்தம் நான்கு முறை சிறைக்குப் போயிருக்கிறேன்.

**கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் சேராமல் கேரளாவில் இருந்திருந்தால்?**

தமிழ்மொழி கன்னியாகுமரியில் இருக்காது. தமிழ்ப்பண்பாடு இருக்காது. தமிழர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காது. பள்ளிக்கூடங்களில் தமிழ் படிக்க முடியாது, மலையாளம் தான் படிக்க வேண்டும். தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக இருப்போம்.

*தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்ட வீரர் தியாகி ஆ.சிங்காராயருடன் நேர்காணல். நாள்: 02.03.2006*

**தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் உங்கள் பங்கு என்ன?**

மார்ஷல் நேசமணி என்ன சொன்னாரோ அதை அப்படியே கேட்டு நடந்திருக்கிறேன். தமிழர் போராட்டத்தில் குண்டாந்தடியால் அடி வாங்கியிருக்கிறேன். சிறையில் அடைபட்டிருக்கிறேன். நேசமணியை ஒதுக்கி வைக்க நினைத்தவர்களை எதிர்த்திருக்கிறேன்.

**தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் எத்தனைபேர் உயிர் துறந்தனர்?**

மொத்தம் பதினொரு பேர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர்.

1948இல் இரண்டு பேரும் 1954இல் ஒன்பது பேரும் இறந்தனர்.

1. தேவசகாயம் (எஸ்.டி.மங்காடு)
2. பி.செல்லையா (வலியவிளை)

ஆகியோர் 05.02.1948 அன்று இறந்தனர்.

1. எம்.முத்துச்சாமி (கிள்ளியூர்)
2. ஏ.அருளப்ப நாடார் (வண்ணான் விளை)
3. என். குமரன் நாடார் (கோடி விளை)
4. ஏ.பொன்னையன் (தேமனூர்)
5. ஏ.பீர்முகம்மது (அம்சி)
6. என்.செல்லப்பா பிள்ளை (ஆர்.சி.தெரு)
7. எஸ்.இராமையன் நாடார் (மேக்கன் கரை)
8. ஜி. பப்பு பணிக்கர் (தொடுவெட்டி)
9. எம்.பாலையன் நாடார் (மணலி சாரோடு)

ஆகியோர் 11-08-1954 அன்று உயிர் துறந்தனர்.

**தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் ம.பொ.சி.யின் பங்கு?**

ம.பொ.சி. பல தடவை வந்திருக்கிறார். கூட்டங்களில் பேசியிருக்கிறார். ஆனால் இங்கே தென் திருவிதாங்கூரில் போராட்டத்தின் தொடக்கம், முடிவு எல்லாம் நேசமணி தான்.

## திருவிதாங்கூர் அரசின் கெசட்டை எரித்து நடந்த போராட்டம் எப்போது நடத்தப்பட்டது?

இந்தியாவில் உள்ள சமஸ்தானங்களை ஒன்று சேர்க்கும் வேலையை அப்போது பட்டேல் செய்து வந்தார். கொச்சியையும் திருவிதாங்கூரையும் சேர்க்கிறதுக்கு அவர் ஆதரவு வழங்கினார். அதற்காகத் தனது உதவியாளர் வி.பி.மேனனை அனுப்பி வைத்தார்.

இந்த வேளையில் அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் வி.பி. மேனனைப் போய்ப் பார்த்தார்கள். நேசமணி, ஏ.ஏ. ரசாக், சிவராமபிள்ளை ஆகிய மூவரும் போய் மேனனைப் பார்த்தார்கள். "உங்களுக்கு என்ன கோரிக்கை?" என்று மேனன் கேட்டார். கையில் தயாராக வைத்திருந்த விண்ணப்பத்தை நேசமணி கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட வி.பி.மேனன், அந்த விண்ணபத்தைப் பற்றிச் சொல்லுமாறு கேட்டார்.

"திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தானங்கள் சேரும் போது திருவிதாங்கூரில் உள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைய வேண்டும்" என்றார் நேசமணி. இதைக் கேட்டதும் வி.பி. மேனன், "இந்தப் பிரச்சனையைக் கவனிப்பதற்கு எனது அமைச்சர் (பட்டேல்) எனக்கு அதிகாரம் வழங்கவில்லையே" என்றார். அதற்கு மேல் அவரிடம் சொல்வதற்கு எதுவும் இல்லை என்பதால் மூவரும் வெளியேறினார்கள்.

இதைத் தொடர்ந்து நேசமணி 1949 ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் நாள் பட்டேலுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் திருவிதாங்கூரில் உள்ள 65 இலட்சம் மக்களில் 40 இலட்சம் மக்கள் ஐக்கியக் கேரளம் அமைவதை விரும்பவில்லை என்று எழுதியிருந்தார்.

இவை எதையும் பொருட்படுத்தாமல் வி.பி.மேனன் கொச்சியையும் திருவிதாங்கூரையும் இணைப்பதில் ஆர்வமாக இருந்தார். எனவே, திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காகப் போராட்டத்தில் இறங்கியது. 1949ஆம் வருஷம் ஏப்பிரல் மாதம் நாகர்கோயில் நகரசபைத் திடலில் நத்தானியல் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

அந்தப் பொதுக் கூட்டத்திலேயே திருவிதாங்கூர் அரசின் கெசட்டையும் திருவிதாங்கூர் ஸ்டாம்பையும் கொளுத்தினார்கள். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட நத்தானியல், ஆர்.கே.ராம், காந்திராமன், பிஎஸ்.மணி ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள்.

கைதான நத்தானியல், நேசமணிக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பியிருந்தார். அதில்,

"போராட்டத்தை நடத்துவதற்குத் தலைமைப் பொறுப்பில் உள்ள உங்கள் ஒருவரால் தான் முடியும். ஆகவே உங்களை அதன் சர்வாதிகாரியாக நியமிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் இந்தப் போராட்டத்தை விரும்பவில்லை என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் உங்களைத் தவிர வேறு எவரையும் இந்தக் கட்டத்தில் என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. ஆகவே தயவு செய்து இந்தப் பொறுப்பை ஏற்றுப் போராட்டத்தை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்" என்று எழுதியிருந்தார்.

தொண்டர் பலமும் பணபலமும் இல்லாத வேளையில் உணர்ச்சிக் கொந்தளிப்பில் தொடங்கப்பட்ட அந்தப் போராட்டத்தை நடத்தும் பொறுப்பு நேசமணிக்கு வந்தது. எது எப்படி இருந்தாலும் ஐந்து நாள் போராட்டத்தை நடத்தினார். ஐந்தாவது நாள் காமராசர் (தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்) வந்தார்.

காமராசருக்குப் பட்டேல் ஒரு தந்தி அனுப்பியிருந்தார். அதில் மொழிவழி மாநிலம் அமைக்கப்படும் போது திருவிதாங்கூர்க் காங்கிரஸ் கட்சியின் கோரிக்கை கவனிக்கப்படும் என்றிருந்தது. அப்போது காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த சங்கர ராவ் தேவ் இது தொடர்பாக, காமராசருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதை எல்லாம் நேசமணியிடம் காமராசர் கொடுத்தார். அதைப் பார்த்த நேசமணி, அதுபற்றித் தடுப்புக் காவல் சிறையிலிருக்கும் தலைவர்களின் கருத்தை அறிந்து கொள்ள விரும்பினார். காமராசரே சிறையிலிருந்தவர்களிடம், "திருவிதாங்கூரும் கொச்சியும் இரண்டு நாட்டு அரசர்கள் ராஜ்யம் என்ற நிலையில் ஒன்றாக இணைக்கப்படுவது ஒரு அரசியல் கட்டாயம். மலபார் இப்போது இணைக்கப்படப் போவதில்லை. கேரள மாநிலம் இப்போது அமைக்கப் படாது. மலபாரும் கேரளத்தோடு இணைக்கப்பட்டு ஐக்கியக் கேரளம் அமைக்கப்படும் போது திருவிதாங்கூரிலுள்ள தமிழ்ப் பகுதிகள் சென்னை மாநிலத்தோடு இணைக்கப்படும்" என்றார். இதை ஏற்றுக் கொண்ட நத்தானியல், ஆர்.கே.ராம், காந்திராமன், பி.எஸ்.மணி ஆகியோர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

தலைவர்கள் அனைவரும் காமராசர் கன்னியாகுமரியில் தங்கியிருந்த கேப் ஹோட்டலுக்குப் போய் அவரைப் பார்த்தார்கள். அப்போது, 'திருவிதாங்கூரில் உள்ள தமிழ்ப் பகுதிகளைத்

தமிழ்நாட்டுடன் இணைப்பதற்காகப் போராடும் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைத் தமிழ்நாட்டுக் காங்கிரசின் இணைப்புக் கமிட்டியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். மலபாரில் உள்ள காங்கிரஸ் கமிட்டியானது 'கொச்சி-திருவிதாங்கூர் காங்கிரஸ் கமிட்டியுடன் இணைந்திருப்பதைப் போன்றே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியுடன் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் இணைந்து செயல்படலாம்' என்று நத்தானியல் விளக்கினார்.

"மலபார் முன் உதாரணம் இருக்கவே இருக்கே. இதிலே பெரிய பிரச்சினை ஒண்ணும் இருக்க முடியாது. அடுத்த காரிய கமிட்டிக் கூட்டத்திலேயே நான் இதைக் கவனிச்சிக்கிறேன்" என்று காமராசர் தெரிவித்தார்.

இந்த முடிவுகளைத் தமிழ் மக்களுக்குத் தெரிவிப்பதற்காக நாகர்கோவில் நகரசபைத் திடலில் பொதுக்கூட்டம் போடப்பட்டது. அந்தக் கூட்டத்தில் காமராசரும் கலந்து கொண்டார்.

"இப்ப பாருங்கோ, கொச்சி-திருவிதாங்கூர் சமஸ்தானங்கள் மதராஸ் மாகாணத்திலிருக்கும் மலபாரோடு இணையப் போறதில்லை. அதனால் இப்ப ஐக்கியக் கேரளம் அமையப் போறதில்லை. பின்ன இப்ப என்ன நடக்கப் போறதின்னா, கொச்சி மகாராஜாவும் நம்ம மகாராஜாவும் சேர்ந்து இரண்டு ராஜ்யங்களையும் ஒன்றாகச் சேர்க்கப் போறாங்க. இந்தச் சேர்க்கைக்கு இந்திய அரசு அங்கீகாரம் தருது. அவ்வளவு தான். நாம எடுத்துக்கிட்ட நேரடி நடவடிக்கைகள் இந்த இந்திய அரசாங்க அங்கீகாரத்துக்கு விரோதமானது இல்லை. அப்படிக் கேரளவாதிகள் மத்திய சர்க்காரிடம் மூட்டிவிட்டிருக்காங்க. அப்படி அல்ல என்பதற்காக நாம் இப்போது நம்முடைய கிளர்ச்சியைக் கைவிட்டு விடுகிறோம்" என்று நத்தானியல் விளக்கிக் கூறினார். இப்படித்தான் கெசட் எரிக்கும் போராட்டம் நடந்தது. அதிலும் நேசமணி தலையிட்டிருக்காவிட்டால் ஒன்றும் நடந்திருக்காது.

### திருவிதாங்கூர்த் தமிழர் காங்கிரசில் பிரிவு ஏற்பட்டது ஏன்?

1952இல் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் போட்டிக் கட்சி தொடங்கப்பட்டது. அதற்குத் தலைவர் தாணுலிங்க நாடார். அவர் நல்லவர் தான். அவரைத் தூண்டி விட்டுப் போட்டிக் கட்சி தொடங்கிவிட்டார்கள்.

1952இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டிக் கட்சியினர் ஓர் இடத்தில் கூட வெற்றிபெறவில்லை.

போட்டிக் கட்சியினர் 1953இல் மீண்டும் ஒரே கட்சியாக எங்களுடன் வந்து சேர்ந்துவிட்டனர். சாம் நத்தானியல் அரசியலை விட்டே ஒதுங்கிவிட்டார்.

**பாளையங்கோட்டை உடன்படிக்கை எதனால் ஏற்பட்டது?**

திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ், திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானச் சட்டசபையில் பெரிய எதிர்க்கட்சி. திருவிதாங்கூர்-கொச்சி இணைப்புக்குப் பிறகு திருவிதாங்கூர் அமைச்சரவையில் ஒன்பது அமைச்சர்கள் சமஸ்தான காங்கிரசைச் சேர்ந்தவர்கள், மூன்று அமைச்சர்கள் கொச்சி காங்கிரசைச் சேர்ந்தவர்கள். கொச்சி காங்கிரசாருக்கு மூன்று அமைச்சர்தானா என்று ஆதங்கம் இருந்தது. இதற்கு முன்பே திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரசார் 27 பேர் பட்டம் தாணுபிள்ளை தலைமையில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியாகச் செயல்பட்டார்கள். சமஸ்தான காங்கிரசுக்கு இருந்த 97 உறுப்பினர்களில் 27 உறுப்பினர்கள் போக மீதம் 70 உறுப்பினர்களே இருந்தார்கள்.

கருத்து வேற்றுமையால் கோபம் கொண்டிருந்த கொச்சி காங்கிரசார் 39 பேரும் எதிரணியாயினர். இவர்களுடன் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினரும் சேர்ந்து 55 பேர் எதிரணி ஆகிவிட்டனர். இவர்களுடன் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் 14 உறுப்பினர்களும் சேர்ந்தால் 80 பேர் ஆகிவிடுவர். எனவே திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைத் தம் பக்கம் இழுக்க முயற்சி செய்தார் தலைமை அமைச்சர் டி.கே. நாராயண பிள்ளை. அதனால் பக்தவச்சலம் பாளையங்கோட்டையில் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசாரை அழைத்து ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தினார். அதுதான் பாளையங்கோட்டை உடன்படிக்கை.

**திருவிதாங்கூர்த் தமிழ்நாடுகாங்கிரசில் தலைவராக இருந்த நத்தானியல் ஏன் பதவி விலகினார்?**

பாளையங்கோட்டையில் பக்தவச்சலத்தின் முன்னால் சமஸ்தான காங்கிரசுக்குத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் ஆதரவு கொடுக்கும் என்று கூறினார்கள். அதனால் நத்தானியல் உடன்படிக்கையில் கையெழுத்துப் போட்டார். ஆனால் பொதுக்குழுக் கூட்டத்தில் பாளையங்கோட்டை உடன்படிக்கை விவாதத்திற்கு வந்தபோது எதிர்ப்பு மிகுதியாக ஏற்பட்டதால் நத்தானியல் மனம் வருந்தினர். அவ்வாறு எதிர்த்துப் பேசியவர்களில் ம.சங்கரலிங்கம் என்பவர் தான் மிகுதியாக உடன்படிக்கையை எதிர்த்துப் பேசினார்.

எனவே செயற்குழு உறுப்பினர்களைக் கூட்டி ஆலோசித்தார். தாம் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

அடுத்த நாள் காலையில் நத்தானியல் வீட்டுக்குச் சங்கரலிங்கம் வந்து அவரையே தலைவராகத் தொடர்ந்து இருக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளை நத்தானியல் ஏற்றுக் கொள்ளவில்லை. திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கு வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கும் வரை தலைவர் பதவியில் அவர் இருப்பதற்கு ஒப்புக் கொண்டார்.

**திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் புதிய தலைவர் தேர்தல் பற்றி...**

1950ஆம் வருஷம் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசின் புதிய தலைவருக்கான தேர்தல் நடைபெற்றது. அப்போது உதவித் தலைவராக இருந்த பி.இராமசாமி பிள்ளையைத் தலைவராக நேசமணி முன்மொழிந்தார். அதை, சிவராம பிள்ளை வழிமொழிந்தார். பி.தாணுலிங்கம் நாடாரை வேட்பாளராக முன்மொழிந்தார் காந்திராமன். அதை ஸ்ரீ.வி.தாஸ் வழி மொழிந்தார். ஓட்டெடுப்பு நடந்தது. அந்தத் தேர்தலில் நத்தானியல் நடுநிலை வகித்து யாருக்கும் ஓட்டுப் போடவில்லை. இராமசாமிபிள்ளை 47 ஓட்டுகள் பெற்றுத் தலைவரானார். தாணுலிங்கம் நாடாருக்கு 22 ஓட்டுகள் கிடைத்தன.

**தென்திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்திற்குக் கலைஞர்கள் ஆதரவு இருந்ததா?**

தமிழர்கள் எல்லோரும் ஆதரவு தந்தார்கள். நேசமணி பேசுகிறார் என்றால் கூட்டம் அலைமோதும். தமிழர்கள் அடையும் கஷ்டங்களுக்கு எல்லாம் நேசமணியால் தான் விடிவு கிடைக்கும் என்று மக்கள் நம்பினார்கள்.

**காங்கிரஸ் கட்சியினர் தவிர, பிற கட்சியினர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார்களா?**

ஜீவானந்தம் கம்யூனிஸ்ட்காரர்தான். அவர் தீவிர ஆதரவு அளித்துக் கலந்து கொண்டார். வடசேரியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அண்ணாதுரை ஆதரித்துப் பேசினார். நாகர்கோவிலில் நடைபெற்ற கோர்ட் மறியலில் தி.மு.க.வினர் பங்கேற்றனர்.

**சதாவதானி செய்குதம்பி பாவலர் போராட்டத்தில் கலந்து கொண்டாரா?**

பாவலர் நேரடியாகப் பங்கேற்கவில்லை. ஆனால் தார்மீக ஆதரவு அளித்திருக்கிறார். கன்னியாகுமரியில் நடைபெற்ற எல்லை மாநாட்டில் கவிமணி பேசியிருக்கிறார். அது புஸ்தகமாகக் கூட வந்திருக்கிறது. எம்.ஈ.நாயுடு, முத்துக் கருப்ப பிள்ளை போன்றோர் எல்லாம் ஆதரவு தந்திருக்கிறார்கள்.

**தென் திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் பங்கேற்ற பிற தலைவர்கள் பற்றி...**

பொன்னப்ப நாடாரைச் சொல்லவேண்டும். அவர் மார்ஷலிடம் ஜூனியராக இருந்தார். தென்திருவிதாங்கூர் சட்டசபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஓட்டெடுப்பு நடக்கும் போது எல்லாப் போலீஸ்காரங்க கண்ணிலேயும் மண்ணைத் தூவி விட்டு மாறு வேஷம் போட்டு மாயாவி போல் சட்ட சபைக்கு வந்தார்.

குஞ்சன் நாடார் இரண்டாவது சர்வாதிகாரியாக இருந்தவர். போலீஸ்காரர்களின் கொடுமையான தாக்குதலால் அவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டது.

**திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்திற்குப் பத்திரிகை ஆதரவு இருந்ததா?**

தினமலர் முழுமையான ஆதரவு தந்தது. தினத்தந்தி, சுதேசமித்திரன், தமிழ் முரசு, இந்து பத்திரிகைகள் எல்லாம் ஆதரவு தந்துள்ளன.

**தென்திருவிதாங்கூரிலிருந்து எத்தனை தாலுகாக்கள் பிரித்துக் கேட்கப்பட்டன?**

ஏழு தாலுகாக்களைப் பிரித்துக் கேட்டோம். அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை ஆகியவை அந்தத் தாலுகாக்கள். இவை தவிர நெய்யாற்றங்கரை, நெடுமங்காடு, திருவனந்தபுரம், ஆகியவற்றிலும் தமிழர்கள் நிறையபேர் இருந்தனர். அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டையில் ஒரு பகுதி ஆகியவை மட்டுமே நமக்குக் கிடைத்தன.

**தேவிகுளமும் பீர்மேடும் ஏன் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வில்லை?**

தொடர்ந்து போராடியிருந்தால் தேவிகுளமும் பீர்மேடும் தமிழ்நாட்டுடன் சேர்ந்திருக்கும். ஆனால் தலைவர்கள்,

கன்னியாகுமரி மாவட்டம் கிடைத்ததும் போதும் என்று இருந்துவிட்டார்கள்.

**திருவிதாங்கூர்த் தமிழர் போராட்டத்தில் பிற மாநிலத் தலைவர்கள் உதவியுள்ளார்களா?**

ஆமாம். நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இராம் மனோகர் லோகியா போன்றோரெல்லாம் ஆதரவு தந்துள்ளனர். இராம் மனோகர் லோகியாவும் பட்டம் தாணுபிள்ளையும் ஒரே கட்சிதான். பிரஜா சோஷலிஸ்ட் பார்ட்டி. ஆனாலும் பட்டம் தாணுபிள்ளையின் கொடுமைகளை இராம் மனோகர் லோகியா எதிர்த்துள்ளார்.

**கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு 750 கிலோ மீட்டர் போக வேண்டும். ஆனால் கேரளத்தின் தலைநகராகிய திருவனந்தபுரத்திற்கு 75 கிலோமீட்டர் தூரம் தான் உள்ளது. அருகில் உள்ள கேரளத்திலேயே இருந்திருக்கலாம் அல்லவா?**

இதை நீங்கள் உளப்பூர்வமாகக் கேட்டிருக்கமாட்டீர்கள். ஒரு வாதத்திற்காகத் தான் கேட்டிருப்பீர்கள். அதனால் பதில் சொல்கிறேன். கர்நாடகத்தில் உள்ள பெங்களூரில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அது தலைநகரம்தான். இருந்தாலும் அவர்கள் அங்கே அந்நியர்களாகத்தான் வாழ்கிறார்கள். அதைப் போல் மலையாளிகள் நாடான கேரளத்திற்கு அருகில் நாம் வாழ்ந்தாலும் அவர்களுக்கு நாம் அந்நியர்கள் தானே.

**கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் சேர்ந்த நாளை எப்படிக் கொண்டாடினீர்கள்?**

கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு அதுதான் உண்மையில் சுதந்திரம் கிடைத்த நாள். 1956ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் நாள் மக்கள் எல்லோரும் உற்சாகமாகக் கொண்டாடினார்கள். அன்று ஒரு விழாவும் நடைபெற்றது. அந்த விழா மார்ஷல் நேசமணி தலைமையில் நடைபெற்றது. பனம்பள்ளி கோவிந்த மேனனும் பெருந்தலைவர் காமராஜரும் அதற்கு முன்னிலை வகித்தார்கள்.

**காமராசருக்கும் நேசமணிக்கும் இருந்த தொடர்புபற்றி...**

நேசமணிக்குக் கன்னியாகுமரியில் இருந்த மக்கள் செல்வாக்கு காமராசருக்கு நன்றாகத் தெரியும். நேசமணியைக் காமராசர் நன்றாக மதித்தார். கன்னியாகுமரி மாவட்ட மக்கள் நேசமணியை 'அப்பச்சி... அப்பச்சி' என்றது போல் காமராசரையும் 'அப்பச்சி' என்று கூறினார்கள். நெய்யூர் ஆஸ்பத்திரியில் நேசமணி உடல் நிலை சரியில்லாமல் அனுமதிக்கப்பட்டிருக்கும்போது காமராசர்

அவரை வந்து பார்த்து அவரது காலைத் தொட்டு வணங்கினார். நேசமணி இறந்தபிறகு நடைபெற்ற இடைத்தேர்தலில் காமராசர்தான் வெற்றிபெற்றார்.

நேசமணிக்கு நாகர்கோவிலில் சிலை வைப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவிற்குத் தாணுலிங்கம் நாடார்தான் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்தார். அந்தச் சிலைக்கான முழுப்பணத்தையும் சிவாஜிகணேசனைக் கொடுக்கச் செய்தார் காமராசர். அந்தச் சிலைதான் நாகர்கோவில் குளத்து பஸ் ஸ்டாண்டுக்கு முன்னால் நிற்கிறது.

**கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் சேர்ந்ததால் நன்மை கிடைத்திருக்கிறதா?**

ஆமாம், நன்மைதான். தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து கிடைத்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு சேர்ந்த பிறகு பட்டணங்கால் திட்டம், மாத்தூர் தொட்டிப்பாலம், கோணத்தில் தொழில் பேட்டை, காப்பிக்காட்டில் தொழில்பேட்டை, ஆரல்வாய்மொழியில் நூற்பாலை, குழித்துறையில் நீர் மேலேற்று நிலையம், கன்னியாகுமரி வரை ரயில் என்று நிறைய வசதிகள் கிடைத்திருக்கின்றன.

**கன்னியாகுமரி பிரிந்தது கேரளாவுக்கு இழப்பு என்று சொல்லலாமா?**

சந்தேகமே இல்லாமல் அது இழப்புத்தான். நாஞ்சில் நாடு நெற்களஞ்சியம். அந்த நெற்களஞ்சியத்தைக் கேரளா இழந்து விட்டது. என்றாலும் அவர்களுக்கு அது இழப்பு இல்லை. ஏனென்றால் கன்னியாகுமரி மலையாளிகளின் பூமி அல்ல. அது தமிழர்களின் பூமி. தமிழர்கள் வாழ்ந்த பூமி தமிழ்நாட்டுடன் சேர்ந்தது. அவ்வளவுதான்.

**தியாகிகள் சங்கம் எவ்வாறு செயல்படுகிறது?**

குமரி மாவட்ட விடுதலைத் தியாகிகளின் தலைமைச் சங்கம் 07-09-1958 அன்று தொடங்கப்பட்டது. அப்போது அச்சங்கத்தின் பொதுச் செயலாளராக நான் இருந்தேன். இப்போது தலைவராக இருக்கிறேன். நாங்கள் குமரி மாவட்ட விடுதலைத் தியாகிகளின் பட்டியலை நேர்மையாக உருவாக்க முயற்சி செய்தோம். தியாகிகளுக்குப் பென்ஷன் கிடைக்க ஏற்பாடு செய்தோம். பஸ் பாஸ் வேண்டும் என்று கேட்டு வருகிறோம்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள் .

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் | 40.00 |
| பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் | 40.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3 | 150.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2 | 115.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1 | 130.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள்-அறிவியல் - தொழில்நுட்பம் II | 100.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள்-அறிவியல் - தொழில்நுட்பம் I | 90.00 |
| மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| திராவிட இயக்க இதழ்கள் - தொகுதி 1 | 60.00 |
| சைவ சித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை | 65.00 |
| பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம் | 55.00 |
| காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் | 65.00 |
| திருவாவடுதுறைப் புராணம் | 250.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார் | 25.00 |
| திருக்குறளில் பொதுநிலை உத்திகள் | 30.00 |
| தமிழிலக்கித்தில் மனித நேயம் | 115.00 |
| தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம் | 30.00 |
| தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின் | 40.00 |
| பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை | 45.00 |
| பெண்ணியப் படைப்பிலக்கியம் | 75.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| பள்ளு இலக்கியம் மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே | 75.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை | 80.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 150.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| **திறனாய்வு அணுகுமுறைகள்** | **120.00** |

**568 தமிழக எல்லைப் போராட்டங்கள் 60.00**